# எளிய வைத்திய முறைகள்-800

மருத்துவர் முனைவர் சே.பிரேமா

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

# எளிய வைத்திய முறைகள்–800

முனைவர் சே. பிரேமா

பேராசிரியர் மற்றும் தலைவர்

சித்த மருத்துவத்துறை

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர் 613 005

ISBN : 81-7090-359-9

தமிழ்ப் பல்கலைக்கழக வெள்ளி விழா ஆண்டு வெளியீடு - 16

(தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் பதிப்புச்சூழல் நிதியில்
வெளியிடப்பட்டது)

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு : 298

திருவள்ளுவராண்டு 2036, கார்த்திகை - திசம்பர் - 2005

| | | |
|---|---|---|
| நூல் | : | எளிய வைத்திய முறைகள் |
| ஆசிரியர் | : | சே.பிரேமா |
| மொழி | : | தமிழ் |
| பொருள் | : | மருத்துவம் |
| பதிப்பு | : | முதற்பதிப்பு 2005 |
| பக்கம் | : | 382 |
| தாள் | : | டி.என்.பி.எல்.மேப்லித்தோ 18.6 கிலோ |
| அளவு | : | டெம்மி 1/8 |
| நூற்கட்டுமானம் | : | சாதாரணம் |
| விலை | : | உரு 190.00 |
| மறு அச்சு | | மே 2010 |
| அச்சு | : | தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம் தஞ்சாவூர் |

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

முனைவர் சி.சுப்பிரமணியம்
துணைவேந்தர்

## அணிந்துரை

தமிழர்தம் மரபுசார் செல்வங்களுள் இன்று பன்னாட்டளவில் மிகச் சிறப்புப் பெற்று வருவது தொன்மைத் தமிழ் மருத்துவ முறையான சித்த மருத்துவமாகும். இயற்கைச் சூழலில் கிடைக்கும் தாவர, விலங்கின மற்றும் கனிமப் பொருள்களை மருந்துப் பொருள்களாக மாற்றியமைக்கும் பழந்தமிழர் தம் அனுபவ அறிவு இன்றைய அறிவியல் உலகிற்கு ஈடுகொடுக்கும் ஆய்வுக்குரிய களனாக நிற்பது பெருமைக்குரிய செய்தியாகும்.

பல நூறு ஆண்டுகளுக்கு முன்னரே மருத்துவத் துறையில் பழந்தமிழர்கள் நன்கு தேர்ச்சிப்பெற்று விளங்கியதற்கு இன்றும் சான்றுகளாகத் திகழ்பவை சித்த மருத்துவ நூல் தொகுப்புகளேயாகும்.

சித்தர் பெருமக்கள் அருளிச் சென்ற அனைத்து மருத்துவ முறைகளும் ஓலைச்சுவடிகளிலும் அச்சு நூல்களிலும் பெரும்பாலும் பாடல் வடிவிலேயே கிடைக்கின்றன. அவற்றிற்கான உரை விளக்கங்கள் அதிகம் வெளியிடப்பெறாமல் உள்ளன. பாரம்பரியமிக்க இவ்வகை அரிய மருத்துவ முறைகளை மீட்டெடுத்து அவற்றைப் பேணிப் பாதுகாத்து அவை வழக்கற்று போகாமல் பாதுகாக்க வேண்டியது தமிழ் மருத்துவ அறிஞர்களின் தலையாய கடமையாகும். அவ்வகையில் நத்துவர் முனைவர் சே.பிரேமா அவர்கள் எழுதியுள்ள 'எளிய வைத்திய முறைகள்-800' என்னும் இந்நூல் பெரிதும் பாராட்டத்தக்கதாகும்.

பக்கவிளைவுகளற்றது; எளிமையானது; பாதுகாப்பானது என்று பலராலும் போற்றப்படும் இவ்வகை மருத்துவ முறைகளை ஒன்று திரட்டி அவற்றைத் தொகுத்து சித்த மருத்துவம் பயிலும் மாணவர்களும், ஆய்வாளர்களும், இத்துறையில் ஆர்வம் மிக்க ஆர்வலர்களும் பயன் கொள்ளத்தக்கவகையில் இந்நூலை வெளியிட்டிருப்பது மகிழ்ச்சிக்குரியது.

சுற்றுச்சூழல் சீர்கேட்டினால் மாசற்ற குடிநீர் தேவை அதிகரிக்க இச்சூழலில் பல்வேறு நோய்களைத் தணியச் செய்யும் எண்ணற்ற குடிநீர் செய் முறைகளையும்; சூரணம், பற்பம், செந்தூரம், மாத்திரை தயாரிக்கும் முறைகளையும்; எண்ணெய், நெய் இவற்றின் பயன்பாடுகளையும்; குழந்தைப் பிணி தீர்க்கும் மருந்து வகைகளையும்; உண்பதற்குரிய ஆடை தயாரிப்பு முறைகளையும்; வாத நோய் போக்கும் ஒற்றடத்திற்கான மருந்துப் பொருள்களையும் இவர் அரிதின் முயன்று சேகரித்துத் தொகுத்து வழங்கியிருப்பது இவரது அயராத உழைப்பிற்குக் கிடைத்த வெற்றியாகும்.

சித்த மருத்துவம் குறித்துத் தொடர்ந்து பல நூல்களை வெளியிட்டு வரும் இவரது பணி தொன்மையான சித்த மருத்துவத்திற்கு வலிமை ஊட்டுவதாக அமைத்துள்ளமை வரவேற்கத்தக்கதாகும். இந்நூலின் ஆசிரியர், மருத்துவர், முனைவர் சே.பிரேமா அவர்கள் நோய்க்கு மருந்தளிக்கும் மருத்துவராகவும் சிறந்த ஆய்வாளராகவும் திகழ்வதுடன் சிறந்த நூலாசிரியராகவும் விளங்குவது வளர்ந்து வரும் இளைய தலைமுறையினர்க்கு எடுத்துரைக்கத் தக்கதொரு செய்தியாகும்.

இந்நூலாசிரியருக்கு எமது இனிய பாராட்டுகளும், வாழ்த்துகளும் என்றென்றும் உரியனவாகும். இந்நூலை வண்ணமிகு நூலாக அச்சிட்டு வெளிக்கொணர்ந்த பதிப்புத்துறை இயக்குநர் அவர்கட்கும், பதிப்புத்துறைக்கும் என் மனமார்ந்த பாராட்டுதல்களும் வாழ்த்துக்களும்.

(சி.சுப்பிரமணியம்)

# முன்னுரை

எளிய வைத்திய முறைகள் 800 என்னும் இந்நூல் தமிழ்ப் பல்கலைக்கழகச் சித்த மருத்துவத்துறை வாயிலாக வெளிவருகின்றது. இந்நூலாக்கத்திற்கு உதவிய நிறுவனங்கள் ஆக்கம் பெற மேற்கொண்ட நெறிமுறைகள் நூலின் பயன் பற்றி விளக்க முற்படின் அது ஒரு நீண்ட வரலாறாக அமையும். ஆதலின் நூலாக்கத்திற்கு நான் மேற்கொண்ட முயற்சி, உழைப்பு, உதவிய பெரியோர்கள் பற்றி மட்டும் இம்முன்னுரையில் சுருக்கமாக வரைகின்றேன்.

இன்றைக்கு அச்சில் வெளிவந்து நாம் பயின்று கொண்டிருக்கும் தமிழ் நூல்கள் யாவும் ஓலைச்சுவடிகளில் வரையப்பெற்று நம் முன்னோர்களால் பயிலப் பெற்றனவே. தமிழ் இலக்கியம், இலக்கணம், மருத்துவம், சோதி, சாத்திர, தோத்திர நூல்கள் யாவும் ஓலைச்சுவடிகள் வாயிலாக நாம் பெற்ற பேறாகும்.

தமிழ் ஓலைச்சுவடிகள் நம் தமிழகத்தில் மட்டுமன்றி இந்தியாவின் பிற மாநிலங்களின் நிறுவனங்களிலும் அயல்நாட்டுப் பெரிய நூலகங்களிலும் காணக்கிடைக்கின்றன. பல்வேறு பல்கலைக்கழகங்களிலும் பாதுகாத்து வரப் பெறுகின்றன. அவற்றுள் பெரும்பாலானவை மருத்துவச் சுவடிகளாக உள்ளமை வியத்தற்குரியது. காரணம் - மருத்துவம் ஓர் கலைத் துறையன்று. அறிவியல் துறையைச் சார்ந்தது. அத்துறையில் ஈடுபாடும் அனுபவமும் ஆய்வு மனப்பாங்கும் உள்ளவர்களால் மட்டுமே அவற்றைப் பயன்படுத்திக் கொள்ள இயலும்.

இன்றைக்குப் பல்கலைக்கழகங்களிலும் பழமை வாய்ந்த நூலகங்களில் மட்டுமல்லாமல் பரம்பரையாக மருத்துவம் புரிந்துவரும் குடும்பங்களிலும் மருத்துவச் சுவடிகள் உள்ளன. சிலர் அவற்றை ஓர் இரகசிய ஆவணங்களாகவே காத்து வருகின்றனர். தமிழ் மருத்துவ முறைகளைத் தமது ஞானயோக சித்திகளால் உணர்ந்து அவற்றை வெளிப்படையாகவும் குறிப்பாகவும் மறைமுகமாகவும் அகத்தியர் முதலாய அருள் உள்ளமைந்த சித்தர்கள் நூல்களாகப் படைத்துச் சென்றனர். அவை [illegible]

பரம்பரையாலும் உலகியல் மருத்துவ வழி வந்தவர்களாலும் காப்பாற்றப் பெற்று வருகின்றன. அவற்றைச் சிலர் குடும்ப சொத்துக்களைப் போல மற்றவர்க்குப் பயன் தராத முறையில் பரண்களில் வைத்துக் கொண்டுள்ளனர். அவற்றுள் பெரும்பாலானவை கரையான்களுக்கும் ஓலைப்பூச்சிகளுக்கும் இரையாகி அழிகின்றன. பல ஆடிப்பெருக்கில் ஆற்றில் விடப்படுகின்றன.

இன்றைக்குப் பல நிறுவனங்களால் பாதுகாக்கப் பெற்று வரும் பழந்தமிழ் ஓலைச்சுவடிகளுள் 60 விழுக்காடு மருத்துவச் சுவடிகளேயாகும். இவை சுமார் 6000 எண்ணிக்கையிருக்கக் கூடும். இவற்றுள் சுமார் 3000 சுவடிகளே நூலாசிரியர்களுடன் செய்யுள் வடிவிலும் பாடல் வடிவிலும் காணப்படுகின்றன. ஏனையவற்றுள் பெரும்பான்மையும் வைத்திய அட்டவணை அனுபவ வைத்திய முறைகள் மருந்து செய்முறை போன்ற பெயர்களுடன் செய்யுள் வடிவிலும் உரைநடை வடிவிலும் காணப்படுகின்றன. இவற்றுள் பெரும்பான்மையானவை சுவடி எழுதியவர்களின் அனுபவ முறையாகவோ ஆய்வுத் தொகுப்புரையாகவோ முன்னோர்களின் அனுபவ முறைகளாகவா இருக்கக்கூடும்.

இவ்வகைச் சுவடிகளில் சில சென்னை கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், தஞ்சை சரசுவதி மகால் நூலகம் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் போன்றவற்றால் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளன. சில தனியார் நிறுவனங்களும் இவ்வகை மருத்துவ நூல்களை வெளியிட்டுள்ளன.

எளிய வைத்திய முறைகள் 800 என்னும் இந்நூலாக்கத்திற்குத் தஞ்சை சரசுவதி மகால் நூலகத்திலிருந்து வைத்திய அட்டவணை என்னும் பெயரிலுள்ள இரண்டு சுவடிகளும் (எண் : 240, 241) தமிழ்ப் பல்கலைக்கழகச் சித்த மருத்துவத் துறையில் உள்ள ஒரு சுவடியும் தெரிந்தெடுக்கப் பட்டுள்ளன.

## பதிப்பு முறை

இந்நூலை ஆர்வமும் தேவையமுள்ள யாவரும் எளிதாகப் புரிந்து கொள்ளும் முறையில் காரம் (3) குடிநீர், (179) குழம்பு, (7) சாறு (8), இலை (2), சூரணம் (84), ஒற்றடம்

(6), கஞ்சி (4), கட்டு (4), கண்டாவிழ்தம் (13), கண்டுசம (2), கலிக்கம் (4), களி (114) எண்ணெய் (87), மாத்திரை (06), முகு (3), வடகம் (9), பற்று (9), புகை (6), மருந்து (25), அஞ்சனம் (2), அடை (3), இரசாயணம் (2), இலேகியம் (32) என நெறிமுறையாகப் பகுத்து ஒவ்வொன்றும் இவ்விவ்வாறு வகைப்படும் என விரிவாக அமைத்து அவற்றை ஆக்கம் செய்யும் நெறிமுறை பயன்படுத்தும் முறை முதலியவற்றை விவரமாக அமைத்துள்ளேன்.

ஓலைச் சுவடிகள் செய்யும் உரைநடையுமாக அமைந்துள்ளன. தமிழ்ச் சொற்களுடன் சில இடங்களில் மலையாளச் சொற்களும் அமைந்துள்ளன. செய்யுள் பல நோய்களின் குறுகுணங்களை குறித்து விளக்குகின்றன. மற்றும் சில மருத்துவ முறைகளைக் / கொண்டதாகவும் அமைந்துள்ளன.

சிதைந்து பிழையாகவும் அடிகள் கெட்டும் காணப்பட்ட பாடல் சில நீக்கப் பெற்றன. மருந்து செய்முறைகள் சில நீக்கப்பட்டன. முழுமையாகச் சிதைவின்றி அமைந்துள்ள பாடல்களை நன்கு நோக்கி நோய்க் குறி குணங்களைத் தனியாகவும் மருந்து செய்முறைகள் அவற்றின் செய்முறைப்படியும் பிரித்துக் கொள்ளப்பட்டன. பல பாடல்களுக்கு எளிய முறையில் உரை எழுதப் பெற்றன. மருந்து செய்முறைகளில் காணப்படும் பழைய அளவைகளின் பெயர்களை விளக்கி இன்றைக்கு நடைமுறையில் உள்ள அளவைப் பெயர்கள் அமைக்கப் பெற்றன. பொருளடக்கமும் நோய்களைக் குறித்த சொல்லடைவுகளும் குறிக்கப் பெற்றன. இவை யாவும் அகர நிரலாக அமைக்கப் பெற்றன.

ஓராண்டுத் திட்டமாக இந்நூல் பதிப்பிற்கு உதவிய நல்கை தந்தருளிய மத்திய ஆயுர்வேத மற்றும் சித்த மருத்துவ ஆய்வுக்கழக இயக்குநர் அவர்களுக்கு முதற்கண் எனது நன்றி உரியதாகும். நூற்பதிப்பிற்குத் தேவையான உதவிகளை நல்கிய மதிப்பிற்குரிய தமிழ்ப் பல்கலைக்கழக முன்னைத் துணைவேந்தர் மாண்புமிகு முனைவர் இ.சுந்தரமூர்த்தி அவர்களுக்கு மனம் நிறைந்த நன்றி என்றும் உரியதாகும்.

மற்றும் தஞ்சை சரசுவதி மகால் நூலகத்திலிருந்து வடிகளை ஒப்பு நோக்க அனுமதி தந்த சரசுவதி மகால் நூலகத்தினருக்கு என் நன்றி. இத்திட்டத்தினைத் தயாரிக்க உதவி ஊக்கமளித்த சரசுவதி மகால் நூல் நிலைய நிருவாக அதிகாரி திரு. கிருஷ்ணன் அவர்களுக்கு என் நன்றி உரியதாகும். இப்பதிப்பிற்கான சுவடிகளை ஒப்பு நோக்கி நூலைத் தொகுத்தெழுதப் பெரிதும் உதவிய இத்திட்டத்தின் உதவியாளர் திருமதி மா.சத்தியபாமா அவர்களுக்கும் சித்த மருத்துவத்துறை சிறப்பு நிலை உதவியாளர் திருமதி க.இலலிதாம்பிகை அவர்களுக்கும் என் அன்பு கனிந்த நன்றி உரியதாகும்.

சே. பிரேமா

# பொருளடக்கம்

## காரம்


1. புண்ணுக்கு எரியாத காரம் - 01
2. மூல முளைக்குக் காரம் - 01
3. மூல முளைக்குக் காரம் (வேறு) - 01


## குடிநீர்


4. அசீரணத்திற்குக் குடிநீர் - 01
5. அசீரண வலிக்குக் குடிநீர் - 01
6. அடிக்கடி வருகின்ற சுரத்துக்குக் குடிநீர் - 02
7. அட்ட குன்மத்துக்குக் குடிநீர் - 02
8. அட்டமூலக் குடிநீர் - 02
9. அசுடாதிக் குடிநீர் - 03
10. அதிசாரக் கழிச்சல் மேல் விக்கலுக்குக் குடிநீர் - 05
11. அதிசார சுரத்துக் குடிநீர் - 05
12. அதிசார சுரம், தாகம் சத்திக்குக் குடிநீர் - 05
13. அமுதாதிக் குடிநீர் - 06
14. அமுதாதிக் குடிநீர் (வேறு) - 06
15. அந்திர தாகத்துக்குக் குடிநீர் - 07
16. அலற்று சன்னிக்குக் குடிநீர் - 07
17. அவதாகக் காய்ச்சலுக்குக் குடிநீர் - 08
18. ஆறு அதிசாரத்துக்கும் குடிநீர் - 09
19. இரண்டாவது மாறல் சுரத்திற்குக் குடிநீர் - 09
20. இரத்தக் கழிச்சல், சத்தியெடுத்துக் கழிவதற்கு நீர் - 09
21. இரத்தக் கழிச்சல், சத்தியெடுத்துக் கழிவதற்குக் குடிநீர் (வேறு) - 10
22. இரத்தப்படுவன், கழிச்சலுக்குக் குடிநீர் - 10
23. இரத்தப் பித்தத்துக்குக் குடிநீர் - 10
24. இரத்தப் பித்தத்திற்குக் குடிநீர் (வேறு) - 11
25. இரத்தப் பிரமியத்திற்குக் குடிநீர் - 11
26. " " (வேறு) - 12
27. " " (வேறு) - 12
28. " " (வேறு) - 12
29. இராக் காய்ச்சலுக்குக் குடிநீர் - 13

30. இருமல் இரைப்புக்குக் குடிநீர் - 13
31. இருமலுக்குக் குடிநீர் - 13
32. உதிர சிலைக்குக் குடிநீர் - 14
33. சந்திக சன்னிக்குடிநீர் - 14
34. உழலை, பிரதாப சுரத்துக்குக் குடிநீர் - 14
35. " " (வேறு) - 15
36. உள்காய்ச்சலுக்குக் குடிநீர் - 15
37. உள் நாக்கிற்குக் குடிநீர் - 16
38. உள்ரோகத்துக்குக் குடிநீர் - 16
39. " " (வேறு) - 16
40. எரி பித்தத்திற்குக் குடிநீர் - 17
41. ஒன்றுவிட்ட மாறலுக்குக் குடிநீர் - 17
42 ஒக்காளத்திற்குக் குடிநீர் - 17
43. கர்ப்பக் கழிச்சலுக்குக் குடிநீர் - 18
44. கர்ப்ப சோபத்துக்கு வீங்கினால் குடிநீர் - 18
45. கர்ப்ப வீக்கத்திற்குக் குடிநீர் - 19
46. கர்ப்பத்தின் மேல் சத்திக்குக் குடிநீர் - 19
47. கர்ப்பிணிக்கு மலசலமடைப்பட்டால் குடிநீர் - 19
48. கர்ப்பிணி சுரத்துக்குக் குடிநீர் - 19
49. " " (வேறு) - 20
50. கர்ப்பிணிமேல் வீக்கத்திற்குக் குடிநீர் - 20
51. கருத்தக் காய்ச்சலுக்குக் குடிநீர் - 20
52. கற்சூலைக்குக் கஷாயம் - 21
53. கன்ன மூலத்திற்குக் குடிநீர் - 21
54. கால் கை எரிவதற்குக் குடிநீர் - 21
55. கால் எரிவு, கை எரிவு, வயிறு எரிவுக்குக் குடிநீர் - 22
56. கிராணி அரோசிகத்திற்குக் குடிநீர் - 22
57. கிரிச்சரம் நீரடைப்புக்குக் குடிநீர் - 22
58. " " (வேறு) - 23
59. குரு புறப்பட்டு வீங்கினால் குடிநீர் - 23
60. குலை எரிவுக்குக் குடிநீர் - 24
61. குளிர் சுரக் குடிநீர் - 24
62. " " (வேறு) - 25
63. சகல உதிரிக்கும் குடிநீர் - 25
64. சத்திக்குக் குடிநீர் - 26
65. சத்திவிக்கலுக்குக் குடிநீர் - 26
66. சயத்துக்குக் குடிநீர் - 26
67. சயத்துக்கும் இருமலுக்கும் கஷாயம் - 27
68. சயரோக சிலேத்துமத்திற்குக் குடிநீர் - 27

69. சயித்தியத்திற்குக் குடிநீர் - 28
70. சர்வ இருமலிற்கும் பஞ்ச சுவாசத்திற்கும் குடிநீர் - 28
71. இருமலுக்கும் " " (வேறு) - 28
72. சர்வ சுரத்துக்கும் குடிநீர் - 29
73. சர்வ சுரங்களுக்கும் அதிசாரத்திற்கும் குடிநீர் - 30
74. " " (வேறு) - 30
75. சன்னிக்குமேல் வந்த இருமலுக்குக் குடிநீர் - 30
76. சன்னிவாத சுரத்திற்குக் குடிநீர் - 31
77. வாத சுரசன்னி, தோடத்திற்குக் குடிநீர் (வேறு)- 31
78. சன்னிவாத சுரத்திற்குக் குடிநீர் (வேறு) - 32
79. சிலேத்தும இருமலுக்குக் குடிநீர் - 32
80. சிலேற்பன சுரத்திற்குக் குடிநீர் - 33
81. வாத சீதக் கிராணிக்குக் குடிநீர் - 33
82. சீத சுரத்திற்குக் குடிநீர் - 34
83. சீழ் பிரமியத்திற்குக் குடிநீர் - 34
84. சீனப்பட்டை ஊறு குடிநீர் - 35
85. சுக சன்னி தோஷத்துக்குக் குடிநீர் - 35
86. சுக சன்னிக்குக் குடிநீர் (வேறு) - 36
87. சுர அதிசாரத்திற்குக் குடிநீர் - 36
88. " " (வேறு) - 37
89. சுரங்களுக்குக் கஷாயம் - 38
90. சுரத்தில் வாய் நீரூறலுக்குக் குடிநீர் - 38
91. சுரதாப சோப நாவறட்சிக்குக் குடிநீர் - 39
92. சுரத்திற்குக் குடிநீர் - 40
93. சுரத்திற்குக் குடிநீர் (வேறு) - 40
94. சுரத்தின்மேல் வரும் சிதக் கடுப்பிற்குக் குடிநீர்- 41
95. சுரத்தின் மேல் மூச்சிற்குக் குடிநீர் - 41
96. சுரத்தின்மேல் வீக்கத்திற்குக் குடிநீர் - 41
97. " " (வேறு) - 42
98. சுரம் தலைவலிக்குக் குடிநீர் - 42
99. சுரவாந்திக்குக் குடிநீர் - 43
100. சுரவாந்திக்குக் கஷாயம் (வேறு) - 43
101. சூசிகா வாய்வுக்குக் குடிநீர் - 44
102. " " (வேறு) - 44
103. செரியாமைக்குக் குடிநீர் - 45
104. சோப வீக்கத்திற்குக் குடிநீர் - 45
105. தாகாதி சுரத்திற்குக் குடிநீர் - 45

| | | |
|---|---|---|
| 106. | ” ” (வேறு) | - 45 |
| 107. | (வேறு) | - 46 |
| 108. | (வேறு) | - 46 |
| 109. | தாபசுரத்திற்குக் குடிநீர் | - 46 |
| 110. | ” ” (வேறு) | - 47 |
| 111. | தருண சுரத்துக்குக் குடிநீர் | - 47 |
| 112. | தாகத்திற்குக் குடிநீர் | - 48 |
| 113. | திமிர்வாதம் உதடு கைகால் தொப்புள் காமியம் அசந்து போனால குடிநீர் | - 48 |
| 114. | திமிர்வாதத்திற்குக் குடிநீர் (வேறு) | - 49 |
| 115. | திமிர்வாய்வுக்குக் குடிநீர் | - 49 |
| 116. | திரிதோடக் குடிநீர் | - 50 |
| 117. | துடக்குவாத மருந்து குடிநீர் | - 50 |
| 118. | துடக்குவயிற்று வலிக்குக் குடிநீர் | - 51 |
| 119. | தோட வீக்கத்திற்குக் குடிநீர் | - 51 |
| 120. | நான்காம் மாறலுக்குக் குடிநீர் | - 52 |
| 121. | நான்காம் மாறலுக்குக் குடிநீர் (வேறு) | - 52 |
| 122. | நீரடைப்புக்குக் குடிநீர் | - 52 |
| 123. | நீரிழிவுக்குக் குடிநீர் | - 52 |
| 124. | நீரிழிவுக்குக் குடிநீர் (வேறு) | - 53 |
| 125. | நீர்ப்பாடு, கோப்பாடு இவற்றுக்குக் குடிநீர் | - 53 |
| 126. | பக்க சூலைக்குக் குடிநீர் | - 54 |
| 127. | பக்க வாய்வுக்குக் குடிநீர் | - 54 |
| 128. | பசித்தாகம் எடுக்கக் குடிநீர் | - 55 |
| 129. | ” ” (வேறு) | - 55 |
| 130. | ” ” (வேறு) | - 55 |
| 131. | ” ” (வேறு) | - 56 |
| 132. | பஞ்ச மூலக்குடிநீர் | - 56 |
| 133. | பதிமூன்று வகை சன்னிக்கும் குடிநீர் | - 57 |
| 134. | பலவாய்வுக்கும் குடிநீர் | - 57 |
| 135. | பல்கிட்டின சன்னி, உள்வீச்சு, புறவீச்சிற்குக் குடிநீர் | - 57 |
| 136. | பழஞ்சுர மாறலிற்கும் விஷ சுரத்திற்கும் குடிநீர் | - 58 |
| 137. | பழஞ்சுரம், சன்னிவாத சுரம் இவற்றிற்கு மருந்து | - 58 |
| 138. | ” ” (வேறு) | - 58 |
| 139. | ” ” (வேறு) | - 59 |

| | | |
|---|---|---|
| 140. | பழவெதுப்புக்குக் குடிநீர் | - 59 |
| 141. | பாஷாண வீக்கமானால் மாற்றுக் குடிநீர் | - 60 |
| 142. | பாராங்கியாத கஷாயம் | - 60 |
| 143. | பித்த சன்னிக்குக் குடிநீர் | - 61 |
| 144. | பித்தசுர அதிசாரக் குடிநீர் | - 61 |
| 145. | பித்தசுரத்துக் குடிநீர் | - 63 |
| 146. | பித்தசுரத்துக் குடிநீர் (வேறு) | - 64 |
| 147. | பித்தத்துக்குக் குடிநீர் | - 65 |
| 148. | பித்த மயக்கத்துக்குக் குடிநீர் | - 65 |
| 149. | பிள்ளை பெற்றவள் சுரத்திற்குக் குடிநீர் | - 65 |
| 150. | பிள்ளைப் பெற்றவர்களுக்கு இரத்தம் கட்டினால் குடிநீர் | - 66 |
| 151. | பெருவியாதிக்குக் குடிநீர் | - 66 |
| 152. | பைத்தியத்திற்குக் குடிநீர் | - 67 |
| 153. | பைத்தியம், உப்புசத்திற்குக் குடிநீர் | - 67 |
| 154. | மந்தாக்கினி, கிராணி, அரோசகத்திற்குக் குடிநீர் | - 67 |
| 155. | மறு காய்ச்சலுக்குக் குடிநீர் | - 68 |
| 156. | மாந்த சுரத்துக்குக் குடிநீர் | - 68 |
| 157. | மாறல் அடிக்கடி வருவதற்குக் குடிநீர் | - 69 |
| 158. | முறை வெதுப்புக்குக் குடிநீர் | - 69 |
| 159. | மூத்திரக்கிரிச்சம், நீர்க்கடுப்பு இவற்றுக்குக் குடிநீர் | - 71 |
| 160. | மூர்ச்சை புலம்பல் அத்திசுரத்திற்குக் குடிநீர் | - 71 |
| 161. | மூர்ச்சை போட்டுக் கிடக்கிற சன்னிவாத சுரத்துக்குக் குடிநீர் | - 72 |
| 162. | மூன்றாம் மாறலுக்குக் குடிநீர் | - 72 |
| 163. | "  " (வேறு) | - 73 |
| 164. | மேகத்திற்கும் நீர் இறங்குவதற்கும் குடிநீர் | - 73 |
| 165. | வயிறு இரைச்சல் கழிச்சலுக்குக் குடிநீர் | - 73 |
| 166. | வயிற்றுவலி அதிசாரசுரம் வீக்கத்திற்குக் குடிநீர் | - 74 |
| 167. | வலி குன்மத்திற்குக் குடிநீர் | - 74 |
| 168. | வாத கரப்பானிற்கும் குரைநோவிற்கும் குடிநீர் | - 74 |
| 169. | வாத சன்னிக்குக் குடிநீர் | - 74 |
| 170. | வாத பித்தக் குடிநீர் | - 75 |
| 171. | வாத பித்த சுரக்குடிநீர் | - 76 |

172. வாத மறிபடி மருந்து - 76
173. வாய் வெந்ததற்குக் குடிநீர் - 76
174. விக்கல், பித்தநாடியான சுரத்துக்குக் குடிநீர் - 77
175. விசூழிக்குக் குடிநீர் - 77
176. " " (வேறு) - 77
177. " " (வேறு) - 78
178. " " (வேறு) - 78
179. விசூழி தாகத்திற்குக் குடிநீர் - 78
180. வீக்கத்திற்குக் குடிநீர் - 78
181. வீக்கம், விஷபாகம், பாண்டுருசோகை
இவற்றுக்குக் குடிநீர் - 78
182. வெகு தாகத்திற்குக் குடிநீர் - 79

## குழம்பு

183. இஞ்சிக் குழம்பு - 79
184. கண்டமாலைக்குக் குழம்பு - 80
185. கூவிளைக் குழம்பு - 81
186. சங்கிரகிராணிக்கு நாவல் குழம்பு - 82
187. நேத்திர வாய்விற்குக் குழம்பு - 83
188. நேத்திர வாய்வு, சகலநேத்திர ரோகங்களுக்கும்
குழம்பு - 83
189. விடபாகத்திற்குக் குழம்பு - 84

## சாறு

190. அரோசகம், சத்தி, வாய்நீர் ஊறலுக்கு
மருந்து - 84
191. இரத்த சத்திக்கு மருந்து - 85
192. இரைப்புக்கு மருந்து - 85
193. குடல் புரட்டல், குலை எரிவுக்கு மருந்து - 85
194. பிள்ளை பெற்று வயிறு பழுத்தாலும் மலங்
கட்டுப்பட்டாலும் மருந்து - 85
195. பைத்தியம் பிரமைக்கு மருந்து - 86
196. வயிற்றுக்கடுப்பு, சீதவழும்புக்கு மருந்து - 86
197. வயிற்றுப்பிள்ளை செத்துப்போனதற்குப் பிறகு
கொடுக்கும் மருந்து - 86

## சீலை

198. தண்டுப்பிளவை, அரைப்புற்றுப் பிளவை, சிலந்திக்குச் சீலை - 86
199. கௌரிபாடாணச் சீலை - 87

## சூரணம்

200. அசுவ கெந்தாதிச் சூரணம் - 87
201. ” ” (வேறு) - 88
202. ” ” (வேறு) - 90
203. அஷ்டகுன்மம், மூலம், சுக்கிலப் பிரமியம், செரியாமை, மந்தாக்கினி இவற்றுக்குச் சூரணம் - 90
204. ஆண், பெண், கர்ப்பிணிக்காரி, நீர்க்கட்டுக்குச் சூரணம் - 90
205. இரத்தப் பித்தத்திற்குச் சூரணம் - 91
206. இரத்தப் பித்தத்திற்குச் சூரணம் (வேறு) - 91
207. அஸ்திசுரம், வெட்டைக்குச் சூரணம் - 91
208. இருமலுக்கு அட்டாதிச் சூரணம் - 91
209. இருமலுக்குச் சூரணம் - 92
210. இரைப்பு, நோதலுக்குச் சூரணம் - 92
211. ஈளை, இருமல், க்ஷயரோகம், குரல் நெரிவுக்குச் சூரணம் - 93
212. உஷ்ண வாய்விற்குச் சூரணம் - 93
213. உதிர சிலைக்குச் சூரணம் - 93
214. உருத்திர வாய்வு, இருமல், அசீரணம் இவற்றுக்குச் சூரணம் - 94
215. உருத்திர வாய்வுக்கு மருந்து - 94
216. உள்ரோகத்திற்குச் சூரணம் - 95
217. உள்ரோகத்திற்குச் சூரணம் (வேறு) - 95
218. உள் விடம் - 96
219. தோல் நோய்களுக்குச் சூரணம் - 96
220. கடி விகாரங்களுக்குச் சூரணம் - 97
221. கர்ப்பிணி மேல் அக்கினி மந்தத்திற்குச் சூரணம் - 97
222. கற்பூரச் சூரணம் - 97
223. கன்னத்தில் வியாதிக்குச் சூரணம் - 98
224. கிரந்தி, சூலைக்குச் சூரணம் - 99

| | | |
|---|---|---|
| 225. | கிரந்திக்குக் கருங்கோழிச் சூரணம் | - 99 |
| 226. | குளிர் காய்ச்சலுக்குச் சூரணம் | - 100 |
| 227. | குன்மத்துக்கு விபூதிச் சூரணம் | - 100 |
| 228. | சத்தியெடுத்து அரோசிக்கிறதிற்குச் சூரணம் | - 101 |
| 229. | சத்தியெடுத்து அரோசிக்கிறதிற்குச் சூரணம் (வேறு) | - 102 |
| 230. | சத்தி விக்கலுக்குச் சூரணம் | - 102 |
| 231. | சத்தி, விக்கல், பழகின சுரத்திற்குச் சூரணம் | - 102 |
| 232. | சர்வ மூலத்திற்குச் சூரணம் | - 103 |
| 233. | சர்வ வாய்விற்குச் சூரணம் | - 104 |
| 234. | சலக் கழிச்சலுக்கு மருந்து | - 104 |
| 235. | ” ” (வேறு) | - 105 |
| 236. | ” ” (வேறு) | - 105 |
| 237. | சன்னிக்குச் சூரணம் | - 105 |
| 238. | சிங்காதிச் சூரணம் | - 105 |
| 239. | சுவாசத்திற்கு மருந்து | - 106 |
| 240. | செரியாக் கழிச்சலுக்கு மருந்து | - 106 |
| 241. | தாளிசபத்திரி சூரணம் | - 106 |
| 242. | ” ” (வேறு) | - 107 |
| 243. | ” ” (வேறு) | - 108 |
| 244. | திப்பிலியாதிச் சூரணம் | - 108 |
| 245. | திரிகடுகாதி சூரணம் | - 109 |
| 246. | தீபாக்கினிச் சூரணம் | - 110 |
| 247. | தோல் விடத்திற்குச் சூரணம் | - 111 |
| 248. | நல்ல வகைச் சூரணம் | - 111 |
| 249. | நில ஆவாரைச் சூரணம் | - 112 |
| 250. | நீரருகலுக்கு மருந்து | - 113 |
| 251. | நீர்க்கட்டுக்கு மருந்து | - 113 |
| 252. | நீரிழிவுக்குச் சூரணம் | - 113 |
| 253. | ” ” (வேறு) | - 114 |
| 254. | நீலகாசத்திற்கும், பித்தகாசத்திற்கும் புகைச்சலிற்கும் சூரணம் | - 114 |
| 255. | ” ” பொடி (வேறு) | - 115 |
| 256. | பஞ்சலவணச் சூரணம் | - 115 |
| 257. | பஞ்சாக்கினி சூரணம் | - 115 |
| 258. | பறங்கிப்பட்டைச் சூரணம் | - 116 |
| 259. | ” ” (வேறு) | - 116 |
| 260. | ” ” (வேறு) | - 117 |

| | | |
|---|---|---|
| 261. | பாரிச வாய்வுக்கு மருந்து | - 117 |
| 262. | பித்த பைத்தியம், வாய்விற்குச் சூரணம் | - 118 |
| 263. | புன்னாகச் சூரணம் | - 118 |
| 264. | பெருங்கழிச்சல், பொருமல்வலி, குடல் பிரட்டல்,மூலக்கிராணி, இவைகளுக்கு மருந்து | - 119 |
| 265. | பித்தத்திற்குச் சூரணம் | - 119 |
| 266. | பைத்திய வாய்விற்குச் சூரணம் | - 120 |
| 267. | பைத்திய வாய்விற்கும் உஷ்ண வாய்விற்கும் மேகவரள் வாய்விற்கும் சூரணம் | - 120 |
| 268. | மந்த பித்தச் சூரணம் | - 121 |
| 269. | மூலத்துக்கு அமிர்த சூரணம் | - 121 |
| 270. | மூல வாய்வு, உருத்திர விஷ வாய்வு, அந்திரவாய்வு, பக்க சூலை, வாதம், மலட்டு வலி, அண்டவாதம் இவைகளுக்கு மருந்து | - 122 |
| 271. | வடவான சூரணம் | - 122 |
| 272. | வயிற்றுவலிக்குச் சூரணம் | - 123 |
| 273. | " " (வேறு) | - 123 |
| 274. | வயிற்றுச்சூலைக்குச் சூரணம் | - 124 |
| 275. | வலிப்புக்குச் சூரணம் | - 125 |
| 276. | வாதங்களுக்குச் சூரணம் | - 126 |
| 277. | வாய்வு இரைச்சல் அடிவயிறு பொருமலுக்குச் சூரணம் | - 126 |
| 278. | வாய்வு குன்மம், வயிற்றுவலிக்குச் சூரணம் | - 126 |
| 279. | வாய்வு, சோறு செரியாமலுக்குச் சூரணம் | - 127 |
| 280. | விக்கலுக்கும் சத்திக்கும் சூரணம் | - 127 |
| 281. | விக்கலுக்கு மருந்து | - 128 |
| 282. | விப்புருதிக்கு மருந்து | - 128 |
| 283. | குன்மச் சூரணம் | - 128 |


## ஒற்றடம்


| | | |
|---|---|---|
| 284. | அற்புத வாதத்துக்கு மருந்து | - 129 |
| 285. | " " (வேறு) | - 129 |
| 286. | பல்கிட்டின சன்னி, உள்வீச்சு, புறவீச்சிற்கு மருந்து | - 129 |
| 287. | சுகசன்னிக்கு ஒற்றடம் | - 130 |

288. வாத சன்னிக்கு ஒற்றடம் - 130
289. வாதத்தினால் உண்டான வீக்கத்திற்கு ஒற்றடம் - 130


## கஞ்சி


290. சுரத்திற்குக் கஞ்சி - 131
291. பைத்தியத்திற்குக் கஞ்சி - 131
292. வயிற்றுப்பிள்ளை இறந்துபோனதற்குக் கஞ்சி- 131
293. வாந்திக்குக் கஞ்சி - 131


## கட்டு


294. இரத்தப் பீனிசத்துக்கு மருந்து - 132
295. முழங்கால் முட்டிக்குக்கட்டு - 132
296. " " மருந்து (வேறு) - 132
297. வீக்கத்திற்கு மருந்து - 132


## கண்டாவிழ்தம்


298. அந்திரதாகத்திற்கு மருந்து - 133
299. சன்னிவாத தோடங்களுக்குக் கண்டாவிழ்தம் - 133
300. தோடத்துக்கு மருந்து - 133
301. நரம்பை இழுத்துக் கொண்டதுக்கு மருந்து - 134
302. நாக்கு இடிவிழுந்தால் மருந்து - 134
303. நாக்கு வெந்தால் மருந்து - 134
304. நாக்கு வெடித்தால் மருந்து - 134
305. " " (வேறு) - 134
306. நாவறட்சிக்கு மருந்து - 135
307. " " (வேறு) - 135
308. நாவறட்சி தோடத்திற்கு மருந்து - 135
309. " " (வேறு) - 135
310. விக்கலுக்கு மருந்து - 136


## கண்டூசம்


311. சத்திக்குக் கண்டூசம் - 136
312. தாகத்திற்குக் கண்டூசம் - 136

## கலிக்கம்


313. காமாலை நோயால் விளையும் விளைவுகளுக்குக் கலிக்கம் - 137
314. பல சன்னிக்கும் விஷத்திற்கும் கலிக்கம் - 137
315. சன்னிக்குக் கலிக்கம் - 137
316. பூத, கலிக்கம் - 137


## களி


317. இரத்த மூலத்திற்கு மருந்து - 138
318. உள் மூலத்துக்குக் களி - 138
319. கிராணி சோபத்துக்குக் களி - 139
320. சுருக்கிடு காமாலைக்குக் களி - 139
321. சூதக வாய்விற்குக் களி - 139
322. அசீரண வலிக்கு மருந்து - 139
323. அழுவை கரைய கற்கம் - 140
324. ஆண்போல முலை எழாத பேருக்கு மருந்து - 140
325. இசிவுக்கு மருந்து - 141
326. " " (வேறு) - 141
327. இரத்தக் கழிச்சலுக்கு மருந்து - 141
328, " " (வேறு) - 141
329. இரத்த சன்னி, அலட்டு சன்னிக்கு மருந்து - 142
330. இரத்தப் பித்தத்திற்கு மருந்து - 142
331. இரத்தப் பிரமியத்துக்கு மருந்து - 142
332. இருமல் உண்டாக்கும் வாந்தி அரோசிகத்திற்கு மருந்து - 142
333. உதிரக் கடுப்புக்கு மருந்து - 142
334. உப்பிச இருமலுக்கு மருந்து - 143
335. உப்பிசத்துக்கு மருந்து - 143
336. உள்நாக்குக்கு மருந்து - 144
337. உள்மூலம்,புறமூலம், சீமுலத்துக்கு மருந்து - 144
338. உள்மூலம், புறமூலத்துக்கு மருந்து - 144
339. எரி குன்மத்திற்கு மருந்து - 144
340. எரிகுன்ம, வலிகுன்மத்திற்கு மருந்து - 144
341. எலும்புருக்கி பிரப பத்திற்கு மருந்து - 145
342. எலும்புருக்கி, பெரும்பாடு பிரமியம் சயத்திற்கு மருந்து - 145
343 " " (வேறு) - 145

| | | |
|---|---|---|
| 344. | ஓக்காளத்திற்கு மருந்து | - 145 |
| 345. | ஓக்காளத்திற்கும் வாந்திக்கும் கற்கம் | - 146 |
| 346. | கடிகை அரையாப்புக்கு மருந்து | - 146 |
| 347. | கட்டியாய்ச் சாய்க்கின்ற பெரும்பாட்டுக்கு மருந்து | - 146 |
| 348. | கர்ப்பிணி நீர்மரிப்புக்கு மருந்து | - 146 |
| 349. | கர்ப்பிணி வீக்கத்திற்கும் காமாலை சோகை பாண்டு விஷபாகத்திற்கும் மருந்து | - 147 |
| 350. | கல்லெரிப்புக்கு மருந்து | - 147 |
| 351. | கவிசைக்கு மருந்து | - 147 |
| 352. | கறுத்தக் காய்ச்சலுக்கு மருந்து | - 147 |
| 353, | ” ” (வேறு) | - 148 |
| 354. | காசரோகம் இரத்தமாகக் கழிகிறதுக்கும் ஈளை இருமலுக்கும் மருந்து | - 148 |
| 355. | கிரந்திக்கு மருந்து | - 148 |
| 356. | குண்டியக்கரத்துக்கு மருந்து | - 149 |
| 357. | குலை எரிவுக்கு மருந்து | - 149 |
| 358. | ” ” (வேறு) | - 149 |
| 359. | குளிர்க் காய்ச்சலுக்கு மருந்து | - 150 |
| 360. | ” ” (வேறு) | - 150 |
| 361. | சக்திவலி குன்மத்துக்கு மருந்து | - 150 |
| 362. | சர்வ குன்மத்திற்கு மருந்து | - 150 |
| 363. | சர்வ வீக்கத்திற்கு மருந்து | - 151 |
| 364. | சன்னி வாத சுரத்திற்கு மருந்து | - 151 |
| 365. | ” ” (வேறு) | - 151 |
| 366. | சிலேட்டும தோடத்திற்கு மருந்து | - 152 |
| 367. | சிலேட்டுமத்திற்கு மருந்து | - 152 |
| 368. | சீ மூலத்துக்கு மருந்து | - 152 |
| 369. | சுக்கிலப் பிரமியத்திற்கு மருந்து | - 152 |
| 370. | ” ” (வேறு) | - 153 |
| 371. | சுரத்திற்கு மருந்து | - 153 |
| 372. | சூலை எல்லாவற்றிற்கும் மருந்து | - 153 |
| 373. | சூதக வாயு, பாசை வாயு, உட்டிண வாய்வுக்கு மருந்து | - 154 |
| 374. | செங்கமாரிக்கு மருந்து | - 154 |
| 375. | சோப வீக்கத்திற்கு மருந்து | - 154 |
| 376. | தண்ணீர் தாகத்திற்கு மருந்து | - 154 |
| 377. | தாது விருத்திக்கு மருந்து | - 154 |

| | | |
|---|---|---|
| 378. | தாப சுரத்துக்கு மருந்து | - 155 |
| 379. | திரண்டு புரண்டு வலிக்கிற வயிற்றுவலிக்கு மருந்து | - 155 |
| 380. | தோடங்களுக்கு நாக்கு சுத்தி பண்ண வாத தோடத்துக்கு மருந்து | - 155 |
| 381. | நாலாமுறை காய்ச்சலுக்கும் ஆறுமாத பழஞ்சுரத்திற்கும் மருந்து | - 156 |
| 382. | நாள்சென்ற சுரம், கட்டி, அடிவயிறு கெண்டை விழுந்தால் மருந்து | - 156 |
| 383. | நினைவு தெரியாமல் விலங்கிலே போட்ட பைத்தியத்திற்கு மருந்து | - 156 |
| 384. | நீரரருகலுக்கு மருந்து | - 157 |
| 385. | நீர்க்கடுப்பு, நீர் எரிவுக்கு மருந்து | - 157 |
| 386. | நீர்க்கடுப்பு, நீர்க்கட்டு, நீர் எரிச்சலுக்கு மருந்து | - 157 |
| 387. | நீர்க்கடுப்புக்கு மருந்து | - 157 |
| 388. | நீர் சிவந்து இறங்கினால் மருந்து | - 157 |
| 389. | நீர்ப்பாடு கோட்பாட்டுக்கு மருந்து | - 157 |
| 390. | நெஞ்சடைப்புக் கொதிப்பு குறுகுறுப்புக்கு மருந்து | - 158 |
| 391. | வீக்கத்திற்கு மருந்து | - 158 |
| 392. | பக்கசூலை, இசிவு வாய்வு இருவாய்வும் கட்டினத்துக்கு மருந்து | - 158 |
| 393. | பக்குவப்படாத பிள்ளைக்கு மருந்து | - 158 |
| 394. | பல் நோவுக்கு மருந்து | - 159 |
| 395. | பல்லசைவுக்கு மருந்து | - 159 |
| 396. | பவுத்திரத்துக்கு மருந்து | - 159 |
| 397. | பாண்டு சூசிகா வாய்வுக்கு மருந்து | - 159 |
| 398. | பித்த குண்மத்திற்கு மருந்து | - 159 |
| 399. | பித்த தோடத்திற்கு மருந்து | - 160 |
| 400. | பித்தத்திற்கு மருந்து | - 160 |
| 401. | பிரமியத்திற்கு மருந்து | - 160 |
| 402. | பிரமியத்திற்கு மருந்து (வேறு) | - 161 |
| 403. | புறநீர்க்கட்டுக்கும் வீக்கத்திற்கும் மருந்து | - 161 |
| 404. | பெண்கள் சூதுவாக மருந்து | - 162 |
| 405. | பெரும்பாட்டிற்கு மருந்து | - 162 |
| 406. | பெரும்பாட்டிற்கு மருந்து (வேறு) | - 162 |
| 407. | பெரும்பாட்டிற்கு மருந்து (வேறு) | - 163 |

| | | |
|---|---|---|
| 408. | பெரும்பாடு, வெள்ளை விழுகிறதற்கு மருந்து | - 163 |
| 409. | பைத்தியத்திற்கு மருந்து | - 163 |
| 410. | பைத்தியத்திற்கு மருந்து (வேறு) | - 163 |
| 411. | பைத்தியத்திற்கு மருந்து (வேறு) | - 164 |
| 412. | பைத்தியத்திற்கு மருந்து (வேறு) | - 164 |
| 413. | பைத்தியம் உப்புசத்துக்கு மருந்து | - 164 |
| 414. | மதுமேக நீரிழிவுக்கு மருந்து | - 164 |
| 415. | மயக்கம் தாபசோபத்துக்கு மருந்து | - 165 |
| 416. | மயக்கம், நாவறட்சிக்கு மருந்து | - 165 |
| 417. | மலசலம் கட்டினால் உள்ளுக்கு மருந்து | - 165 |
| 418. | மலட்டு வலிக்கு மருந்து | - 165 |
| 419. | மறதிக்கு மருந்து | - 165 |
| 420. | மூர்ச்சை வாயுவுக்கு மருந்து | - 165 |
| 421. | வயிற்றாலே தண்ணீராய்க் கழிவதற்கு மருந்து | - 166 |
| 422. | வயிற்று வலிக்கு மருந்து | - 166 |
| 423. | வயிற்று வலிக்கு மருந்து (வேறு) | - 166 |
| 424. | வாந்தி பண்ண மருந்து | - 166 |
| 425. | வாந்தி மாற மருந்து | - 167 |
| 426. | வாய்வுக்கு மருந்து | - 167 |
| 427. | விக்கலுக்கு மருந்து | - 167 |
| 428. | விக்கலுக்கு மருந்து (வேறு) | - 167 |
| 429. | விட பாகம், பாண்டு சோகைக்கு மருந்து | - 168 |
| 430. | வைசூரி, காய்ச்சலுக்கு மருந்து | - 168 |

## எண்ணெய்

| | | |
|---|---|---|
| 431. | அபிகா சிலேட்டுமத்திற்கு எண்ணெய் | - 168 |
| 432. | அரக்கெண்ணெய் | - 169 |
| 433. | அற்புத வாதத்திற்கு எண்ணெய் | - 170 |
| 434. | அற்புத வாதத்திற்கு எண்ணெய் (வேறு) | - 170 |
| 435. | இரத்தப் பீனிசத்திற்கு எண்ணெய் | - 170 |
| 436. | இரத்தம் சீவிழுகிற உள் மூலத்திற்கு எண்ணெய் | - 171 |
| 437. | இருமல் உப்பிசத்திற்கு கந்தக எண்ணெய் | - 171 |
| 438. | இருமல் நாவறண்டால் எண்ணெய் | - 171 |
| 439. | ஈளை, இருமல், சயரோகம் குரல் நெறிவிற்கு எண்ணெய் | - 172 |
| 440. | உள மாந்தைக்கு எண்ணெய் | - 172 |

441. எந்தப் பீனிசத்திற்கும் எண்ணெய் - 172
442. எலிக்கடிக்கு எண்ணெய் - 173
443. எலும்புருக்கி நோய்க்கு எண்ணெய் - 174
444. கடி விகாரங்களுக்கு எண்ணெய் - 174
445. கண்ணுக்குக் குளிர்ச்சி எண்ணெய் - 175
446. கண் வியாதிக்கு எண்ணெய் - 176
447. கபால சளிக்கு எண்ணெய் - 176
448. கர்ப்ப விப்புருதிக்கு எண்ணெய் - 176
449. கர்ப்ப விப்புருதிக்கு எண்ணெய் (வேறு) - 177
450. கர்ப்பிணி சந்துவாதத்திற்கு எண்ணெய் - 178
451. காசத்திற்கு எண்ணெய் - 178
452. கிறுசு வாய்விற்கு எண்ணெய் - 178
453. கைகாலசதி, பேச்சசதி, ஒரு பாரிச வாதத்திற்கு எண்ணெய் - 179
454. சகல சன்னிக்கு எண்ணெய் - 179
455. சைத்தியத்திற்கு எண்ணெய் - 181
456. சைத்தியத்திற்கு எண்ணெய் (வேறு) - 181
457. சரீரம் அசதியாய் உலர்ந்தபேர்களுக்கு எண்ணெய் - 181
458. சர்வ சுரத்திற்கும் எண்ணெய் - 182
459. சலப் பீனிசத்திற்கு எண்ணெய் - 183
460. சன்னிக்கு எண்ணெய் - 183
461. சன்னிக்கு எண்ணெய் (வேறு) - 184
462. சிவப்புச் சேர்வைக்கு எண்ணெய் - 184
463. சுட்ட புண்ணிற்கு எண்ணெய் - 185
464. சுரோணித வாதத்திற்கு எண்ணெய் - 185
465. சூரிய வாதத்திற்கு எண்ணெய் - 185
466. செம்பைத் தைலம் - 186
467. தந்தரோகத்திற்கு எண்ணெய் - 186
468. தலைக்கடி சிரங்கிற்கு எண்ணெய் - 187
469. தலைப்புழு வெட்டிற்கு எண்ணெய் - 187
470. தலைப்புழு வெட்டு, சிரங்கிற்கு எண்ணெய் - 187
471. தலைப்புழு வெட்டு, தலைக்கடிக்கு எண்ணெய் - 188
472. தலையில் வியாதி வெடித்த புண்ணிற்கு எண்ணெய் - 188
473. தொப்புளைச் சுற்றி வலிக்கிற பலவித கழிச்சலுக்கு எண்ணெய் - 188

| | | |
|---|---|---|
| 474. | நடுக்கு வாதத்திற்கு எண்ணெய் | - 188 |
| 475. | நயனரோகத்திற்கு எண்ணெய் | - 189 |
| 476. | நயனரோகத்திற்கு எண்ணெய் (வேறு) | - 189 |
| 477. | நாசிகா பீடத்திற்கு எண்ணெய் | - 190 |
| 478. | நாள்சென்ற பிரமியத்திற்கு எண்ணெய் | - 191 |
| 479. | நான்குவகை பீனிசத்திற்கும் எண்ணெய் | - 191 |
| 480. | நெல்லி எண்ணெய் | - 191 |
| 481. | நேத்திர வாய்விற்குத் தலைக்கு எண்ணெய் | - 192 |
| 482. | நேத்திர வாய்விற்குத் தலைக்கு எண்ணெய் (வேறு) | - 193 |
| 483. | நேத்திர வாய்விற்குத் தலைக்கு எண்ணெய் (வேறு) | - 193 |
| 484. | பக்க சூலை, கர்ப்ப சூலைக்கு எண்ணெய் | - 193 |
| 485. | பல கிரந்திக்கு எண்ணெய் | - 193 |
| 486. | பல்நோக்காடு, பல் புண்ணிற்கு எண்ணெய் | - 193 |
| 487. | பாரிச வாய்விற்கு எண்ணெய் | - 194 |
| 488. | பித்த குன்மத்திற்கு எண்ணெய் | - 194 |
| 489. | பித்தத்திற்குக் குமரித் தைலம் | - 195 |
| 490. | புறமூலக்கடுப்பு, எரிவு, அடைப்பு, புண், கீழ்வயிறு நோவிற்கு எண்ணெய் | - 196 |
| 491. | பீனிச, சுவாச, கபால சூலைக்கு எண்ணெய் | - 196 |
| 492. | பீனிசத்திற்கு எண்ணெய் | - 197 |
| 493. | பீனிசத்திற்கு எண்ணெய் (வேறு) | - 197 |
| 494. | பீனிசத் தும்மலுக்கு எண்ணெய் | - 198 |
| 495. | பீனிசம் நீர்ப்பாய்ச்சல், பஞ்சகாசம் இவற்றிற்கு எண்ணெய் | - 198 |
| 496. | புண்ணிற்கு எண்ணெய் | - 200 |
| 497. | பூநாகத் தைலம் | - 200 |
| 498. | போர்மாந்தைக்கு எண்ணெய் | - 200 |
| 499. | மயூர எண்ணெய் | - 201 |
| 500. | மூர்ச்சை வாய்விற்கு எண்ணெய் | - 201 |
| 501. | மேக சூசிகா வாய்விற்கு எண்ணெய் | - 202 |
| 502. | வண்டுகடிக்கு எண்ணெய் | - 202 |
| 503. | வயிற்றிலுண்டான வியாதிக்கு எண்ணெய் | - 203 |
| 504. | வயிற்றிலுண்டான வியாதிக்கு எண்ணெய் (வேறு) | - 203 |
| 505. | வறட்சிக் கரப்பான் எண்ணெய் | - 204 |
| 506. | கபால கரப்பான் எண்ணெய் | - 204 |

507. வாத கரப்பான் பெருமூட்டிற்கு எண்ணெய் - 204
508. வாதகரப்பானுக்கு எண்ணெய் - 205
509. வாதசன்னிக்கு எண்ணெய் - 206
510. வாதசன்னிக்கு எண்ணெய் (வேறு) - 207
511. வாதசன்னிக்கு எண்ணெய் (வேறு) - 207
512. வாத சூனியத்திற்கு எண்ணெய் - 207
513. வாய்வு மூலத்திற்கு எண்ணெய் - 208
514. விரை வாதத்திற்கு எண்ணெய் - 208
515. விரை வாதத்திற்கு எண்ணெய் (வேறு) - 209
516. வெட்டுப்பட்டு நாள்சென்ற புண்ணிற்கு எண்ணெய் - 209


## மாத்திரை


517. அக்கரத்துக்குக் குளிகை - 209
518. சஞ்சீவிக்குளிகை - 210
519. அங்குசத்தாண்டவம் - 211
520. அசீரணத்துக்கும், விஷந்தீண்டி கோழை கட்டின பேர்களுக்கு மாந்தம், போர் மாந்தம் இவைகளுக்கு மாத்திரை - 211
521. அஷ்ட சுர குலாந்தகன் - 212
522. அண்டவாதம் ஐந்துக்கும் மருந்து - 212
523. அதிசாரத்துக்குக் குளிகை - 213
524. அதிசாரக் குளிகை - 213
525. அதிசாரக் கிராணிக்கு மாத்திரை - 214
526. அமிர்தாதி குளிகை - 215
527. அர்த்தநாதசுரக் குளிகை - 215
528. அர்த்தநாரீசுவரன் குளிகை - 215
529. ஆனந்த வைரவன் குளிகை - 216
530. ஆனந்த வைரவன் குளிகை (வேறு) - 221
531. ஆனந்த வைரவன் குளிகை (வேறு) - 221
532. இஞ்சிக் குளிகை - 222
533. இரதாம்பிரையோகம் - 223
534. இரத்தினாதிக் குளிகை - 224
535. உலோகோத்திரக் குளிகை - 224
536. கண்டபானுக் குளிகை - 225
537. கண்ணுக்குப் பச்சை உருண்டை - 225
538. காய்ச்சலுக்குச் சஞ்சீவி மாத்திரை - 226

539. காய்ச்சலுக்கு சுரகுலாந்தகன் மாத்திரை - 226
540. கிராணி கேசரிக் குளிகை - 227
541. கிராணிகேச மாத்திரை - 228
542. குத்துக்குளிகை - 229
543. குளங்களக்கிக்குளிகை - 229
544. கோடா குளிகை - 230
545. சகல அதிசார பேதிக்கும் மருந்து - 231
546. சஞ்சீவிக் குளிகை - 232
547. சண்டபானுக் குளிகை - 233
548. சர்வ சுரத்துக்கும் உடனே கொடுக்கக் குளிகை- 233
549. சலக்கோர்வைக் குளிகை - 234
550. சன்னிக்கு உருண்டை மருந்து - 234
551. சன்னிக்குளிகை - 234
552. சன்னி வாத வைரவன் - 235
553. சாந்த சந்திரோதையம் - 236
554. சிங்க வைரவன் குளிகை - 236
555. சிங்க வைரவன் குளிகை (வேறு) - 238
556. சீத சுரத்துக்குக் கச்சவி மாத்திரை - 238
557. சீத சுராங்கிஷம் - 238
558. சுரத்திற்கு இராமபாணக் குளிகை - 239
559. சுரத்துக்குக் குளிகை - 240
560. சுரத்தின்மேல் கழிச்சலுக்குக் குளிகை - 240
561. சுரமாத்திரை - 241
562. சூதக கிராணிக்கு மருந்து - 241
563. சுவர்ண மாலினி வசந்தம் - 242
564. தாப சுரத்துக்குப் பிரதாப லிங்கேஸ்வரன் - 242
565. தாப சுரத்துக்கு மருந்து - 243
566. சொற் சுகந்திர வைரவன் குளிகை - 243
567. திரிலோக்கிய சிந்தாமணி - 246
568. நடுக்கல் சுரத்துக்கு குளிகை - 249
569. நவக்கிராதி குளிகை - 249
570. நான்கு நாள் மாறல் சுரத்துக்குக் குளிகை - 250
571. நெஞ்சில் சிலேட்டுமக் கட்டுக்கு மருந்து - 251
572. பராக்குவக் குளிகை - 251
573. பழஞ்சுரமாறலுக்கு விரேசனக் குளிகை - 251
574. பிரதாப இலிங்கேசுரன் - 252
575. பிள்ளைத்தாச்சி உள்குத்துக்குக் குளிகை - 252
576. பூபதி மாத்திரை - 253

| | | |
|---|---|---|
| 577. | பேதி மாத்திரை | - 254 |
| 578. | மகா அக்கினிக்குமாரன் | - 254 |
| 579. | மாந்தம் உள்ளுரோகம் அக்கரத்துக்குக் குளிகை | - 255 |
| 580. | மார்த்தாண்ட குளிகை | - 256 |
| 581. | மாறலுக்கு மருந்து | - 256 |
| 582. | மேகசூலை கிரந்திக்கு மாத்திரை | - 256 |
| 583. | லோகோத்திரக் குளிகை | - 257 |
| 584. | வயிற்றில் கட்டிக்கு மருந்து | - 258 |
| 585. | வாத உருண்டை | - 258 |
| 586. | வாதராட்சதன் குளிகை | - 259 |
| 587. | வாதராட்சதன் குளிகை (வேறு) | - 260 |
| 588. | வாய்வு கிராணிக்குக் குளிகை | - 261 |
| 589. | விரேசனக் குளிகை | - 261 |
| 590. | விரேசனக் குளிகை (வேறு) | - 262 |
| 591. | வெள்ளெழுத்திற்குக் குளிகை | - 262 |
| 592. | வைசூரிக் காய்ச்சலுக்குக் குளிகை | - 263 |
| 593. | பவுத்திரத்திற்கு மருந்து | - 263 |


## மெழுகு


| | | |
|---|---|---|
| 594. | கண்வலி, நீர்ச்சூடு பாய்தல், படலம் சிவப்புக்கு மருந்து | - 264 |
| 595. | சுவாசத்துக்கு மருந்து | - 264 |
| 596. | வயிற்றால் தண்ணீராய்க் கழிவதற்கு மருந்து | - 264 |


## வடகம்


| | | |
|---|---|---|
| 597. | தாளிச வடகம் | - 265 |
| 598. | இருமல் பசியெழும்ப வடகம் | - 266 |
| 599. | பூலோக விரேசனம் | - 266 |
| 600. | உதிரதோடத்திற்கு விரேசனம் | - 267 |
| 601. | குளிர் மாறலுக்கு விரேசன மருந்து | - 268 |
| 602. | திமிர்வாதத்திற்கு விரேசனம் | - 268 |


## செந்தூரம்


| | | |
|---|---|---|
| 603. | அப்பிரக செந்தூரம் | - 269 |
| 604. | இரச செந்தூரம் | - 269 |

605. உலோக செந்தூரம் - 269
606. சுயமாக்கினி - 270
607. நீர்க்கட்டு, நாவறட்சி, தோஷம் இவற்றிற்குச் செந்தூரம் - 270

## நசியம்

608. எந்தப் பீனிசத்திற்கும் நசியம் - 271
609. கபாலத்தின் பல நோவுக்கும், நயன வாதத்திற்கு மருந்து - 271
610. குத்து, நோவு, சன்னி வலிக்கு நசியம் - 272
611. சுகசன்னிக்கு நசியம் - 272
612. நடுக்கல் சுரத்திற்கு நசியம் - 272
613. நடுக்கல் சுரத்திற்கு நசியம் (வேறு) - 273
614. நடுக்கல் சுரத்திற்கு நசியம் (வேறு) - 273
615. நாக்கு விழுந்ததற்கு நசியம் - 273
616. நெஞ்சில் கட்டின சன்னிக்கு நசியம் - 273
617. வலிப்புக்கு நசியம் - 273
618. வலிப்புக்கு நசியம் (வேறு) - 274
619. வாந்திக்கு நசியம் - 274

## நெய்

620. ஆடாதொடை நெய் - 274
621. ஆவறி பித்தத்திற்கு முசுமுசுக்கை நெய் - 274
622. இரத்தப் பித்தத்திற்கு ஆடாதொடை நெய் - 275
623. இரத்தப் பித்தத்திற்கு நெய் - 275
624. இரத்தப் பீனிசத்திற்கு நெய் - 276
625. இரத்தப் பெரும்பாட்டுக்கு நெய் - 276
626. இரத்தமாய் மூக்காலும், வாயாலும் எடுப்பதற்கு நெய் - 276
627. இரத்த மூலத்திற்கு நெய் - 277
628. காணாக்கடியாகச் சரீரமெல்லாம் சொரியானால் நெய் - 277
629. குவளை விப்புருதிக்கு நெய் - 277
630. குன்மத்துக்குக் கிருதம் - 277
631. குழந்தைப்பிணி மருந்து - 278
632. குன்மத்துக்கு நெய் - 279
633. தண்டு அசந்தார்க்கு வலுவுண்டாக மருந்து - 280

634. துன்மாங்கிச அடைப்புக்கு மருந்து - 281
635. நெஞ்சில் புற்றுக்கு நெய் - 282
636. நெஞ்சு வறட்சிக்கு நெய் - 282
637. பிரமேகத்துக்கு நெய் - 282
638. பிரமேகம், பெரும்பாடு, உட்காய்ச்சலுக்கு நெய் - 283
639. பிள்ளை பெற்ற பெண்களுக்குப் பெரும்பாடு நிற்க நெய் - 284
640. புளியாரை நெய் - 284
641. மருந்திடு, வறட்சி இருமலுக்கு நெய் - 285
642. மூர்த்திக்கிரீச்சம், நீர்க்கட்டுக்கு மருந்து - 286
643. வாய் கிரந்தி, பல் கிரந்தி, உள்ரோகத்திற்கு மருந்து - 286
644. வாய் நோவுக்கு மருந்து - 286
645. வயிற்றுக் கொதிப்புக்கு மருந்து - 287
646. விட மாந்தத்துக்கு நெய் - 288
647. விரேசனத்திற்கு நெய் - 288

## பசை

648. பிளவைக்குப் பசை - 289
649. பிளவைக்குப் பசை (வேறு) - 289
650. சாதிலிங்கப் பசை - 290

## பற்பம்

651. இரச பற்பம் - 290
652. இரச பற்பம் (வேறு) - 291
653. இரச பற்பம் (வேறு) - 291
654. கந்தக பற்பம் - 292
655. கர்ப்ப வாய்விற்கு மருந்து - 292
656. காந்த பற்பம் - 293
657. கிரிச்சம், நீரடைப்புக்கு மருந்து - 294
658. குடல் வாதத்திற்குப் பற்பம் - 295
659. குமரி பற்பம் - 295
660. குமரி பற்பம் (வேறு) - 296
661. குரு பற்பம் - 297
662. ஞானி பற்பம் - 297

| | | |
|---|---|---|
| 663. | தாளக பற்பம் | 298 |
| 664. | தோடத்திற்குக் கௌரி பற்பம் | 298 |
| 665. | நவச்சார பற்பம் | - [illegible] |
| 666. | நாக பற்பம் | - 299 |
| 667. | நீரிழிவுக்கு பற்பம் | - 299 |
| 668. | பல்லிற்குப் பற்பம் | - 300 |
| 669. | வாய்வு புரண்டேறல், வலி செருகலிற்குப் பற்பம் | - 300 |
| 670. | கிரந்திக்கு மருந்து | - 300 |


## பற்று


| | | |
|---|---|---|
| 671. | கடிவீக்கம், விப்புருதி வீக்கம் இவற்றிற்கு பற்று | - 301 |
| 672. | கண்ணில் உட்டிணத்திற்கு மருந்து | - 301 |
| 673. | நீரடைப்புக்கு பற்று | - 301 |
| 674. | பவுத்திரத்திற்கு பற்று | - 301 |
| 675. | பெருவியாதிக்கு பற்று | - 301 |
| 676. | போத்திக் கடுவகத்திற்கு பற்று | - 302 |
| 677. | மூச்சுத் தாங்கலுக்கு பற்று | - 302 |
| 678. | மூச்சுத் தாங்கலுக்கு பற்று (வேறு) | - 302 |
| 679. | வாய்வு தோடத்தில் நீர்க்கட்டுக்கு மருந்து | - 302 |


## புகை


| | | |
|---|---|---|
| 680. | இங்குலிக உப்புப் புகை | - 302 |
| 681. | பல்வலி, பல்குத்து, வீக்கத்திற்குப் புகை | - 303 |
| 682. | பீனிசத்துக்குப் புகை | - 303 |
| 683. | மூலத்துக்குப் புகை | - 303 |
| 684. | விக்கலுக்குப் புகை | - 303 |
| 685. | விக்கலுக்குப் புகை (வேறு) | - 304 |


## மருந்து


| | | |
|---|---|---|
| 686. | அமரத்துக்கு மருந்து | - 304 |
| 687. | இரைப்புக்கு மருந்து | - 304 |
| 688. | இரைப்புக்கு மருந்து (வேறு) | - 304 |
| 689. | இரைப்புக்கு மருந்து (வேறு) | - 305 |
| 690. | உப்பிசத்துக்கு மருந்து | - 305 |

691. உள் குத்துக்கு மருந்து - 306
692. ஊது காமாலைக்கு மருந்து - 306
693. ஊர்த்துவ வாதத்திற்கு மருந்து - 307
694. கண் பூவுக்கு மருந்து - 307
695. கர்ப்பத்தின்மேல் கழிச்சல், கடுப்புக்கு மருந்து - 307
696. காச ,சுவாசத்துக்கு மருந்து - 308
697. கீல் வாய்வுக்கு மருந்து - 308
698. சூசிகா வாய்வுக்கு மருந்து - 308
699. சகல தோஷத்துக்கும் மருந்து - 309
700. நாசியில் இரத்தம் விழுகின்றதற்கு மருந்து - 309
701. நீர்க்கடுத்து எரித்து அரிக்கி இறங்கினால் மருந்து - 309
702. தமரக வாய்வுக்கு மருந்து - 310
703. தோல் அவிழ்தம் - 310
704. பாண்டு ரோகத்துக்கு மருந்து - 310
705. பெருவியாதி திமிருக்கு மருந்து - 311
706. பைத்தியத்திற்கு மருந்து - 312
707. மாலைக்கண்ணுக்கு மருந்து - 312
708. மூத்திரக்குரிச்சம், நீர்க்கட்டுக்கு மருந்து - 312
709. வயிற்றால் தண்ணீராய்க் கழிவதற்கு மருந்து - 313
710. வயிற்றுக் குன்மத்திற்கு, கட்டிக்கு மருந்து - 313

## அஞ்சனம்

711. நடுக்கல் சுரத்திற்கு அஞ்சனம் - 314
712. நீர்ப்பாட்டுக்கு அஞ்சனம் - 314

## அடை

713. இரத்தக் கிராணிக்கு அடை - 315
714. சத்திக்கு அடை - 315
715. சுரத்தின்மேல் இரத்தக் கழிச்சலுக்கு அடை - 316

## இரசாயனம்

716. கற்பூர லோத்திரம் - 316
717. பரங்கிப்பட்டை இரசாயனம் - 317

# இலேகியம்


| | | |
|---|---|---|
| 718. | அகிலாதி இலேகியம் | - 318 |
| 719. | அசீரணம், தீபனத்திற்கு இலேகியம் | - 318 |
| 720. | அரிதகி இலேகியம் | - 319 |
| 721. | அறகால மூல இலேகியம் | - 319 |
| 722. | ஆடாதொடை இலேகியம் | - 320 |
| 723. | இரத்தக் கழிச்சல், கடுப்பிற்கு இலேகியம் | - 320 |
| 724. | இருமலுக்கு கொம்மட்டி, மாதுளை இலேகியம் | - 321 |
| 725. | இருமல், கோழை கக்குதலுக்கு இலேகியம் | - 321 |
| 726. | உப்பிசம், கோழை இருமலுக்கு இலேகியம் | - 322 |
| 727. | எரி, வலி, சத்தி குன்மங்களுக்கு இலேகியம் | - 322 |
| 728. | ஓம இலேகியம் | - 323 |
| 729. | கண்டமா இலேகியம் | - 324 |
| 730. | கண்டாத்திரி இலேகியம் | - 325 |
| 731. | கற்பூராதி இலேகியம் | - 325 |
| 732. | குண்டலாதி இலேகியம் | - 327 |
| 733. | குவளை விப்புருதி, உளமாந்தை, ஈளைக்கு இலேகியம் | - 327 |
| 734. | கூழ்பாண்ட இலேகியம் | - 329 |
| 735. | சயகாசத்திற்கு இலேகியம் | - 330 |
| 736. | சயம், குன்மம், சன்னி இவற்றிற்கு இலேகியம் | - 330 |
| 737. | சூசிகா வாய்விற்கு இலேகியம் | - 331 |
| 738. | சூசிகா வாய்விற்கு இலேகியம் (வேறு) | - 331 |
| 739. | சௌபாக்கிய சுண்டி இலேகியம் | - 332 |
| 740. | திப்பிலியாதி இலேகியம் | - 333 |
| 741. | நாரி கேளகந்தக இலேகியம் | - 334 |
| 742. | பல வாய்விற்குத் தேங்காய் இலேகியம் | - 335 |
| 743. | பித்தத்திற்கு இலேகியம் | - 335 |
| 744. | பித்தப்பாண்டு ரோகம், சோகை ஓய்ச்சலுக்கு இலேகியம் | - 336 |
| 745. | பிரமிய நீர்க்கடுப்பிற்கு இலேகியம் | - 338 |
| 746. | மூலத்திற்கு வச்சிரவல்லி இலேகியம் | - 338 |
| 747. | வாய்வு விகாரத்திற்கெல்லாம் இலேகியம் | - 340 |
| 748. | வயிற்றுக் கடுப்பிற்கு இலேகியம் | - 340 |
| 749. | வில்வாதி இலேகியம் | - 341 |

# காரம்

## புண்ணுக்கு எரியாத காரம்

வெள்ளைப் பாடாணத்தைப் பொடி செய்து கோழிமுட்டைக் கரு ஊற்றிப் போடவும். அதற்குள் புரசு சுட்ட சாம்பலாவது பூவரசு சுட்ட சாம்பலாவது போட்டு, அதற்கு மேலும் பாடாணம் பொடியிட்டுப் போடவும். அதன் மேல் மீண்டும் சாம்பல் இட்டு ஓடு கொண்டு மூடி ஏழுசீலை மண் செய்து காயவைத்து, முழங்கால் அளவு குழியில் எருவரட்டி கொண்டு புடமிட்டு எடுக்கவும்.

தீரும் நோய் - புண்

## மூலமுளைக்குக் காரம்

மஞ்சளைச் சுட்டு நீறாக்கிச் சுண்ணாம்பில் மத்தித்து மூலமுளைக்குப் போடவும். முளை கரைந்த பிறகு தயிர்ச் சாதம் வைத்துக் கட்டவும்.

## மூலமுளைக்குக் காரம் (வேறு)

இரச கற்பூரம் வெண்ணெயில் மத்தித்துப் போடவும்.

# குடிநீர்

## அசீரணத்திற்குக் குடிநீர்

ஓமம்
வெந்தயம்
வசம்பு
நாயுருவி
} சம அளவு

இவற்றைக் கருக்கிக் காய்ச்சி வடிகட்டிக் கொடுக்கவும். மூன்று பொழுதில் தீரும்.

தீரும் நோய் - அசீரணம்.

## அசீரண வலிக்குக் குடிநீர்

கடுக்காய்
உமி

இவற்றைத் தண்ணீர் விட்டு காய்ச்சி, வடிகட்டி இதில் திப்பிலி, இந்துப்பு, பெருங்காயம் இவற்றைப் பொடி செய்து மேன்பொடியாகத் தூவிக் கொடுக்கவும்.

தீரும் நோய்கள் - வாந்தி, வயிற்றுவலி, குன்மம்

## அடிக்கடி வருகின்ற சுரத்துக்கு குடிநீர்

| | |
|---|---|
| பேய்ப்புடல் | சரியளவு |
| வேப்பம்பட்டை | |
| கடுக்காய் | |
| குடசப்பாலைப்பட்டை | |
| முத்தக்காசு | |
| சீந்தில் தண்டு | |
| சுக்கு | |

இவற்றைக் குடிநீராக்கிக் கொடுக்கவும்

தீரும் நோய் - அடிக்கடி வருகின்ற சுரம்.

## அட்ட குன்மத்துக்குக் குடிநீர்

காட்டுச் சீரக இலைச்சாறு கால்படி (770 மி.லிட்) எடுத்துக் கொள்ளவும். சட்டியில் மணல் போட்டு வறுத்துக் கொட்டிவிட்டு சாற்றை விட்டு முறித்து வலி எடுத்தவுடன் கொடுக்கவும்.

காலம் - மூன்று நாள் (ஆறுபொழுது)
தீரும் நோய் - எட்டுவித குன்மங்கள்

## அட்ட மூலக் குடிநீர்

சிற்றாமுட்டி பேராமுட்டி முத்தக் காசு
சிறுகியதோர் காஞ்சொரி அரத்தை சுக்கு
மந்தநில வேம்புதிப் பிலியுங் கூட்டி
வகையாக நிறுத்தெடுத்து கசாயங் கொள்ள
கத்துசன்னி தோடசுரம் சன்னி வாதம்
கதறியதோர் விசசுரங்கள் யாவும் தீரும்
முத்திமுனி அருளியதோர் அட்ட மூல
மூதுரையின் குறிப்பதனை முற்றும் பாரே.

(பொருள்) இதில் அட்ட மூலக் குடிநீர் கூறப்படுகிறது.

| | | |
|---|---|---|
| சிற்றாமுட்டி | } | சமஎடை |
| பேராமுட்டி | | |
| முத்தக்காசு | | |
| சிறுகாஞ்சொரி | | |
| அரத்தை | | |
| சுக்கு | | |
| நிலவேம்பு | | |
| திப்பிலி | | |

இவற்றை முறைப்படி குடிநீர் செய்து கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள் - சன்[illegible]தோடம், சுரம், சன்னிவாதம், விசுரங்கள்

## அஷ்டாதிக் குடிநீர்

| | | |
|---|---|---|
| சுக்கு | - | 1 வராகன் (3.5 கிராம்) |
| ஏலம் | - | ” |
| சீரகம் | - | ” |
| நெல்லிமுள்ளி | - | ” |
| வில்வவேர் | - | ” |
| சிறுபயறு | - | ” |
| நெற்பொரி | - | ” |
| சர்க்கரை | - | ” |

இவற்றை ஒருபடி (2.65 லிட்) தண்ணீர் விட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி வடிகட்டிக் கொள்ளவும்.

காலம் : இரண்டு நேரம்
நாட்கள் : எட்டு
தீரும் நோய்கள் : பித்தம், கிறுகிறுப்பு, உஷ்ணவாயு, நாவறட்சி, அசீரணம், மந்தாக்கினி, வாந்தி, விக்கல்.

## அட்டாதசமூலக்குடிநீர்

சீர்பெரிய பெருவாகை பெருங்குமிழ் முன்னையொடு
சிற்றாமல்லி பேராமல்லி
சீரான பாதிரி நெருஞ்சில் சிறுவழுதலை
தீரமாங் கூவிளையுடன்
பார்பெரிய கோட்டமொடு சீந்தி லாடாதொடை
பற்படக மெருக்குசுக்கு

பகர்வார் நிலவேம்பி னோடுசிறு காஞ்சொரி
பகர் கண்டங் கத்தரியும்
ஏர்பெரிய மருந்தெல்லாம் சமனதாய்கூட்டி இதமாக
இடித்ததனை உலர்த்திமெள்ள
இயல்பாக ஒருபிடித்தூவி இருநாழி நீர்போட்டு
எட்டொன்றாய்க் காய்ச்சி இதை யருந்துவீராய்
வார்பெரிய திரிதோடம் சன்னி தோடம்
பிரலாப மூர்ச்சையுடன்
ஆபதாபம் பேசொணா அவத்தைகளும் போகும்
அட்டா தசமூல மென்றிதைப் பேசுவாரே

(பொருள்) இதில் அட்டாதசமூலக் குடிநீர் செய்வகைக் கூறப்படுகிறது.

| | |
|---|---|
| பெருவாகை<br>பெருங்குமிழ்<br>முன்னை<br>சிற்றாமல்லி<br>பேராமல்லி<br>பாதிரி<br>நெருஞ்சில்<br>சிறுவழுதலை<br>வில்வம்<br>கோட்டம்<br>சீந்தில்<br>ஆடாதொடை<br>பற்பாடகம்<br>எருக்கு<br>சுக்கு<br>நிலவேம்பு<br>சிறுகாஞ்சொரி<br>கண்டங்கத்திரி | } சமஎடை |

இவற்றை இடித்து உலர்த்தி வைத்துக் கொள்ள வேண்டும். இதில் ஒருபிடித் தூளுடன் 1 நாழி (3 லிட்) தண்ணீர் சேர்த்து எட்டில் ஒன்றாகக் காய்ச்ச வேண்டும்.

தீரும் நோய்கள் : திரிதோடம், சன்னிதோடம், பிரலாபசன்னி, மூர்ச்சை, தாபம்.

## அதிசாரக் கழிச்சல், விக்கலுக்குக் குடிநீர்

| | | |
|---|---|---|
| கூவிளைவேர் | 1 கழஞ்சு | (4.4 கிராம்) |
| அதிவிடையம் | ” | ” |
| குடசப்பாலைவேர் | ” | ” |
| இருவேலிவேர் | ” | ” |
| முத்தக்காசு | ” | ” |
| வேர்க்கொம்பு | ” | ” |
| சுக்கு | ” | ” |

இவற்றை இருநாழி (2.6 லிட்) நீர்விட்டு உழக்காகக் (336 மி.லிட்) காய்ச்சிக் குடிக்கவும்.

தீரும் நோய் - அதிசாரக்கழிச்சல், விக்கல்

## அதிசாரசுரத்துக்குக் குடிநீர்

புங்கம்பட்டை
பெருமரப்பட்டை
அடப்பம்வேர்ப்பட்டை
நாவல்பட்டை
முத்தக்காசு
} சரியெடை

இவற்றைச் சேர்த்துக் காய்ச்சி வடிகட்டிக் கொள்ளவும்.

தீரும் நோய் - அதிசாரசுரம்.

## அதிசாரசுரம், தாகம், சத்திக்குக் குடிநீர்

| | | |
|---|---|---|
| பொன்முசுட்டை வேர் | - 2 வராகன் | (7 கிராம்) |
| முத்தக்காசு | - ” | ” |
| அத்திப்பட்டை | - ” | ” |
| பூலாவேர்ப்பட்டை | - ” | ” |
| நாவல்பட்டை | - ” | ” |
| மாதுளை வேர் | - ” | ” |
| மாதுளந் துளிர் | - ” | ” |
| இலாமிச்சம் வேர் | - ” | ” |
| மாம்பட்டை | - ” | ” |
| அதிவிடையம் | - ” | ” |
| மதுரம் | - ” | ” |
| கோஷ்டம் | - ” | ” |
| நற்சீரகம் | - ” | ” |

| | | | |
|---|---|---|---|
| சுக்கு | - | ” | ” |
| காசுக்கட்டி | - | ” | ” |
| மாதுளந்தோல் | | ” | ” |
| மாதுளம் பிஞ்சு | - | ” | ” |

இவற்றைக் குறுணித் (5.3 லிட்) தண்ணீரில் நறுக்கிப்போட்டு எட்டொன்றாகக் காய்ச்சி வடிகட்டிக்கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| காலம் | - | ஒரு நாளைக்கு நான்கு முறை |
| தீரும் நோய்கள் | - | அதிசாரசுரம், கழிச்சல், தாகம், சத்தி (வாந்தி) |

## அமுதாதிக் குடிநீர்

**சீந்தித் தண்டு நிலவேம்பு சிறுகாஞ் சோரி கொத்துமல்லி**
**ஆய்ந்த வேலி இலாமிச்சை அதுவும் பாளை பற்படகம்**
**ஏந்தும் மருந்து இவைகளுடன் எட்டொன்றாய்க் காய்ச்சிக் குடிப்பீராய்**
**ஆய்ந்த சுரந்தா னிவைதீரு மமுதாதி யென்னும் குடிநீரே**

(பொருள்) இதில் “அமுதாதிக் குடிநீர்” செய்முறை கூறப்படுகிறது.

சீந்தில் தண்டு
நிலவேம்பு
சிறுகாஞ்சோரி
கொத்துமல்லி
வேலிப்பருத்தி
விலாமிச்சை
பங்கம்பாளை
பற்பாடகம்
} சமஎடை

சேர்த்து இரண்டொன்றாய்த் தட்டி 8 பங்கு நீர் சேர்த்து 1 பங்காய் வற்றக் காய்ச்சிக் குடிக்க வேண்டும்.

தீரும் நோய் : சுரம்

## அமுதாதிக் குடிநீர் (வேறு)

**சிட்டராஞ் சீந்தில் நிலவெம்பு சிறுகாஞ் சோரி கொத்துமல்லி**
**வட்டத் திருப்பி மணிமுத்தம் மகிழ்ந்து பூசு மிலாமிச்சம்**

**பட்டத்திசையும் பற்படகம் பகரும் சுக்கோ டிருவேலி**
**வெட்டிக் கூட்டி லமுதாதி வெப்புக் குளிரை மாற்றிடுமே**

| | |
|---|---|
| சீந்தில்<br>நிலவேம்பு<br>சிறுகாஞ்சொரி<br>கொத்துமல்லி<br>வட்டத்திருப்பி<br>உத்தாமணி<br>முத்தக்காசு<br>விலாமிச்சம் வேர்<br>பற்பாடகம்<br>சுக்கு<br>வெட்டிவேர் | சம எடை |

இவற்றைக் முறைப்படி குடிநீரிட்டுக் குடிக்க வேண்டும்.
திரும் நோய் : குளிர் சுரம்

## அந்திர தாகத்துக்குக் குடிநீர்

மாம்பட்டைத் துளிர்
அரசம்பட்டைத் துளிர்
ஆலம்பட்டைத் துளிர்
இச்சிப்பட்டைத் துளிர்
நாவல்பட்டைத் துளிர்
அதிமதுரம்
சீரகம்

இவற்றைச் சம அளவு சேர்த்துக் காய்ச்சி வடிகட்டிக் கொள்ளவும்
தீரும் நோய் - அந்திர தாகம்

## அலற்று சன்னிக்குக் குடிநீர்

**செங்கழு னிரின்கிழங்கு அதிமதுரம் செய்ய தாமரை வளையமும்**
**தங்கமிது பேய்ப்புடோல் ஒரிலுப்பைப்பூ துலங்குசிறு தேக்குடனே**
**தங்கியிரு சுக்கு யிருநாழி நீரெட்டொன்றதாய் தான் காய்ச்சியே**
**மங்கையர் முலைப்பால்மேல் மென்பொடிகள் திப்பிலிகொள்**
**வாயலற்று சன்னியே**

(பொ-ள்) இதில் அலற்று சன்னிக்குக் குடிநீர் கூறப்படுகிறது.

செங்கழுநீர்க் கிழங்கு
அதிமதுரம்
தாமரைவளையம்
பேய்ப்புடல் } சரி எடை
இலுப்பைப்பூ
சிறு தேக்கு
சுக்கு
தண்ணீர் - 2 நாழி (2.6 லிட்)

சேர்த்து எட்டில் ஒரு பங்காகக் குடிநீர் இட்டு அத்துடன் தாய்ப்பால், திப்பிலி பொடி சிறிதளவு சேர்த்துக் கொள்ள வேண்டும்.

தீரும் நோய் - அலற்று சன்னி

## அவதாகக் காய்ச்சலுக்குக் குடிநீர்

சிற்றாமுட்டி
பேராமுட்டி
சிறுகாஞ்சோரி
தூதுவளை
கண்டங்கத்தரி
சாரணை
ஆமணக்கு
ஆடாதொடை
நொச்சி
கழற்சி
இண்டு
விஷ்ணுகிரந்தி
கோவை
வட்டத்திருப்பி
முத்தக்காசு
பற்படகம்
கொத்தமல்லி
சுக்கு
திப்பிலிமூலம்
கடுக்காய்

இவற்றையெல்லாம் சேர்த்துக் காய்ச்சி குடிநீர் செய்து கொள்ளவும்

தீரும் நோய் - அவதாகக் காய்ச்சல்

## ஆறு அதிசாரத்துக்கும் குடிநீர்

பெருமரப்பட்டை
முத்தக்காசு
மாதுளைஓடு
வில்வ ஓடு
வட்டத்திருப்பி வேர்
சுக்கு
திப்பிலி
ஓமம்
குடசப்பாலை விதை
கழல் பருப்பு
கடுக்காய்
துவரை
பெருங்காயம்

} சம அளவு

இவற்றையெல்லாம் சேர்த்துக் குடிநீர் செய்து கொடுக்கவும்.

தீரும் நோய்கள் - சர்வ அதிசாரங்கள்

(ஆம அதிசாரத்துக்கு, அதிவிடையத்தை இளவெந்நீரில் கொள்ளவும்)

## இரண்டாவது மாறல் சுரத்திற்குக் குடிநீர்

நன்னாரி
முந்திரிகைப்பழம்
வட்டத்திருப்பிவேர்
கடுகுரோகணி
சுக்கு

} சம அளவு

இவற்றைக் காய்ச்சிக் கொடுக்கவும்.

தீரும் நோய் : இரண்டாவது மாறல் சுரம்

## இரத்தக்கழிச்சல், சத்தியெடுத்துக் கழிவதற்குக் குடிநீர்

அரசங்கொழுந்து காய்ச்சி இறுத்துத் தேன் சர்க்கரைக் கூட்டி நெற்பொரி மேல் பொடியிட்டுக் கொடுக்க மாறும்.

## இரத்தக்கழிச்சல் சத்தியெடுத்துக் கழிவதற்குக் குடிநீர் (வேறு)

அடப்பம்பட்டை, சுக்கு ; நறுக்கிக் காய்ச்சி இறுத்துக் கொள்ளவும்

அனுபானம் - தேன்
தீருந்நோய்கள் - இரத்த அதிசாரம், பொருமல், நுரைத்துக் கழிதல்

## இரத்தப்படுவன், கழிச்சலுக்குக் குடிநீர்

**அத்தி மரத்தின் வேரைவெட்டிஅதிலே கலசந் தன்னைவைத்து
மெத்த விழுந்த தண்ணீரை மிகவே பேயன் கனியுடனே
சித் தேலம் சீரகமும் சிறந்த இலாமிச் சிருவேலி
சுத்த மான சந்தனமும் துலங்கப் பிசைந்து குடிப்பீராய்
மெத்த உழலை, பிரதாப மிகவே இரத்தப் படுவனுந்தான்
சுத்த மாகத் தீருமென்று சொன்னார் முனிவ ரானவரே**

(பொருள்) இதில் இரத்தப்படுவன், உழலைக்குக் குடிநீர் கூறப்படுகிறது.

அத்தி மரத்தின் வேரை வெட்டி கிண்ணம்போல் செய்து வைத்துக்கொண்டு அதில் விழும் தண்ணீரை சேகரித்துக் கொள்ளவும். பின்

| | |
|---|---|
| பேயன் வாழைப்பழம் | சமஎடை |
| ஏலம் | |
| சீரகம் | |
| வெட்டிவேர் | |
| விலாமிச்சைவேர் | |
| சந்தனம் | |

கலந்து பிசைந்து குடிக்க வேண்டும்.

அளவு - கூறப்படவில்லை
தீரும் நோய்கள் - உழலை, பிரதாபம், இரத்தப்படுவன்

## இரத்தப் பித்தத்துக்குக் குடிநீர்

| | |
|---|---|
| பேய்ப்புடல் சமூலம் - | 2 பலம் (70 கிராம்) |
| பூனைக்காஞ்சோரிவேர்- | 1 பலம் (35 கிராம்) |
| முட்காய் வேளை வேர்- | ” ” |
| நரிபயற்றம் வேர் - | ” ” |

| | | |
|---|---|---|
| முசுமுசுக்கை வேர் | - | ” ” |
| திப்பிலி | - | ½ பலம் (17.5 கிராம்) |
| மிளகு | - | 5 பணவெடை (2.440 கிராம்) |
| வெள்ளைப்பூண்டு | - | ¼ பலம் (8.75 கிராம்) |
| சீரகம் | - | ½ பலம் (17.5 கிராம்) |
| வாய்விளங்கம் | - | காசெடை (1 பைசா அளவு) |
| ஏலம் | - | ” ” |
| திப்பிலிமூலம் | - | ½ பலம் (17.5 கிராம்) |
| வில்வபத்திரி குடுக்கை (ஓடு) அல்லது வேர் | - | ” ” |
| சம்பா நெற்பொரி | - | 4 பணவெடை (1.952 கிராம்) |
| சுக்கு (மேல் புறணி சீவி சுட்டது) | | |
| சீரகம் | - | 6 பணவெடை (2.928 கிராம்) |

இவற்றுக்கு நான்கு பங்களவு நீர்சேர்த்து உழக்காக (336 மி.லிட்) காய்ச்சி வடிகட்டிக் கொள்ளவும்.

தீரும் நோய் - இரத்தப் பித்தம்

## இரத்தப்பித்தத்திற்குக் குடிநீர் (வேறு)

| | | |
|---|---|---|
| நன்னாரிவேர் | - | ½ பலம் (17.5 கிராம்) |
| வட்டத்திருப்பிவேர் | - | ” ” |
| அருகன் வேர் | - | 1 பலம் (35 கிராம்) |
| பால் | - | 1 உரி (672 மி.லிட்) |

இவற்றைச் சேர்த்துக் குடிநீராகக் காய்ச்சி வடிகட்டிக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| மேன்பொடி | - | சீலைசுட்ட சாம்பல், கற்கண்டு |
| தீரும் நோய் | - | இரத்தப் பித்தம் |

## இரத்தப்பிரமியத்திற்குக் குடிநீர்

| | |
|---|---|
| கொம்பரக்கு | சமஅளவு |
| சீரகம் | |
| திப்பிலி | |
| சுக்கு | |
| மிளகு | |
| மாதுளை | |
| கண்டங்கத்தரி | |

இவற்றைக் காய்ச்சி வடிகட்டிக் கொள்ளவும்.
தீரும் நோய் - இரத்தப் பிரமியம்.

## இரத்தப் பிரமியத்திற்குக் குடிநீர் (வேறு)

| | |
|---|---|
| ஆடாதொடை<br>முந்திரிகைப்பழம்<br>கடுக்காய் | } சம அளவு |

இவற்றை இருநாழி (2.6 லிட்) தண்ணீர் விட்டுக் காய்ச்சி வடிகட்டிக் கொள்ளவும்.

அனுபானம் - சர்க்கரை, தேன்
தீரும் நோய்கள் - சுவாசகாசம், இரத்தப்பிரமியம்

## இரத்த பிரமியத்திற்குக் குடிநீர் (வேறு)

| | | |
|---|---|---|
| சுக்கு | - | 1 காசெடை (ஒரு பைசா அளவு) |
| மிளகு | - | " " |
| திப்பிலி | - | " " |
| சீரகம் | - | " " |
| மாதுளம்பூ | - | " " |
| இலவங்கப்பூ | - | " " |
| கொம்பரக்கு | - | 5 வராகன் (17.5 கிராம்) |

இவற்றை இரண்டு நாழி (2.6 லிட்) தண்ணீரில் போட்டு உழக்காகக் (336 மி.லிட்) காய்ச்சி வடிகட்டிக் கொள்ளவும்.

தீரும் நோய் - இரத்தப் பிரமியம்

## இரத்த பிரமியத்திற்குக் குடிநீர் (வேறு)

கொம்பரக்கு 4 வராகன் (14 கிராம்)
பொடி செய்து கொண்டு, நாழி (1.3 லிட்) தண்ணீரில் போட்டுப் பகல் முழுதும் ஊற வைத்து அடுப்பில் அரை உழக்காகக் (168 மி.லிட்) காய்ச்சி வடிகட்டிக் கொள்ளவும். அதில் ஏலம் 2 வராகன் (7 கிராம்) அளவு எடுத்துக் குடிநீர் விட்டு அரைக்கவும்.

| | |
|---|---|
| அனுபானம் | - சர்க்கரை அல்லது வெல்லம் |
| காலம் | - மூன்று நாள் |
| பத்தியம் | - கசப்பு, புளிப்பு தவிர்க்கவும் |
| தீரும் நோய் | - இரத்தப் பிரமியம் |

## இராக் காய்ச்சலுக்குக் குடிநீர்

அரசம் துளிரை அரைத்துப் பச்சைப் பசுவின் பாலில் கொடுக்கவும். பின்னர்,

| | |
|---|---|
| சீந்தில் தண்டு | சம அளவு |
| பேய்ப்புடல் | |
| சீதேவியார் செங்கழுநீர் | |
| அரசம்பட்டை | |

இவற்றைக் காய்ச்சி வடிகட்டிக் கொடுக்கவும்.
தீரும் நோய் - இராக் காய்ச்சல்

## இருமல் இரைப்புக்குக் குடிநீர்

கடுக்காய்
வசம்பு
சுக்கு
சிறுதேக்கு
கடுகுரோகிணி

இவற்றைத் தண்ணீரில் இட்டுக் காய்ச்சி வடிகட்டிக் கொள்ளவும்

அனுபானம் - கருப்பட்டி
தீரும் நோய் - இருமல், இரைப்பு

## இருமலுக்குக் குடிநீர்

**கண்டங் காலி, வெண்கோஷ்டம் கலந்த சீந்தில் முதுதண்டு**
**சுண்டி முத்தம் திப்பிலியும் சொல்லும் படியே சுருக்கியநீர்**
**உண்டங் கிருக்கில் உயர்காயச் சலிளைப்போ டீளை வெதுப்புடைய**
**விண்டங் குடனே மிகப்பயந்து விட்டே ஏகும் மெல்லியரே**

(பொ-ள்) இதில் இருமலுக்குக் குடிநீர் கூறப்படுகிறது.

| | |
|---|---|
| கண்டங்கத்தரி | சம அளவு |
| வெண்கோட்டம் | |
| சீந்தில் தண்டு | |
| சுக்கு | |
| முத்தக்காசு | |
| திப்பிலி | |

குடிநீர் முறைப்படி செய்து அருந்த வேண்டும்.
தீரும் நோய்கள் : உடல் இளைப்பு, ஈளை, இருமல், சுரம்

## உதிரசிலைக்குக் குடிநீர்

நாவல் பட்டைச்சாறு
நறுவிலிப் பட்டைச்சாறு
ஈர மணல் - 1 படி (2.65 லிட்)

ஈர மணலில் சாற்றைவிட்டு கொதிக்க வைத்து வடிகட்டிக் கொள்ளவும்.
தீரும் நோய் - உதிரசிலை

## சந்திக சன்னிக் குடிநீர்

**சீந்தில் முத்தக்காசு கூவிளைவேர் சிரமருள் பேய்ப்புடோல்**
**வாய்ந்ததோர் கொத்துமல்லி சுக்குடன் மருவு சிற்றாமுட்டிவேர்**
**ஏந்த பேராமுட்டி இலாமிச்சை நன்னாரி எண்கடுகு ரோகணியுடன்**
**சேர்ந்ததோ ரிருநாழி நீருழக் காக்கிகொள் திகழ்சந்திகசன்னி கெடவே**

(பொ-ள்) இதில் சந்திக சன்னிக்குக் குடிநீர் கூறப்படுகிறது.

சீந்தில்
முத்தக்காசு
வில்வவேர்
மருள் — சம எடை
பேய்ப்புடல்
கொத்துமல்லி
சுக்கு
சிற்றாமுட்டி
பேராமுட்டி
இலாமிச்சை — சம எடை
நன்னாரி
கடுகு ரோகிணி
தண்ணீர்

குடிநீர் உழக்காகக் (336 மி.லிட்) காய்ச்சிக் கொள்ள வேண்டும்.
தீரும் நோய் : சந்திக சன்னி

## உழலை, பிரதாப சுரத்துக்குக் குடிநீர்

ஏலம் - 3 கழஞ்சு (13.2 கிராம்)
இலவங்கம் - ” ”

| | | | |
|---|---|---|---|
| சந்தனம் | - | ” | ” |
| அதிமதுரம் | - | ” | ” |
| செண்பகப்பூ | - | ” | ” |
| இலாமிச்சு | - | ” | ” |
| இருவேலி | - | ” | ” |
| கோட்டம் | - | ” | ” |
| முத்தக்காசு | - | ” | ” |
| மாந்துளிர் | - | ” | ” |
| ஆலம் முகிழ் | - | ” | ” |

இவற்றை இரு நாழி (2.6 லிட்) தண்ணீர்விட்டு உழக்காகக் (336 மி.லிட்) காய்ச்சி வடிகட்டிக் கொள்ளவும்.

அனுபானம் - தேன் 4 காசெடை (4 பைசா அளவு)
தீரும் நோய் - உழலை, பிரதாப சுரம்

## உழலை, பிரதாப சுரத்துக்குக் குடிநீர் (வேறு)

| | | | |
|---|---|---|---|
| நாவல் பட்டை | - | 3 கழஞ்சு | (13.2 கிராம்) |
| மாந்துளிர் | - | ” | ” |
| இலாமிச்சை வேர் | - | ” | ” |
| ஆலமுகிழ் | - | ” | ” |

இருநாழி (2.6 லிட்) நீர்விட்டு உழக்காகக் (336 மி.லிட்) காய்ச்சி வடித்து குளிர ஆற்றவும்.

அனுபானம் - தேன் 4 காசெடை (4 பைசா) அளவு
தீரும் நோய் - சத்தி, வெதுப்பு, வயிறு கழிச்சல், தாகம், பெருமூச்சு.

## உள்காய்ச்சலுக்குக் குடிநீர்

ஆவின் பாலுடன் அன்புள சீனியும்
மேவும் சாத்திர வேதியும் ஆகவே
தாவி நாற்பது நாளது தான்குடி
பாவு முன்சுரம் ஓடிப் பதுங்குமே

(பொ-ள்) இதில் உட்சுரத்திற்கு குடிநீர் கூறப்பட்டுள்ளது.

ஆவின்பால்
சீனி
சாத்திரபேதி

இவை ஒன்று கலந்து குடிநீரிட்டு 40 நாள் குடிக்க வேண்டும்

தீரும் நோய்கள் - உள் சுரம்.

## உள்நாக்கிற்குக் குடிநீர்

ஓரிதழ் தாமரை
சுக்கு
மிளகு
வெள்ளைப்பூண்டு

இவற்றை வெள்ளாட்டுக் கோமியத்தில் ஊறவைத்து, வடிகட்டிக் கொள்ளவும்.

தீரும் நோய்கள் - பல்வலி, பல்குத்து, பல் வீக்கம்

## உள் ரோகத்துக்குக் குடிநீர்

| | | | |
|---|---|---|---|
| இலாமிச்சு | - | 1 கழஞ்சு | (4.4 கிராம்) |
| செஞ்சந்தனம் | - | ” | ” |
| கல்நார் | - | ” | ” |
| சாத்திரவேதி | - | ” | ” |
| மாசிக்காய் | - | ” | ” |
| சிற்றரத்தை | - | ” | ” |
| கிராம்பு | - | ” | ” |
| ஏலம் | - | ” | ” |
| அக்கிராகாரம் | - | ” | ” |
| நற்சீரகம் | - | ” | ” |
| கடுக்காய் | - | ” | ” |
| நெல்லிப்பருப்பு | - | ” | ” |

இவை எல்லாவற்றையும் புதுப்பானையில் இட்டு நாழித் (1.3 லிட் ) தண்ணீர் விட்டு ஊறவைத்து வடிகட்டிக் கொள்ளவும்.

காலம் - காலை, மாலை
தீரும் நோய் - உள்ரோகம்

## உள்ரோகத்துக்குக் குடிநீர் (வேறு)

| | | |
|---|---|---|
| அதிமதுரம் | - | 2 பங்கு |
| அத்திப்பட்டை | - | 2 பங்கு |

| | | |
|---|---|---|
| அக்கராகாரம் | - | 1பங்கு |
| பருத்திப்பிஞ்சு | - | 2 பங்கு |
| மாதுளம் பிஞ்சு | - | 2 பங்கு |
| கடுக்காய் | - | 2 பங்கு |
| வெள்ளை கருடன்கிழங்கு | - | 1 பங்கு |
| ஒரு துண்டு சுக்கு | | |
| திப்பிலி | - | 2 பங்கு |

இவையெல்லாம் ஒரு புதுப்பானையில் இட்டு ஒருபடித் தண்ணீர் விட்டு அரைப்படியாகக் (650 மி.லி) காய்ச்சி வடிகட்டிக் கொடுக்கவும்.

காலம் - அந்தி சந்தி
தீரும் நோய்கள் - அக்கரம், நெஞ்சுக்கட்டு, உழலை, மாந்தம், கழிச்சல்

## எரிபித்தத்துக்குக் குடிநீர்

விஷ்ணுகிரந்தி
பற்படகம்
வில்வவேர்
இலாமிச்சைவேர்
சுக்கு
} சம அளவு

இவற்றுக்கு சமஅளவு இளநீரும் தண்ணீரும் சேர்த்துக் காய்ச்சி வடிகட்டிக் கொள்ளவும்.

தீரும் நோய் - எரிபித்தம்

## ஒன்றுவிட்ட மாறலுக்குக் குடிநீர்

பேய்ப்புடல்
நன்னாரி வேர்
முத்தக்காசு
கடுகுரோகணி
சுக்கு
} சம அளவு

இவற்றைப் போட்டுக் குடிநீராக்கிக் கொடுக்கவும்.

தீரும் நோய் - ஒன்றுவிட்ட மாறல் சுரம்

## ஓக்காளத்திற்குக் குடிநீர்

**சந்தனத் தோடு சர்க்கரை நெற்பொரி**
**அஞ்சனத் தோடு அமைந்த லாமிச்சு**

வெந்துழக் காகவே குடிநீர்செய் துண்டிடில்
நெஞ்சில் நில்லாது நிலைத்தஒக் காளமே

(பொ-ள்) இதில் ஓக்காளத்திற்குக் குடிநீர் கூறப்படுகிறது.

சந்தனம்
சர்க்கரை
நெற்பொரி } சரி நிறை
அஞ்சனக்கல்
விலாமிச்சு
நீர் - 1 நாழி (1.3 லிட்)

சேர்த்து குடிநீரிட்டு உழக்காக்கிக் (336 மி.லிட்) குடிக்க வேண்டும்.

தீரும் நோய் - ஓக்காளம்

## கர்ப்பக் கழிச்சலுக்குக் குடிநீர்

சிறுகாஞ்சோரி
சிற்றாமுட்டி
வட்டத்திருப்பி } சம அளவு
முத்தக்காசு
சுக்கு

இவற்றையெல்லாம் நீர்விட்டுக் காய்ச்சி வடிகட்டிக் கொள்ளவும்.
தீரும் நோய் - கர்ப்பக் கழிச்சல்

## கர்ப்ப சோபத்துக்கு வீங்கினால் குடிநீர்

நீர்முள்ளி
சுரைத்தண்டு
பூசணித்தண்டு
வக்கணைப்பட்டை
கருவேப்பிலைத்தண்டு } சம அளவு
கீழாநெல்லி
செங்கதாரி
மாமர இலை
சிறுகுறிஞ்சான்

இவற்றைச் சேர்த்து முக்குறுணி (15.9 லிட்) தண்ணீரில் போட்டு குறுணியாகக் (5.3 லிட்) காய்ச்சி வடிகட்டிக் கொள்ளவும்.
தீரும் நோய் - கர்ப்ப சோபம், வீக்கம்

## கர்ப்ப வீக்கத்திற்குக் குடிநீர்

சாரணை வேரை தண்ணீரில் இட்டுக் காய்ச்சி வடிகட்டிக் கொள்ளவும்.

அனுபானம் - கருப்பட்டி, நெய்
தீரும் நோய்கள் - குடல் புரட்டல், கர்ப்ப வீக்கம், வலி.

## கர்ப்பத்தின் மேல் சத்திக்குக் குடிநீர்

வில்வவேர்
இலாமிச்சைவேர்
நெற்பொரி
கொத்துமல்லி
சுக்கு

இவற்றை குடிநீராய்க் காய்ச்சி வடிகட்டிக் கொடுக்கவும்.
தீரும் நோய் - கர்ப்பத்தின் மேல் வாந்தி

## கர்ப்பிணிக்கு மலசலமடைப்பட்டால் குடிநீர்

வேப்பம் ஈர்க்கு 1 பிடியை சிறிது சிறிதாக நறுக்கிக் கொண்டு சட்டியில் போட்டு பொன்னிறமாக வறுக்கவும். பின்னர்,

கடுக்காய் - 4
களிப்பாக்கு - 4

பொடி செய்து அதனுடன் போட்டு நாழியளவு (1.3 லிட்) தண்ணீர் விட்டு உரியாகக் (672 மி.லிட்) காய்ச்சி சுடச்சுட கொடுக்கவும்.
தீரும் நோய் : கர்ப்பிணிக்கு மலசலக் கட்டு நீங்கும்.

## கர்ப்பிணி சுரத்துக்குக் குடிநீர்

நன்னாரி
மாகாளிக் கிழங்கு
முத்தக்காசு
கருவேப்பிலைத்தண்டு
கீழாநெல்லி
செங்கத்தாரி
மாமர இலை
சிறுகுறிஞ்சான்

} சம அளவு

இவற்றைச் சேர்த்து முக்குறுணி (15.9 லிட்.) தண்ணீரில் போட்டு குறுணியாகக் (5.3 லிட்.) காய்ச்சி வடிகட்டிக் கொள்ளவும்.

தீரும் நோய் - கர்ப்ப சுரம்.

## கர்ப்பிணி சுரத்துக்குக் குடிநீர் (வேறு)

நன்னாரி - சம அளவு
மாகாளிக் கிழங்கு - சம அளவு

முத்தக்காசு
வெட்டிவேர்
விலாமிச்சம் வேர்
சுக்கு
அதிமதுரம்
சிற்றாமுட்டி
பேராமுட்டி
சீந்தில்
தேவதாரம்
சந்தனம்
நிலப்பனைக் கிழங்கு
} சம அளவு

இவற்றைச் சேர்த்துக் குடிநீராக்கிக் கொள்ளவும்.

அனுபானம் - தேன்
தீரும் நோய் - கர்ப்பிணி சுரம்.

## கர்ப்பிணிமேல் வீக்கத்திற்குக் குடிநீர்

அதிமதுரம், நெய்தல்கிழங்கு இரண்டையும் பாலில் அரைத்து நெய்யில் கலந்து குடிக்கவும்.

தீரும் நோய் - கர்ப்பிணி மேல் வீக்கம்

## கறுத்தக் காய்ச்சலுக்குக் குடிநீர்

கற்பூரவல்லி இலை
வல்லாரை
சீரகம்
ஈருள்ளி
சுக்கு
} சம அளவு

இவற்றைக் குடிநீரிட்டுக் குடிக்கவும்

தீரும் நோய் - கறுத்தக் காய்ச்சல்.

### கற்சூலைக்குக் கஷாயம்

கூவிளை ஆயில் கொடிவேலி கொன்றை கடுக்காய் கீழநெல்லி
ஆவி வேர்க்கொம்பு திப்பிலியும் ஆன மஞ்ச ணத்தியும்
காவி மிகவே ஓர்கழஞ்சு காய்ச்சிக் கொடுக்கக் கருத்துடனே
பாவி கற்சூலை தானோடிப் போகு மென்றார் மாமுனிவர்

(பொ-ள்) இதில் கற்சூலைக்குக் குடிநீர் கூறப்படுகிறது.

வில்வவேர்
ஆயில்பட்டை
கொடிவேலி
கொன்றை
கடுக்காய்
கீழாநெல்லி
சுக்கு
திப்பிலி
நுணா
பூங்காவி

} வகைக்கு 1 கழஞ்சு (4.4 கிராம்)

வகைக்கு 1 கழஞ்சு (4.4 கிராம்)

இவற்றை முறைப்படி குடிநீரிட்டு வழங்க வேண்டும்.

தீரும் நோய்கள் : கற்சூலை

### கன்ன மூலத்திற்குக் குடிநீர்

பறங்கிப்பட்டை - 1 பலம் (35 கிராம்)
சுக்கு - ¼ பலம் (8.75 கிராம்)

இவற்றை நாழித் தண்ணீர் (1.3 லிட்) விட்டு ஆழாக்காகக் (168 மி.லிட்) காய்ச்சி வடிகட்டிக் கொள்ளவும்.

காலம் - மூன்று நாட்கள்
பத்தியம் - புளிப்பு, கசப்புச் சுவையைத் தவிர்க்கவும்.
தீரும் நோய் - கன்னமூலம்

(நொச்சியிலைத் துவைத்து சாறு பிழிந்து காய்ச்சி, வீக்கத்தில் பூசவும்)

### கால்கை எரிவதற்குக் குடிநீர்

கொத்துமல்லி - 1 பிடி
சுக்கு - ஒரு துண்டு
பேராமுட்டு வேர் (ஒரு இரையளவு)

இவை மூன்றையும் நறுக்கி இரண்டு படி (2.6 லிட்) தண்ணீரில் போட்டு உழக்கான (336 மி.லிட்) பிறகு வடிகட்டிக் கொள்ளவும்.

காலம் - மூன்று நாட்கள் (ஆறு பொழுது)
தீரும் நோய் - கை, கால் எரிவு

## கால்எரிவு, கைஎரிவு, வயிறு எரிவுக்குக் குடிநீர்

நிலக்குமிழ் கொழுந்து 1 சேர் (280 கிராம்) எடுத்து அரிந்து துவைத்து ஒரு பானையில் போட்டு ஒரு படி தண்ணீர்விட்டு மறுநாள் இறுத்துக் கொள்ளவும். உழக்கு (336 மி.லிட்) தண்ணீரில் ஒருபிடி சர்க்கரை போட்டுக் கரைத்து கொடுக்கவும்.

காலம் - ஐந்து நாட்கள்
பத்தியம் - கிரந்திப் பண்டம், கசப்பு, புளிப்புச் சுவை தவிர்க்கவும்.
தீரும் நோய் - கால் எரிவு, கை எரிவு, வயிறு எரிவு

## கிராணி, அரோசகத்திற்குக் குடிநீர்

சுக்கு
முத்தக்காசு
அதிவிடையம்
சீந்தில்
} சம அளவு

இவற்றைச் சேர்த்து குடிநீராக்கிக் கொடுக்கவும்.

காலம் - 5 நாட்கள்
தீரும் நோய்கள் - கிராணி, அரோசகம்

## கிரிச்சரம், நீரடைப்புக்குக் குடிநீர்

துரிசு - 1 பலம் 35 கிராம்
சீனாக்காரம் - 4 பலம் 140 கிராம்
வெண்காரம் - 1 பலம் 35 கிராம்

இவைகளைப் பொடிசெய்து,

மாவிலங்கை வேர் - 10 பலம் 350 கிராம்
நெருஞ்சி வேர் - ” ”

| | | | |
|---|---|---|---|
| பூளை வேர் | - | ” | ” |
| பிறாமுட்டி வேர் | - | ” | ” |

இவற்றோடு சேர்த்துத் துவைத்து முக்குறுணி (15.9 லிட்) நீர்விட்டு நான்கொன்றாய்க் காய்ச்சி பதமாக எரித்து ஆழாக்காக (84 மி.லிட் ) கொள்ளவும்.

தீரும் வியாதிகள் - நீரடைப்பு, மூத்திரக்கிரிச்சரம்

## கிரிச்சரம் நீரடைப்புக்குக் குடிநீர் (வேறு)

| | | | |
|---|---|---|---|
| பிறாமுட்டி வேர் | - | 10 பலம் | 350 கிராம் |
| சிறுபூளை வேர் | - | ” | ” |
| நெருஞ்சி வேர் | - | ” | ” |

இவற்றை துவைத்து முக்குறுணி (15.9 லிட்) நீர்விட்டு ஒரு படியாய் 5.3 லிட் காய்ச்சி வடித்து

| | | | |
|---|---|---|---|
| கடுகுரோகணி | - | ¼ பலம் | 8.75 கிராம் |
| வாய்விளங்கம் | - | ” | ” |
| திப்பிலி | - | ” | ” |
| சுக்கு | - | ” | ” |
| சிற்றரத்தை | - | ” | ” |
| பேரரத்தை | - | ” | ” |
| இந்துப்பு | - | ” | ” |
| ஈரவெங்காயச்சாறு | | 1 உரி | (682 மி.லிட்) |
| எலுமிச்சம்பழச்சாறு | - | ” | ” |
| பசுவின் நெய் | - | 3 உரி | (2.016 லிட்) |

இவற்றோடு முன் குடிநீரையும் சேர்த்து, வெண்காரம் 1 வராகன் (3.5 கிராம்) பொரித்துப் போட்டு கலந்து உட்கொள்ளவும்.

தீரும் நோய்கள் - நீர்க்கட்டு, துன்மாங்கிஷம்

## குரு புறப்பட்டு வீங்கினால் குடிநீர்

| | |
|---|---|
| நில நாவல்<br>இம்பூரல்வேர்<br>ஈரவெங்காயம் | சம அளவு |

இவற்றை குறுணித்தண்ணீர் (5.3 லிட்) விட்டு இரு நாழித் (2.6 லிட்) தண்ணீர் சேர்த்துக் காய்ச்சி வடிகட்டிக் கொள்ளவும்.

காலம் - காலை, மாலை
திரும் நோய் - குரு புறப்பட்ட வீக்கம்

## குலை எரிவுக்குக் குடிநீர்

நரிபயற்றங்கொடிசமூலம் - 1 பணவெடை (488 மி.கிராம்)
சீரகம் - 1 பலம் (35 கிராம்)
தண்ணீர் - 1 தூணி (21.5 லிட்டர்)

நரிபயற்றங்கொடி சமூலம், சீரகம் இவற்றைத் தண்ணீரில் போட்டு இரண்டு படியாகக் (5.2 லிட்டர்) காய்ச்சி அந்தச் சீரகத்தில் ¼ பலம் (8.75 கிராம்) எடுத்து அரைத்து ½ படி (1.35 லிட்டர்) குடிநீரில் கொடுக்கவும்.

காலம் - நான்கு நாள்
திரும் நோய் - குலை எரிவு.

## குளிர் சுரக் குடிநீர்

இப்பினார் தம் மேலாணை இடுபுடோல் முத்தக்காசு
பற்படகம் சீந்தி சுக்கு பையவே நைய காய்ச்சி
அப்பினார் தேனி னோடே யளாவினா ரென்னக் கேட்டு
வெப்பினார் குளிரி னாரை வினவினார் விடைகொண் டாரே

(பொருள்) இதில் குளிர் சுரத்திற்குக் குடிநீர் கூறப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| பேய்ப்புடல் | சரி எடை |
| முத்தக்காசு | |
| பற்பாடகம் | |
| சீந்தில் | |
| சுக்கு | |
| நீர் | |

சேர்த்துக் குடிநீரிட்டுத் தேன் கலந்து குடிக்க வேண்டும்.

திரும் நோய் - குளிர் சுரம்

## பாட வேறுபாடு

இப்பினார் தம்மி நாணை யிட்டோல முத்தக் காசு
பற்படஞ் சீந்தி சுக்கு பையவே நைய லெந்த

அரப்பினார் தேனி னோட அளவினா ரென்னக் கேட்டு
வெரப்பினார் சீத னாரை விரலினார் விடைகொண் டாரே
(தேரையர் வைத்தியம் 1001 பாடல் எண் 925)

## குளிர்சுரக் குடிநீர் (வேறு)

**கோட்டந் திப்பிலி கண்டங்காலி கொள்ளுஞ் சிறுதேக் குடனேசுக்கு**
**விட்ட மில்லா நிலவேம்பு வண்மை முத்தஞ் காஞ்சொரியும்**
**நீட்டுஞ் சீந்தில் பற்படகம் நிறையாய் காய்ச்சி யருந்துவீராய்**
**வாட்ட மின்றிக் குளிர்சுரங்கள் அகலு மினியே கண்டீரே**

(பொருள்) இதில் குளிர்சுரக் குடிநீர் கூறப்படுகிறது.

கோட்டம்
திப்பிலி
கண்டங்கத்தரிவேர்
சிறுதேக்கு
சுக்கு
நிலவேம்பு
முத்தக்காசு
சிறுகாஞ்சொரி
சீந்தில்
பற்பாடகம்
} வகைக்கு ஒரு பங்கு
தண்ணீர் - 8 பங்கு
சேர்த்து முறைப்படி குடிநீரிட்டு அருந்த வேண்டும்.

திரும் நோய் : குளிர் சுரம்

## சகல உதிரிக்கும் குடிநீர்

| | |
|---|---|
| நரிப்பச்சைப் பூண்டு | - 1 பிடி |
| நாயுருவி வேர் | - 2 பிடி |
| நற்சீரகம் | - 1கழஞ்சு (4.4 கிராம்) |
| கடுக்காய் | - 1 ” |
| களிப்பாக்கு | - 3 ” |
| அதிமதுரப்பட்டை | - (13.2 கிராம்) |

இவற்றைக் கூட்டி இருநாழி (2.6 லிட்.) நீர்விட்டு உழக்காகக் (336 மி.லிட்.) காய்ச்சிக் குடிக்கவும்.
திரும் நோய் - சகல விதமான உதிரிகள்.

## சத்திக்குக் குடிநீர்

வில்வ வேரொடு நெற்பொரி முன்னைவேர் சீரகம்
நல்ல திப்பிலி கொத்துமல்லியுங் கூட்டியே
சொல்லு நாழி நீரிட்டுழக் காக்கியே
சொல்ல வோடும் துரத்திடும் சத்தியை

(பொருள்)' சத்திக்குக் குடிநீர் இதில் கூறப்படுகிறது.

| | |
|---|---|
| வில்வவேர்<br>நெற்பொரி<br>முன்னைவேர்<br>சீரகம்<br>திப்பிலி<br>கொத்துமல்லி | சரியளவு |
| தண்ணீர் | - 1 நாழி |

குடிநீரிட்டுக் குடிக்க வாந்தியைப் போக்கும்.

## சத்திவிக்கலுக்குக் குடிநீர்

கொத்து மல்லி நெற்பொரி குறத்த முட்டிக் கூவிளை
ஒத்த சுக்கு முத்தமோ டுகந்து நீரை குடித்திடில்
பித்த மான கோபமும் பெருத்த சத்தி விக்கலும்
சத்தியான கோபமும் தரித்த தில்லை இல்லையே

(பொருள்) இதில் சத்தி விக்கலுக்குக் குடிநீர் கூறப்படுகிறது

| | |
|---|---|
| கொத்துமல்லி<br>நெற்பொரி<br>சிற்றாமுட்டி<br>வில்வவேர்<br>சுக்கு<br>முத்தக்காசு | சரி எடை |

சேர்த்து முறைப்படி குடிநீரிட்டு அருந்தவேண்டும்.
தீரும் நோய்கள் - பித்தசோபம், வாந்தி, விக்கல் சுத்தி
வெதுப்பு, வயிறு கழிச்சல், தாகம்

## சயத்துக்குக் குடிநீர்

ஆடா தொடை நாகமல்லி ஆன சுரையி னிலையுடனே
வாடா கண்டங் கத்தரிவேர் வாய்த்த முள்ளி வேருடனே

**பாடா திப்பிலி சீரகமும் பரிவாய் கசாயம் தான்காய்ச்சி**
**தேடிப் புனுகு மேன்பொடியாத் திரமாய் காய்ச்சிக் குடிப்பீராய்**
**கூடாய் விழுமே சயரோகம் குறிப்பை அறிவார் பெரியோரே.**

*(பொ-ள்) இதில் சயநோய்க்குக் குடிநீர் கூறப்படுகிறது.*

| | |
|---|---|
| ஆடாதோடை<br>நாகமல்லி<br>சுரை இலை<br>கண்டங்கத்தரி வேர்<br>முள்ளிவேர்<br>திப்பிலி<br>சீரகம் | } சம அளவு |

ஒன்றிரண்டாய் இடித்து முறைப்படிக் குடிநீர் செய்து கொண்டு, அதில் புனுகு சிறிது சேர்த்துக் குடிக்க வேண்டும்.
தீரும் நோய் - சய ரோகம்

## சயத்துக்கும் இருமலுக்கும் கஷாயம்

தூதுவளை சமூலம் இடித்துப் பொடிசெய்து ஐந்து பலம் (105 கிராம்) போட்டு குறுணி (5.3 லிட்) நீர் வைத்து உரியாகக் (672 மி.லிட்) காய்ச்சவும். மேல் மருந்தாக திப்பிலி, கருஞ்சீரகம், கம்பிப்பிசின் மூன்றும் பொடிசெய்து கொள்ளவும். குடிநீருடன் சேர்த்து உட்கொள்ளவும்.
பத்தியம் - உப்பு, புளிப்பு தவிர்க்கவும்
தீரும் நோய்கள் - சயம், இருமல்

## சயரோக சிலேத்துமத்திற்குக் குடிநீர்

| | | | |
|---|---|---|---|
| கடுக்காய் | - | 3 கழஞ்சு | (10.5 கிராம்) |
| திப்பிலி | - | ,, | ,, |
| தேவதாரம் | - | ,, | ,, |
| சுக்கு | - | ,, | ,, |
| முந்திரிகைப்பழம் | - | ,, | ,, |

*நாழி (2.65 லிட்) நீர்விட்டு உழக்காகக் (336 மி.லிட்) காய்ச்சி வடிகட்டிக் கொள்ளவும்.*

காலம் - மூன்று நாள்
தீரும் நோய்கள் - சயரோகம், காசம், சிலேத்துமம்.

## சயித்தியத்திற்குக் குடிநீர்

| | |
|---|---|
| சித்திரமூலம்<br>உத்தாமணி<br>முருங்கைவேர்ப்பட்டை<br>கருவாப்பட்டை<br>நெட்டை பேய்மிரட்டிவேர்<br>பெருமரத்துப் பட்டை<br>மூங்கிலிலை<br>பூமிவேர் | சம அளவு |

இவற்றோடு,

| | |
|---|---|
| திப்பிலி,<br>வெள்ளைப் பூண்டு<br>மிளகு | வகைக்கு¼ பங்கு |

இவை மூன்றையும் முடிந்துபோட்டு, ஒரு படித் தண்ணீர் (2.65 லிட் )அரைப்படி (1.33 லிட்) யாக வரும்வரை காய்ச்சி வடிகட்டிக் கொடுக்கவும்.
தீரும் நோய் - சயித்தியம்.

## சர்வ இருமலிற்கும் பஞ்ச சுவாசத்திற்கும் குடிநீர்

பெண்ணிற்கு ஆணுடைய சிறுநீர், ஆணிற்கு பெண்ணுடைய சிறுநீர் காய்ச்சி திக்தாதி பொடி செய்து வெருகடி (ஒரு சிட்டிகையளவு) தூள் போட்டு கொடுக்கவும்.

காலம் - 3 நாட்கள் (காலை, மாலை)
தீரும் நோய் - அனைத்துவகை இருமல், ஐந்துவகை சுவாசம்.

## இருமலுக்கும் பஞ்ச சுவாசத்துக்கும் குடிநீர் (வேறு)

**மெய்வழி நீரில் மிளகு பருகிடில்**
**அய்வ கைநீர் அரிய மருந்திவை**
**மைவிழி நீர்விழி குழலாரே**
**இவ்வகை செய்யீளை இருமலு மில்லையே**

மிளகை சிறுநீரில் அருந்தவும்.
தீரும் நோய் : ஈளை, இருமல்

## சர்வ சுரத்துக்கும் குடிநீர்

இலுப்பைப்புளி வேம்புமாக கருவேம்புட ஈர்க்கு
இயல்கடுக்கா யின்னோடு குமரியும்
இலுவான துளசி கஞ்சாங்கோரை நீர்முள்ளி
எழில்விஷ்ணு கிரந்தி யுடனே
துலங்க மாஇடு இருமல்லிகை தூதுவளை
துய்ய முக்கா வேளையும்
தோராத கொடிவேலியும் உயர்கண்டங் கத்தரி
துய்ய தாகவே சமனதாய்
பலபாக வேமருந் தெல்லாம் உலர்த்தியே
பண்பாக இடித்தப் பொடியை
பையவே இருநாழி நீருக் கொருபலம்
பரவிஉழக் காக்கி உண்ண
குலைந்துவரு விடசுர மதிதாப மோடே
கூடு பலதிரி தோடமும்
குணம் தாமென் றென்று மவ்வகை
கறி னார்பெரி யோர்களே

*(பொ-ள்) இதில் சர்வ சுரத்திற்கும் குடிநீர் கூறப்படுகிறது.*

| | |
|---|---|
| இலுப்பைப்பட்டை | - சரி நிறை |
| புளியம்பட்டை | |
| வேப்பம்பட்டை | |
| கருவேப்பிலைஈர்க்கு | |
| கடுக்காய் | |
| கற்றாழஞ்சோறு | |
| துளசி | |
| கஞ்சாங்கோரை | |
| நீர்முள்ளி | |
| விட்ணு கிராந்தி | |
| மாம்பட்டை | |
| சிற்றாமல்லி | |
| பேராமல்லி | |
| தூதுவளை | |
| முட்காவேளைவேர் | |
| கொடிவேலி | |
| கண்டங்கத்தரி | |
| தண்ணீர் | - 2 நாழி (2.6 லிட்) |

கடைச் சரக்குகளை உலர்த்திப் பொடித்துத் தண்ணீர் சேர்த்துக் காய்ச்சி, உழக்கு (336 மி.லிட்) குடிக்க வேண்டும்.

தீரும் நோய்கள் - விடசுரம், அதிதாகம், தினதாபம்.

### சர்வ சுரங்களுக்கும் அதிசாரத்திற்கும் குடிநீர்

| | |
|---|---|
| பெருமரப்பட்டை | சம அளவு |
| அதிவிடையம் | |
| முத்தக்காசு | |
| வில்வவேர் | |
| மாதுளை ஓடு | |

இவற்றைச் சேர்த்துக் குடிநீராக்கிக் கொடுக்கவும்.

தீரும் நோய்கள் - சர்வ சுரங்கள், அதிசாரம்.

### சர்வ சுரங்களுக்கும் அதிசாரத்துக்கும் குடிநீர் (வேறு)

| | |
|---|---|
| குடசப்பாலைப்பட்டை | சம அளவு |
| அதிவிடையம் | |
| மாதுளை ஓடு அல்லது | |
| மாதுளை வேர் | |
| முத்தக்காசு | |
| சுக்கு | |

இவற்றைக் குடிநீராக்கிக் கொடுக்கவும்.

தீரும் நோய்கள் - சர்வ சுரங்கள், சீதவலியும் இரத்தமும் சேர்ந்த அதிசாரம்.

### சன்னிக்குமேல் வந்த இருமலுக்குக் குடிநீர்

| | | |
|---|---|---|
| சங்கம் வேர் | - | 2 கழஞ்சு (8.8 கிராம்) |
| காவேளை வேர் | - | ” ” |
| சிறுவழுதளைவேர் | - | ” ” |
| சீந்தில் தண்டு | - | ” ” |
| அவுரி வேர் | - | ” ” |
| வேப்பீர்க்கு | - | ” ” |
| ஆடாதோடை இலை | - | ” ” |
| சுக்கு | - | ” ” |
| கடுக்காய் | - | ” ” |
| பிரமி | - | ” ” |

இவற்றை இருநாழி (2.6 லிட்) நீர்விட்டு உழக்காகக் (336 மி.லிட்) காய்ச்சிக் குடிக்கவும்.

தீரும் நோய் - சன்னிக்குமேல் வந்த இருமல்.

## சன்னிவாத சுரத்திற்குக் குடிநீர்

**சுக்கு சீந்தில் சேவகனும் தூய்ய கருவேல் வேப்பந்தோல்**
**மிக்க கடுக்காய் கருவேம்பு விரவும் வெள்ளை உள்ளியுடன்**
**வைக்க நீரி லிருநாழி மறைக்க வெந்திட் டொன்றாக்கி**
**நீக்கி யிடிலோர் விதம்போம் நல்ல சன்னி நடுங்கிடுமே.**

(பொருள்) இதில் சன்னிவாதத்திற்குக் குடிநீர் கூறப்படுகிறது.

சுக்கு
சீந்தில்
சிற்றாமுட்டி
கருவேலம்பட்டை
வேப்பந்தோல்
கடுக்காய்
கருவேம்பு
உள்ளி
} வகைக்கு சரி எடை

தண்ணீர் - 2 நாழி (2.6 லிட்)

இவை ஒன்று சேர்த்து ஒரு ஆழாக்காகக் (168 மி.லிட்) குறுக்கிக் குடிக்கவேண்டும்.

தீரும் நோய் - வாதம், சன்னி

## வாதசுர சன்னி, தோடத்திற்குக் குடிநீர் (வேறு)

**கடுக்காய் சுக்கு கொடிவேலிக் கடுக சீந்தில் சேவகனும்**
**மிடுக்கா லோறொன் றிருகழஞ்சு மீண்டிரு நாழி எட்டிலொன்றாய்**
**கொடுத்தால் வாத சுரசன்னி கொடிய தோட மிவைதீரும்**
**மடுத்தார் தனக்கு இரண்டுசெய்யு, மழிவு போலே அகன்றிடுமே.**

(பொருள்) இதில் வாதசுரசன்னி, தோடம் இவற்றிற்குக் குடிநீர் கூறப்படுகிறது.

கடுக்காய்
சுக்கு

| | |
|---|---|
| கொடிவேலி, கடுகு, சீந்தில், சிற்றாமுட்டி | வகைக்கு 2 கழஞ்சு (8.8 கிராம்) |
| தண்ணீர் | - 2 நாழி (2.6 லிட்) |

இவற்றை ஒன்று சேர்த்துக் காய்ச்சி 1/8 பங்காக்கிக் குடிக்க வேண்டும்.

தீரும் நோய்கள் - வாதசுர சன்னி, தோடம்

## சன்னிவாத சுரத்திற்குக் குடிநீர் (வேறு)

| | | | |
|---|---|---|---|
| கண்டங்கத்தரி வேர் | - | 1 கழஞ்சு | 4.4 கிராம் |
| தேவதாரம் | - | ” | ” |
| மரமஞ்சள் | - | ” | ” |
| முத்தக்காசு | - | ” | ” |
| பேய்ப்புடல் | - | ” | ” |
| வேப்பம்பட்டை | - | ” | ” |
| கடுக்காய் | - | ” | ” |
| நெல்லிப்பருப்பு | - | ” | ” |
| கடுகுரோகணி | - | ” | ” |
| சுக்கு | - | ” | ” |
| கோட்டம் | - | ” | ” |
| சீந்தில் தண்டு | - | ” | ” |
| சிறுவழுதளைவேர் | - | ” | ” |

இவற்றில் இருநாழி (2.6 லிட்) நீர்விட்டு உழக்காகக் (336 மி.லிட்) காய்ச்சிக் கொடுக்கவும்.

தீரும் நோய் - சன்னிவாத சுரம்

## சிலேத்தும இருமலுக்குக் குடிநீர்

**தானே சுக்கு சிறுவழுதளை தக்க சீந்தில் தண்டிவைசமனாய்**
**தேனே தண்ணீர் இருநாழி தெளியக் காய்ச்சி உழக்காக்கி**
**மானே திப்பிலி தேனிஞ்சி மகிழ்ந்து கூட்டிக் குடிப்பீராய்**
**போனார் சுவாச சிலேட்டுமமும் பொருந்தா தீளை இருமலுமே**

(பொருள்) சிலேத்தும இருமலுக்குக் குடிநீர் கூறப்படுகிறது.

சுக்கு
சிறுவழுதலை - சம எடை
சீந்தில் தண்டு
தண்ணீர் - 2 நாழி (2.6 லிட்)

சேர்த்து உழக்காகும் (336 மி.லிட்) வரைக் காய்ச்சி அத்துடன்

திப்பிலித்தூள்
தேன்
இஞ்சிச்சாறு

கூட்டிக் குடிக்க வேண்டும்.

தீரும் நோய்கள் : சுவாசம், சிலேத்துமம், ஈளை, இருமல்.

## சிலேற்பன சுரத்திற்குக் குடிநீர்

சிறுகாஞ் சோரி சிறுவழுதலை சிறுதேக் குடனே சீந்தில்சுக்கு
மறுவா முத்தக் காசினொடு வகையா லோறொன் றிருகழஞ்சு
குறியாத தண்ணீ ரிருநாழி கூட்டிக் காய்ச்சி உழக்காக்கி
எறியா திப்பிலி பொடிதூவி ஏகிலே கக்கும் கபசுரமே.

(பொருள்) இதில் சுப சுரக்குடிநீர் கூறப்படுகிறது.

சிறுகாஞ்சொரி
சிறுவழுதளை
சிறுதேக்கு
சீந்தில்
சுக்கு
முத்தக்காசு } வகைக்கு 2 கழஞ்சு (8.8 கிராம்)
தண்ணீர் - 2 நாழி (2.6 லிட்)

சேர்த்துக் காய்ச்சி உழக்காக்கி (336 மி.லிட்) திப்பிலிப் பொடி சேர்த்து அருந்த வேண்டும்.
தீரும் நோய் - கபசுரம்

## வாத சீதக் கிராணிக்குக் குடிநீர்

தேவ தார மாதுளையும் சிறுதேக்கு சுக்குடனே
மேவு காவட் டம்புல்லும் வெள்ளுள்ளி நிலவேம் போடு
ஆவதோர் சிறுகாஞ் சோரி அணிமுக்கா வேளைவேர் நொச்சி
ஆவதோ ரிலையே யாகும் அதுவே பன்னிரு கழஞ்செடை

**பரிவுடனிட்டு நீரிருநாழி நிறைப்புகட்டி உழக்காய்**
**காய்ச்சிக் குடித்திட வாதசீத கிராணி மாறிடுமே**

(பொருள்) இதில் வாதசீதக் கிராணிக்குக் குடிநீர் கூறப்படுகிறது.

| | | |
|---|---|---|
| தேவதாரம் | | |
| மாதுளை | | |
| சிறுதேக்கு | | |
| சுக்கு | | |
| காவட்டம்புல் | | 12 கழஞ்செடை |
| உள்ளி | | (52.8 கிராம்) |
| நிலவேம்பு | | |
| சிறுகாஞ்சொரி | | |
| முட்காய்வேளை வேர் | | |
| நொச்சி | | |
| தண்ணீர் | - | 2 நாழி (2.6 லிட்) |

இவை சேர்த்துக் காய்ச்சி உழக்காக்கிக் (336 மி.லிட்) குடிக்க வேண்டும்.
தீரும் நோய் - வாத சீதக்கிராணி.

## சீத சுரத்திற்குக் குடிநீர்

| | |
|---|---|
| தூதுவளைவேர் | |
| துளசி | |
| விஷ்ணுகிரந்தி | சரி எடை |
| சுக்கு | |
| எலுமிச்சை இலை | |

இவற்றைச் சேர்த்துக் குடிநீர் செய்து, திப்பிலி மேன்பொடித் தூவிக் குடிக்கவும்.
தீரும் நோய் - சீதசுரம்

## சீழ் பிரமியத்திற்குக் குடிநீர்

| | |
|---|---|
| கோழிக்குள் இருக்கும் | |
| மாங்காயில் இருக்கும் | |
| கல், நெல், உள்தோல் | |
| சாதிலிங்கம் | - 1 வராகன் (3.5 கிராம்) |
| முடக்கற்றான் வேர்ப்பட்டை | - ¼ பலம் (8.75 கிராம்) |

இவற்றையெல்லாம் முடக்கொற்றான் குடிநீரில் அரைத்து பாக்குப் போலே உருட்டி அந்தக் குடிநீரில் ஏழுநாள் கரைத்துக் குடிக்கவும்.

தீரும் நோய் - சீழ் பிரமியம்.

## சீனப்பட்டை ஊறல் குடிநீர்

| | | |
|---|---|---|
| பரங்கிப்பட்டை | - | 8 பலம் (280 கிராம்) |
| செங்கத்தாரிப்பட்டை | - | 2 " (70 கிராம்) |
| வெள்ளருகு | - | 2 " (70 கிராம்) |
| இசங்கு | - | 2 " (70 கிராம்) |
| கருஞ்சீரகம் | - | ½ பலம் (17.5 கிராம்) |

இவற்றையெல்லாம் இடித்துச் சாராயத்தில் போட்டு வேடுகட்டி நெல்லில் புதைத்து, மூன்று நாட்களுக்குப் பிறகு எடுத்துக் குடிக்கவும்.

காலம் - 7 நாட்கள்
பத்தியம் - கோதுமை, அரிசி, ரொட்டி
(22 நாட்களுக்குப் பத்தியமாக இருக்க வேண்டும்.)

தீரும் வியாதிகள் சகல வியாதிகள் தீரும்

## சுகசன்னி தோஷத்துக்குக் குடிநீர்

| | | | |
|---|---|---|---|
| கண்டங்கத்தரி | - | 1 வராகன் 3.5 | கிராம் |
| சிறுவழுதலை | - | " | " |
| சங்கம்பட்டை | - | " | " |
| முக்கத்தரிப்பட்டை | - | " | " |
| மாவிலங்கைப்பட்டை | - | " | " |
| கொடுவேலிவேர் | - | " | " |
| எருக்கம்பட்டை | - | " | " |
| கரிசலாங்கண்ணி | - | " | " |

இவற்றுடன் இருநாழித் தண்ணீர் (2.6 லிட்) வார்த்து நான்கொன்றாய்க் காய்ச்சி வடித்துத் திப்பிலி மேன்பொடி போட்டுக் குடிக்கவும்.

தீரும் நோய் - சகசன்னி தோஷம்

## சுகசன்னிக்குக் குடிநீர் (வேறு)

| | | | |
|---|---|---|---|
| முருங்கைப்பட்டை | - | 2 வராகன் (7 கிராம்) | |
| அவுரி வேர் | - | ” | ” |
| கொடிவேலி வேர் | - | ” | ” |
| முட்காவேளைவேர் | - | ” | ” |
| கண்டங்கத்தரி வேர் | - | ” | ” |
| செவ்வியம் | - | ” | ” |
| திப்பிலிமூலம் | - | ” | ” |
| கண்டுபாரங்கி | - | ” | ” |
| வேலிப்பருத்தி வேர் | - | ” | ” |
| திரிகடுகு | - | ” | ” |
| சதகுப்பை | - | ” | ” |
| சீந்தில் தண்டு | - | ” | ” |

இவற்றையெல்லாம் இருநாழி (2.6 லிட்) நீர்விட்டு உழக்காய்க் (336 மி.லிட்) காய்ச்சிக் கொள்ளவும்.

காலம் - அந்தி, சந்தி
தீரும் நோய் - சுக சன்னி.

## சுர அதிசாரத்திற்குக் குடிநீர்

சுக்கு முத்தக்காசு பேரா முட்டி
துவங்கிய பங்கம்பாளை சிறுகாஞ் சோரி
தக்க வறட்சுண்டி புளியங் கொட்டை தோல்
தகுமிலந் தைப்பட்டை காட்டாத்திப் பூவு
மிக்கபெரு மரப்பட்டை குடசப் பாலை
மேவுஇரு நாழிநீர் உழக்காய்க் காய்ச்சி
ஒக்க அதிவிடையம் காசு கட்டி இதில்
உகந்துகொள்ள அதிசாரசுரம் ஒடிப் போமே

(பொ-ள்) இதில் அதிசாரத்திற்குக் குடிநீர் கூறப்படுகிறது.

சுக்கு
முத்தக்காசு
பேராமுட்டி
ஆடுதீண்டாப்பாளை
சிறுகாஞ்சொரி
} சரி எடை

| | |
|---|---|
| வறட்சுண்டி<br>புளியங்கொட்டைத்தோல்<br>இலந்தைப்பட்டை<br>காட்டாத்திப்பூ<br>பெருமரப்பட்டை<br>குடசப்பாலை | சரி எடை |
| தண்ணீர் | - 2 நாழி (2.6 லிட்) |

ஒன்றுசேர்த்து குடிநீரிட்டு உழக்காகக் 336 மி.லிட் குறுக்கிக் குடிக்கவேண்டும்.

தீரும் நோய் : அதிசாரம், சுரம்.

## சுரம் அதிசாரத்திற்குக் குடிநீர் (வேறு)

**மலைதாங்கி முத்தக்கா சத்திப் பட்டை**
**மருவியநீர் பூலாவேர் நாவல் பட்டை**
**இலைதாங்கு மாதுளையின் கொழுந்தும் பிஞ்சும்**
**இருவேலி யிலாமிச்சு மாம்பட்டை ஏலம்**
**விலைதாங்கும் அதிவிடையம் வேர்க்கொம்பு கோட்டம்**
**வெவ்விய சீரகமதுரம் காசு கட்டி**
**தலைதாங்க வேயிடித்துக் காய்ச்சிக் கொண்டால்**
**காய்ச்சலதி சாரமிலைக் கடுகிப் போமே**

(பொ-ள்) இதில் சுரம், அதிசாரத்திற்குக் குடிநீர் கூறப்படுகிறது.

| | |
|---|---|
| வெற்பேந்தி<br>முத்தக்காசு<br>அத்திப்பட்டை<br>நீர்ப்பூலாவேர்<br>நாவல் பட்டை<br>மாதுளங்கொழுந்து<br>மாதுளம் பிஞ்சு<br>வெட்டிவேர்<br>விலாமிச்சுவேர்<br>மாம்பட்டை<br>ஏலம்<br>அதிவிடையம் | சரி எடை |

| | |
|---|---|
| சுக்கு<br>கோட்டம்<br>சீரகம்<br>அதிமதுரம்<br>கா்சுக்கட்டி | சரி எடை |
| நீர் - | 8 பங்கு |

இவற்றை ஒன்றிரண்டாய் இடித்து 8 பங்கு நீர் சேர்த்து 1/8 ஆகக் குறுக்கிக் காய்ச்சிக் குடிக்க வேண்டும்.
தீரும் நோய்கள் : சுரம், அதிசாரம்

## சுரங்களுக்குக் கஷாயம்

| | |
|---|---|
| சிறுதேக்கு<br>முத்தக்காசு<br>பற்படகம்<br>சிறுகாஞ்சொரி<br>சுக்கு<br>நிலவேம்பு<br>கோட்டம்<br>திப்பிலி<br>ஆடாதொடை ஈர்க்கு<br>சீந்தில் | சம எடை |

இவற்றைக் காய்ச்சி வடிகட்டிக் கொடுக்கவும்.

தீரும் நோய்கள் : கிட்டனார் சுரம், சன்னி வாத சுரம், மூன்று நான்குநாள் மாறல் சுரம்.

## சுரத்தில் வாய்நீருறலுக்குக் குடிநீர்

கண்டங் கரலி கோட்டமுத்தக் காசு சிறுகாஞ் சொரி சீந்தில்
துண்டஞ்சேர் திப்பிலி பற்படகத்[1] தோல்சிறு தேக்கு நிலவேம்பு
கொண்டங் கொன்று முக்கழஞ்சு கூட்டி நானாழி[2] இரண்டுழக்காய்
உண்டங் கிருக்கி லறுவறுப்போ டூறும் வாய்நீர் சுரம்போமே

(பொ-ள்) இதில் சுரத்தில் வாய்நீர் ஊறலுக்குக் குடிநீர் கூறப்படுகிறது.

| | | |
|---|---|---|
| கண்டங்கத்திரி | | |
| கோட்டம் | | |
| முத்தக்காசு | | |
| சிறுகாஞ்சொரி | | வகைக்கு 3 கழஞ்சு |
| சீந்தில் | | (13.2 கிராம்) |
| திப்பிலி | | |
| பற்பாடகம் | | |
| சிறுதேக்கு | | |
| நிலவேம்பு | | |
| தண்ணீர் | - | 4 நாழி (5.2 லிட்) |

சேர்த்துக் காய்ச்சி 2 உழக்காக்கி (672 மி.லிட்) அருந்த வேண்டும்.

தீரும் நோய் : சுரத்தில் வரும் நாவூறல்.

## பாட வேறுபாடு

பாடல் எண் 1. படகம்
2. நாழி

## சுரதாப சோப நாவறட்சிக்குக் குடிநீர்

| | |
|---|---|
| செங்கழுநீர்க் கிழங்கு | |
| தாமரை வளையம் | |
| நெய்தல் கிழங்கு | சரி அளவு |
| ஈச்சங் குருத்து | |
| பற்படகம் | |
| இருவேலி | |
| இலாமிச்சம் வேர் | சரி அளவு |
| சுக்கு | |
| கடுக்காய் | |

இவற்றை நீர்விட்டுக் காய்ச்சிய ஆவியைக் காட்ட உடல் முழுதும் வியர்க்கும். பின்னர் கஷாயத்தை வடிகட்டி உள்ளுக்குக் கொடுக்கவும்.

தீரும் நோய் - சுரதாப சோப நாவறட்சி

## சுரத்திற்குக் குடிநீர்

சடங்க மிலாமிச்சை சந்தனமிரு வேலிமுத்த
    முடன்பிலா பீர்க்கு பற்படகம் சுக்குஏல
மிட்டுத் தண்ணீருங் காய்ந்த சுடுநீரும்
    சென்றதன்பின் கன்றினார் வெப்பினார் கட்டு

(பொ-ள்) இதில் சுரத்திற்குக் குடிநீர் கூறப்படுகிறது.

| | | |
|---|---|---|
| விலாமிச்சு<br>சந்தனம்<br>வெட்டிவேர்<br>பலாவேர்<br>முத்தக்காசு<br>பீர்க்கு<br>பற்படகம்<br>சுக்கு<br>ஏலக்காய் | } | வகைக்கு 1 பங்கு |
| தண்ணீர் | - | 8 பங்கு |

சேர்த்துக் குடிநீர் உழக்காக்கி (336 மி.லிட்) அருந்த வேண்டும்.
தீரும் நோய் - சுரம்

## சுரத்துக்குக் குடிநீர் (வேறு)

கூலிளை நெற்பொரி அரிசி சுக்குடன்
    பாவையே நீசமன் பரிந்தெட் டொன்றதாய்[1]
மேவியீ தருந்திடில் சுரமும் தாகமும்
    நாவுறு வறட்சியும் தீரும் நன்கதே[2]

(பொ-ள்) இதில் சுரத்தில் உண்டாகும் நாவறட்சிக்குக் குடிநீர் கூறப்படுகிறது.

| | | |
|---|---|---|
| வில்வ வேர்<br>நெற்பொரி<br>அரிசி<br>சுக்கு | } | சம எடை |
| நீர் | - | 8 பங்கு |

சேர்த்து 1/8 ஆகக் குடிநீரிட்டுக் குடிக்க வேண்டும்.

தீரும் நோய்கள் - சுரம் தாகம், நாவறட்சி

## சுரத்தின்மேல் வரும் சீதக்கடுப்பிற்குக் குடிநீர்

கிராம்பு
திப்பிலி
அசமதாகம்
} சம அளவு

இவற்றையரைத்து நீர்விட்டு நான்கொன்றாய்க் காய்ச்சிக் கொடுக்கவும்.

தீரும் நோய் - சுரத்தின் மேல் வரும் சீதக்கடுப்பு.

## சுரத்தின் மேல் மூச்சிற்குக் குடிநீர்

முருங்கைப்பட்டை புறணி 6 காசெடை (6 பைசா அளவு )நான்கு நாழி (5.2 லிட்) தண்ணீர்விட்டு இரவு வைத்துக் காய்ச்சவும்.

அளவு - குன்றிமணி (130 மி.கிராம்)
அனுபானம் - கரைத்த பெருங்காயம்
காலம் - காலை
தீரும் நோய் - சுரத்தின் மேல் பெருமூச்சு

## சுரத்தின்மேல் வீக்கத்திற்குக் குடிநீர்

பேய்ப்புடல்
சாரணைவேர்
சுக்கு
கடுக்காய்
சீந்தில் தண்டு
மரமஞ்சள்
கடுகுரோகணி
நீர்முள்ளி
முருக்கிலை
சுரைத்தண்டு
சுரை வேர்
பூசணித் தண்டு
} சரி எடை

சேர்த்து நாநாழி (5.2 லிட்) நீர்விட்டு உழக்காகக் (336 மி.லிட்) காய்ச்சி வடிகட்டிக் கொள்ளவும்.

தீரும் நோய் - சுரத்தின் மேல் வந்த வீக்கம்

## சுரத்தின் மேல் வந்த வீக்கத்திற்குக் குடிநீர் (வேறு)

| | | |
|---|---|---|
| சங்கம் வேர் | - | 1 பிடி |
| சாரணை வேர் | - | ” |
| நெருஞ்சி வேர் | - | ” |
| ஆற்றுமுள்ளி வேர் | - | ” |
| புங்கம் வேர் | - | ” |
| நீர்முள்ளி வேர் | - | ” |
| வில்வபத்திரி வேர் | - | ” |
| பனை வேர் | - | ” |
| காவளை வேர் | - | ” |
| நாயுருவி வேர் | - | ” |
| கடுக்காய் | - | 5 |
| சுக்கு | - | ¼ பலம் (8.75 கிராம்) |
| திப்பிலி | - | ½ பலம் (17.5 கிராம்) |

இவற்றை இரண்டு படி (2.6 லிட்) தண்ணீர்விட்டு ¼ படியான(335 மி.லிட்) பிறகு வெண்காரம் வராகன் ஒன்று (3.5 கி) பொரித்து சேர்த்துக் கொடுக்கவும்.

காலம் - ஐந்து நாட்கள்
தீரும் நோய் - வீக்கம், சுரவீக்கம், காமாலை வீக்கம், சோகை வீக்கம்

## சுரம், தலைவலிக்குக் குடிநீர்

**ஆடா தோடை வேப்பந்தோல் அரிய சுக்கு பற்படகம்**
**தோடார் சந்தன மிருவேலி தோற்று முத்தகா சிலாமிச்சு**
**சேடார் குழலீநீ ரெட்டொன்றாய் இரவிற் காய்ச்சிக் குடிப்பீராய்**
**நாடா வெதுப்பும் தலைவலிநோய் நன்றாஞ் சன்னி நண்ணுதலே**

(பொ-ள்) இதில் சன்னி, சுரம், தலைவலிக்குக் குடிநீர் கூறப்படுகிறது.

ஆடாதோடை
வேப்பந்தோல்
சுக்கு
பற்பாடகம்
சந்தனம்
வெட்டிவேர்
முத்தக்காசு
விலாமிச்சு } வகைக்கு 1 பங்கு
தண்ணீர் - 8 பங்கு

இவற்றை 1/8 பங்கு குடிநீராகக் குறுக்கி இரவில் குடிக்க வேண்டும்.

தீரும் நோய்கள் - வெதுப்பு, தலைவலி, சன்னி

## சுரவாந்திக்குக் குடிநீர்

**துய்ய மாதுளம் பழத்தரிசி சுக்குடன்**
**செய்யநீ[1] விளாவிலை நெற்பொரி திப்பிலி**
**உய்யதோ ரேலமு[2]ம் எட்டொன் றாக்கியே**
**பையவே யருந்திடில் சுரவாந்தி[3]யும் போகுமே**

*(பொ-ள்)* இதில் சுரவாந்திக்குக் குடிநீர் கூறப்படுகிறது.

| | |
|---|---|
| மாதுளம் முத்து | சரியளவு |
| சுக்கு | |
| விளா இலை | |
| நெற் பொரி | |
| திப்பிலி | |
| ஏலக்காய் | |
| நீர் | - எட்டு பங்கு |

சேர்த்துக் குடிநீரிட்டு 1/8 ஆகக் குறுக்கிக் காய்ச்சிக் குடிக்க வேண்டும்.

தீரும் நோய்கள் - சுரவாந்தி

## பாட வேறுபாடு

பாடல் எண்
1. செய்யநீர்
2. வெய்துறு மேலமு
3. வாந்தி

## சுரவாந்திக்குக் கஷாயம் வேறு

**அகஞ்சேர் வில்லை ரோகணி ஆறு கழஞ்சு நெற்பொரிதான்**
**சுகஞ்சே ரிருவே லியுடனே துய்ய விலாமிச் சிருகழஞ்சு**
**முகத்தா அரையாய்! நீரிலிட்டு முயன்றே காய்ச்சித் தேனுடனே**
**சுகந்தா னறியக் குடிப்பீராய் சத்தி வெதுப்பைக் கெடுத்துவிடு**

*(பொருள்)* இதில் சுரவாந்திக்குக் குடிநீர் கூறப்படுகிறது.

வில்வம்
கடுகுரோகணி - வகைக்கு 6 கழஞ்சு (26.4 கிராம்)

நெற்பொரி
வெட்டிவேர் - வகைக்கு 2 கழஞ்சு (8.8 கிராம்)
விலாமிச்சைவேர்
தண்ணீர் - 2 நாழி (2.6 லிட்)

சேர்த்து 1/8 ஆகக் காய்ச்சிக் குடிநீரிட்டுக் குடிக்க வேண்டும்.

தீரும் நோய் - சுர வாந்தி

## சூசிகா வாய்வுக்குக் குடிநீர் (வேறு)

| | | |
|---|---|---|
| நொச்சிவேர் | - | 5 வராகன் (17.5 கிராம்) |
| நிலவேம்பு | - | ” ” |
| பேராமுட்டிவேர் | - | ” ” |
| திராய் வேர் | - | ” ” |
| வேப்பம் ஈர்க்கு | - | ” ” |
| முத்தக்காசு | - | ” ” |
| கடுக்காய் | - | ” ” |
| தான்றிக்காய் | - | ” ” |
| நெல்லிப் பருப்பு | - | ” ” |
| திப்பிலி | - | ” ” |
| சுக்கு | - | ” ” |
| மூங்கில் இலை | - | ” ” |

இவற்றைச் சேர்த்து இடித்து ஒன்றேகால் படி (1.625 லிட்) தண்ணீர்விட்டுக் காய்ச்சவும். பின்னர் 1 பலம் (35 கிராம்) சர்க்கரை போட்டு ஆழாக்காக (168 மி.லிட்) இறுத்துக் கொடுக்கவும்.

தீரும் நோய் - சூசிகா வாய்வு

## சூசிகா வாய்வுக்குக் குடிநீர் (வேறு)

எருக்கம் வேர்
தூதுவளை வேர்
பஞ்ச கோலம்
நிலவேம்பு

இவற்றைச் சமஅளவு சேர்த்துக் குடிநீராகக் கொள்ளவும்.

தீரும் நோய் - சூசிகா வாய்வு, பதிமூன்று வகை சன்னி

### செரியாமைக்குக் குடிநீர்

வேப்பிலையை கருக்காமல் வறுத்து அதில் இரண்டு சிறங்கை (உள்ளங்கையில் கொள்ளும் அளவு) தண்ணீர்விட்டு ஒரு பிடி உப்பும் கூட்டி ஊறவைத்துக் குடிக்கவும்.
தீரும் நோய் - செரியாமை

### சோப வீக்கத்திற்குக் குடிநீர்

சாரணைவேர்
கொன்றைவேர்
பிரமியிலை
கரிசலாங்கண்ணி
வெள்ளருகு
சுக்கு
சித்திரமூலம்
} சம அளவு

எடுத்து, நீர்விட்டுக் காய்ச்சிக் கொடுக்கவும்.

தீரும் நோய் - சோப வீக்கம்

### தாகாதி சுரத்திற்குக் குடிநீர்

முந்திரிகைப்பழம்
சந்தனம்
இலாமிச்சைவேர்
நன்னாரி வேர்
முத்தக்காசு
} சரி எடை

இவற்றைச் சேர்த்துக் குடிநீர் வைத்துக் கொடுக்கவும்.

தீரும் நோய் - தாகாதி சுரம்

### தாகாதி சுரத்துக்குக் குடிநீர் (வேறு)

சுக்கு
வெட்டிவேர்
முத்தக்காசு
இலாமிச்சம் வேர்
வெள்வெங்காயம்
நார்த்தம்பிஞ்சு
நார்த்தம் இலை
} சம அளவு

இவற்றைப் போட்டு நீர்விட்டு நன்றாகக் காய்ச்சி வடிகட்டிக் கொடுக்கவும்.

தீரும் நோய் - தாகாதி சுரம்

### தாகாதி சுரத்துக்குக் குடிநீர் (வேறு)

| | |
|---|---|
| கஞ்சாங்கோரை<br>விஷ்ணுக்கிரந்தி<br>சுக்கு | சம அளவு |

இவற்றைக் காய்ச்சி குடிநீராக்கிக் கொடுக்கவும்.

### தாகாதி சுரத்துக்குக் குடிநீர் (வேறு)

| | |
|---|---|
| மூங்கில்இலை<br>துளசி<br>விஷ்ணுக்கிரந்தி<br>இலந்தை இலை<br>பத்தினியார்பீடம்<br>சுக்கு | சம அளவு |

இவற்றைச் சேர்த்துக் குடிநீராக்கிக் கொடுக்கவும்.

தீரும் நோய் - தாகாதி சுரம்

### தாப சுரத்திற்குக் குடிநீர்

| | |
|---|---|
| இலாமிச்சை வேர்<br>சந்தனம்<br>முத்தக்காசு<br>பாதிரி<br>சிறுகாஞ்சொரி<br>சிவரொட்டி<br>வேப்பம் ஈர்க்கு<br>சுக்கு<br>கண்டங்கத்தரி | சம அளவு |

இவைகளைச் சேர்த்துக் குடிநீராக்கிக் கொள்ளவும்.

தீரும் நோய் - தாப சுரம்

## தாப சுரத்துக்குக் குடிநீர் (வேறு)

| | |
|---|---|
| முத்தக்காசு<br>சந்தனம்<br>சுக்கு<br>வெட்டிவேர்<br>பற்படகம்<br>இலாமிச்சை | சம அளவு |

இவற்றைச் சேர்த்துக் குடிநீராக்கிக் கொள்ளவும்.

தீரும் நோய் - தாப சுரம்

## தருண சுரத்துக்குக் குடிநீர்

1. தூயதாங் கோட்டம் இருவேலி சுக்கு தேவ தாரமுடன்
   வெயதாஞ் சிறுகாஞ் சோரி வட்டின்வேராடாதொடை
   யின்வேரும்
   நொய்தாம்[1] சீந்தி லாமிச்சுந் நுகரும்[2] கண்டங் கத்தரிவேர்
   மொய்தார் குழலாய் கழஞ்சரையாய் முயன்று நிறுத்துக்
   கொண்டிடுமே

2. கொண்டே இருநாரி புனலிற் கூட்டி காய்ச்சி உழக்கானால்[1]
   தண்தே னுடனே திப்பிலியும் தானே கூட்டிக் கொடுத்திடில்[2]
   பண்டே நடுக்கிக் குளிர்வதுவும் பார மான சுரந்தானும்
   கண்டே அனைய மொழிமடவாய் கடிதாய் மாறும் கண்டீரே[3]

*(பொருள்) இதில் தருண சுரத்திற்குக் குடிநீர் கூறப்பட்டுள்ளது.*

| | |
|---|---|
| கோட்டம்<br>வெட்டிவேர்<br>சுக்கு<br>தேவதாரம்<br>சிறுகாஞ்சொறி<br>வட்டத்திப்பிலி<br>ஆடாதோடை<br>சீந்தில்<br>விலாமிச்சை<br>கண்டங்கத்திரி வேர் | ½ கழஞ்சு (2.2 கிராம்) |
| தண்ணீர் | - 2 நாழி (2.6 லிட்) |

இடித்துக் குடிநீரிட்டு உழக்காகக் (336 மி.லிட்) காய்ச்சி அருந்த வேண்டும்.

அனுபானம் - தேன், திப்பிலி
தீரும் நோய் - நடுக்கல், குளிர்சுரம்

## பாடவேறுபாடு

பாடல் எண் 1 . தூயதாஞ்
2. துக்கருங்
பாடல் எண் 1. உழக்கினால்
2. குடித்திடுகில்
3. கண்டாயே

## தாகத்திற்குக் குடிநீர்

**நல்ல சந்தன மேலமி லாமிச்சு**
**புல்லு முக்கடு கூவிளை பூசணி**
**வல்ல சர்க்கரை இஞ்சி கிராம்புடன்**
**வெல்லமெட் டொன்றதாய் வீழ்ந்திடும் தாகமே**[1]

(பொ-ள்) இதில் தாகத்திற்குக் குடிநீர் கூறப்படுகிறது.

சந்தனம்
ஏலக்காய்
விலாமிச்சு
சுக்கு
மிளகு
திப்பிலி
வில்வம்
பூசணி
சர்க்கரை
இஞ்சி
கிராம்பு } சரி பங்கு
வெல்லம் - எட்டு பங்கு

இவற்றை ஒன்று சேர்த்துக் குடிநீரிட்டுக் குடிக்க வேண்டும்.
தீரும் நோய் - தாகம்

## பாட வேறுபாடு

பாடல் எண் 1. மீண்டிடுந் தாபமே

## திமிர்வாதம் உதடு கைகால், தொப்புள் காமியம் அசந்து போனால் குடிநீர்

கடுக்காய்
கரிசலாங்கண்ணி

சுரைப்பமுப்பு
நீர்முள்ளி
வறள்முள்ளி
கழற்கொடி
வெள்ளைச் சாரணைவேர்
} சம அளவு

இவற்றோடு, பசுவின் கோமியம் பாதியும் தண்ணீர் பாதியும் கூட்டிக் குடிநீராக்கவும். இதற்கு மேன்பொடியாக

கடுக்காய்
திப்பிலி
கடுகுரோகணி
சீரகம்
} சம அளவு

இவற்றைப் பொடிசெய்து குடிநீரில் போட்டுக் குடிக்கத் தீரும்.

தீரும் நோய் - திமிர்வாதம், உதடு, கைகால் தொப்புள் காமியம் அசந்து போதல்.

## திமிர்வாதத்திற்குக் குடிநீர் (வேறு)

சாரணைவேர்
ஓமம்
அவுரி
விழுதி இலை
சுக்கு
} சம அளவு

இவ்வைந்தையும் சேர்த்துக் கசாயமிட்டு வடிகட்டிக் கொள்ளவும்.

தீரும் நோய் - திமிர் வீக்கம்

## திமிர் வாய்வுக்குக் குடிநீர்

கீழாநெல்லி வேர்
அம்மான் பச்சரிசி
வறள்பூலா
சங்கம்பட்டை
சுக்கு

இவற்றைக் காய்ச்சி வடிகட்டிக் கொள்ளவும்.

தீரும் நோய் - திமிர் வாய்வு

## திரிதோடக் குடிநீர்

துய்யகாஞ் சோரிவேர் வட்டத் திருப்பிவேர்
　　தூது வளைநன் னாரிவேர்
எய்யு மாடாதோடை சிறுவழு தளையின்வேர்
　　இனிய கண்டங் கத்தரிவேர்
மெய்வரிய நெல்லிமுள்ளி சுக்கொடு கடுக்காயும்
　　மிகுதான்றி காய்ச்சி நீரில்
உய்யவே தேனினோடு திப்பிலிது ழாவிக்கொள்
　　ஒடுந்திரி தோடத்தி னுரங்கள் தானே

(பொ-ள்) இதில் திரிதோடத்தின் மிகுதிக்குக் குடிநீர் கூறப்படுகிறது.

| | |
|---|---|
| சிறுகாஞ்சொரி வேர் | வகைக்கு 1 பங்கு |
| வட்டத்திருப்பி வேர் | |
| தூதுவளை வேர் | |
| நன்னாரி வேர் | |
| ஆடாதொடை வேர் | |
| சிறுவழுதலை வேர் | |
| கண்டங்கத்தரிவேர் | |
| நெல்லிமுள்ளி | |
| சுக்கு | |
| கடுக்காய் | |
| தான்றிக்காய் | |
| தண்ணீர் - | 8 பங்கு |

இவற்றைக் குடிநீரிட்டு 1/8 பங்காக்கி அருந்தவேண்டும்.
அனுபானம் - தேன், திப்பிலிப்பொடி
தீரும் நோய் - வாத பித்த கபத்தின் அதிகரித்த குணங்கள்

## துடக்கு வாத மருந்து குடிநீர்

| | | |
|---|---|---|
| பிரண்டை | - | ஒரு பிடி |
| ஒதிய நாக்கு | - | ” |
| வேப்ப நாக்கு | - | ” |
| நுணா நாக்கு | - | ” |
| காவேளை நாக்கு | - | ” |
| நல்ல வேளை | - | ” |
| நாய் வேளை | - | ” |

இவற்றை நறுக்கி எருமைமோர் பதக்கு (10.7 லிட்) ஒரு புதுப் பானையடுப்பில் வைத்து அதில் ஒரு படி (2.65 லிட்) போட்டு வறுத்துக் கொட்டிவிடவும். அந்தப் பானையில் மருந்தெல்லாம் வறுத்து பிறகு,

ஓமம்
வெந்தயம்
கடுகு
வசம்பு
வெள்ளுள்ளி
கார்போகவரிசி
காட்டுச்சீரகம்
} சம அளவு

இவற்றை வறுத்து முன் சேர்த்தவற்றோடு போட்டுத் தண்ணீர் நான்கு நாழியாகக் (5.2 லிட்) காய்ச்சிக் கொள்ளவும்.
காலம் - ஏழு நாட்கள்
தீரும் நோய் - துடக்கு வாதம்

## துடக்கு வயிற்று வலிக்குக் குடிநீர்

| | |
|---|---|
| ஆண் வசம்பு | - 1 விரல் நீளம் |
| பெண் வசம்பு | - 1 விரல் நீளம் |
| மிளகு | - 2 பிடி |
| அசமதாகம் | - 1 நாழி (1.3 லிட்) |

இவற்றை வேப்பஞ்சாற்றில் அரைத்து, துடக்கு வந்த அன்றும் நான்காம் நாளும் குடிக்கவும்.
தீரும் நோய் - துடக்கு வயிற்றுவலி

## தோட வீக்கத்திற்குக் குடிநீர்

சாரணை வேர்
கடுக்காய்
மரமஞ்சள்
சீந்தில்

இவற்றைச் சமஅளவு எடுத்துக்கொண்டு கோமூத்திரம் விட்டுக் குடிநீர் செய்து கொள்ளவும். குங்கிலியம் சேர்த்துக் கொள்ளவும்.
தீரும் நோய் - தோட வீக்கம்

## நான்காம் மாறலுக்குக் குடிநீர்

வெட்பாலையரிசி
கடுகுரோகிணி
சீந்தில் தண்டு
சந்தனம்
சுக்கு
நெல்லிமுள்ளி

இவற்றைக் குடிநீராக்கிக் கொடுக்கவும்.
தீரும் நோய் - நான்காம் மாறல்

## நான்காம் மாறலுக்குக் குடிநீர் (வேறு)

சந்தனம்
இலாமிச்சம்வேர்
கொத்துமல்லி
முத்தக்காசு
தேவதாரம்
கடுக்காய்

இவற்றைக் காய்ச்சிக் கொடுக்கவும்.
அனுபானம் - தேன்
தீரும் நோய் - அடிக்கடி வரும் சுரம்.

## நீரடைப்புக்குக் குடிநீர்

புதுச் சட்டியில் ஒரு படி (2.65 லிட்) உப்பை நெருப்பெழ வறுத்துக் கொட்டிவிடவும். அதில் ஒரு படி (2.65 லிட்) தண்ணீர்விட்டு ஒருபிடி நெருஞ்சிவேர், ஒரு பிடி முருங்கை வேர் இரண்டையும் நறுக்கிப் போட்டு கால்படியாக (650 மி.லிட்) காய்ச்சி, வடிகட்டிக் கொள்ளவும்.
தீரும் நோய் - நீரடைப்பு

## நீரிழிவுக்குக் குடிநீர்

அத்தி நாகல் கடலி ராஞ்சி
அதலிரட்டி ஆவாரந்தேரல் கொன்றைத் தோலும்
இத்தனையு மிராவடுப்பி லூற வைத்து
இதமா யசனம் செய்திருக்கும் நேரம்
மைத்தவிழும் பூங்குழலாய் இதனை வடித்து
முந்தத்தருவ ளாமாகில் அருந்து வீராய்

கொத்தலரு மாமலரோன் விதித்த நாளில்
கொல்வதல்லால் நீரழிவால் கொல்லொண் ணாதே

(பொருள்) இதில் நீரிழிவிற்குக் குடிநீர் கூறப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அத்திப்பட்டை | | |
| நாவற் பட்டை | - | ஒரு பங்கு |
| கடலழிஞ்சில் | | |
| ஆவாரப்பட்டை | - | 2 பங்கு |
| கொன்றைப்பட்டை | - | 2 பங்கு |

இவற்றை ஒன்றிரண்டாய்த் தட்டி இரவில் ஊறவைத்து ஊறல் குடிநீராய் உணவுக்குப் பின் அருந்த வேண்டும்.
தீரும் நோய் - நீரிழிவு

## நீரிழிவிற்குக் குடிநீர் (வேறு)

| | | | |
|---|---|---|---|
| சீந்தில் கொடி | - | 3 வாரகனெடை | (10.5 கிராம்) |
| மரமஞ்சள் | - | ” | ” |
| ஆவாரம்வேர்ப்பட்டை | - | ” | ” |
| கடலழிஞ்சிப்பட்டை | - | ” | ” |
| காசுக்கட்டி | - | ” | ” |
| அதிமதுரம் | - | ” | ” |
| சந்தனம் | - | ” | ” |

இவற்றைக் குடிநீராக்கிக் கொள்ளவும்.

கோரோசனை
சாதிக்காய்
அபின்

இவற்றைப் பொடியாக்கிச் சேர்த்துக் கொடுக்கவும்.

தீரும் நோய் - நீரிழிவு

## நீர்ப்பாடு கோப்பாடு இவற்றுக்குக் குடிநீர்

புளியிலை ஒரு பிடி பறித்து வந்து புழுப்பூச்சி, எச்சம் இவை நீங்க சுத்தம் செய்து கொள்ளவும். பின்னர் அரைப்படி (1.3 லிட்) தண்ணீரில் அவித்து இறுத்து வைத்துக் கொள்ளவும்.

கழிச்சலில் இரத்தம் காணப்பட்டால் மேற்கண்ட குடிநீரில் காவிக்கல் தூதுவிளங்காய் அளவு கரைத்துக்

கொடுக்கவும். இல்லாவிட்டால் வேப்பம் பிசினை வெந்நீரில் கரைத்துக் கொடுக்கவும்.
தீரும் நோய் - கழிச்சல்
(உணவு செரியாமல் வாயாலும் வயிற்றாலும் சோறு விழுந்து தண்ணீர் தாகமும் எடுக்கும் கழிச்சல்)

## பக்க சூலைக்குக் குடிநீர்

**பெருத்த காயம் வெள்ளுள்ளி பேணு மிருசு வேர்க்கொம்பு**
**விருத்த முதிர்ந்த சாரணைவேர் வெட்டி இடித்து காய்ச்சுகிலோர்**
**பொருத்த் மாக மூன்றொன்றாய் பொருந்தக் காய்ச்சி குடித்திடுகில்**
**ஒருத்தர் தமக்கும் வாராது ஓடும் பக்கச் சூலையிதே**

(பொ-ள்) இதில் பக்க சூலைக்கு மருந்து கூறப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெருங்காயம் | } | சம எடை. |
| உள்ளி | } | |
| மூங்கில் | } | |
| சுக்கு | } | |
| சாரணைவேர் | } | |
| தண்ணீர் | - | 3 பங்கு |

சேர்த்து மூன்றில் ஒன்றாகக் காய்ச்சிக் குடிக்க வேண்டும்.
தீரும் நோய் - பக்க சூலை

## பக்க வாய்வுக்குக் குடிநீர்

| | | | |
|---|---|---|---|
| சாரணைவேர் | - | 3 வராகன் (10.5 | கிராம்) |
| கடுகு | - | ” | ” |
| வெள்ளுள்ளி | - | ” | ” |
| கடுக்காய் | - | ” | ” |
| மிளகு | - | 2 வராகன் (7 | கிராம்) |
| சுக்கு | - | ” | ” |
| இந்துப்பு | | ” | ” |
| வசம்பு | - | ” | ” |
| நற்சீரகம் | - | ” | ” |
| பெருங்காயம் | - | 1½ வராகன் (5.25 | கிராம்) |

இந்தப் பத்து மருந்துகளையும் அம்மியில் நன்றாக அரைத்து அரைப்படி (650 மி.லிட்) தண்ணீரில் கரைத்துக் காய்ச்சி காலே

அரைக்கால் படியானால் (162 மி.லி.) எடுத்து, (80 மி.லி) காலே அரைக்கால் படியாக மூன்று நேரம் குடிக்கவும்.

பத்தியம் - புளிப்பு, கசப்பு, இனிப்பு, மோர், தயிர், சுரைக்காய் தள்ளவும்.
தீரும் நோய் - பக்கவாய்வு, குடல்வாதம், அண்டவாதம்

## பசித்தாகம் எடுக்கக் குடிநீர்

| | | |
|---|---|---|
| இந்துப்பு | - | 2 வராகன் (7 கிராம்) |
| வெடியுப்பு | - | ” |
| வளையலுப்பு | - | ” |

இவற்றை எடுத்து உழக்குத் (336 மி.லிட்) தண்ணீரில் காய்ச்சி ஆழாக்கான (168 மி.லிட்) பிறகு இறக்கிக் கொள்ளவும்.

காலம் - 1 நாள்
மேன்பொடி - சர்க்கரையும், சீரகமும்வறுத்துப்பொடி செய்ததூள்

## பசி எடுக்கக் குடிநீர் (வேறு)

சிறுகாஞ்சொரி வேர்
வெட்டிவேர்
கடுகுரோகணி
முத்தக்காசு
கோட்டம்
சுக்கு
} சரி நிறை

இவற்றைக் குடிநீராக்கிக் கொடுக்கவும்.

விளைவு - பசியுண்டாகும்.

## பசி எடுக்கக் குடிநீர் (வேறு)

| | | |
|---|---|---|
| சுக்கு | - | 1 பங்கு |
| சீந்தில்தண்டு | - | 2 பங்கு |
| கடுக்காய் | - | 4 பங்கு |

இவற்றை நீரில் போட்டுக் காய்ச்சி, சர்க்கரை போட்டுக் கொடுக்கவும்.
விளைவு - பசியெடுக்கும்

## பசியெடுக்கக் குடிநீர் வேறு

| | | |
|---|---|---|
| சாரணை வேர் | - | விரல் நீளம் |
| தூதுவளை வேர் | - | " |
| பொன்முசுட்டை வேர் | - | 50 கிராம் |
| சுக்கு | | |
| மிளகு | | |
| திப்பிலி | | |
| வெள்வெங்காயம் | | |

இவை எல்லாவற்றையும் நன்றாகப் பஞ்சுபோல் உலர்த்தி புதுப்பாண்டத்தில் வைத்துக் கொள்ளவும். உரி (672 மி.லிட்) தண்ணீரில் 2 வெருகடியளவு (2 சிட்டிகையளவு) போட்டு, உழக்காகக் (336 மி.லிட்) காய்ச்சி வடித்துக் கொள்ளவும்.
விளைவு - பசியுண்டாகும்

## பஞ்ச மூலக் குடிநீர்

பெருமருந்து சிறுகுறிஞ்சா கண்ட மூலம்
பேரரத்தைச் சுக்குடனே பெருகக் கூட்டி
அருமருந்து இதினுண்மை கஷாயம் வைத்து
ஐந்துநாள் கொண்டிடவே அமிர்த மின்னே
வருமருந்து திரிதோட சுரமும் போக்கும்
உட்டிணம்போம் வாதம்போம் வாந்தி தீரும்
குருமருந்து இதுபஞ்ச மூல மென்று
கூறினார் அகத்தியனார் குறிக்குங் காலே

(பொருள்) இதில் பஞ்சமூலக் குடிநீர் கூறப்படுகிறது.

பெருமருந்து
சிறுகுறிஞ்சா
கண்டதிப்பிலி
பேரரத்தை
சுக்கு
} சம அளவு

இவற்றை இடித்து முறைப்படி குடிநீர் வைத்து 5 நாள் அருந்தவேண்டும்.

தீரும் நோய்கள் - திரிதோடம், சுரம், உட்டிணம், வாதம், வாந்தி

## பதிமூன்று வகை சன்னிக்கும் குடிநீர்

| | | | |
|---|---|---|---|
| எருக்கம் வேர் | - | 4 வராகன் (14 | கிராம்) |
| நாயுருவிவேர் | - | ” | ” |
| நொச்சி வேர் | - | ” | ” |
| காட்டுமுருங்கை வேர் | - | ” | ” |
| சாரணை வேர் | - | ” | ” |
| செம்புளிச்சைவேர் | - | ” | ” |
| நிலவேம்பு | - | ” | ” |
| கொடிவேலி வேர் | - | ” | ” |
| சுக்கு | - | ” | ” |
| திப்பிலி | - | ” | ” |
| திப்பிலிமூலம் | - | ” | ” |
| செவ்வியம் | - | ” | ” |

இவற்றைப் போட்டு எட்டுபடி (10.4 லிட்டர்) தண்ணீர்விட்டு ஒரு பங்காய்க் காய்ச்சி இறுத்துக் கொண்டு, அக்கினி குமாரன் குளிகையுடன் உட்கொள்ளவும். இதற்குமேல் எண்ணெய் இட நல்லது.

தீரும் நோய் - பதிமூன்று வகை சன்னிகள்

## பல வாய்வுக்கும் குடிநீர்

| | | | |
|---|---|---|---|
| உத்தாமணிவேர் | - | 1 கழஞ்சு (4.4 | கிராம்) |
| முருங்கைவேர்ப் பட்டை | - | ” | ” |
| சாரணை வேர் | - | ” | ” |
| முட்காய் வேளை | - | ” | ” |
| சுக்கு | - | ” | ” |

இவற்றை ஒருபடி (1.3 லிட்) தண்ணீர்விட்டு உழக்காக்கிக் (336 மி.லிட்) கொள்ளவும்.

தீரும் நோய் - பல வாய்வு

## பல்கிட்டின சன்னி, உள்வீச்சு, புறவீச்சீற்குக் குடிநீர்

| | |
|---|---|
| சித்தரத்தை | சம அளவு |
| கொடிவேலிவேர் | |
| திப்பிலிமூலம் | |
| சிறுதேக்கு | |
| சுக்கு | |

இவற்றைச் சேர்த்துக் குடிநீராக்கிக் கொள்ளவும்.

தீரும் நோய் - பல்கிட்டின சன்னி, உள்வீச்சு, புறவீச்சு

### பழஞ்சுர மாறலிற்கும் விஷ சுரத்திற்கும் குடிநீர்

| | |
|---|---|
| சுக்கு | சம அளவு |
| திப்பிலி | |
| செவ்வியம் | |
| அரத்தை | |
| ஓமம் | |
| வட்டத்திருப்பிவேர் | |
| ஈசுரமூலிவேர் | |
| கொடிவேலிவேர் | |
| சிறுதேக்கு | |
| சிறுகுறிஞ்சா வேர் | |
| சிறுகாஞ்சொரி வேர் | |
| கண்டங்கத்தரி வேர் | |
| தூதுவளை வேர் | |
| பேராமுட்டி வேர் | |
| திப்பிலி மூலம் | |

இவற்றையெல்லாம் சேர்த்து குடிநீராக்கிக் கொடுக்கவும்.
காலம் - 3 பொழுது
தீரும் நோய் - சகல சுரம்

### பழஞ்சுரம், சன்னிவாத சுரம் இவற்றிற்கு மருந்து

| | |
|---|---|
| ஆடாதொடை | சம அளவு |
| சீந்தில் தண்டு | |
| பேய்ப்புடல் | |
| வெட்டிவேர் | |
| சுக்கு | |

இவற்றைக் குடிநீராக்கிக் கொடுக்கவும்.
தீரும் நோய்கள் - பழஞ்சுரம், சன்னிவாத சுரம்

### பழஞ்சுரம் சன்னிவாத சுரம் இவற்றுக்குக் குடிநீர் (வேறு)

இலந்தை இலையைக் கொண்டு வந்து குடிநீராக்கிக் கொள்ளவும்.
மேன்பொடி - திப்பிலி
தீரும் நோய்கள் - பழஞ்சுரம், சன்னிவாதசுரம்

## பழஞ்சுரம் சன்னிவாத சுரம் இவற்றிற்கு மருந்து (வேறு)

| | |
|---|---|
| கஞ்சாங்கோரை சமூலம் | சரி எடை |
| அரத்தை | |
| வெள்ளுள்ளி | |
| திப்பிலி | |
| சுக்கு | |
| அசமதாகம் | |

இவற்றைக் குடிநீராக்கிக் கொடுக்கவும்.

## பழவெதுப்புக்குக் குடிநீர்

**சிறுதேக்குப் பற்படக முத்தக் காசு**
**சீந்திலொடு நன்னாரி சிறுகாஞ் சொரி**
**நறுநாற்ற முள்ளதேவ தாரங் கோட்டம்**
**நலந்திகழும் பேய்ப்புடோல் தன்னுடனே சுக்கு**
**எறுகாற்று படாதிடத்தி லிருந்து காய்ச்சி**
**இருபோது மின்னீரைப் பருகி விட்டால்**
**குறியாமல் மூன்றுநா ளைக்குள் ளேதான்**
**தாறியதோர் நாலுநா ளைக்குள் ளேதான்**
**பறியாத பழவெதுப்பும் மாறிப் போகும்**
**பண்புடையோ ருரைப்பதுண்மை பகருங் காணே**

(பொ-ள்) இதில் பழவெதுப்புக்குக் குடிநீர் கூறப்படுகிறது.

| | |
|---|---|
| சிறுதேக்கு | சரி எடை |
| பற்பாடகம் | |
| முத்தக்காசு | |
| சீந்தில் | |
| நன்னாரி | |
| சிறுகாஞ்சொரி | |
| தேவதாரு | |
| கோட்டம் | |
| பேய்ப்புடல் | |
| சுக்கு | |
| தண்ணீர் - | 2 நாழி (2.6 லிட்) |

சேர்த்துக் காற்றுப்படாத இடத்தில் காய்ச்சி வைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு - 1 ஆழாக்கு (168 மி.லி)
வேளை - 1 நாளைக்கிருவேளை, 3 (அ) 4 நாள்
தீரும் நோய் - பழவெதுப்பு

## பாஷாண வீக்கமானால் மாற்றுக் குடிநீர்

கடுக்காய் - 5
கொட்டைப்பாக்கு - 5
வேப்பம் ஈர்க்கு - ஒரு பிடி
கருவேப்பிலை ஈர்க்கு - ஒரு பிடி
கருவேல் இலை - ஒரு பிடி

இவற்றை இரண்டுபடி (2.6 லிட்) தண்ணீரில் போட்டு அரைப்படியாகக் (650 மி.லிட்) கொடுக்கவும். வயிறு கழியும். பின்னர், முருங்கைக் காம்பைத் துவைத்து அவித்துத் தண்ணீரை இறுத்துக் கொண்டு,

மிளகு
வெள்ளைப்பூண்டு } சிறிதளவு
பழம்புளி

இட்டு, மிளகுநீர் காய்ச்சிக் கால்படி 325 மி.லிட் குடித்து சோற்றுடன் சேர்த்துத் தின்னவும்.

காலம் - மூன்று நாள்
தீரும் நோய் - பாஷாண வீக்கம்

## பாராங்கியாதி கஷாயம்

**திப்பிலி கோட்டம் பற்படகம் சிறுகாஞ் சோரி சிறுதேக்கு**
**மெய்ப்பாங் கண்டங் காலி முத்தம்வேர்க் கொம்புடன் நிலவேம்பு**
**புகைப்பாஞ் சீந்தி லோரொன்று கழஞ்சே கால்கொண் டிருநாழி**
**அப்பே விட்டு உழக்காக்கில் அகலுங் குளிர்சுரங்கள் போமின்றே**

(பொ-ள்) இதில் பாரங்கியாதிக்குடிநீர் செய்முறை கூறப்படுகிறது.

திப்பிலி
கோட்டம்
பற்பாடகம்
சிறுகாஞ்சொரி
சிறுதேக்கு
கண்டங்கத்தரி } - வகைக்கு ¼ கழஞ்சு (1.1 கிராம்)

| | |
|---|---|
| முத்தக்காசு<br>சுக்கு<br>நிலவேம்பு<br>சீந்தில் | வகைக்கு ¼ கழஞ்சு (1.1 கிராம்) |
| தண்ணீர் - | 2 நாழி (2.6 லிட்) |

சேர்த்துக் குடிநீரிட்டுக் கொள்ள வேண்டும்.

அளவு - 1 உழக்கு (336 மி.லிட்)

தீரும் நோய் - குளிர் சுரம்

## பித்த சன்னிக்குக் குடிநீர்

| | |
|---|---|
| பேராமுட்டி<br>சிற்றாமுட்டி<br>சிறுகாஞ்சொரி<br>வில்வவேர்<br>வெட்டிவேர்<br>விலாமிச்சைவேர்<br>கோரைக்கிழங்கு<br>தூதுவளைவேர்<br>கண்டங்கத்தரி<br>கறிமுள்ளி வேர்<br>நிலவேம்பு<br>திப்பிலி<br>அரத்தை<br>கடுகுரோகணி<br>சுக்கு<br>சந்தனம்<br>கொத்துமல்லி | சரி நிறை |

இவற்றைக் குடிநீர் வைத்துக் கொடுக்கவும்.

மேன்பொடியாக,

| | |
|---|---|
| அக்கராகாரம்<br>திப்பிலி<br>வெண்காரம் | சரியளவு |

இவற்றைப் பொடியாக்கிக் கொடுக்கவும்.

தீரும் நோய் - பித்த சன்னி

## பித்தசுர அதிசாரக் குடிநீர்

1. **சித்தா மல்லி கூவிளங்காய் சீந்தி குடசப் பாலைசுண்டி**
**முத்தக் காசு நிலவேம்பு முதிர்ந்த கஞ்சா லித்துடனே**
**சுத்தம் பண்ணு மதிவிடையமும் தோயக் காய்ச்சிக் குடிப்பீராய்**
**பித்த மான அதிசாரம் சுரமும் தீர்ந்து பிழைப்பாரே**

2. வெட்டிய மாவின் பட்டை வில்வத்தின் பழத்தின் சோறும்
தெட்டிய முத்தக் காசு நிலவேம்பு பிராயமாம் பட்டை
தட்டிய சுக்கு கூட்டிச் சமனிறை காய்ச்சிக் கொண்டால்
அட்டியோ சீதவி சுரத்தின்வந்த அதிசாரம் தீருந் தானே

3. மாதுளை மொட்டு அதிவிடைய மதித்த பிராயமாம் பட்டையுடன்
தாதுள வில்வம்பழஞ் சமனிறை குடசப் பாலை சுக்கு
மாதுளங் கோரைக் கிழங்கு பசியகாட் டாத்திப் பூவும்
சீதள நீள் குடிநீரில் சீயவிழ மதிசார சுரமும் தீர்ந்திடுமே

4. ஓம முருங்கை பெருமரப்பட்டை உகந்த சுக்கு கருஞ்சீரகமும்
சேமங் குடசப் பாலைஇந்து செறிந்த கோரைக் கிழங்குடனே
நாமம் அதிவிடையம் சமம் (கூட்டி)வறுத்து நன்றாய் காய்ந்த குடிநீரில்
சுரமெ ரித்த அதிசாரம் தொலைந்தே ஓடுங் கண்டாயே

(பொருள்) இதில் அதிசார சுரத்திற்குக் குடிநீர்கள் கூறப்பட்டுள்ளன.

1.
சிற்றாமல்லி
வில்வக்காய்
சீந்தில்
குடசப்பாலை
சுக்கு
முத்தக்காசு
நிலவேம்பு
கஞ்சாவிதை
அதிவிடையம் } சரி எடை
நீர் - எட்டு பங்கு

முறைப்படிக் குடிநீரிட்டுக் குடிக்க வேண்டும்.
தீரும் நோய் - பித்தாதிசாரம், சுரம்

2.
மாம்பட்டை
வில்வப்பழச்சதை
முத்தக்காசு
நில வேம்பு
பிராயம்பட்டை
சுக்கு } சரி எடை
நீர் - எட்டு பங்கு

சேர்த்து முறைப்படிக் குடிநீரிட்டுக் குடிக்க வேண்டும்.
தீரும் நோய்கள் - சுராதிசாரம்

3.

| | |
|---|---|
| மாதுளை மொட்டு | சரி நிறை |
| அதிவிடையம் | |
| பிராயம்பட்டை | |
| வில்வப்பழச்சதை | |
| குடசப்பாலை | |
| சுக்கு | |
| கோரைக்கிழங்கு | |
| காட்டாத்திப்பூ | |
| தண்ணீர் | - எட்டு பங்கு |

சேர்த்து முறைப்படிக் குடிநீரிட்டுக் குடிக்க வேண்டும்.
தீரும் நோய் - அதிசாரசுரம்

4.

| | |
|---|---|
| ஓமம் | சரி நிறை |
| முருங்கைப்பட்டை | |
| சுக்கு | |
| கருஞ்சீரகம் | |
| குட்சப்பாலை | |
| இந்துப்பு | |
| கோரைக் கிழங்கு | |
| அதிவிடையம் | |
| நீர் | - எட்டு பங்கு |

இவை ஒன்று சேர்த்துக் காய்ச்சிக் குடிநீரிட்டுக் குடிக்க வேண்டும்.
தீரும் நோய் - சுராதிசாரம்

## பித்த சுரத்து[illegible]டிநீா

1. புகழுஞ் சீந்தி பற்படகம் பூசுஞ் சந்தன மிலாமிச்சு
   திகழும் வேர்க்கொம் பிருவேலி சிற்றாமுட்டி முத்தக்காசு
   தகழ வேரொன்று கழஞ்சுகொண்டு தண்ணீ நீரண்டு நாழிவிட்டு
   சுகமா யுழக்காக் கிக்குடித்தாற் செல்லும் பித்த சுரந்தானே[1]

2. தானே வேர்க்கொம் பிருவேலி தங்கு[1] விலாம்பிச் சம்வேர்[2]
   கானே செறிமுத் தக்காசு காஞ்சொரி பங்கம் பாளைகோட்டம்[3]
   தானே[4] கழஞ்சொன் றிருநாழி தண்ணீ ருழக்காக்கிய்[5] பருகி
   ஊனே உருகும் பித்தசுரம் உதிரக் கழிச்சல் மாறிடுமே

(பொ-ள்) பித்த சுரத்திற்கு இதில் குடிநீர்கள் கூறப்படுகின்றன.

1. சீந்தில்
பற்பாடகம்
சந்தனம்
விலாமிச்சை
சுக்கு
வெட்டிவேர்
சிற்றாமுட்டி
முத்தக்காசு
} வகைக்கு 1 கழஞ்சு (4.4 கிராம்)

தண்ணீர் - 2 நாழி (2.6 லிட்)

இவற்றை குடிநீரிட்டு உழக்காக்கிக் (336 மி.லிட்) குடிக்க வேண்டும்.

தீரும் நோய் - பித்த சுரம்

2. சுக்கு
வெட்டிவேர்
விலாமிச்சுவேர்
முத்தக்காசு
சிறுகாஞ்சொரி
பங்கம்பாளை
கோட்டம்
} -வகைக்கு 1 கழஞ்சு (4.4 கிராம்)

தண்ணீர் - 2 நாழி (2.6 லிட்)

இவற்றைக் குடிநீரை தண்ணீர் உழக்காக காய்ச்சி அருந்த வேண்டும்.

தீரும் நோய்கள் - பித்தசுரம், உதிரக்கழிச்சல்

## பாடவேறுபாடு

பாடல் எண் 1. சுகமாய்க் காய்ச்சிக் கொடுத்தாக்கால் சோரும் பித்தச் சுரந்தானே

பாடல் எண்
1. தயங்கு
2. அரசம்வேர்
3. தானேசெறி கோட்டம் முத்தக்காங் காஞ்சோரி
4. தேனே

## பித்த சுரத்துக்குக் குடிநீர் (வேறு)

தண்ணீர்விட்டான் கிழங்கு
கொத்துமல்லி
} சம அளவு

அதிமதுரம்
அரத்தை
முத்தக்காசு
சதகுப்பை
குந்திருக்கம்
வெட்டிவேர்
சுக்கு
} சம அளவு

இவற்றைப் போட்டுக் குடிநீர் செய்து கொடுக்கவும்.
தீரும் நோய் - பித்தசுரம்

## பித்தத்துக்குக் குடிநீர்

பேய்ப்புடல்
பற்படகம்
கொத்துமல்லி
சீந்தில்தண்டு
அதிமதுரம்
சுக்கு
} சம அளவு

இவை யாவும் சம அளவு எடுத்துக் குடிநீராக்கிக் கொள்ளவும்.
காலம் - மூன்று நாள் (ஆறு பொழுது)
தீரும் நோய் - பித்தம்

## பித்த மயக்கத்துக்குக் குடிநீர்

பேய்ப்புடல்
பற்படகம்
கொத்துமல்லி
சீந்தில் தண்டு
அதிமதுரம்
சுக்கு
} சம அளவு

இவற்றைச் சேர்த்துக் குடிநீராக்கி கொள்ளவும்.
காலம் - மூன்று நாட்கள் (காலை, மாலை)
தீரும் நோய் - பித்த மயக்கம்

## பிள்ளைப் பெற்றவள் சுரத்திற்குக் குடிநீர்

சிற்றாமுட்டி
பேராமுட்டி
சீந்தில்
} சரி நிறை

முத்தக்காசு } சரி நிறை
சுக்கு
எருக்கம்வேர்
நிலவேம்பு

இவற்றுடன் சேர்த்துக் கஷாயமிட்டு, திப்பிலிப் பொடியை மேன்பொடியாகத் தூவவும்.

தீரும் நோய், - பிள்ளைப் பெற்றவர்களுக்கு ஏற்படும் சுரம்.

## பிள்ளைப் பெற்றவர்களுக்கு இரத்தம் கட்டினால் குடிநீர்

| | | |
|---|---|---|
| சதகுப்பை | - | 1 வராகன் (3.5 கிராம்) |
| சுக்கு | - | ” ” |
| கருவாப்பட்டை | - | ” ” |
| உள்ளி | - | ” ” |
| சாரணைவேர் | - | ” ” |
| முட்காவேளைவேர் | - | ” ” |
| அசமதாகம் | - | ” ” |
| கிராம்பு | - | ” ” |
| அரத்தை | - | ” ” |
| கண்டங்கத்தரிவேர் | - | ¼ பலம் (8.75 கிராம்) |

இவற்றைப் போட்டு இருநாழி (2.6 லிட்.) நீர்விட்டு உழக்காகக் (336 மி.லிட்.) காய்ச்சிக் கொள்ளவும். இதில் சோமனாதிப்பெருங்காயம் ஒரு மிளகு அளவு கூடக் கரைத்துக் கொடுக்கவும்.

தீரும் நோய்கள் - இரத்தக்கட்டு, சீதக்கட்டு

## பெருவியாதிக்குக் குடிநீர்

கொடிக்கள்ளி - 2 தூக்கு (3.4 கிராம்)

இடித்து அதிக அளவு நீர்விட்டு, குறுணி (5.3 லிட்) அளவாக வரும்வரை நன்றாகக் காய்ச்சவும்.

| | |
|---|---|
| அளவு | - ¼ சேர் (70 கிராம்) |
| காலம் | - ஒரு மண்டலம் 48 நாட்கள் காலை, மாலை |
| பத்தியம் | - கார்ப்பு, புளிப்பு தவிரவும் |
| தீரும் நோய் | - பெரு வியாதி |

## பைத்தியத்திற்குக் குடிநீர்

பச்சைப் பயறு - 1 பிடி
சுக்கு - ¼ பலம் (875 மி.கிராம்)
சிறுகீரைவேர் - " "

இவற்றோடு நீர் சேர்த்து குடிநீராக்கிக் கொள்ளவும். பின்னர் சர்க்கரையைச் சேர்த்துக் குடிக்கவும்.
தீரும் நோய் - பைத்தியம்

## பைத்தியம், உப்புசத்திற்குக் குடிநீர்

பேய்ப்புடல் - 1 பங்கு
முசுமுசுக்கை - "
மூங்கில் இலை - "
இலந்தை இலை- "
செங்கத்தரி - "
கண்டங்கத்தரி - "
மிளகு - "
கொத்துமல்லி - "
சுக்கு - "
திப்பிலி - ½ பங்கு
திப்பிலிமூலம் - 1 பங்கு
வாய்விளங்கம் - "

இவற்றையெல்லாம் உரலில் இடித்து நானாழித் (5.2 லிட்) தண்ணீர்விட்டு ஒருபடியாகக் (1.3 லிட்) காய்ச்சிக் கொள்ளவும்.
காலம் - 3 நாட்கள்
பத்தியம் - உப்பு, புளி விடவும்
தீரும் நோய்கள் - பைத்தியம், உப்பிசம்

## மந்தாக்கினி, கிராணி, அரோசகத்திற்குக் குடிநீர்

சுக்கு
முத்தக்காசு
அதிவிடையம்
சீந்தில்
} சம அளவு

எடுத்துக் குடிநீராக்கிக் கொள்ளவும்.
காலம் - ஐந்து நாட்கள்
தீரும் நோய்கள் - மந்தாக்கினி, கிராணி, அரோசகம்

## மறு காய்ச்சலுக்குக் குடிநீர்

| | | |
|---|---|---|
| முள்ளிவேர் | - | 1 பலம் (35 கிராம்) |
| கோரைக்கிழங்கு | - | ” ” |
| தாமரைவளையும் | - | ” ” |
| சீந்தில்கொடி | - | ” ” |
| சுக்கு | - | ” ” |

இவற்றைப் போட்டுக் குடிநீராக்கிக் கொள்ளவும்.

காலம் - 3 நாள் 6 பொழுது
தீரும் நோய் - மறு காய்ச்சல்

## மாந்த சுரத்துக்குக் குடிநீர்

**சீந்தித் தண்டு கடுக்காயும் சிவதை வேரும் களிப்பாக்கு**
**மாந்த ருகந்த சுக்கும் கடுகுரோ கணியும் காய்யிடிநீரில் கலந்துடனே[1]**
**ஏந்தும் முலையார் நீரை யெட்டொன் றாக்கிக் கொண்டால்[2]**
**மாந்த சுரமும் தீர்ந்து வயிறுங் கழியும் கண்டீரே[3]**

(பொருள்) இதில் மாந்த சுரத்திற்குக் குடிநீர் கூறப்படுகிறது.

| | | |
|---|---|---|
| சீந்தில் தண்டு | | |
| கடுக்காய் | | |
| சிவதைவேர் | - | வகைக்கு 1 பங்கு |
| களிப்பாக்கு | | |
| சுக்கு | - | வகைக்கு 1 பங்கு |
| கடுகுரோகணி | | |
| நீர் | - | 8 பங்கு |

சேர்த்துக் குடிநீரிட்டு உழக்காக்கி (336 மி.லிட்) அருந்த வேண்டும்.

தீரும் நோய் - மாந்த சுரம் தீரும்
வயிறு கழியும்.

## பாட வேறுபாடு

பாடல் எண்:1 காய்ந்த சுக்குரோகணியும் கவின்சேர் விஷ்ணுகிரந்தியும்
காய்ந்த சுக்கும், ரோகணியும் கன்னி சருகும் கலந்துகொண்டு

2. முலையர் நீர்விட்டு யெட்டொன் றாக்கிக் குடிப்பீராய்
3. மாந்த மான சுரம்தீரும் வயிறு கழியும் கண்டாயே

## மாறல் அடிக்கடி வருவதற்குக் குடிநீர்

சுக்கு
பேய்ப்புடல்
கடுகுரோகணி

இவற்றைக் காய்ச்சிக் கொடுக்கவும்.
தீரும் நோய் - மாறல் நோய்

## முறை வெதுப்புக்குக் குடிநீர்

**சுரஞ்சேர் வெட்பாலை யினரிசி துய்ய சீந்தி பற்படகம்**
**திரஞ்சேர் கண்டங் காலிபுடோல் சிறுகாஞ் சோரி நிலவேம்போடு**
**உரஞ்சேர் கோட்ட முத்தக்கா சொன்று கழலும் கால்பலந்தான்**
**வரஞ்சேர் நாழி இரண்டுழக்காய் வத்தத் திருமுறை வெதுப்பே**

(பொ-ள்) இதில் சுரத்திற்குக் குடிநீர் கூறப்பட்டுள்ளன.

1. வெட்பாலை அரிசி
சீந்தில்
பற்பாடகம்
கண்டங்கத்தரி
பேய்ப்புடல்
சிறுகாஞ்சொரி
நிலவேம்பு
கோட்டம்
முத்தக்காசு
} வகைக்கு ¼ பலம் (8.75 கிராம்)

தண்ணீர் - 2 நாழி 2.6 லிட்

சேர்த்து உழக்காய் 336 மி.லிட் காய்ச்சி அருந்த வேண்டும்.
தீரும் நோய் - சுரம்

## குளிர், தாகம், பூட்டு நோவுக்குக் குடிநீர்

**முறையே குளிருங் குலைப்பெய்து முழன்றதாக சந்துகள்நோம்**
**நிறைய மயிர்க்கூச் சரங்குடையும் நெஞ்சுநோய் கொட்டா விவிடும்**

புறைசே ரிதற்குப் பேராமுட்டி பொருந்துஞ் சுக்கு நிறைகாய்ச்சி
மறைசே ரெடையாய் பருகுவரே மாறிப் போமிவ் வாதைகளே

2. பேராமுட்டி - சமஎடை
சுக்கு
தண்ணீர் - 1 நாழி (1.3 லிட்)

சேர்த்து 1 சேராகக் (280 கிராம்) குறுக்கிப் பருக வேண்டும்.
தீரும் நோய்கள் - குளிர், தாகம், பூட்டுகள் வலி, மயிர் கூச்செரிதல், குடைச்சல், நெஞ்சுநோவு, கொட்டாவி

## வாத சுரம், சூலைக்குக் குடிநீர்

வாத சுரமும் சூலைப்பும்போம் வட்டுச் சீந்தில் நன்னாரி
சீத பங்கம் பாளைசந்தம் சிறந்த சுக்கு பற்படகம்
போத ஆடா தோடையுடன் புனலிட் டொன்ற தேயானால்
பாதம் பற்றும் வரிநுதலாய் பரிந்தே யிதனைப் பருகிடிலே

(பொ-ள்) இதில் முறை வெதுப்பிற்குக் குடிநீர் கூறப்படுகிறது.

3. சீந்தில்
நன்னாரி
பங்கம்பாளை
சந்தனம்
சுக்கு
பற்பாடகம்
ஆடாதோடை } - 1 பங்கு
நீர் - 8 பங்கு

சேர்த்து 1/8 ஆகக் குறுக்கிக் குடிக்க வேண்டும்.
தீரும் நோய்கள் - வாதசுரம், சூலை

## குளிர் சுரத்திற்குக் குடிநீர்

கெடுத்தார் பெரிய வாகைமுல்லை கிளர்ந்த பெருங்கு மிழ்நெருஞ்சில்
அடுத்தனி லாகூவி ளைதான் வளர்சிற் றாமல்லி பேராமல்லி
அடுத்தார் புகழும் பாதிரி கண்டங் கத்தரி சிறுவழுதளைவேர்
எடுத்தார் கோட்ட மிளகிலை உற்ற வேர்க்கொம்பு திப்பிலியே

திப்பிலியுடனே இவையெல்லாஞ் சேரக் கூட்டி ஒருநிறையாய்
அப்பினி லிருநாழி நீரிலிட்டே அமரக் காய்ச்சி யெட்டொன்றாய்

**செப்பிய குடிநீர் தனையாற்றி தேனில் குடிக்கக் குளிர்ந்துவிடும்**
**வெப்பிவை யெல்லா முடல்தன்னை விட்டே யோடிடுங் குயில்**
**மொழியே**

4. பெருவாகை
முல்லை
பெருங்குமிழ்
நெருஞ்சில்
வில்வவேர்
சிற்றாமல்லி
பேராமல்லி
பாதிரி
கண்டங்கத்தரி
சிறுவழுதளைவேர்
கோட்டம்
மிளகிலை
சுக்கு
திப்பிலி
} சரி நிறை
நீர் - 2 நாழி (2.6 லிட்)

இவற்றை 1/8 ஆகக் குறுக்கித் தேன் கலந்துக் குடிக்க.
தீரும் நோய் - குளிர்சுரம்

## மூத்திரக்கிரிச்சம், நீர்கடுப்பு இவற்றுக்குக் குடிநீர்

கடுக்காய்
நெரிஞ்சில் வேர்
கொன்றைப் பழச்சதை
பூளைவேர்
ஆடாதொடை இலை
} சரி எடை

இவற்றைக் எட்டு பங்குநீர் சேர்த்து முறைப்படிக் குடிநீராக்கிக் கொள்ளவும்.

அனுபானம் - தேன்
தீரும் நோய்கள் - மூத்திரக்கிரிச்சம், நீர்க்கடுப்பு

## மூர்ச்சை, புலம்பல், அத்திசுரத்திற்குக் குடிநீர்

முத்தக்காசு
மதுரம்
கோட்டம்
சீந்தில்
} சரி எடை

| | |
|---|---|
| குமரிச்சருகு<br>நிலவேம்பு<br>சுக்கு<br>கொத்துமல்லி<br>பற்பாடகம்<br>சந்தனம்<br>பேய்ப்புடல்<br>ஆடாதொடை<br>பூசணித்தண்டு<br>இருவேலி<br>இலாமிச்சைவேர் | சரி எடை |

இவை சமன் அளவு எடுத்து, நீர்விட்டு எட்டிலொன்றாய்க் காய்ச்சவும். மேன்பொடியாக திப்பிலிப் பொடி சேர்க்கவும்.
தீரும் நோய் - அத்தியைப் பற்றிய சுரம், வறட்சி

## மூர்ச்சை போட்டுக் கிடக்கிற சன்னிவாத சுரத்துக்குக் குடிநீர்

| | |
|---|---|
| சீந்தில்<br>ஆடாதொடை<br>நிலவேம்பு<br>பற்படகம்<br>சுக்கு<br>சிறுகாஞ்சொரி<br>சிற்றாமுட்டி | சரி நிறை |

இவற்றைச் சேர்த்து முறைப்படிக் குடிநீராக்கிக் கொள்ளவும்.
தீரும் நோய்கள் - சன்னிபாத சுரம், மூர்ச்சை

## மூன்றாம் மாறலுக்குக் குடிநீர்

| | |
|---|---|
| பேய்ப்புடல்<br>வேப்பம்பட்டை<br>கடுக்காய்<br>நெல்லிமுள்ளி<br>தான்றிக்காய்<br>முந்திரிகைப்பழம்<br>முத்தக்காசு<br>சுக்கு | சரி நிறை |

இவற்றைப் போட்டுக் குடிநீராக்கிக் கொடுக்கவும்
தீரும் நோய் - மூன்றாம் மாறல்

## மூன்றாம் மாறலுக்குக் குடிநீர் (வேறு)

| | |
|---|---|
| பேய்ப்புடல் | சம அளவு |
| வேப்பம்பட்டை | |
| முந்திரிகைப்பழம் | |
| கொன்றைப்பட்டை | |
| கொன்றைக்காய் | |
| கொன்றைக்கொழுந்து | |
| கடுக்காய் | |
| நெல்லிமுள்ளி | |
| தான்றிக்காய் | |
| ஆடாதொடை | |
| சுக்கு | |

இவற்றைக் கிரமப்படி காய்ச்சிக் குடிநீராக்கிக்கொடுக்கவும்.
தீரும் நோய் - மூன்றாம் மாறல்

## மேகத்திற்கும் நீர் இறங்குவதற்கும் குடிநீர்

திரணிக்கொடி 4 வராகன் (14 கிராம்) எடுத்து இடித்துக் கஷாயமிட்டுக் கொள்ளவும்.

மேன்பொடி - வங்கத்தை பொரித்த பொடி
பத்தியம் - உப்பை வறுத்துக் கூட்டவும்
- கோதுமைப்பால் 1 சேர் (280 கிராம்)
- கற்கண்டு 1 சேர் (280 கிராம்) முட்டை வெள்ளைக்கரு இவற்றைக் கிண்டி களியாகச் செய்து தரவும்.
தீரும் நோய் - மேகம், நீரடைப்பு

## வயிற்று இரைச்சல் கழிச்சலுக்குக் குடிநீர்

| | |
|---|---|
| கழற்கொடிப் பருப்பு | சம அளவு |
| கடுகு | |
| வெள்ளுள்ளி | |
| முருங்கைப்பட்டை | |
| வெட்டிவேர் | |

இவைகளெல்லாம் சமன் அளவு எடுத்துக் கொண்டு ஒரு படி (2.65 லிட்) தண்ணீர் விட்டு, உழக்காகக் (336 மி.லிட்) காய்ச்சவும்.

காலம் - 3 நாட்கள்
தீரும் நோய்கள் - குடல் வாதம், சகல குன்மம், வயிறு இரைச்சல், கழிச்சல்

## வயிற்றுவலி அதிசாரசுரம் வீக்கத்திற்குக் குடிநீர்

சுக்கு
கொடிவேலி
முத்தக்காசு
தேவதாரம்
சிறுதேக்கு
திப்பிலி — சம அளவு
திப்பிலிமூலம்
சாரணை வேர்

இவற்றைக் குடிநீராக்கிக் கொடுக்கவும்.
தீரும் நோய்கள் - வயிற்றுவலி, அதிசார சுரம், வீக்கம்

## வலி குன்மத்திற்குக் குடிநீர்

மிளகு - ¼ பலம் 8.75 கிராம்
சுண்ணாம்பு - " "

இரண்டையும் தண்ணீர்விட்டு அரைத்துக் கொதிக்க வைத்து, ஆழாக்கு (168 மி.லிட்) குடிநீரைக் குடிக்கவும்.

தீரும் நோய் - வலி குன்மம்
மிளகு - ¼ பலம் (8.75 கிராம்)
சுண்ணாம்பு - " "

இவற்றை அரைத்துக் கொதிக்க வைத்துத் தாளில் பூசி வயிற்றில் போடவும்.

## வாத கரப்பானிற்கும் குறை நோவிற்கும் குடிநீர்

கழுதை விட்டையை மெல்லிய துணியில் வைத்து வடிகட்டிக் கொள்ளவும். அதற்குச் சம அளவு சிற்றாமணக்கெண்ணை சேர்த்து, அத்துடன் வெள்வெங்காயம் ஒன்றைச் சேர்த்து சூரியபுடமாக வைத்து எடுத்துக் குடிக்கவும்.

பத்தியம் - கார்ப்பு, புளிப்பு தவிரவும்
தீரும் நோய்கள்- வாதகரப்பான், குறை நோவு

## வாத சன்னிக்குக் குடிநீர்

கண்டங்கத்தரிவேர்
சிவனார் வேம்பு வேர்
வேப்பம்பட்டை - மூவிரல் நீளம்
மூங்கில் தோல் - சின்னவிளாங்காயளவு

இவற்றைப் பொட்டணமாகக் கட்டிக்கொண்டு இருநாழி (2.6 லிட்) தண்ணீர் விட்டு உழக்காய்க் (336 மி.லிட்) காய்ச்சிக் கொள்ளவும். வைரவன் குளிகையை இக்குடிநீரில் உரைத்துக் கொடுக்கவும்.

காலம் - காலை, மாலை
தீரும் நோய் - வாதசன்னி

## வாத பித்தக் குடிநீர்

**ஆடா தோடை பேய்ப்புடோல் அடரும்[1] சீந்தில் பற்படகம்**
**நீடார்[2] கண்டங் கத்தரிவேர் நிலவேம் புடனே நீள்சுக்கு[3]**
**வாடா குடிநீர் தேன்கலந்து[4] வடித்துக் குடிக்க வல்லீராய்[5]**
**பாடாய் வந்த வாதபித்தம் பிரிற் நீர்ந்து போய்விடுமே**

(பொருள்) இதில் வாதபித்தக் குடிநீர் கூறப்படுகிறது.

ஆடாதோடை
பேய்ப்புடல்
சீந்தில்
பற்பாடகம்
கண்டங்கத்தரிவேர்
நிலவேம்பு
சுக்கு
} ஒரு பங்கு
தண்ணீர் - எட்டு பங்கு

முறைப்படிக் குடிநீரிட்டுத் தேன் கலந்து அருந்த வேண்டும்.

தீரும் நோய் - வாத பித்தம்

## பாட வேறுபாடு

பாடல் எண்
1. அட்டும்
2. நேடார்
3. நிறைசுக்கு
4. தேன்குத்தி
5. கரைத்துக் குடிப்பீராய்
6. கோடா கோடி வியாதிகளும் குளிர்கா சுரமும் குளிர்ந்திடுமே

## வாத பித்த சுரக்குடிநீர்

கூறுஞ் சீந்தி லறுகழஞ்சு கொத்து மல்லி முத்தக்காசு
தேறும் வேர்க்கொம் பறுகழஞ்சு தேவ தார முடன்கழஞ்சு
ஊறும் புனலங் கிருநாழி உள்ளிடக் குழக்கா கக்காய்ச்சி
நீறும் படுதிப் பிலிபொடியை நீயிட் டருந்து நெறியறிந்தே

(பொருள்) இதில் வாத பித்தசுரக் குடிநீர் கூறப்படுகிறது.

| | | |
|---|---|---|
| சீந்தில் | - | 6 கழஞ்சு (26.4 கிராம்) |
| கொத்துமல்லி | - | ” ” |
| முத்தக்காசு | - | ” ” |
| சுக்கு | - | ” ” |
| தேவதாரம் | - | ” ” |
| தண்ணீர் | - | 2 நாழி (2.6 லிட்) |

சேர்த்துக் குடிநீரிட்டு உழக்காகக் (336 மி.லிட்) காய்ச்சி திப்பிலிப் பொடி சேர்த்து அருந்த வேண்டும்.
தீரும் நோய் - வாத பித்த சுரம்

## வாத மறிபடி மருந்து

| | |
|---|---|
| வில்வ பத்திரி வேர் | சம அளவு |
| வெட்டி வேர் | |
| இலாமிச்சம் வேர் | |
| நெல்லிக்காய் | |
| நற்சீரகம் | |
| அதிமதுரம் | |

இவற்றைச் சமஅளவு சேர்த்துக் கூட்டி, ஒரு படி (1.3 லிட்) தண்ணீர்விட்டு கால் படியாகக் (325 மி.லிட்) காய்ச்சிக் கொடுக்கவும்.
தீரும் நோய் - வாந்தி

## வாய் வெந்ததற்குக் குடிநீர்

| | | |
|---|---|---|
| விடத்தேர்ப்பட்டை | - | ¼ பலம் (6.2 கிராம்) |
| சுக்கு | - | 1 பலம் (35 கிராம்) |
| சீரகம் | - | 1 பலம் ” |
| சர்க்கரை | - | 1 பலம் ” |

இவை நான்கையும் சட்டியில் போட்டு, மூன்று படி (3.9 லிட்) தண்ணீர் விட்டு பனியில் வைக்கவும்.

அளவு - கால் படி (8.75 கிராம்)
காலம் - 6 நாட்கள்
பத்தியம் - பசுவின் பால், முருங்கையிலைத் தண்ணீர், தகரை இலைக்கறி
தீரும் நோய் - வாய் வேக்காடு

## விக்கல், பித்தநாடியான சுரத்திற்குக் குடிநீர்

சிறுதேக்கு
சுக்கு
கொத்துமல்லி
கோரைக்கிழங்கு
வேப்பம் ஈர்க்கு
சீந்தில் தண்டு
} சம அளவு

இவற்றைக் குடிநீராக்கிக் கொடுக்கவும்.
அனுபானம் - அன்னக்குடிநீர்
தீரும் நோய்கள் - தோஷம், விக்கல், பேச்சில்லாமல் பல்கிட்டுதல், பித்த நாடியான சுரம்

## விசூழிக்குக் குடிநீர்

செங்கல்லைப் பொடியாகச் செய்து வறுத்துக் கொள்ளவும்.

ஏலம்
சீரகம்
நெற்பொரி
மாந்துளிர்

இவற்றையும் செங்கல் பொடியுடன் சேர்த்து நான்கு நாழி (5.2 லிட்) நீர்விட்டு நாழியாகக் (1.3 லிட்) காய்ச்சிக் கொள்ளவும்.
தீரும் நோய் - விசூழி, தாகம்

## விசூழிக்குக் குடிநீர் (வேறு)

சாரணை வேர்
சுக்கு
நெல்லிமுள்ளி
வெள்ளுள்ளி
} சம அளவு

இவற்றைச் சமஅளவு எடுத்துக்கொண்டு, நாழி (1.3 லிட்) தண்ணீர் விட்டு உழக்காகக் (336 மி.லிட்) காய்ச்சிக் கொடுக்கவும்.
தீரும் நோய் - விசூழி

### விசூழிக்குக் குடிநீர் (வேறு)

மோரில் அரிசியை அரைத்துப் போட்டு, சுக்கும் அரைத்துக் கரைத்துக் கொள்ளவும். இருநாழி (2.6 லிட்) தண்ணீரும் கூட்டவிட்டு காய்ச்சிக் கொடுக்கவும்.
தீரும் நோய் - விசூழி

### விசூழிக்குக் குடிநீர் (வேறு)

ஒரு பிடி மிளகு கருக்கி, ஒரு துண்டு வசம்பும் நறுக்கி கருக்கிக் கொள்ளவும். கொட்டாங்கச்சிக் கரியையும் இரண்டு வெற்றிலையில் சுண்ணாம்புத் தடவி கருக்கியதையும் நாழித் (1.3 லிட்) தண்ணீர்விட்டு உரியாகக் (336 மி.லிட்) காய்ச்சிக் கொடுக்கவும்.
தீரும் நோய் - விசூழி

### விசூழி தாகத்திற்குக் குடிநீர்

புத்தோடு சிறுக நறுக்கிச் சிவக்க வறுத்து ஒரு படி தண்ணீர் வார்த்து பத்து கிராம்பு முடிந்து போட்டுக் காய்ச்சவும். பின்னர் கிராம்பு அரைத்து அத்துடன் கலந்து கொடுக்கவும்.
தீரும் நோய் விசூழி தாகம்

### வீக்கத்திற்குக் குடிநீர்

சாரணைவேர்
வெள்ளுள்ளி
சுக்கு
கடுக்காய்
தேவதாரம் } சம அளவு

இவற்றைக் குறுணி (5.3 லிட்) தண்ணீரில் போட்டு, கடுகுரோகணியும் திப்பிலியும் முடிந்து போடவேண்டும். பின்னர் குடிநீராகக் காய்ச்சி இறுத்துக் கொள்ளவும். முடிந்த மருந்தை அரைத்துக் கரைத்துக் குடிக்கவும்.
தீரும் நோய் - வீக்கம்

### வீக்கம், விஷபாகம், பாண்டுரு, சோகை இவற்றுக்குக் குடிநீர்

| | |
|---|---|
| சங்கம்பட்டை | - எலுமிச்சங்காயளவு |
| மிளகு | - 2 பாக்களவு |
| வெள்வெங்காயம் | - 1 பூண்டு |

இவற்றை வெந்நீர் விட்டு அரைத்து குடிநீராக்கிக் கொள்ளவும்.
காலம் - 4 நாட்கள் (காலை)
தீரும் நோய்கள் - வீக்கம், விஷபாகம், பாண்டு, சோகை

### வெகு தாகத்திற்குக் குடிநீர்

செங்கல்லைப் பொடி செய்து வறுத்துக் கொள்ளவும். இத்துடன்,

ஏலம்
சீரகம்
நெற்பொரி
மாந்துளிர்
} சம அளவு

இவற்றை நான்கு நாழி (5.2 லிட்) தண்ணீர் விட்டு, நாழியாகக் (1.3 லிட்) காய்ச்சி வடிகட்டிக் கொள்ளவும்.
தீரும் நோய் - வெகுதாகம்

## குழம்பு

### இஞ்சிக் குழம்பு

| | | |
|---|---|---|
| இஞ்சிச்சாறு | | |
| வெல்லம் | - | 10 பலம் (350 கிராம்) |
| மாதுளம்பழச்சாறு | - | உழக்கு (336 மி.லிட்) |
| கொமட்டி | | |

இவற்றையெல்லாம் சேர்த்துச் சிறிதாக எரியிட்டுப் பதத்தில் இருக்கின்றபோது

| | | |
|---|---|---|
| ஏலம் | - | 3 வராகன் (10.5 கிராம்) |
| இலவங்கம் | - | 3 வராகன் (10.5 கிராம்) |
| திரிபலை | - | 3 வராகன் (10.5 கிராம்) |
| திரிகடுகு | - | 3 வராகன் (10.5 கிராம்) |
| கொடிவேலிவேர் | - | 3 வராகன் (10.5 கிராம்) |
| செவ்வியம் | - | 1 பலம் (35 கிராம்) |
| சித்திரமூலம் | - | 1 பலம் (35 கிராம்) |
| வாய்விளங்கம் | - | 1 பலம் (35 கிராம்) |
| சுத்தி செய்த சிவதை | - | 1 பலம் (35 கிராம்) |

சுத்தி செய்த
நேர்வாளம் - 1 பலம் (35 கிராம்)
வசம்பு - 1 பலம் (35 கிராம்)

இவற்றை பற்பமாகச் செய்து கொள்ளவும்.

முருங்கைவேர்ப்பட்டை - ½ பலம் (17.5 கிராம்)
கடுக்காய் - ½ பலம் (17.5 கிராம்)

இவற்றை அத்துடன் சேர்த்துப் பொடியாக்கிக் கொள்ளவும்.

அளவு - வெருகடி (ஒரு சிட்டிகை)

தீரும் நோய் - உருத்திர வாய்வு

## உள்ரோகத்திற்கு மருந்து

சுக்கு
மிளகு
திப்பிலி
கிராம்பு
நற்சீரகம்
கல்நார்
கெருடபச்சை
அதிமதுரம்
சாத்திரபேதி

இவற்றை வெயிலில் காயவைத்துப் பொடி செய்து கொள்ளவும்.

அளவு - வெருகடி (ஒரு சிட்டிகை அளவு)
அனுபானம் - தயிர், முலைப்பால், பசும்பால்

தீரும் நோய்கள்- உள்ரோகம்
வாய்விளங்கம் - 3 வரா்கன் (10.5 கிராம்)
கருஞ்சீரகம் - 3 வராகன் (10.5 கிராம்)

இவற்றை எல்லாம் இடித்துச் சூரணம் செய்து போட்டு உழக்களவு (336 மி.லிட்) தேனும் இட்டு இறக்கிக் கொடுக்கவும்.

தீரும் நோய்கள் - அரோசிகம், சுவாசகாசம், அக்கினிதீபனம்

## கண்டமாலைக்குக் குழம்பு

எருக்கம்பூ இடித்துச் சாறு பிழிந்து வெய்யிலில் காய வைத்துச் சூடு வந்தவுடன் எடுத்து, அடுப்பில் காய வைத்துக் கறுப்பான பாகுபோலேயானால் அதில், 1 நாழி (1.3 லிட்டர்)

| | |
|---|---|
| துத்தம் | வகைக்கு ½ கழஞ்சு (2.2 கிராம்) |
| துரிசு | |
| நெல்லிக்காய் கந்தகம் | |
| இரதம் | |
| பொன்னரிதாரம் | |
| சவுக்காரம் | |
| சீனாக்காரம் | |

இவற்றைப் போட்டுக் குழம்பு பதமாய் இறக்கி வைத்துக் கொள்ளவும்.

அளவு - 1 பணவெடை பெருங்காயம் தேய்த்து அதன்மேல் சீலையிலே மருந்து தடவி வியாதியின் மேல் போடவும்

தீரும் நோய்கள் - உள்கண்டமாலை, புறகண்டமாலை, கன்னவியாதி, விப்புருதி, கன்ன உறுதி.

## கூவிளைக் குழம்பு

வில்வம் வேர் - 12 பலம் (420 கிராம்)

சிற்றாமுட்டிவேர்- 12 பலம் (420 கிராம்)

இவற்றைப் பொடியாக நறுக்கிக் கொண்டு இருதூணி (43 லிட்.) நீர்விட்டுக் குறுகக் காய்ச்சி வடித்து, இதற்கு வெல்லம் 14 பலம் (490 கிராம்) கூடவிட்டுக் காய்ச்சிக் கொள்ளவும். பின்னர்,

| | | |
|---|---|---|
| ஏலம் | - | ¼ பலம் (8.75 கிராம்) |
| மதுரம் | - | ¼ பலம் (8.75 கிராம்) |
| தக்கோலம் | - | ¼ பலம் (8.75 கிராம்) |
| கிராம்பு | - | ¼ பலம் (8.75 கிராம்) |
| சாதிக்காய் | - | ¼ பலம் (8.75 கிராம்) |
| சாதிபத்திரி | - | ¼ பலம் (8.75 கிராம்) |
| சுக்கு | - | ¼ பலம் (8.75 கிராம்) |
| இருசீரகம் | | ழ பலம் (8.75 கிராம்) |

இவற்றையெல்லாம் அரைத்துச் சேர்த்து, இறுகிய பதமானபிறகு தேன் கலந்து கொள்ளவும்.

அளவு - 1 கழஞ்சு (4.4 கிராம்)

தீரும் நோய்கள்- பித்தகுன்மம், வாய்வுத் திரட்சி, வாந்தி, விக்கல்

## சங்கிரக் கிராணிக்கு நாவல் குழம்பு

நாவ லத்தி ஒதியுடனே நலமா மாவின் பட்டையுடன்
மேவ இடித்து சாறுகொண்டு மிகுந்த கற்கம் விளம்பக்கேள்
பாவா மதுரம் இலவம்பிசின் பரிந்த திப்பிலி நாகப்பூ
மேவாய் திப்பிலி மூலமுடன் மிகுந்த வறட்பூலா வேராகும்.

புளியங் கொட்டைத் தோலதுவும் பொருத்த சுக்கு இந்துப்பு
விளாவின் பிசின்னிள அத்திப்பூ மிந்த சாதிக் காய்விடைய
நளின சாதிப் பத்திரியும் நன்றாம் அசமதாக மிவைசமனாய்
எளிதா மென்று முன்சாற்றில் இதமாய்க் காய்ச்சி கழஞ்சுகொள்ளே

சங்கிரகிராணி ரத்தக் கிராணி தானே கடுப்பு குடல்கொதிப்பு
இந்து நுரையாய்க் கழிகிறது இதுவும் தீரும் தப்பாது
பொங்கும் கஷாயம் வாய்விளங்கம் புகழ்ந்த முத்தம் சுக்குடனே
இங்கு வில்வம் பொன்முசுட்டை இயன்ற திப்பிலி இருநாழி.

(பொருள்) இதில் சங்கிரக்கிராணிக்கு நாவல் குழம்பு கூறப்படுகிறது.

| | |
|---|---|
| நாவல்<br>அத்தி<br>ஒதி<br>மாம்பட்டை | இவற்றின் சாறு சம அளவு |
| அதிமதுரம்<br>இலவம்பிசின்<br>திப்பிலி<br>சிறுநாகப்பூ<br>திப்பிலி மூலம்<br>விறட்பூலாவேர்<br>புளியங்கொட்டைத்தோல்<br>சுக்கு<br>இந்துப்பு<br>விளாம்பிசின்<br>அத்திப்பூ<br>சாதிக்காய்<br>சாதிப்பத்திரி<br>அசமதாகம் | சம எடை |

இவற்றை முன் கூறிய பட்டைகளின் சாற்றில் கூட்டிக் குழம்பாக எரித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு - 1 கழஞ்சு (4.4 கிராம்)
அனுபானம் - வாய் விளங்கம்
முத்தக்காசு
சுக்கு
வில்வம்
பொன்முசுட்டை
திப்பிலி
} சம அளவு

2 நாழி (1.3 லிட்டர்) தண்ணீர் விட்டு ஆழாக்காக (168 மி.லிட்) குறுக்கிக் கொள்ள வேண்டும்.
தீரும் நோய்கள் - சங்கிரக்கிராணி, இரத்தக்கிராணி
வயிற்றுக்கடுப்பு, குடல் கொதிப்பு,
நுரைத்துக் கழிதல்

## நேத்திர வாய்விற்குக் குழம்பு

சிறுகீரைவேர்
பொன்னாங்காணி வேர்
அதிமதுரம்
நற்சீரகம்
சந்தனம்
} சம அளவு

இவற்றுக்குச் சமஅளவில் எலுமிச்சம்பழச்சாறு விட்டரைத்துப் பசுவின் வெண்ணெயில் குழப்பிக் கொள்ளவும். தலைக்கு வெந்நீர்விட்டு முழுகவும்.
தீரும் நோய் : நேத்திர வாய்வு

## நேத்திர வாய்வு, சகல நேத்திர ரோகங்களுக்கும் குழம்பு

துத்தம் - 1 பங்கு
துரிசு - 1 பங்கு
சீனாக்காரம் - 2 பங்கு

இவற்றை அம்மியிலிட்டு இரவில் அரைத்து, பசுவின் வெண்ணெய் சேர்த்து அரைத்துக் கொள்ளவும். இதில் இரண்டு சேங்கொட்டையைச் சுட்டுப் புடம் போட்டு நன்றாக அரைத்துச் சிமிழில் அடைத்துக் கொள்ளவும். நேத்திர வாய்வு மற்றும் கண் நோய்களுக்குக் கண்ணில் போடவும்.

பத்தியம் - புளி, மீன், கோழி, புகையிலை, கிரந்திப்பண்டம்
தீரும் நோய்கள்- நேத்திர வாய்வு, கண் நோய்கள்

## விடபாகத்திற்குக் குழம்பு

கோசலம் - 1 குறுணி (5.3 லிட்)

எடுத்து அத்துடன் கடுக்காய் நூறு பொடி செய்து போட்டுக் கருப்பட்டி பத்து பலம் 350 கிராம் சேர்த்துக் கொள்ளவும். பின்னர் நன்றாகக் காய்ச்சிக் குழம்பான பதத்தில் எடுத்துக் கொள்ளவும்.

| | | | |
|---|---|---|---|
| இந்துப்பு | - | 1 பலம் (35 கிராம்) | |
| சதகுப்பை | - | 1 பலம் | " |
| சுக்கு | - | 1 பலம் | " |
| திப்பிலி | - | 1 பலம் | " |
| கடுகுரோகணி | - | 1 பலம் | " |

இவற்றையும் முன்கூறிய குழம்பில் கலந்து காய்ச்சி இறக்கிக் கொள்ளவும்.

அளவு - பாக்களவு
தீரும் நோய்கள்- விஷபாகம், பாண்டுரோகம், மகோதரம், வெப்புப்பாவை

பேதிக்கும், விஷப்பாக வீக்கத்திற்கும் முதல்நாள் தலைமுழுகிக் குப்பைமேனி இலை அரிசி வறுத்து இரண்டு மூன்று உருண்டை கொடுக்கவும். வயிறு பேதிக்கும். மறுநாள்,

சங்கம் வேர் பொடி - 1 பங்கு
கருப்பு நெல்லரிசி - 2 பங்கு

இவற்றைக் கூட்டி அரைத்துக் குழம்பாக்கிச் சாப்பிடவும். துவரம்பருப்பு வறுத்துக் கூட்டவும்.

# சாறு

## அரோசகம், சத்தி, வாய்நீர் ஊறலுக்கு மருந்து

| | |
|---|---|
| எலுமிச்சம்பழச்சாறு | - 1 ஆழாக்கு (168 மி.லிட்.) |
| தேன் | - 1 ஆழாக்கு (168 மி.லிட்.) |
| வெந்நீர் | - 1 ஆழாக்கு (168 மி.லிட்) |

இவை மூன்றையும் கலந்து கொள்ளவும்.
தீரும் நோய்கள் - அரோசிகம், சத்தி, வாய்நீர் ஊறல்.

## இரத்த சத்திக்கு மருந்து

| | | |
|---|---|---|
| இளநீர் | - | 3 |
| இலுப்பை எண்ணெய் | - | 3 கழஞ்சு (13.2 கிராம்) |
| அரக்கு காய்ச்சின நீர் | - | 2 கழஞ்சு (8.8 கிராம்) |
| தேவதாரம் | - | ” ” |
| அரத்தை | - | ” ” |
| ஏலம் | - | ” ” |
| அன்னபேதி | - | ” ” |
| கொத்துமல்லி | - | ” ” |
| சுக்கு | - | ” ” |
| சவுக்காரம் | - | ” ” |

இவற்றை அரைத்து கரைத்து வடித்துக் கொள்ளவும்.

அளவு - 4 காசெடை (4 பைசா அளவு)

தீரும் நோய் - இரத்தசத்தி

## இரைப்புக்கு மருந்து

குப்பை மேனியும் உப்பும் இடித்து ஒரு சிறங்கைச்சாறு குடிக்கவும்.

காலம் - 3 நாட்கள்

பத்தியம் - புளி, புகையிலை, கிரந்திப்பண்டம் ஆகாது

## குடல் புரட்டல், குலை எரிவுக்கு மருந்து

நல்லெண்ணெயும் குப்பைமேனிச் சாறும் கலந்து கொள்ளவும்.

காலம் - 3 நாட்கள்

தீரும் நோய்கள்- குடல் புரட்டல், குலை எரிவு

## பிள்ளை பெற்று வயிறு பழுத்தாலும் மலங்கட்டுப்பட்டாலும் மருந்து

சாரணை வேரை எலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்து அந்தச் சாற்றைக் கொடுக்கவும்.

தீரும் நோய்கள் - பிள்ளை பெற்று வயிறு பழுத்தல், மலங்கட்டுப்படுதல்

### பைத்தியம் பிரமைக்கு மருந்து

அவுரி இலைச்சாறு ஆழாக்கு (168 மி.லிட்.) கொடுக்கவும்.

காலம் - 3 பொழுது

தலையில் தடவி, உடல் மேலும் துவாலை இடவும்.

பத்தியம் - ஆவின்பால், நெய், சர்க்கரை, அரைக்கீரை, முருங்கை இலை, இஞ்சி, சுண்டைக்காய், உப்பு இவற்றைச் சேர்க்கவும்.

தீரும் நோய் - பைத்தியம், பிரமை

### வயிற்றுக்கடுப்பு, சீதவழும்புக்கு மருந்து

வாழைப்பூவைப் பிட்டவியல் செய்து அதற்குள்ளே

அதிவிடையம்
கிராம்பு
சுக்கு
மிளகு
ஓமம்
} வகைக்கு வராகன் (35 கிராம்)

முடிந்து பொட்டணம் கட்டி அதற்குள்ளே வைத்து அவித்து இறக்கி முடிந்த மருந்தை எடுத்து அரைத்துச் சாறு பிழிந்து குழப்பிக் கொடுக்க வேண்டும்.

அளவு - 3 நாள் அந்தி, சந்தி

### வயிற்றுப்பிள்ளை செத்துப் போனதற்குப் பிறகு கொடுக்கும் மருந்து

வேலிப் பருத்திஇலைச் சாற்றை எடுத்து மேல்நோக்கித் துவாலையிடவும்.

## சீலை

### தண்டுப்பிளவை, அரைப்புற்றுப் பிளவை, சிலந்திக்குச் சீலை

விஷமூங்கில் கிழங்கு
சாதிக்காய்
சாதிபத்திரி
வெள்ளைக் குங்கிலியம்
கருங்குங்கிலியம்
} சம அளவு

| | |
|---|---|
| சாம்பிராணி<br>இலுப்பெண்ணெய்<br>புங்கெண்ணெய்<br>நல்லெண்ணெய் | சம அளவு |

இவற்றை அரைத்துப் பதமாகக் காய்ச்சி வடித்துச் சீலையில் தோய்த்துப் போடவும்.

தீரும் நோய்கள் - தண்டுபிள்ளை, அரைப்புற்று,
பிளவை, சீலை சிலந்தி

### கௌரிபாடாணச்சீலை

கௌரி பாஷாணத்தை எலுமிச்சம்பழச்சாறு விட்டு அரைத்து வெள்ளீய சீலையிலூட்டி நிழலிலுலர்த்தி வைத்துக் கொள்ளவும். அரையாப்பிலே முளை போலே கிளம்பினால் போடவும்.

அளவு - புளியிலையளவு
தீரும் நோய் - அரையாப்பு
விளைவு - எரிப்பு அதிகமிருந்தால் வெண்ணெய், நெய் சீனியில் ஊற்றவும்

## சூரணம்

### அசுவ கெந்தாதிச் சூரணம்

முந்திரிகை பேரீச்சு நாகமுகிளி ரண்டுடன்
முதுகூகை நீறுமிளகு
முத்திஇல வங்கப்பட் டைபத்திரி ஏலம்
முகிழ்கிராம் பதிமதுரமுடன்
உந்துதிப்பிலி சுக்கு சீரக நல்லோமமும்
ஓதுகுரோ சானிஇவைதான்
ஒரொன்று பலமரை அமுக்குரா எண்பலம்
முந்திடிந்த தூளிலே
விந்தைவெண் சீனியும் சர்க்கரை நால்பலம்
விரவியறு காசெடைதான்
மேன்பசு பாலிஞ்சி தேனிலும் கொண்டிடுக
வெண்பித்த பாண்டக்கரம்
அந்திகா மாலை அழற்கா மாலை
அவையம் வெளிறல்

காசநோ யிரும லுள்சுர மெலிவு
அகத்திலுடல் வலுவெய்தும்

அரனா ருரைத்த மொழி
அசுவகெந்தாதி சூரணம் இதுவே.

(பொருள்)

| | |
|---|---|
| முந்திரிப்பருப்பு | ½ பலம் (17.5 கிராம்) |
| பேரீச்சு | |
| நாகேசுரம் | |
| கூகைநீறு | |
| மிளகு | |
| இலவங்கப்பட்டை | |
| இலவங்கப்பத்திரி | |
| ஏலம் | |
| கிராம்பு | |
| அதிமதுரம் | |
| திப்பிலி | |
| சுக்கு | |
| சீரகம் | |
| ஓமம் | |
| குரோசானி ஓமம் | |
| அமுக்கரா | 8 பலம் (280 கிராம்) |

(முந்திரிப்பருப்பு முதல் குரோசானி ஓமம் வரை ஒவ்வொன்றும் - ½ பலம் (17.5 கிராம்))

இவற்றை வறுத்து இடித்துத் தூளாக்கி வைத்துக் கொண்டு இராயபுரி சர்க்கரை 4 பலம் (140 கிராம்) சேர்த்துக் கலந்து வைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு - காசெடை
அனுப்பானம் - பால், இஞ்சிச்சாறு, தேன்
தீரும் நோய்கள்- பித்தப்பாண்டு, அக்கரம், ஊழாலைக் காமாலை, அழல் காமாலை, உடல் வெளிறல், காசநோய், இருமல், உள்சுரம், மெலிவு இவை நீங்க உடல் வன்மை பெறும்.

## அசுவ கெந்தாதிச் சூரணம் (வேறு)

எண்ணரிய கிராம்பினுடன் நாகப் பூவும்
ஏலமில் வங்கமொடு பத்திரி சீரகமும்
ஒன்றுபெறு கொத்துமல்லி மிளகிவைக ளெட்டும்
ஒன்றுமுத லெட்டளவும் ஒன்றொன் றேற்றி

திண்ணமொடு திப்பிலிசேர் பதினாறு பங்கு
சிறந்த சுக்கு முப்பத்தி ரெண்டு
சேந்தமுக் கிராவேர் அறுபத்து நாலுடனே
அதன்சமனாய் சர்க்கரையே அறிந்துநீ கூட்டே

கூட்டியதன் வெருகடியளவு உள்ளே கொள்ள
குலவு அரோசிகம் கூறும் காசம்
ஆட்டிவளர் சத்திபித்தம் அன்னத் த்வேஷம்
வாய்வுமருந் தீருமிருமல் வன்னி வாதம்
தேட்டமுள்ள குமரகண்டன் சுவாச காசம்
சிலேட்டுமமும் உள்சுரமும் சேர்ந்த நோய்கள்
ஆட்டிவளர் கிராணிமுத லனைத்தும் தீரும்
அசுவகெந்தாதிச் சூரணமென் றறிந்து கொள்ளே

(பொருள்) இதில் அசுவகந்தாதிச் சூரணம் சொல்லப்படுகிறது.

| | |
|---|---|
| கிராம்பு | - 1 பங்கு |
| சிறுநாகப்பூ | - 2 பங்கு |
| ஏலம் | - 3 பங்கு |
| இலவங்கப்பட்டை | - 4 பங்கு |
| இலவங்கப்பத்திரி | - 5 பங்கு |
| சீரகம் | - 6 பங்கு |
| கொத்துமல்லி | - 7 பங்கு |
| மிளகு | - 8 பங்கு |
| திப்பிலி | - 16பங்கு |
| சுக்கு | - 32 பங்கு |
| அமுக்கிராவேர் | - 64 பங்கு |

இவற்றை வறுத்து இடித்துச் சலித்துச் சமன் சர்க்கரை சேர்த்து வைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு - வெருகடி இரண்டு விரல் அளவு
தீரும் நோய்கள்- செரியாமை, காசம், வாந்தி, பித்தம் அன்னத்தின் மேல் வெறுப்பு, வாய்வு, மருந்தீடு, இருமல், பித்தம், குமரகண்டவலி, சுவாசகாசம், சிலேத்துமம், உள்சுரம், கிராணி

## அசுவ கெந்தாதிச் சூரணம் (வேறு)

| | | |
|---|---|---|
| கிராம்பு | - | 1 வராகன் (3.5 கிராம்) |
| நாகப்பூ | - | 2 வராகன் (7 கிராம்) |
| ஏலம் | - | 4 வராகன் (14 கிராம்) |
| மிளகு | - | 8 வராகன் (28 கிராம்) |
| திப்பிலி | - | 16 வராகன் (56 கிராம்) |
| சுக்கு | - | 32 வராகன் (112 கிராம்) |
| அமுக்கிரா | - | 63 வராகன் (220.5 கிராம்) |
| சர்க்கரை | - | 126 வராகன் (441 கிராம்) |

இவற்றைச் சேர்த்துச் சூரணம் செய்து கொள்ள வேண்டும்.
அனுபானம் - தேன்
தீரும் நோய்கள்- ஈளை, இரைப்பு, சுவாசகாசம், சயம், குன்மம், வாய்வு, அக்கினிமந்தம், எரிகுன்மம், சத்திகுன்மம், அஸ்திசுரம்.

## அஷ்டகுன்மம், மூலம், சுக்கிலப்பிரமியம், செரியாமை, மந்தாக்கினி இவற்றுக்குச் சூரணம்

| | | |
|---|---|---|
| காட்டுக் கருணைக்கிழங்கு | - | 16 பலம் (560 கிராம்) |
| சேங்கொட்டை | - | 8 பலம் (280 கிராம்) |
| வெற்றிலைக்காம்பு | - | 4 பலம் (140 கிராம்) |
| செவ்வியம் | - | 5 பலம் (175 கிராம்) |
| சீந்தில்தண்டு | - | 4 பலம் (140 கிராம்) |
| திப்பிலி | - | 1 பலம் (35 கிராம்) |
| மிளகு | - | 1 பலம் (35 கிராம்) |
| சீரகம் | - | 1 பலம் (35 கிராம்) |

இவைகளை இடித்துச் சலித்துக் கொள்ளவும்.
அளவு - வெருக்கடி
அனுபானம் - சர்க்கரை (தான்றிக்காயளவு)
தீரும் நோய் - அஷ்டகுன்மம், மூலம், சுக்கிலப் பிரமியம், செரியாமை, மந்தாக்கினி, புளித்தேப்பம், மூத்திரக்கிரிச்சம்

## ஆண், பெண், கர்ப்பிணிக்காரி, நீர்க்கட்டுக்குச் சூரணம்

வெண்காரம், படிகாரம், இவற்றைப் பொடித்துக் கொள்ளவும். கற்பூர சிலாசத்து, மிளகு குடிநீரில் கழுவிச் சுத்தியாக்கி மூன்றும் சமஅளவு எடுத்துச் சூரணமாகச் செய்து கொள்ளவும்.

அளவு - காசெடைப் பொடி (ஒரு பைசா அளவு)
அனுபானம் - ஆறு மாதத் தண்டுக்கீரை குடிநீர்
தீரும் நோய் - நீர்க்கட்டு

## இரத்தப் பித்தத்திற்குச் சூரணம்

திப்பிலியை இளம் சூட்டில் வறுத்துப் பொடியாக்கிக் கொள்ளவும்.

அளவு - வெருகடி
அனுபானம் - பருத்திக் கொட்டைப் பால் உழக்கு (336 மி.லிட்)
தீரும் நோய் - இரத்தப் பித்தம்

## இரத்தப் பித்தத்திற்குச் சூரணம் (வேறு)

சீனி
சந்தனம்
பருத்திக்கொட்டைப் பருப்பு } சம அளவு

இவற்றைப் பொடியாக்கிக் கொள்ளவும்.

அனுபானம் - வெண்ணெய்
தீரும் நோய் - இரத்தப் பித்தம்

## அஸ்தி சுரம், வெட்டைக்குச் சூரணம்

| | |
|---|---|
| சன்ன லவங்கப்பட்டை | - 240 நெல்லெடை |
| சாதிக்காய் | - 6 நெல்லெடை |
| பவழம் | - 6 நெல்லெடை |
| முத்து | - 6 நெல்லெடை |
| தங்கரேக்கு | - 1 நெல்லெடை |
| வெள்ளிரேக்கு | - ½ நெல்லெடை |

இவற்றை நன்றாகப் பொடி செய்து கொள்ளவும்.

அளவு - 3 நெல்லெடை
அனுபானம் - சர்க்கரைப்பாகு
தீரும் நோய்கள் - அஸ்திசுரம், வெட்டை, பித்தவெட்டை

## இருமலுக்கு அட்டாதிச் சூரணம்

| | |
|---|---|
| தாளிசபத்திரி | - 1 வராகன் (3.5 கிராம்) |
| மிளகு | - 2 வராகன் (7 கிராம்) |

## உருத்திரவாய்வு, இருமல், அசீரணம் இவற்றுக்குச் சூரணம்

| | | |
|---|---|---|
| சிவதைவேர் | - | 3 பலம் (105 கிராம்) |
| கடுக்காய் | - | 1 பலம் (35 கிராம்) |
| தான்றிக்காய் | - | 1 பலம் (35 கிராம்) |
| வில்வப்பத்திரி | - | 1 பலம் (35 கிராம்) |
| சுக்கு | - | 1 பலம் (35 கிராம்) |
| மிளகு | - | 1 பலம் (35 கிராம்) |
| திப்பிலி | - | 1 பலம் (35 கிராம்) |
| ஏலம் | - | ½ பலம் (17.5 கிராம்) |
| கிராம்பு | - | ¼ பலம் (8.75 கிராம்) |
| இலவங்கப்பட்டை | - | ¼ பலம் (8.75 கிராம்) |
| வாய்விளங்கம் | - | ½ பலம் (17.5 கிராம்) |
| கொடிவேலிவேர் | - | ½ பலம் (17.5 கிராம்) |
| புளிநரளைக்கிழங்கு | - | 1 பலம் (35 கிராம்) |
| பிரண்டை | - | 1 பலம் (35 கிராம்) |
| மெருகங்கிழங்கு | - | ½ பலம் (17.5 கிராம்) |
| காட்டுக்கருணைக்கிழங்கு | - | 1 பலம் (35 கிராம்) |
| பஞ்சலவணம் | - | 1 பலம் (35 கிராம்) |

இவையெல்லாவற்றையும் நன்றாகப் பொடியாக்கி, மெல்லிய துணியில் சலித்துக் கொள்ளவும்.

அளவு - வெருகடி (ஒரு சிட்டிகை அளவு)
அனுபானம் - சர்க்கரை
காலம் - காலையில் மட்டும்
தீரும் நோய்கள்- அனல், க்ஷயம், சூலை உருத்திர வாய்வு, சீதாங்க வாய்வு, திமிர் வாய்வு

## உருத்திர வாய்வுக்கு மருந்து

| | | |
|---|---|---|
| ஓமம் | - | 1 பலம் (35 கிராம்) |
| சீரகம் | - | 1 பலம் (35 கிராம்) |
| பெருங்காயம் | - | 1 பலம் (35 கிராம்) |
| இந்துப்பு | - | 1 பலம் (35 கிராம்) |
| சுக்கு | - | 1 பலம் (35 கிராம்) |
| திப்பிலி | - | 1 பலம் (35 கிராம்) |
| திப்பிலி மூலம் | - | 1 பலம் (35 கிராம்) |
| செவ்வியம் | - | 1 பலம் (35 கிராம்) |
| சித்திர மூலம் | - | 1 பலம் (35 கிராம்) |

சுத்திசெய்த சிவதை - 1 பலம் (35 கிராம்)
சுத்தி செய்த நேர்வாளம்- 1 பலம் (35 கிராம்)
வசம்பு - 1 பலம் (35 கிராம்).

இவற்றைப் பற்பமாகச் செய்து கொள்ளவும்,

முருங்கைவேர்ப்பட்டை - ½ பலம் (17.5 கிராம்)
கடுக்காய் - ½ பலம் (17.5 கிராம்)

இவற்றை அத்துடன் சேர்த்துப் பொடியாக்கிக் கொள்ளவும்.

அளவு - வெருகடி (1 சிட்டிகை)
தீரும் நோய் - உருத்திரவாய்வு

உள்ரோகத்திற்குச் சூரணம்

சுக்கு
மிளகு
திப்பிலி
கிராம்பு
நற்சீரகம்
கல்நார்
கெருடபச்சை
அதிமதுரம்
சாத்திரபேதி

} சம அளவு

இவற்றை வெயிலில் காயவைத்து பொடிசெய்து கொள்ளவும்.

அளவு - வெருகடி
அனுபானம் - தயிர், முலைப்பால், பசும்பால்
தீரும் நோய் - உள்ரோகம்

## உள்ரோகத்திற்குச் சூரணம் (வேறு)

நற்சீரகம் - 2 பங்கு
ஏலம் - 1 பங்கு
சாத்திரக்கல் - 1 பங்கு
கல்நார் - 1 பங்கு
மாசிக்காய் - 1 பங்கு
அதிமதுரம் - ½ பங்கு
சீனாக்காரம் - ½ பங்கு

இவை அனைத்தையும் சட்டியில் போட்டு, இளம் சூட்டில் வறுத்துப் பொடியாக்கிக் கொள்ளவும்.
அனுபானம் - தயிர்
தீரும் நோய் - உள்ரோகம்

## உள்விடம்

**கடுநெல்லி தான்றி கனசித்திர மூலம்
நடுவாகஞ் சிவதை நாடில் வடுவிலா
கள்ளவிழிக் காரிழையே காணுங்கால்
உள்ளேவிஷ மென்றுரை**

(பொருள்) இதில் உள் விடத்திற்கு மாற்றுக் கூறப்படுகிறது.

| | |
|---|---|
| கடுக்காய் | சம அளவு |
| நெல்லிக்காய் | |
| தான்றிக்காய் | |
| சித்திரமூலம் | |
| சிவதை | |

இவை பொடி செய்து சூரணமாக்கி கொள்ளவும்.

அளவு - வெருகடி
தீரும் நோய் - உள்விடம்

## தோல் நோய்களுக்குச் சூரணம்

| | | |
|---|---|---|
| சுத்திசெய்த கந்தகம் | - | 6 பலம் (210 கிராம்) |
| திரிபலை | - | 1 பலம் (35 கிராம்) |
| திரிகடுகு | - | 1 பலம் (35 கிராம்) |
| வாய்விளங்கம் | - | 1 பலம் (35 கிராம்) |
| இலவங்கப்பட்டை | - | 1 பலம் (35 கிராம்) |
| இலவங்கப்பத்திரி | - | 1 பலம் (35 கிராம்) |
| ஏலம் | - | 1 பலம் (35 கிராம்) |
| சணல் விரை | - | 1 பலம் (35 கிராம்) |
| சேங்கொட்டை | - | 1 பலம் (35 கிராம்) |
| கொடிவேலிவேர் | - | 1 பலம் (35 கிராம்) |

இவற்றைச் சூரணமாகச் செய்து மெல்லிய துணியில் சலித்து வைத்துக் கொள்ளவும்.

அளவு - 1 வராகனெடை (3.5 கிராம்)
பத்தியம் - கடுகு, நல்லெண்ணெய், உப்பு, புளி இவற்றைத் தவிர்க்கவும்.

| | |
|---|---|
| தீரும் நோய்கள் - | குட்டம் 18, கிராணி 4, குன்மம் 8, அட்டவாய்வு, மேகம் 20, உதிரசூலை 8, வாதம் 80, பித்தம் 40, சிலேற்பம் 20 |

## கடி விகாரங்களுக்குச் சூரணம்

| | | |
|---|---|---|
| நெல்லிக்காய் கந்தகம் | - | 1 பலம் (35 கிராம்) |
| பசுவின் பால் | - | 1 குறுணி (5.3 லிட்) |

பசுவின் பாலில் நெல்லிக்காய் கந்தகத்தைத் தோலாயந்திரமாகக் கட்டி, பால் குழம்பாய் வேகும்வரை வைத்து எடுத்துப் பொடி செய்து கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | 2 பணவெடை (976 மி.கிராம்) |
| அனுபானம் | - | தேன் |
| பத்தியம் | - | பால், இறால், திருக்கை, நெற்றிலி இவற்றைச் சேர்த்துக் கொள்ளவும். |
| தீரும் நோய்கள்- | | கடிவிகாரங்கள், படர் தாமரை, கருங்குட்டம், வெண்குட்டம். |

## கர்ப்பிணி மேல் அக்கினி மந்தத்திற்குச் சூரணம்

அமுக்கிரா
அசமதாகம்
திப்பிலி
சிறுமூலம்
சீரகம்

இவற்றைப் பொடி செய்து வைத்துக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| அனுபானம் | - | தேன் அல்லது பனைவெல்லம் |
| விளைவு | - | அக்கினி தீபனமுண்டாகும் |

## கற்பூரச் சூரணம்

**அரிய ஏலம் திரிகடுகு அரத்தை மூலம் சாதிக்காய்**
**பெரிய சூடன் கற்பூரம் பேணுஞ் சிறிய நாகப்பூ**
**உரிய தாளிச பத்திரியும் உற்ற கிராம்பும் சமன்கூட்டித்**
**தெரிய பொடியாய்த் தேனதனில் தின்னுங் கற்பூர சூரணமே**

(பொருள்)

ஏலம்
திரிகடுகு (சுக்கு, மிளகு, திப்பிலி)
அரத்தை
} சரி எடை

| | |
|---|---|
| திப்பிலி மூலம் | சரி எடை |
| சாதிக்காய் | |
| சூடம் | |
| சிறுநாகப்பூ | |
| தாளிசப்பத்திரி | |
| கிராம்பு | |

இவற்றை வறுத்துப் பொடி செய்து சலித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு : அனுபானம் கூறப்படவில்லை.

தீரும் நோய் : காசம், சுவாசம்

## கன்னத்தில் வியாதிக்குச் சூரணம்

| | | |
|---|---|---|
| சங்கம் வேர் | - | 1 பிடி |
| வேப்பம் வேர் | - | 1 பிடி |
| செங்கத்தரிவேர் | - | 1 பிடி |
| அவுரி வேர் | - | 1 பிடி |
| இண்டம் வேர் | - | 1 பிடி |
| ஆடாதோடை வேர் | - | 1 பிடி |
| கொடிவேலி வேர் | - | 1 பிடி |
| கண்டங்கத்தரிவேர் | - | 1 பிடி |
| ஓமம் | - | ¼ பலம் (8.75 கிராம்) |
| திப்பிலி | - | ¼ பலம் (8.75 கிராம்) |
| திப்பிலி மூலம் | - | ¼ பலம் (8.75 கிராம்) |
| சுக்கு | - | ¼ பலம் (8.75 கிராம்) |
| சீரகம் | - | ¼ புலம் (8.75 கிராம்) |
| கருஞ்சீரகம் | - | ¼ பலம் (8.75 கிராம்) |
| வாய்விளங்கம் | - | ¼ பலம் (8.75 கிராம்) |
| இரதம் | - | 1 பலம் (3.5 கிராம்) |

இவற்றை எரிமுட்டை (விராட்டி)யில் புடமிடவும்.

| | | |
|---|---|---|
| கந்தகம் | - | 1 வராகன் (3.5 கிராம்) |

பாலில் சுத்தி செய்யவும்.

| | | |
|---|---|---|
| சாதிலிங்கம் | - | 1 வராகன் (3.5 கிராம்) |

வெண்ணெயில் புடமிடவும்.

குக்கில் (சுத்தி செய்தது)

இவற்றை எடுத்துக் கொண்டு புடம் போடவும். பின்னர் இவ்விரு மருந்துகளையும் இடித்துக் கொள்ளவும். பின்னர்க் கந்தகம், சாதிலிங்கம் இவை கலந்து கொள்ளவும்.

அளவு - 1 வெருகடி (ஒருசிட்டிகையளவு)
அனுபானம் - தேன்
தீரும் நோய் - கன்னத்து வியாதி

## கிரந்தி, சூலைக்குச் சூரணம்

| | | |
|---|---|---|
| மிளகு | - | 3 வராகன் (10.5 கிராம்) |
| மிருதார்சிங்கி | - | 3 வராகன் (10.5 கிராம்) |
| கஸ்தூரி மஞ்சள் | - | 3 வராகன் (10.5 கிராம்) |
| கரிய போளம் | - | 3 வராகன் (10.5 கிராம்) |

இவற்றைத் தூள் செய்து, ஏழு பங்காக்கி வைத்துக் கொள்ள வேண்டும்.

காலம் - ஏழு நாட்கள்
பத்தியம் - நெய்யும் சோறும் உண்ணவும். உப்பு சேர்க்கக் கூடாது. பதினோராம் நாள் விளக்கெண்ணெயில் தலை முழுகவும்.
தீரும் நோய்கள்- கிரந்தி, சூலை

## கிரந்திக்குக் கருங்கோழிச் சூரணம்

ஓமம் - 1 பிடி
கோவை இலைச்சாறு - 1½ வராகன் (5.25 கிராம்)

கோவைஇலைச் சாற்றில் ஓமத்தைப் போட்டுப் பிசிறிக் கருங்கோழியில் அடைக்கவும். பின்னர்ச் சதுரக்கள்ளியில் பிட்டு செய்து 20 நாழிகை 8 மணி நேரம் வெந்த பிறகு சமூலம் எடுத்துத் தூள் செய்து கொள்ளவும்.

அளவு - 1 வெருகடி (ஒரு சிட்டிகையளவு)
காலம் - காலை, மாலை
பத்தியம் - 7 நாட்கள் குளிர்ந்த தண்ணீரும் உப்பில்லாமல் சோறும். 7 நாட்களுக்குப் பிறகு புளி, நெத்திலிக் கருவாடு, மிளகு, பூண்டு சேர்த்துச் சமைத்துக் கொடுக்கவும். ஒரு மாதத்திற்குப் பிறகு விளக்கெண்ணெய் தேய்த்துக் குளிர்ந்த தண்ணீரில் முழுகவும். மூன்று மாதத்திற்கு நல்லெண்ணெய், கடுகு, பூசணிக்காய், பாகற்காய் ஆகாது.
தீரும் நோய் - கிரந்தி

## குளிர் காய்ச்சலுக்குச் சூரணம்

கஞ்சாங் கோரை ஒருபிடியும் கனக மிளகு முக்கழஞ்சும்
அஞ்சா தொருபலம் தூதுவளை அதிம துரமு முக்கழஞ்சு
மிஞ்சா தேல முக்கழஞ்சு மிகவே சுக்கு முக்கழஞ்சு
மஞ்சார் குழலார்நற் சீரகத்தை மாறா திடுவீர் முக்கழஞ்சு

இட்ட மருந்தைப் பொடியாக்கி இதமா யிடித்துக் கொடுக்கையிலே
அட்ட மருவும் குளிர்க்காய்ச்சல் அடாதே துள்ளிப் பனிவருகில்
கிட்ட இருந்து வெருக்கடிகொள் கேள்நீர் வெந்நீர் தனையருந்து
பட்டோம் பிழைத்தோம் எனஓடிப் பயந்து ஒடுங்கும்
குளிர்க்காய்ச்சல்

(பொருள்)

| | | |
|---|---|---|
| கஞ்சாங்கோரை | - | 1 பிடி |
| மிளகு | - | 3 கழஞ்சு |
| அதிமதுரம் | - | 3 கழஞ்சு |
| ஏலம் | - | 3 கழஞ்சு |
| சுக்கு | - | 3 கழஞ்சு |
| சீரகம் | - | 3 கழஞ்சு |

இவற்றை இடித்துச் சூரணித்து வைத்துக் கொள்ள வேண்டும்.
அளவு - வெருகடி (இரண்டு விரல் அளவு)
அனுபானம் - வெந்நீர்
தீரும் நோய்கள்- குளிர் காய்ச்சல்

## குன்மத்துக்கு விபூதிச் சூரணம்

வாயு வந்து முட்டுதென்று வயிறு வலித்துக் கிடவாமல்
தூய உப்பு புளியம்பொருக்கு துய்ய எருக்கம் பழுப்புடன்
நாயி னுருவி விறகுடனே நன்றா யடுக்கிச் சுட்டபொடி
காயும் வெந்நீர் தனில்கொள்ள கடுகி ஓடுங் குன்மமெல்லாம்.

(பொருள்)

சோற்றுப்பு
புளியம்பொருக்கு
எருக்கிலைப்பழுப்பு
நாயுருவி விறகு
} சம எடை

இவற்றை ஒன்று சேர்த்துச் சுட்டுப் பொடியாக்கிக் கொள்ள வேண்டும்.

அளவு - கூறப்படவில்லை
அனுபானம் - வெந்நீர்
தீரும் நோய் - குன்மம்

## சகல குன்மத்திற்குச் சூரணம்

| | |
|---|---|
| திரிகடுகு | சம அளவு |
| வசம்பு | |
| வெள்ளுள்ளி | |
| இருசீரகம் | |
| ஓமம் | |
| இந்துப்பு | |
| சீனக்காரம் | |
| துத்தம் | |
| துரிசு | |
| கந்தகம் | |
| அரப்பொடி | |
| கல்லுப்பு | |
| திரிபலை | |

இவற்றைச் சம அளவாகச் சேர்த்துக் கொள்ளவும். துத்தம், துரிசு, கந்தகம் மூன்றையும் சுத்தி செய்து எல்லாவற்றையும் பொடியாகச் செய்து நார்த்தங்காயிலும், பேய்க் கொம்மட்டிக்காயிலும் திணிக்கவும். பின்னர் உலர்த்தி நன்றாகப் பொடியாகச் செய்து கொள்ளவும்.

காலம் - 10 நாட்கள்
தீரும் நோய்கள் - எரிகுன்மம், வலிகுன்மம், வாய்வு குன்மம், அகுவை, பீலிகை, வெப்புப்பாவை, மகோதரம், பெருவயிறு.

## சத்தியெடுத்து அரோசகத்திற்குச் சூரணம்

| | | | |
|---|---|---|---|
| சுக்கு | - | 2 கழஞ்சு | (8.8 கிராம்) |
| மிளகு | - | 3 கழஞ்சு | (13.2 கிராம்) |
| திப்பிலி | - | 5 கழஞ்சு | (22.0 கிராம்) |
| கூகைநீறு | - | 6 கழஞ்சு | (26.4 கிராம்) |
| ஏலம் | - | ½ கழஞ்சு | (2.20 கிராம்) |
| இலவங்கப்பட்டை | - | ½ கழஞ்சு | (2.20 கிராம்) |
| தாளிசபத்திரி | - | 1 கழஞ்சு | (4.4 கிராம்) |
| வங்காளச்சீனி | - | 18 கழஞ்சு | (79.2 கிராம்) |

இவற்றை நன்றாகப் பொடியாக்கிச் சீனியில் விரவி யுண்ணவும்.
காலம் - காலை, மாலை
தீரும் நோய் - சத்தியெடுத்து அரோசிக்கிறது

## சத்தியெடுத்து அரோசிக்கிறதிற்குச் சூரணம் (வேறு)

| | | |
|---|---|---|
| ஏலம் | - | 2 பலம்(70 கிராம்) |
| சீரகம் | - | 1 பலம் (35 கிராம்) |
| பருத்திக்கொட்டைப் பருப்பு | - | 2 பலம்(70 கிராம்) |
| மயிலிறகு சுட்ட சாம்பல் | - | 2 பலம்(70 கிராம்) |

இவை எல்லாவற்றையும் சூரணமாகச் செய்து கொள்ளவும்.
அனுபானம் - தேன்
தீரும் நோய்கள் - சத்தி, வாந்தி, விக்கல், அரோசிகம்

## சத்தி விக்கலுக்குச் சூரணம்

வாரீ ரிஞ்சி ஒருகழஞ்சு வறுத்த திப்பிலி இருகழஞ்சு
சீராய்ப் பச்சைக் கற்பூரம் சிறக்கத் தேடோர் பணவெடையும்
நேரா யரைத்துத் தேனிலிட நில்லா சத்தி விக்கலெல்லாம்
ஊரோ றறியப் போமென்றே உரைத்தார் முனியும் உலகோர்க்கே

(பொருள்)

| | | |
|---|---|---|
| இஞ்சி | - | 1 கழஞ்சு (4.4 கிராம்) |
| திப்பிலி | - | 2 கழஞ்சு (8.8 கிராம்) |
| பச்சைக் கற்பூரம் | - | 1 பணவெடை (488 மி.கிராம்) |

இவற்றை ஒன்றாய்ச் சேர்த்து அரைத்து வைத்துக் கொள்ள வேண்டும்.
அளவு - கூறப்படவில்லை
அனுபானம் - தேன்
தீரும் நோய்கள்- வாந்தி, விக்கல்

## சக்தி, விக்கல், பழகின சுரத்திற்குச் சூரணம்

சந்தனம்
செருப்படிவேர்
முத்தக்காசு
வெட்பாலையரிசி
அதிமதுரம்
} சம அளவு

இவற்றைப் பொடி செய்து, மெல்லிய துணியில் சலித்து வைத்துக் கொள்ளவும்.

அளவு - 1 கழஞ்சு (4.4 கிராம்)
அனுபானம் - தேன்
தீரும் நோய் - சத்தி, விக்கல், பழகின சுரம்

## சர்வ மூலத்திற்குச் சூரணம்

| | | |
|---|---|---|
| சுக்கு | - | 1 பலம் (35 கிராம்) |
| மிளகு | - | ” ” |
| திப்பிலி | - | ” ” |
| கடுக்காய் | - | ” ” |
| நெல்லி | - | ” ” |
| தான்றி | - | ” ” |
| நற்சீரகம் | - | ” ” |
| கருஞ்சீரகம் | - | ” ” |
| கடுகு | - | ” ” |
| வெந்தயம் | - | ” ” |
| வெட்பாலையரிசி | - | ” ” |
| வாய்விளங்கம் | - | ” ” |
| கோட்டம் | - | ” ” |
| அதிமதுரம் | - | ” ” |
| இந்துப்பு | - | ” ” |
| பொட்டிலுப்பு | - | ” ” |
| வளையலுப்பு | - | ” ” |
| சவுக்காரம் | - | 1 பலம் (35 கிராம்) |
| எவச்சாரம் | - | ” ” |
| நவச்சாரம் | - | ” ” |
| சத்திச்சாரம் | - | ” ” |
| கடுகுரோகணி | - | ” ” |
| திப்பிலி மூலம் | - | ” ” |
| சித்திர மூலம் | - | ” ” |
| செவ்வியம் | - | ” ” |
| குளவிந்தமஞ்சள் | - | ” ” |
| சாரணைவேர் | - | ” ” |
| ஆயில்பட்டை | - | ” ” |
| பிரண்டைவேர் | - | ” ” |
| புளிநரளைக்கிழங்கு | - | ” ” |
| காட்டுக்கருணைக் கிழங்கு | - | ” ” |

| | | |
|---|---|---|
| கறிக்கருணைக் கிழங்கு | - | ” ” |
| பெருங்காயம் | - | ¼ பலம் (8.75 கிராம்) |
| ஊசிகாந்தம் | - | ” ” |
| பறங்கிப்பட்டை | - | 6 பலம் (210 கிராம்) |

இவற்றையெல்லாம் உலர்த்தி இடித்து, மெல்லிய துணியில் சலித்துக் கொள்ளவும்.

காலம் - காலை, மாலை
அனுபானம் - தேன்
தீரும் நோய் - மூலம்

## சர்வ வாய்விற்குச் சூரணம்

| | | |
|---|---|---|
| தூதுவளை வேர் | - | 2 பங்கு |
| மிளகு | - | ” |
| இந்துப்பு | - | ” |
| தான்றிக்காய் | - | ” |
| கிராம்பு | - | ” |
| இருசீரகம் | - | ” |
| ஏலம் | - | ” |
| திப்பிலி | - | ” |
| நெல்லிமுள்ளி | - | ” |
| கொந்தளங்காய் | - | ” |
| மதுரம் | - | 2 பங்கு |
| சுக்கு | - | 25 பங்கு |
| சுத்தி செய்த சிவதை | - | 25 பங்கு |
| வெள்ளைச்சாரணை | - | 25 பங்கு |

இவற்றையெல்லாம் சேர்த்து நன்றாகப் பொடியாக்கி, மெல்லிய துணியில் சலித்து வைத்துக் கொள்ளவும்.

அளவு - 1 வெருகடி (1 சிட்டிகை அளவு)
னுபானம் - தேன், சீனி
தீரும் நோய்கள்- சர்வ வாய்வு, சர்வ பித்தம், சர்வ சிலேற்பனம்.

## சலக் கழிச்சலுக்கு மருந்து

மனிதர் தலைஓடு கொண்டு வந்து பொடி செய்து கொள்ளவும்.

அனுபானம் - எருமை வெண்ணெய்
தீரும் நோய் - சலக்கழிச்சல்

## சலக் கழிச்சலுக்கு மருந்து (வேறு)

பெருநெட்டியைக் கொண்டு வந்து சிறிது சிறிதாகச் சீவி, சட்டியில் போட்டுக் கருகும் வரை வறுக்கவும். பின்னர், நன்றாகப் பொடி செய்து கொள்ளவும்.

அனுபானம் - தேன்
தீரும் நோய் - 10 வகையான சலக் கழிச்சல்.

## சலக்கழிச்சலுக்கு மருந்து (வேறு)

அத்திப் பழத்தை வறுத்துக் கொள்ளவும். பின்னர் இடித்துப் பொடியாக்கிக் கொள்ளவும்.

அனுபானம் - மோர் உழக்கு (336 மி.லிட்.)
காலம் - 7 நாட்கள்
தீரும் நோய் - சலக்கழிச்சல்

## சன்னிக்குச் சூரணம்

| | |
|---|---|
| கஞ்சாங்கோரை | - 1 பிடி |
| சித்தரத்தை | - 1 ” |
| பேரரத்தை | - 1 ” |
| சினக்காரம் | - 1 ” |
| நவச்சாரம் | - 1 ” |
| திப்பிலி | - 1 ” |
| திப்பிலிமூலம் | - 1 ” |
| கடுகுரோகணி | - 1 ” |
| ஓமம் | - 1 ” |
| பெருங்காயம் | - 1 ” |
| செவ்வியம் | - 1 ” |

இவற்றை நன்றாகப் பொடித்துக் கொள்ளவும்.
தீரும் நோய் - சன்னி

## சிங்காதிச் சூரணம்

| | |
|---|---|
| சுக்கு | - 1 காசெடை (ஒரு பைசா அளவு) |
| மிளகு | - 1 ” ” |
| திப்பிலி | - 1 ” ” |
| சிறுதேக்கு | - 1 ” ” |
| சடாமாஞ்சில் | - 1 ” ” |
| கற்கடகசிங்கி | - 1 ” ” |
| செங்கழுநீர் | - 1 ” ” |

| | | | |
|---|---|---|---|
| கோட்டம் | - 1 | ” | ” |
| நெல்லிப்பருப்பு | - 1 | ” | ” |
| கடுக்காய் | - 1 | ” | ” |
| தான்றிக்காய் | - 1 | ” | ” |
| இந்துப்பு | - 1 | ” | ” |
| கண்டங்கத்தரிவேர் | - 1 | ” | ” |
| தூதுவளை வேர் | - 1 | ” | ” |
| சிறுவழுதளைவேர் | - 1 | ” | ” |
| ஆடாதொடைவேர் | - 1 | ” | ” |

இவற்றை இளம் சூட்டில் வறுத்துப் பொடியாக்கிக் கொள்ளவும்.

அளவு - 1 வெருகடி (1 சிட்டிகை அளவு)

அனுபானம் - தேன்

தீரும் நோய்கள்- உளமாந்தை, இருமல், காசம், சுவாசம்.

## சுவாசத்திற்கு மருந்து

| | |
|---|---|
| அழிஞ்சில்விரை | 5 வராகன் (17.5 கிராம்) |
| மிளகின்பழம் | 3 வராகன் (10.5 கிராம்) |

இரண்டையும் நன்றாகப் பொடி செய்து கொள்ளவும்.

அளவு - ½ வராகன் (1.75 கிராம் )

அனுபானம் - தேன்

தீரும் நோய்கள் - சுவாசம்

## செரியாக் கழிச்சலுக்குச் சூரணம்

சுக்கு மேல் புறணி சீவி, உப்பு அரைத்துப் பொதிந்து நெருப்பில் பதமாகச் சுடவும். திப்பிலியையும் இவ்வாறு சுடவும். கழற்சிப் பருப்பையும் சுடவும். சட்டியில் உப்பை வறுத்துவிட்டு அதில் ஓமத்தைப் போட்டுப் பதமாக வறுக்கவும். இவை அனைத்திற்கும் சம அளவில் வெள்வெங்காயத்தைப் போட்டு தூள் செய்து கொள்ளவும்.

அனுபானம் - வெந்நீர்

தீரும் நோய் - செரியாமை, கழிச்சல்

## தாளிசபத்திரி சூரணம்

| | | |
|---|---|---|
| தாளிசபத்திரி | - | 1 பலம் (35 கிராம்) |
| கொடிவேலி | - | 1 பலம் ” |
| சீரகம் | - | 1 பலம் ” |

| | | |
|---|---|---|
| மிளகு | - | 1 பலம் " |
| திப்பிலி | - | 2 பலம் (70 கிராம்) |
| சுக்கு | - | 2 பலம் " |
| ஏலம் | - | ½ பலம் (17.5 கிராம்) |
| இலவங்கப்பத்திரி | - | ½ பலம் (17.5 கிராம்) |
| சிறுநாகப்பூ | - | ½ பலம் (17.5 கிராம்) |
| கிராம்பு | - | ½ பலம் (17.5 கிராம்) |
| சாதிக்காய் | - | ½ பலம் (17.5 கிராம்) |
| சாதிப்பத்திரி | - | ½ பலம் (17.5 கிராம்) |
| கடுக்காய் | - | 1 பலம் (35 கிராம்) |

இவற்றை நன்றாகப் பொடி செய்து கொள்ளவும்.

அளவு - 4 காசெடை (4 பைசா அளவு)

அனுபானம் - சர்க்கரை 8 காசெடை (8 பைசா அளவு)

பத்தியம் - வாழைக்கச்சல், வாழைப்பூ, அத்திப்பிஞ்சு, பசுவின்பால் கூட்டவும். மாமிசம் உண்பவர்களாக இருப்பவர்களுக்கு வரால் கருவாடு, குறவைக் கருவாடு, வெள்ளாட்டு உப்புக்கண்டம் சேர்க்கலாம்.

தீரும் நோய் - சுரம், சளி

## தாளிசபத்திரி சூரணம் (வேறு)

| | | |
|---|---|---|
| திப்பிலி | - | 4 வராகன் (14 கிராம்) |
| சுக்கு | - | 3 வராகன் (10.5 கிராம்) |
| மிளகு | - | 2 வராகன் (7 கிராம்) |
| தாளிசப்பத்திரி | - | 2 வராகன் (7 கிராம்) |
| இலவங்கப்பட்டை | - | ½ வராகன் (1.75 கிராம்) |
| சாதிப்பத்திரி | - | ½ வராகன் (1.75 கிராம்) |
| நாகேசுவரம் | - | ½ வராகன் (1.75 கிராம்) |
| ஏலம் | - | ½ வராகன் (1.75 கிராம்) |
| கிராம்பு | - | ½ வராகன் (1.75 கிராம்) |
| தூம்பராட்சகம் | - | 1 வராகன் (3.50 கிராம்) |
| சித்திரமூலம் | - | 2 வராகன் (7 கிராம்) |
| வாய்விளங்கம் | - | 1 வராகன் (3.50 கிராம்) |

இவற்றையெல்லாம் நன்றாகப் பொடி செய்து கொள்ளவும்.

அனுபானம் - சர்க்கரை (காலையில்)
தேன் (மாலையில்)
இரவில் உணவிற்குப் பின்னர், சுக்கு, திப்பிலி, கஷாயமிட்டுக் குடிக்கவும்

தீரும் நோய் - காய்ச்சல்

## தாளிசபத்திரி சூரணம் (வேறு)

| | | |
|---|---|---|
| தாளிசபத்திரி | - | 1 வராகன் (3.5 கிராம்) |
| சுக்கு | - | 2 வராகன் (7 கிராம்) |
| மிளகு | - | 3 வராகன் (10.5 கிராம்) |
| திப்பிலி | - | 3 வராகன் (10.5 கிராம்) |
| கிராம்பு | - | 1 வராகன் (3.5 கிராம்) |
| சன்னலவங்கப்பட்டை | - | 1 வராகன் (3.5 கிராம்) |
| ஏலம் | - | 3 வராகன் (10.5 கிராம்) |
| இலவங்கப்பத்திரி | - | 3 வராகன் (10.5 கிராம்) |
| கூகைநீறு | - | 5 வராகன் (17.5 கிராம்) |
| சர்க்கரை | - | 2 பலம் (35 கிராம்) |

இவற்றை நன்றாகப் பொடியாக்கிக் கொள்ளவும்.

அளவு - 10 கிராம்

தீரும் நோய் - பித்த வாய்வு

## திப்பிலியாதிச் சூரணம்

| | | |
|---|---|---|
| திப்பிலி | - | 1 பலம் (35 கிராம்) |
| சீனி | - | 1 பலம் (35 கிராம்) |
| சாதிபத்திரி | - | 2 வராகன் (7 கிராம்) |
| ஓமம் | - | 1 பலம் (35 கிராம்) |
| இந்துப்பு | - | 2 வராகன் (7 கிராம்) |
| வாய்விளங்கம் | - | 5 வராகன் (17.5 கிராம்) |
| வெட்பாலையரிசி | - | 5 வராகன் (17.5 கிராம்) |
| சவுக்காரம் | - | 5 வராகன் (17.5 கிராம்) |
| அதிமதுரம் | - | 5 வராகன் (17.5 கிராம்) |
| சதகுப்பை | - | 5 வராகன் (17.5 கிராம்) |
| சீரகம் | - | 1 வராகன் (35 கிராம்) |
| மிளகு | - | 1 வராகன் (35 கிராம்) |
| கருஞ்சீரகம் | - | 1 வராகன் (35 கிராம்) |
| சுக்கு | - | 1 வராகன் (35 கிராம்) |

| | | |
|---|---|---|
| கிராம்பு | - | 2 வராகன் (7 கிராம்) |
| வெடியுப்பு | - | 2 வராகன் (7 கிராம்) |
| வளையலுப்பு | - | 2 வராகன் (7 கிராம்) |
| கொத்துமல்லி | - | 5 வராகன் (17.5 கிராம்) |
| இலவங்கப்பத்திரி | - | 3 வராகன் (10.5 கிராம்) |
| செவ்வியம் | - | 5 வராகன் (17.5 கிராம்) |
| வால்மிளகு | - | 5 வராகன் (17.5 கிராம்) |
| கோட்டம் | - | 3 வராகன் (10.5 கிராம்) |
| அக்கிராக்காரம் | - | 2 வராகன் (7 கிராம்) |
| சிறுதேக்கு | - | 3 வராகன் (10.5 கிராம்) |

இவற்றைச் சிவக்க வறுத்தெடுத்துக் கொள்ளவும். பின்னர், நன்றாகப் பொடியாக்கிக் கொண்டு சீனி சேர்க்கவும்.

அனுபானம் - தேன்
பத்தியம் - கைப்பு, புளிப்பு தவிரவும்.
தீரும் நோய்கள்- உள் மூலம், திடுக்குப்பயம், அட்டகுன்மம், வாய்வு.

## திரிகடுகாதி சூரணம்

திரிகடுகு
திரிபலை
கொடிவேலி வேர்
இருசீரகம்
செவ்வியம்
குரோசானி ஓமம்
சிற்றாமுட்டிவேர்
மஞ்சள்
சிறுதேக்கு
சாரணைவேர்
திப்பிலி மூலம்
ஏலம்
வெள்ளுள்ளி
வெண்காரம்
எவச்சாரம்
ஓமம்
கற்கடசிங்கி
அஞ்சுப்பு
விழலரிசி
முக்காவேளை வேர்

கிராம்பு
கொத்துமல்லி
கண்டங்கத்தரிவேர்

இவற்றைச் சம அளவு எடுத்து, நன்றாகப் பொடி செய்து கொள்ள வேண்டும்.

அளவு - வெருகடி (ஒரு சிட்டிகை அளவு)
தீரும் நோய் - மந்தம், சத்தி, அரோசிகம், அட்டகுன்மம்

## தீபாக்கினிச் சூரணம்

பஞ்ச லவணத்துடன் நவச்சாரம் எவச்சாரம்
பகரும்வகைக் கோர்கழஞ்சாய்
பாங்கான சுக்குடன் சிறுதேக்குச் செவ்வியம்
பரவுதிப் பிலிமூலம்

செஞ்சொல் புனைதிப்பிலி வட்டத் திருப்பியும்
திகழ்ஓம மிளகுடனே
சீரான வகைதனில் ஒருபலம் கூட்டியே
சேரநன் றாய்கலந்து

விளங்குஞ் சித்திரமூலம் பாதியும் முன்னே
விளங்குமருந் துபாதியாய்
மேன்மையுடன் இவையெல்லாம் வறுத்திடித் தேபொடி
மெய்யுடன் அசனந்தன்னில்

அஞ்சாமல் வெருகடி சூரணம் கொண்டிட
அடர்வாய்வு குன்மமுதலாய்
அகன்றிடு மென்னவே தீபாக்கினிச் சூரணம்
ஆய்ந்துரைக் கின்றவாறே

(பொருள்)

பஞ்சலவணம் (கறியுப்பு, இந்துப்பு, வளையலுப்பு, கல்லுப்பு, வெடியுப்பு), நவச்சாரம், எவச்சாரம் - வகைக்கு 1 கழஞ்சு (4.4 கிராம்)

சுக்கு, சிறுதேக்கு - வகைக்கு 1 பலம் (35 கிராம்)

செவ்வியம்
திப்பிலி மூலம்
திப்பிலி
வட்டத்திருப்பி
ஓமம்
மிளகு
} வகைக்கு 1 பலம் (35 கிராம்)

கொடிவேலி - 2 பலம் (140 கிராம்)

இவற்றை வறுத்து இடித்துச் சலித்துப் பொடி செய்து வைத்துக்கொள்ள வேண்டும்.

அளவு - வெருகடியளவு சோற்றுடன் கலந்து உண்ண வேண்டும்.
தீரும் நோய்கள் - வாய்வு, குன்மம், என்னும் வயிற்று நோய்

## தோல் விடத்திற்குச் சூரணம்

பெருவாகை பெருங்குமிழ் பாதிரி
தெரிய கூவிளை நேர்முன்னை உள்ளியும்
பரிய சுக்கும் பஞ்சதா வேரியும்
சோருஞ் சீந்திலும் தோல்விஷம் கொல்லுமே.

(பொருள்) இதில் தோல் விடத்திற்கு மாற்றுக் கூறப்படுகிறது.

பெருவாகை
பெருங்குமிழ்
பாதிரி
வில்வம்
முன்னை
உள்ளிப்பூண்டு
சுக்கு
தண்ணீர்விட்டான் கிழங்கு
சீந்தில்
} சம அளவு

இவற்றை இடித்துச் சூரணம் செய்து கொள்ளவும்.
தீரும் நோய் - தோல் விடத்தை நீக்கும்.

## நல்லவகைச் சூரணம்

இன்னம் நெல்லி கடுதன்றி இனிய கோட்ட மதிமதுரம்
வன்ன சுக்கு சடமாஞ்சில் வழங்கும் கண்டங் கத்தரிவேர்

சின்ன திப்பிலி சிறுதேக்கு சேரு மிந்து இவைசமனாய்
மின்ன வறுத்துப் பொடியாக்கி விரும்பும் வெருக்கடி தேனிஞ்சி

சாற்றனில் கொள்ள காச சிலேட்டும் மீளை வியர்வை
பார்த்திடும் இருமல் விக்கல் பறந்திடும் சுரங்கள் வெப்பு
வார்த்தையில் இளைப்பு சோபம் வறண்டுடல் உலர்தல் சேர
சேர்ந்துவிட் டோடும் என்று தொகுத்தனர் முனிவர் தானே

(பொருள்)

நெல்லி, கடுக்காய், தான்றிக்காய், கோட்டம், அதிமதுரம், சுக்கு, சடாமாஞ்சில், கண்டங்கத்தரிவேர், திப்பிலி, சிறுதேக்கு, இந்துப்பு } சம எடை

சேர்த்து வறுத்துப் பொடி செய்து வைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு - வெருகடி (ஒரு சிட்டிகை அளவு)
அனுபானம் - தேன், இஞ்சிச்சாறு
தீரும் நோய்கள்- காசம், சிலேத்துமம், ஈளை, வியர்வை, இருமல், விக்கல், சுரங்கள், இளைப்பு, சோபம், உடல் வறண்டு உலர்தல்.

## நில ஆவாரைச் சூரணம்

இதில் நில ஆவாரைச் சூரணம் கூறப்படுகிறது.

| | | |
|---|---|---|
| ஓமம் | - | ஒரு பிடி |
| சுக்கு | - | 5 வராகன் (17.5 கிராம்) |
| திப்பிலி | - | 5 வராகன் (17.5 கிராம்) |
| பஞ்சலவணம் | - | 40 வராகன் (140 கிராம்) |
| பெருங்காயம் | - | 10 வராகன் (35 கிராம்) |

இவற்றையெல்லாம் பொடி. செய்து கொள்ளவும். இந்தப் பொடி ஒரு பங்கும் நிலவாகைப் பொடி இரண்டு பங்கும் கலந்து வைத்துக் கொள்ளவும்.

அளவு - வெருகடி
அனுபானம் - வெந்நீர்
தீரும் நோய் - சர்வ வாய்வு

## நீரருகலுக்கு மருந்து

வெண்காரம்
வெடியுப்பு
சீனாக்காரம்
இந்துப்பு
} சம அளவு

இந்த நான்கிற்குச் சமஅளவு சிலாசத்து சேர்த்துக் கொண்டு நன்றாகப் பொடி செய்து கொள்ளவும். அரைத்த பொடியை அகலில் இட்டு மேலே மூடி, சீலைமண் செய்து வைத்து 10 வரட்டியில் புடம்போட்டு எடுத்து, பொடியாக்கிக் கொள்ளவும்.

அனுபானம் - கற்கண்டு, சீரகம், அதிமதுரம் பொடி செய்து பசுவின் நெய்யில் குழைத்துக் கொடுக்கவும்.
காலம் - இருபது நாட்கள்
அனுபானம் - கல்கண்டு அல்லது பச்சைக் கற்பூரம்
தீரும் நோய் - நீர்கட்டு, நீரருகல்

## நீர்க்கட்டுக்கு மருந்து

சீனாக்காரத்தைப் பொரித்துப் பொடியாக்கிக் கொள்ள வேண்டும்.

அனுபானம் - சிறுபூளைக் குடிநீர்
தீரும் நோய் - நீர்க்கட்டு
(வெடியுப்புத் தண்ணீரில் துடைமட்டும் கழுவவும் நீர்க்கட்டுவிடும்)

## நீரிழிவுக்குச் சூரணம்

**ஆவாரைக் கொன்றை நாவல் அலைகட லமிர்தம் கோட்டம்**
**மேவிய மருதத் தோலும் விரைந்துடன் ஒக்கக் கொண்டு**

**பூவிரி[1] குழலி னாளே பொருந்தவே தன்னை யுண்ண[2]**
**காவிரி நீரும்[3] வற்றி கடல்களும் சுவரும்[4] தானே.**

(பொருள்)

| | |
|---|---|
| ஆவாரை<br>கொன்றை<br>நாவல்<br>கடலழிஞ்சில்<br>கடுக்காய்<br>கோட்டம்<br>மருதத்தோல் | சம எடை |

இவற்றைப் பொடித்துச் சூரணித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

தீரும் நோய் - நீரிழிவு

## பாடவேறுபாடு

1. பூவிரும்
2. பொருத்தநீர் தன்னி லுண்ண
3. ஆறும்
4. வற்றும்

## நீரிழிவிற்குச் சூரணம் (வேறு)

| | |
|---|---|
| வெள்ளைக் குங்கிலியம் | - 7 பலம் (245 கிராம்) |
| சர்க்கரை | - 7 பலம் (245 கிராம்) |

இவற்றைப் பொடியாக்கி வைத்துக் கொள்ளவும்.

அளவு - 1 பலம் (35 கிராம்)

அனுபானம் - நல்லெண்ணெய் ½ பலம் (17.5 கிராம்)

காலம் - காலை, மாலை 7 நாட்கள்

பத்தியம் - கவிச்சு, புளிப்பு தவிரவும். பசுவின்பால், புண்ணாக்கு, துவரம் பருப்பு, வாழைக்காய், மிளகு கூட்டவும். சிறிதளவு உப்பு கூட்டவும். 7 நாட்கள் பத்தியமிருக்கவும்.

## நீல காசத்திற்கும், பித்த காசத்திற்கும் புகைச்சலிற்கும் சூரணம்

சீனாக்காரம் ஒரு கழஞ்சு (4.4 கிராம்) எடுத்துக் கொண்டு, சுடுகாட்டில் வெந்த தலையோடு 3 கழஞ்சு (13.2

கிராம்) இவற்றைப் பொடி செய்து மாட்டின் கொம்பினாலான சிமிளில் அடைத்து போடவும்.
தீரும் நோய்கள் - நீலகாசம், பித்தகாசம், புகைச்சல்

## நீல காசத்திற்கும் பித்த காசத்திற்கும் புகைச்சலிற்கும் பொடி (வேறு)

சீனக்காரம் - 1 கழஞ்சு
பொன்னரிதாரம் - சிறுபயறளவு

இவற்றை நன்றாகப் பொடி செய்து கொள்ளவும். சிறுபயறளவு கண்ணில் போடவும்.
தீரும் நோய்கள்- நீலகாசம், பித்தகாசம், புகைச்சல்

## பஞ்சலவணச் சூரணம்

| | |
|---|---|
| பஞ்சலவணம் | - 1 பலம் (35 கிராம்) |
| ஓமம் | - 1 பலம் (35 கிராம்) |
| திப்பிலி | - 1 பலம் (35 கிராம்) |
| கடுக்காய் | - 1 பலம் (35 கிராம்) |
| கொடிவேலிவேர் | - 1 பலம் (35 கிராம்) |
| சுக்கு | - 1 பலம் (35 கிராம்) |
| பெருங்காயம் | - 1 பலம் (35 கிராம்) |
| வாய்விளங்கம் | - 1 பலம் (35 கிராம்) |

அளவு - வெருகடி தூள் (ஒரு சிட்டிகையளவு)
தீரும் நோய்கள்- வாய்வு, வாதங்கள், வாந்தி, பிரமேகம், விசூழி, காமாலை பாண்டு நீங்கும். பசிதாகம் உண்டாகும்.

## பஞ்சாக்கினி சூரணம்

| | | |
|---|---|---|
| இந்துப்பு | - | ½ பலம் (17.5 கிராம்) |
| வெடியுப்பு | - | ½ பலம் (17.5 கிராம்) |
| கல்லுப்பு | - | ½ பலம் (17.5 கிராம்) |
| வளையலுப்பு | - | ½ பலம் (17.5 கிராம்) |
| நல்ல உப்பு | - | ½ பலம் (17.5 கிராம்) |
| சுக்கு | - | 1 கழஞ்சு (4.4 கிராம்) |
| மிளகு | - | 1 கழஞ்சு (4.4 கிராம்) |
| திப்பிலி | - | 1 கழஞ்சு (4.4 கிராம்) |

இவற்றை இளம் சூட்டில் வறுத்துத் தூளாக்கிக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | 1 கழஞ்சு (4.4 கிராம்) |
| அனுபானம் | - | பசுவின் நெய் |
| தீரும் நோய்கள் | - | உள்மூலம், புறமூலம் |

## பறங்கிப்பட்டைச் சூரணம்

| | | | |
|---|---|---|---|
| பறங்கிப்பட்டை | - | 10 பலம் (350 கிராம்) | |
| சாதிக்காய் | - | 2½ வராகன் (8.75 கிராம்) | |
| சாதிப்பத்திரி | - | 2½ | " " |
| கிராம்பு | - | 2½ | " " |
| சுக்கு | - | 2½ | " " |
| மிளகு | - | 2½ | " " |
| திப்பிலி | - | 2½ | " " |
| கருஞ்சீரகம் | - | 2½ | " " |
| வாய்விளங்கம் | - | 2½ | " " |
| அமுக்கிரா | - | 2½ | " " |
| ஆயில்பட்டை | - | 2½ | " " |
| செங்கத்தாரிப் பட்டை | - | 2½ | " " |
| ஓமம் | - | 2½ | " " |
| நில ஆவாரை | - | 2½ | " " |
| குரோசானி ஓமம் | - | 2½ | " " |
| சங்கு | - | 2½ | " " |
| வெள்ளருகு | - | 2½ | " " |
| பிரப்பங்கிழங்கு | - | 2½ | " " |

இவை எல்லாவற்றையும் சேர்த்து நன்றாகத் தூளாக்கிக் கொள்ளவும்.

தீரும் நோய் - வாதம், சூலை, கிரந்தி

## பறங்கிப்பட்டைச் சூரணம் வேறு

| | | |
|---|---|---|
| பறங்கிப்பட்டை | - | 4 பலம் (140 கிராம்) |
| சாதிக்காய் | - | ¼ " (8.75 " ) |
| சாதிப்பத்திரி | - | ¼ " (8.75 " ) |
| கிராம்பு | - | ¼ " (8.75 " ) |
| தாளிசபத்திரி | - | ¼ " (8.75 " ) |
| சித்திரமூலம் | - | 1 பலம் (35 கிராம்) |
| குரோசானி ஓமம் | - | 1 " " |
| ஓமம் | - | 1 " " |
| வெள்ளருகு | - | 1 " " |

| | | | | |
|---|---|---|---|---|
| சுக்கு | - | 1 | ” | ” |
| மிளகு | - | 1 | ” | ” |
| திப்பிலி | - | ½ | ” | (17.5 கிராம்) |
| திப்பிலி மூலம் | - | ½ | ” | ” |

இவற்றை எல்லாவற்றையும் இரண்டு நாள் சூரியப்புடத்தில் வைத்து இடித்துத் தூளாக்கிக் கொள்ளவும். பின்னர், மெல்லிய துணியில் போட்டு, சலித்து எடுத்துக் கொள்ளவும்.

அனுபானம் - தேன்

தீரும் நோய்கள் - வாதம், வாதக்கடுப்பு, வாதசூலை, மண்டை வியாதி, கிரந்தி, பிரமியம், கடிகை, மேகம், கபால சூலை

## பறங்கிப்பட்டைச் சூரணம் வேறு

| | | |
|---|---|---|
| சீனிப்பட்டை | - | 5 பலம் (175 கிராம்) |
| நற்சீரகம் | - | ½ பலம் (17.5 கிராம்) |
| சுக்கு | - | ½ ” ” |
| வாய்விளங்கம் | - | ½ ” ” |
| திப்பிலி | - | ½ ” ” |
| கிராம்பு | - | ¼ பலம் (8.75 கிராம்) |
| செங்கத்தாரிப்பட்டை | - | ½ பலம் (17.5 மி. கிராம்) |
| கறிமுள்ளி வேர் | - | ½ ” ” |
| வெள்ளருகு | - | ½ ” ” |

இவற்றை இடித்துத் தூளாக்கி, பின்னர்ப் பற்பமாகச் செய்து கொள்ளவும். நான்கு நாழி (5.2 லிட்.) நீர்விட்டு உரியாகக் (1.3 லிட்.) காய்ச்சி 8 நாள் கொள்ளவும். காய்ச்சிய அம் மருந்தைத் தினமும் எடுத்து உலர்த்திக் கொண்டு எட்டு நாள் அரிசியைச் சேர்த்து அடையாகச் செய்து உண்ணவும். இதுதவிர இந்தச் சூரணத்தைக் கருங்கோழியின் வயிற்றில் வைத்துத் தைத்து ஒரு பானையில் சதுரக்கள்ளியை நீர்விட்டுப் பிசறி, வேடுகட்டிக் கொள்ளவும். வேட்டின்மீது கோழியை வைத்து மூடி மண் செய்து எரித்துக் கோழியையும், மருந்தையும் உலர்த்திப் பற்பமாகச் செய்து கொள்ளவும்.

அனுபானம் - தேன் அல்லது சாராயம் அல்லது எண்ணெய்

தீரும் நோய்கள்- புண், சூலை தசவாய்வு, கிரந்தி

## பாரிச வாய்வுக்கு மருந்து

| | | |
|---|---|---|
| வெள்வெங்காயம் | - | 6 பலம் (210 கிராம்) |
| மிளகு | - | 6 பலம் (210 கிராம்) |

| | | |
|---|---|---|
| ஓமம் | - | 3 பலம் (105 கிராம்) |
| சேங்கொட்டை | - | 42 |
| எள் | - | 1 படி (2.65 லிட்.) |
| வெல்லம் | - | 6 பலம் (210 கிராம்) |

இவற்றில் வெல்லத்தைத் தவிர மற்ற மருந்துகளைப் போட்டு இடித்துக் கொண்டு, பின்னர் வெல்லத்தைப் போட்டு இடித்துக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | எலுமிச்சங்காயளவு |
| காலம் | - | 25 நாட்கள் (காலை, மாலை) |
| பத்தியம் | - | இளங்கீரை, முருங்கைப் பிஞ்சு, முருங்கைக்கீரை, அவரைக்காய் |

## பித்த பைத்தியம், வாய்விற்குச் சூரணம்

| | | |
|---|---|---|
| சதகுப்பை | - | 6 கழஞ்சு (26.4 கிராம்) |
| நற்சீரகம் | - | 6 கழஞ்சு (26.4 கிராம்) |
| சன்னகாரை | - | 6 கழஞ்சு (26.4 கிராம்) |
| ஏலம் | - | 6 கழஞ்சு (26.4 கிராம்) |
| இலவங்கப்பட்டை | - | 6 கழஞ்சு (26.4 கிராம்) |
| அதிமதுரம் | - | 6 கழஞ்சு (26.4 கிராம்) |
| கொத்துமல்லி | - | 6 கழஞ்சு (26.4 கிராம்) |
| மகிழ்விரை | - | 6 கழஞ்சு (26.4 கிராம்) |
| சீனி | - | 30 கழஞ்சு (132 கிராம்) |
| கற்கண்டு | - | 30 கழஞ்சு (132 கிராம்) |

இவற்றை எல்லாம் சேர்த்து இடித்து வைத்துக் கொள்ளவும். மெல்லிய சீலைத் துணியில் சலித்து எடுத்துக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | 1 வெருகடி (ஒரு சிட்டிகையளவு) |
| அனுபானம் | - | வெந்நீர் |
| தீரும் நோய்கள் | - | பித்த பைத்தியம், வாய்வு |

## புன்னாகச் சூரணம்

முற்றிய சாரணை வேரைப் பிடுங்கிக் கழுவி, பொடியாக நறுக்கி, பசுவின் பாலில் வேக வைத்துக் கொள்ளவும். பின்னர் நிழலில் உலர்த்தித் தூளாகச் செய்து கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| அனுபானம் | - | சர்க்கரை, இந்துப்பு, நெய் கலவை |
| காலம் | - | காலை மாலை |
| பத்தியம் | - | இச்சாபத்தியம் |

தீரும் நோய் - மந்தாக்கினி, வாய்வு, மகோதரம், குட்டம் தாதுநட்டம்.

## பெருங்கழிச்சல், பொருமல் வலி, குடல்புரட்டல், மூலக்கிராணி இவைகளுக்கு மருந்து

சுக்கு
மிளகு
திப்பிலி
இந்துப்பு
விழலரிசி
பெருங்காயம்
நாய்வேளை
கழற்சிப் பருப்பு
சீரகம்
கருஞ்சீரகம்
கிராம்பு
கடுக்காய்
சாதிக்காய்
அசமதாகம்
கறிவேப்பிலை
} சம அளவு

இவற்றையெல்லாம் சமஅளவு எடுத்துக்கொண்டு, வறுத்துப் பொடி செய்து வைத்துக் கொள்ளவும்.

அளவு - வெருகடி (ஒரு சிட்டிகையளவு)
அனுபானம் - சாதம், நல்லெண்ணெய்
தீரும் நோய்கள் - பெருங்கழிச்சல், பொருமல்,வலி, குடல்பிரட்டல், மூலக்கிராணி

## பித்தத்திற்குச் சூரணம்

சீனாக்காரம்
திப்பிலி மூலம்
பேய்ப்புடல்

மூன்றையும் சமஅளவு சேர்த்து இடித்து, மெல்லிய துணியில் சலித்து வைத்துக் கொள்ளவும்.

அளவு - வெருகடி
அனுபானம் - வெந்நீர்
தீரும் நோய் - பித்தம்

## பைத்திய வாய்விற்குச் சூரணம்

திப்பிலி
திப்பிலி மூலம்
பேய்ப்புடல்
கொத்துமல்லி
மிளகு
சுக்கு
சீரகம்

இவற்றை சம அளவுச் சேர்த்துத் தூளாக்கி வைத்துக் கொள்ளவும்.

அளவு - வெருகடி
தீரும் நோய் - பைத்திய வாய்வு

## பைத்திய வாய்விற்கும் உஷ்ண வாய்விற்கும் மேகவரள் வாய்விற்கும் சூரணம்

| | | | | |
|---|---|---|---|---|
| தாளிசப்பத்திரி | - | 1 | வராகன் | (3.5 கிராம்) |
| சுக்கு | - | 2 | ” | (7 ”) |
| திப்பிலி | - | 4 | ” | (14 ”) |
| மிளகு | - | 3 | ” | (10.5 ”) |
| கிராம்பு | - | 2 | ” | (7 ”) |
| ஏலம் | - | 4 | ” | (14 ”) |
| சன்னலவங்கப்பட்டை | - | 3 | ” | (10.5 ”) |
| சாதிக்காய் | - | 3 | ” | (10.5 ”) |
| இலவங்கப்பத்திரி | - | 2 | ” | (7 ”) |
| சிறுநாகப்பூ | - | 3 | ” | (10.5 ”) |
| கூகைநீறு | - | 5 | ” | (17.5 ”) |
| சர்க்கரை | - | 6 | பலம் | (210 கிராம்) |

இவை எல்லாவற்றையும் சேர்த்து நன்றாக இடித்துக் கொள்ளவும்.

அளவு - வெருகடி
காலம் - 15 நாட்கள் காலை, மாலை
பத்தியம் - சுறாக் கருவாடு, திருக்கைக் கருவாடு, தோலிக் கருவாடு கூட்டவும்.
வாழைக்காய், முருங்கைக்காய், துவரம் பருப்பு, மிளகுநீர், உப்பு வறுத்தது இவையும் கூட்டலாம்.
வாய்வுக்காரர்களுக்குப் பசுவின் பாலைச் சேர்க்கவும்.

தீரும் நோய்கள் - பைத்திய வாய்வு, உஷ்ண வாய்வு,
மேகவரள் வாய்வு.

## மந்தபித்தச் சூரணம்

| | | | |
|---|---|---|---|
| இந்துப்பு | - | 1 வராகன் | (3.5 கிராம்) |
| சீரகம் | - | 2 " | (7 " ) |
| வசம்பு | - | 3 " | (10.5 " ) |
| திப்பிலி | - | 4 " | (14.0 " ) |
| சுக்கு | - | 5 " | (17.5 " ) |
| கடுக்காய் | - | 10 " | (35 " ) |

இவற்றை இளம்சூட்டில் வறுத்து எடுத்துக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | வெருகடி (ஒரு சிட்டிகையளவு) |
| அனுபானம் | - | வெந்நீர் |
| தீரும் நோய் | - | மந்த பித்தம் |

## மூலத்துக்கு அமிர்த சூரணம்

❖ காட்டுக் கருணை கறிக்கருணை காறும் பிரண்டை புளிநரளை
நாட்டில் சுக்கு வெருகுமருள் நல்ல கொடிவே லிமிளகு
ஓட்டிற் சேங்கொட்டைப் பெருங்காயம் உள்ளசீரக மிந்தவகை
சமனாய்க்
கூட்டித் தேனில் கொள்வீராய் குலாவு மூல மேகிடுமே

(பொருள்)

காட்டுக்கருணை
கருணை
பிரண்டை
புளிநரளை
சுக்கு
வெருகு
மருள்
கொடிவேலி
மிளகு
சேங்கொட்டை
பெருங்காயம்
சீரகம்

} சம எடை

எடுத்துப் பொடி செய்து வைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு - வெருகடி (இரண்டு விரல் அளவு)
அனுபானம் - தேன்
தீரும் நோய்கள்- மூலம்

## பாட வேறுபாடு

❖ காட்டுக் கருணை கறிக்கருணை காறும் வனத்துப்
பிரண்டைவேர்
நாட்டு மருளின் கிழங்கோடு வேலி சிவந்த நாயுருவி
கோட்டஞ் சிறிய தேக்கிலைகள் கூட்டிச் சமனாய்ப்
பொடிசெய்து
வாட்டும் வெந்நீர் தனில்வெருகி னடிதூள் கொள்ள மாறிடுமே

## மூலவாய்வு, உருத்திர விஷ வாய்வு, அந்திர வாய்வு, பக்க சூலை, வாதம், மலட்டுவலி, அண்டவாதம் இவைகளுக்கு மருந்து

| | | |
|---|---|---|
| சுட்ட இந்துப்பு | | |
| சுட்ட வெடியுப்பு | | |
| சுட்ட வளையலுப்பு | | 4 பலம் (140 கிராம்) |
| சுட்ட நல்ல உப்பு | | |
| சுட்ட கல்லுப்பு | | |
| சுக்கு | - | 2 பலம் (70 கிராம்) |
| மிளகு | - | 2 பலம் (70 கிராம்) |
| வாய்விளங்கம் | - | ¼ பலம் (8.75 கிராம்) |
| பெருங்காயம் | - | ½ பலம் (17.5 கிராம்) |

இவற்றைப் பொடி செய்து கொள்ளவும்.

அளவு - வெருகடி (ஒரு சிட்டிகையளவு)
தீரும் நோய்கள்- மூலவாய்வு, உருத்திர வாய்வு, அந்திர வாய்வு, பக்க வாய்வு, வாதம், மலட்டு வலி, அண்டவாதம்

## வடவான சூரணம்

| | | | |
|---|---|---|---|
| இந்துப்பு | - | 1 பலம் | (3.5 கிராம்) |
| திப்பிலிமூலம் | - | 2 " | (70 " ) |
| திப்பிலி | - | 3 " | (105 " ) |
| செவ்வியம் | - | 4 " | (140 " ) |
| சித்திரமூலம் | - | 5 " | (175 " ) |

| | | | |
|---|---|---|---|
| சுக்கு | - | 6 " | (210 " ) |
| கடுக்காய் | - | 7 " | (245 " ) |

இவற்றை இடித்துத் தூள் செய்துக்கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | வெருகடி |
| அனுபானம் | - | வெந்நீர் |
| தீரும் நோய் | - | நவகுன்மம் |

## வயிற்றுவலிக்குச் சூரணம்

| | | | |
|---|---|---|---|
| வெள்ளுள்ளி | - | 1 பலம் | (3.5 கிராம்) |
| சுக்கு | - | 1 " | ( " ) |
| கடுகு | - | 3 கழஞ்சு | (13.2 " ) |
| வெந்தயம் | - | 3 " | " |
| சீரகம் | - | 3 " | " |
| கருஞ்சீரகம் | - | 3 " | " |
| ஓமம் | - | 3 " | " |
| இலவங்கம் | - | 3 " | " |
| பெருங்காயம் | - | ½ " | (2.2 கிராம்) |
| கார்போகவரிசி | - | 1 " | (4.4 " ) |
| வெட்பாலையரிசி | - | 1 " | (4.4 " ) |
| சீனமிளகு | - | 1 " | (4.4 " ) |
| வசம்பு | - | ½ " | (2.2 " ) |
| இந்துப்பு | - | ½ " | (2.2 " ) |
| திப்பிலி | - | ½ " | (2.2 " ) |
| சதக்குப்பை | - | ½ " | (2.2 " ) |
| தான்றிக்காய் | - | ½ " | (2.2 " ) |
| கடுக்காய் | - | ½ " | (2.2 " ) |

இவற்றை எல்லாம் நன்றாகத் தூள் செய்து கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | வெருகடி (ஒரு சிட்டிகையளவு) |
| அனுபானம் | - | வெந்நீர் |
| தீரும் நோய் | - | வயிற்று வலி |
| பிற விளைவு | - | இரண்டு முறை பேதியாகும் |

## வயிற்றுவலிக்குச் சூரணம் (வேறு)

| | | | |
|---|---|---|---|
| பெருஞ்சீரகம் | - | 1 கழஞ்சு | (4.4 கிராம்) |
| நற்சீரகம் | - | 1 " | " |
| கருஞ்சீரகம் | - | 1 " | " |
| அதிமதுரம் | - | 1 " | " |

| | | | |
|---|---|---|---|
| இலவங்கப்பட்டை- | 1 | ” | ” |
| கொத்துமல்லி - | 6 | ” | (26.4 கிராம்) |
| சீனி - | 12 | ” | (52.8 கிராம்) |

இவற்றைப் பொடி செய்து, மெல்லிய துணியிலே சலித்துக் கொள்ளவும். பின்னர்க் காற்றுப் புகாத கொள்கலத்தில் வைத்துக் கொள்ளவும்.

காலம் - ஒரு நாளைக்கு மூன்று நேரம்

பத்தியம் - இச்சாபத்தியம்

தீரும் வியாதிகள் - சிலேட்டுமம், சுரம், மண்டைக்கனம், புளித்தேப்பம், கீரைப்பூச்சிக்கடி, அஜீரணம், கல்லரிப்பான்

இந்த மருந்து உண்ணுமளவும் தினம் பெருங்காயம் சிறிது சேர்த்துக் கொள்ளவும்.

## வயிற்றுச் சூலைக்குச் சூரணம்

| | | | |
|---|---|---|---|
| தாளிசபத்திரி - | 1 வராகன் | (3.5 கிராம்) | |
| ஏலம் - | 1 | ” | ” |
| சிறுநாகப்பூ - | 1 | ” | ” |
| சுக்கு - | 1 | ” | ” |
| திப்பிலி - | 1 | ” | ” |
| சிறுதேக்கு - | 1 | ” | ” |
| வாய்விளங்கம் - | 1 | ” | ” |
| அரத்தை - | 1 | ” | ” |
| கற்கடசிங்கி - | 1 | ” | ” |
| சடாமாஞ்சில் - | 1 | ” | ” |
| கருஞ்சீரகம் - | 1 | ” | ” |
| கோட்டம் - | 1 | ” | ” |
| பெருஞ்சீரகம் - | 1 | ” | ” |
| இலவங்கப்பத்திரி- | 1 | ” | ” |
| சாதிக்காய் - | 1 | ” | ” |
| கிராம்பு - | 1 | ” | ” |
| சதகுப்பை - | 8 | ” | (28 கிராம்) |
| நற்சீரகம் - | 8 | ” | ” |
| சன்னஇலவங்கப் பட்டை- | 8 | ” | ” |
| மகிழம்விரை - | 8 | ” | ” |

| | | | |
|---|---|---|---|
| கொத்துமல்லி - | 40 | " | (140 கிராம்) |
| சீனிசர்க்கரை - | 96 | " | (336 கிராம்) |

இவை எல்லாவற்றையும் தனித்தனியே இடித்து, மெல்லிய துணியில் சலித்துக் கொள்ளவும். பிறகு எல்லாவற்றையும் ஒன்று சேர்த்துச் சர்க்கரையையும் சேர்த்துக் கொள்ளவும்.

அளவு - வெருகடி (ஒரு சிட்டிகையளவு).
தீரும் நோய்கள் - சூலைவலி, நெஞ்செரிப்பு, சுரம், வயிற்றெரிப்பு, நாற்பது பித்தம், பித்த மயக்கம், அசீரணம், கீரைப்பூச்சி, மலட்டுவலி, கல்லடைப்பான், சிலேட்டுமம், கழுத்தில் உண்டாகும் வீக்கம்.

## வலிப்புக்குச் சூரணம்

**கூறிய நாவி சூதம் கொடியவெண் காரம் தாரம்**
**தேறிய வெள் வங்கம் திகழ்மனோ சிலையக் கிராகாரம்**
**காரீயம் கெந்த கந்தான் களர்திரி கடுகு கூட்டி**
**ஆறிய பொடிதான் பண்ணி அதனில்தே னருந்து வாயே**

(பொருள்)

நாபி
இரசம்
வெங்காரம்
அரிதாரம்
வெள்வங்கம்
மனோசிலை
அக்கிராகாரம்
கருவங்கம்
கந்தகம்
சுக்கு
மிளகு
திப்பிலி

} சம எடை

கூட்டிப் பொடி செய்து வைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு - கூறப்படவில்லை
அனுபானம் - தேன்
தீரும் நோய் - வலிப்பு

## வாதங்களுக்குச் சூரணம்

சங்கம் வேர்
புங்கம் வேர்
வெள்ளருகு
மிளகரணைவேர்
கரிசலாங்கண்ணி வேர்

இவற்றைச் சம அளவில் எடுத்துச் சூரணமாகச் செய்து கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | வெருகடி (ஒரு சிட்டிகையளவு) |
| காலம் | - | காலை, மாலை |
| பத்தியம் | - | கார்ப்பு, புளிப்பு |
| தீரும் நோய்கள் | - | சர்வ வாதம், சயித்திய வாதம் |

## வாய்வு இரைச்சல் அடிவயிறு பொருமலுக்குச் சூரணம்

| | | |
|---|---|---|
| சாரணைவேர் சமூலம் | - | 25 பலம் (875 கிராம்) |
| பிரண்டை | - | 25 பலம் (875 கிராம்) |

இவற்றை இடித்து வேகவைத்துப் பிழிந்து கொள்ளவும். இத்துடன் பிண்ணாக்கு அல்லது எள் சேர்த்து, மேலும்,

மிளகு
சுக்கு
ஓமம்
பெருங்காயம்
சீரகம்
வெந்தயம்
கடுகு
உப்பு

சம அளவு சேர்த்துப் பொடியாக்கிக் கொள்ளவும்.
தீரும் நோய்கள் - வாய்வு, இரைச்சல், அடிவயிறு பொருமல்

## வாய்வு குன்மம், வயிற்று வலிக்குச் சூரணம்

நாயுருவிச் சாம்பல்
நீர்முள்ளிச் சாம்பல்
கடுக்காய்ச் சாம்பல்

மஞ்சள் சாம்பல்
ஒட்டடை
பஞ்ச லவணம்
எவச்சாரம்

இவற்றைப் புதுச்சட்டியில் பொடி செய்து போட்டு ஒருசாமம் 3 மணி நேரம் வறுத்து ஆறவிட்டுப் பொடியாகச் செய்து கொள்ளவும்.

திரும் நோய்கள் - வாயுகுன்மம், வயிற்றுவலி

## வாய்வு, சோறு செரியாமலுக்குச் சூரணம்

| | | |
|---|---|---|
| நொச்சித்துளிர் | - | 1 பிடி |
| சங்கந்துளிர் | - | 1 பிடி |
| உகாய்துளிர் | - | 1 பிடி |
| பிரண்டை | - | 1 பிடி |
| மிளகு | - | 1 பிடி |

புதுச்சட்டியில் நாழி (1.3 லிட்.) உப்பைப் போட்டு வறுக்கவும். பின்னர் மேற்கூறிய மருந்துப் பொருள்களைப் போட்டுத் தூளாகச் செய்து கொள்ள வேண்டும்.

அனுபானம் - வெந்நீர்
காலம் - 4 அல்லது 5 நாட்கள்
திரும் நோய்கள்- வாய்வு, அசீரணம்

## விக்கலுக்கும் சத்திக்கும் சூரணம்

நீடு மாதளை நெற்பொரி சர்க்கரை
தேடு திப்பிலி தேனில் குழைத்திடில்
பீடை[1] செய்யும் பெருவிக்கல் சத்தியை
ஓட ஓடத் துரத்துவ துண்மையே.[2]

பாட வேறுபாடு : 1. பீடு, 2.துரத்துமி துண்மையே.

(பொருள்) மாதுளை, நெற்பொரி, திப்பிலி, சர்க்கரை சமன் சேர்த்துப் பொடி செய்து கொள்ள வேண்டும்.

அனுபானம் - தேன்
திரும் நோய் - வாந்தி, விக்கல்

## விக்கலுக்கு மருந்து

| | | |
|---|---|---|
| பருத்திக்கொட்டைப் பருப்பு | - | 5 வராகன் (17.5 கிராம்) |
| ஏலம் | - | 4 வராகன் (14 கிராம்) |
| திப்பிலி | - | 3 வராகன் (10.5 கிராம்) |
| நெற்பொரி | - | 2 வராகன் (7 கிராம்) |

இவற்றோடு சீனியையும் சேர்த்துப் பொடியாக்கிக் கொள்ளவும்.

திரும் நோய்கள் - விக்கல், சத்தி

## விப்புருதிக்கு மருந்து

| | | |
|---|---|---|
| குளத்தில் உள்ள கிளிஞ்சில் | - | பதக்கு (10.7 லிட்.) |
| காவிளை | - | 2 பலம் (70 கிராம்) |
| கொடிவேலிவேர் | - | 2 பலம் (70 கிராம்) |
| அனிச்சை வேர் | - | 1 பலம் (35 கிராம்) |
| கழற்கொடிப்பருப்பு | - | 1 பலம் (35 கிராம்) |
| வசம்பு | - | 1 " ( " ) |
| வெள்வெங்காயம் | - | 1 " ( " ) |
| மிளகு | - | 2 " (70 " ) |
| கருஞ்சீரகம் | - | 1 " (35 " ) |

இவற்றை எல்லாம் பொடியாக்கி, மெல்லிய துணியில் சலித்துக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | 2 காசெடை (2 பைசா அளவு) |
| அனுபானம் | - | தேன் அல்லது விளக்கெண்ணெய் 4 காசெடை (4 பைசா அளவு) |
| பத்தியம் | - | கார்ப்பு, புளிப்பு தவிரவும் |
| தீரும் நோய்கள் | - | விப்புருதி |

## குன்மச் சூரணம்

| | | |
|---|---|---|
| பெருங்காயம் | - | 1 பலம் (35 கிராம்) |
| வசம்பு | - | 2 " (70 " ) |
| அட்டுப்பு | - | 3 " (105 " ) |
| சுக்கு | - | 4 " (140 " ) |
| சாதிக்காய் | - | 5 " (175 " ) |
| கடுக்காய் | - | 6 " (210 " ) |
| தாமரைவேர் | - | 7 " (245 " ) |
| கோட்டம் | - | 8 " (280 " ) |

இவற்றையெல்லாம் பொடியாகச் செய்து கொள்ளவும்.

அளவு - வெருகடி (1 சிட்டிகையளவு)
காலம் - 7 நாட்கள்
தீரும் நோய்கள் - 5 குன்மம், வயிற்று வியாதிகள், அசீரணம், வாய்வு அதிசாரம், மகோதரம்

# ஒற்றடம்

## அற்புத வாதத்துக்கு மருந்து

வெள்ளைப்பூண்டு - 4 பலம் (140 கிராம்)
வசம்பு - 4 பலம் (140 கிராம்)

இவற்றோடு ஒரு தேங்காயைத் துருவிச் சேர்த்துப் பிசரிப் பொட்டணமாகக் கட்டிக் கொள்ளவும். இப்பொட்டணத்தைச் சட்டியில் காயும் உழக்கு (336 மி.லிட்.) வேப்பெண்ணெயில் விட்டு ஒற்றடம் இடவும்.

காலம் - 3 நாட்கள்
தீரும் நோய் - அற்புத வாதம்

## அற்புத வாதத்திற்கு மருந்து (வேறு)

தேங்காய் (துருவியது)
எருக்கம்பூ
சதுரக்கள்ளி
உள்ளி
வசம்பு
} சம அளவு

இவற்றை உரலில் இட்டு இடித்து, நீர் வற்றும்வரை வறுத்துட் பொட்டணமாகச் செய்து ஒற்றடமிடவும்.

தீரும் நோய் - அற்புதவாதம்

## பல்கிட்டின சன்னி, உள்வீச்சு, புறவீச்சிற்கு மருந்து

சுக்கு
வசம்பு
சிற்றரத்தை
முளிமஞ்சள்
கஸ்தூரி மஞ்சள்
} சம அளவு

இவற்றைப் பொடி செய்து முலைப்பாலில் குழைத்து நடுத்தலையில் வைத்துக் கலசம் காய்ச்சி வைக்கவும். பிறகு தலையில் வைத்த பொடியை உத்தாமணி, நொச்சி இவற்றின் சாறு பிழிந்து அந்தச் சாற்றிலரைத்துக் கொதிக்க வைத்து உடலெங்கும் துவாலையிடவும்.

தீரும் நோய் - பல்கிட்டின சன்னி, உள்வீச்சு, புறவீச்சு

### சுகசன்னிக்கு ஒற்றடம்

கல்லுப்பும் கருநொச்சியும் வறுத்துப் பொட்டணம் கட்டிச் சட்டியில் காயும் வேப்பெண்ணையில் விட்டுவிட்டு உச்சியில் ஒற்றிடவும்.

தீரும் நோய் - சுகசன்னி

### வாதசன்னிக்கு ஒற்றடம்

| | |
|---|---|
| எருக்கிலையின் வேர் | |
| மாவிலங்கை வேர் | |
| நொச்சி இலை | சம அளவு |
| வாதமடக்கி இலை | |
| தேங்காய்த் துருவல் | |

இவற்றைப் பிட்டாக அவித்து ஒற்றடம் இடவும்.

தீரும் நோய் - வாதசன்னி

### வாதத்தினால் உண்டான வீக்கத்திற்கு ஒற்றடம்

| | |
|---|---|
| கண்டங்கத்தரி சமூலம் - | 1 பங்கு |
| தேங்காய் துருவியது - | 2 பங்கு |

இவற்றைப் பொட்டணமாகச் செய்து சட்டியில் தேங்காயின் தனிப்பால் விட்டுக் கொதிக்க வைத்து அதில் பொட்டணத்தை நனைத்து ஒத்திடவும்.

தீரும் நோய் - வாத வீக்கம்

## கஞ்சி

### சுரத்திற்குக்கஞ்சி

கொத்துமல்லி
சுக்கு
சிற்றாமுட்டி
கோரைக்கிழங்கு
} சம அளவு

இவற்றில்

தண்ணீர் - 4 நாழி (5.2 லிட்டர்) விட்டு, 1 நாழியாகக் (1.3 லிட்டர்) காய்ச்சி, அதில்,

அரிசி - 1 உழக்கு (1.3 லிட்டர்)

போட்டுக் காய்ச்சிக் கொடுக்கவும்.

தீரும் நோய் - சுரம்

விளைவு - வாந்தி உண்டானால் வில்வவேர் போட்டுக் காய்ச்சிக் கொடுக்கவும்.

### பைத்தியத்திற்குக் கஞ்சி

நற்கோவைத் தண்டை, சிறுக அரிந்து, காடித்தெளிவில் ஊறப் போட்டு, இடித்து, சிறிது சாற்றை வடித்து, பின் அதில்

பசுவின் பால் - 1 உழக்கு (336 மி.லிட்டர்)

விட்டுக் காயவைத்து, அதில்

சிறுபயறு - 1 உழக்கு (336 மி.லிட்டர்)
பச்சை அரிசி

போட்டுக் கஞ்சி காய்ச்சிக் குடிக்கவும்.

காலம் - மூன்று நாள்
தீரும் நோய் - பித்தம், பைத்தியம்

### வயிற்றுப்பிள்ளை இறந்து போனதற்குக் கஞ்சி

தேங்காய்ப்பாலில் பச்சரிசி போட்டுக் கஞ்சி வைத்து ஒருபிடி அகத்தியிலைக் கொழுந்தைப் போட்டுக் காய்ச்சி இறக்கிக் கொள்ளவும்.

தீரும் நோய் - வயிற்றில் இறந்த குழந்தை வெளிவரும்

### வாந்திக்குக் கஞ்சி

புதுச்சட்டியிலே அரிசியும், நெல்லும் வறுத்து, பொரியாக்கி, சீலையில் பொட்டணம் கட்டி, நாக்குப்பூச்சி

பாக்களவு பொட்டணங் கட்டி, அதைக் கஞ்சி காய்ச்சி, பொட்டணங்களை எடுத்துப் போட்டுக் கஞ்சி குடிக்கவும்.
தீரும் நோய் - வாந்தி

## கட்டு

### இரத்தப் பீனிசத்துக்கு மருந்து

வில்வப்பத்திரிச்சாறு
ஆமணக்கு

இரண்டையும் கூட்டி எரித்துத் தலையில் கட்டவும்
தீரும் நோய் - இரத்தப் பீனிசம்

### முழங்கால் முட்டிக்குக் கட்டு

பெருந்தும்பை
வாதமடக்கி
பிரண்டைத்தண்டு
கழுதைவிட்டை

இவற்றைத் துவைத்து, சிறுநீரில் வறுத்துக் கட்டவும்.

தீரும் நோய் - சூலைக்கட்டு

### முழங்கால் முட்டிக்கு மருந்து (வேறு)

துத்தி இலை
நாட்டு மஞ்சள்

இரண்டையும் இடித்துச் சிறுநீர் விட்டு வறுத்துக் கட்டவும்.

தீரும் நோய் - சூலைக்கட்டு

### வீக்கத்திற்கு மருந்து

வெள்ளறுகு
ஆடுதின்னாப்பாளை
சங்கங்குப்பி இலை
எருக்கம்பூ
பொடுதலை
} சம அளவு

இவற்றை வேப்பெண்ணெய் விட்டுத் துவைத்து வெதுப்பிக் கட்டவும்.

தீரும் நோய் - வீக்கம்

# கண்டாவிழ்தம்

## அந்திரதாகத்திற்கு மருந்து

அதிமதுரம்
கோட்டம்
சுக்கு
வெண்காரம் } சம அளவு
தேன்
சர்க்கரை

இவற்றை எலுமிச்சம்பழச்சாற்றில் அரைத்து நாக்கில் தடவவும்.

திரும் நோய் - அந்தரதாகம்

## சன்னிவாத தோடங்களுக்குக் கண்டாவிழ்தம்

கலைக்கொம்பு
உருத்திராட்சம்
மதுரம் சம அளவு
கோட்டம்
வில்வவேர்
சந்தனம்
முத்து
பவழம்
பொன்
வெள்ளி
வெண்காரம்
இந்துப்பு சம அளவு
கோவைப்பழச்சாறு
நாயுருவிச்சாறு
ஆடாதொடைச்சாறு

இவற்றை அரைத்து நாவில் தடவவும்.

தீரும் நோய் - சன்னிதோடம், வாத தோடம்

## தோடத்துக்கு மருந்து

| | |
|---|---|
| பச்சை கற்பூரம் | - 2 வராகன் (3.5 கிராம்) |
| தேத்தான் விதை | - 2 |

இவற்றைத் தேன் வார்த்தரைத்து சிமிழிலடைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு - மிளகளவு (நாக்கில் தடவ வேண்டும்)

தீரும் நோய் - தோடம்

## நரம்பை இழுத்துக் கொண்டதுக்கு மருந்து

பெருங்காயத்தை சாராயத்திலே உரைத்துப் பூசவும்.

தீரும் நோய் - நரம்பு இழுத்துக் கொண்டது.

## நாக்கு இடிவிழுந்தால் மருந்து

விழுதிவேர்

சந்தனம்

இவற்றைப் பசுவின் பாலிலரைத்து உண்டை செய்து, நாக்கிலிட வேண்டும்.

தீரும் நோய் - நாக்கு இடிவிழுந்தது

## நாக்கு வெந்தால் மருந்து

அதிமதுரம்

வில்வவேர்

கலங்கொம்பு

உருத்திராட்சம்

நெல்லிமுள்ளி

கோரோசனை

இவற்றைக் கூட்டி நாக்கில் தடவவும்.

அனுபானம் - தேன், முலைப்பால்

தீரும் நோய் - நாக்கு வெந்து இருத்தல்

## நாக்கு வெடித்தால் மருந்து

அதிமதுரம்

நெல்லிமுள்ளி சம அளவு

மாசிக்காய்

இவற்றை முலைப்பாலில் அரைத்து நாக்கில் தடவவும்.

அனுபானம் - பசுவின் நெய்

தீரும் நோய் - நாக்கு வெடித்தல்

## நாக்கு வெடித்தால் மருந்து (வேறு)

வில்வவேர்

கலங்கொம்பு

நெல்லிமுள்ளி
மாசிக்காய்

இவற்றை முலைப்பாலில் உரைத்து நாக்கில் தடவவும்.
தீரும் நோய் - நாக்கு வெடித்தல்

## நாவறட்சிக்கு மருந்து

சாம்பிராணி
கடுக்காய்

இவற்றை முலைப்பால் விட்டு அரைத்து உண்ணாக்கில் தடவவும்.
தீரும் நோய் - நாவறட்சி

## நாவறட்சிக்கு மருந்து (வேறு)

இலாமிச்சம் வேர்
அதிமதுரம்
ஏலம் — சம அளவு
நற்சீரகம்
பச்சைக் கற்பூரம்
நெற்பொரி
சவ்வாது — சம அளவு
சீனி
கஸ்தூரி

இவற்றை முலைப்பாலில் அரைத்து நாவில் தேய்க்கவும்.
தீரும் நோய் - நாவறட்சி

## நாவறட்சி, தோடத்திற்கு மருந்து

கலங்கொம்பு
உருத்திராட்சம்
வில்வ வேர்
மயிலிறகு சுட்ட சாம்பல் — சம அளவு
தேன்
சர்க்கரை

இவற்றைக் கூட்டி நாக்கில் தடவவும்.
தீரும் நோய் - நாவறட்சி, தோடம்

## நாவறட்சி தோடத்திற்கு மருந்து (வேறு)

திப்பிலி
அரத்தை

அக்கிராக்காரம்
மாசிக்காய்
கற்பூரசிலாசத்து
} சம அளவு

இவற்றை வறுத்துப் பொடி பண்ணி, தேனில் கலந்து நாவில் தடவவும்.
தீரும் நோய் - நாவறட்சி தோடம்.

## விக்கலுக்கு மருந்து

மயிலிறகு சுட்ட சாம்பல்
திப்பிலி
குளவிக்கூடு
நண்டு இரத்தம்
அதிமதுரம்
சர்க்கரை
தேன்
} சம அளவு

இவற்றை நன்றாக அரைத்து நாக்கில் தடவவும்.
தீரும் நோய் - விக்கல்

# கண்டூசம்

## சத்திக்குக் கண்டூசம்

கடுக்காய்
சுக்கு
வெண்காரம்
படிகாரம்
சவுக்காரம்
தேன்
எலுமிச்சம் பழச்சாறு

இவற்றைச் சேர்த்தரைத்துக் கண்டூசம் செய்யவும்.
தீரும் நோய் - சத்தி

## தாகத்திற்குக் கண்டூசம்

அதிமதுரம்
சீரகம்
கோட்டம் சம அளவு
வெண்காரம்
தேன்

எலுமிச்சம் பழச்சாறு விட்டுக் கண்டூசம் செய்யவும்.
தீரும் நோய் - தாகம்

# கலிக்கம்

## காமாலை நோயால் விளையும் விளைவுகளுக்குக் கலிக்கம்

இரண்டு ஆமணக்கம் கொட்டைகளை எடுத்து உடைத்துப் பருப்பை எடுத்துப் பசுவின் வெண்ணெயிலிட்டுப் போடவும்.

தீரும் நோய் - காமாலையால் கண்ணிருண்டு கால் ஒய்ந்து வயிறு பெருத்து உப்பிசமாய்த் தலைசுற்றி வருவது

## பல சன்னிக்கும் விஷத்திற்கும் கலிக்கம்

நேர்வாளக் கொட்டை - 20
சித்தாமணக்கங்கொட்டை - 50
சுக்கு - 1 வராகன் (3.5 கிராம்)

இவற்றைத் தேன் விட்டரைத்துச் சிமிழில் வைத்துக் கொள்ளவும். எலுமிச்சம் பழச்சாற்றில் உரைத்துக் கண்ணில் இடவும். (எருமைத் தயிராவது, பசுவின் நெய்யாவது, முலைப்பாலாவது, பனைமட்டைச் சாறாவது விட்டுக் கண்ணைக் கழுவவும்.)

தீரும் நோய் : பலசன்னி, விஷம்

## சன்னிக்குக் கலிக்கம்

நல்லெண்ணெய் - ½ படி (1.3 லிட்.)

ஒரு சட்டியில் போட்டுக் கொதிக்க வைத்து அரைப்பலம் (17.5 கிராம்) சவுக்காரம் பொடி செய்து போட்டுக் கரண்டியில் குழப்பி, 3 எலுமிச்சம் பழச்சாறு விடவும். இவற்றைச் சிமிழில் அடைத்துக் கொண்டு கண்ணிலிடவும்.

தீரும் நோய் - தோஷம், சன்னி, தலைபாரம், நாக்குலர்தல்

## பூதகலிக்கம்

சீராரும் திரிகடுகு வசம்பு உள்ளி
சிறந்தநற் சாரணைவேர் மகிழம் வித்தும்
காராரும் நேர்வாளம் வித்துத் தானும்
கடியதோர் கசப்பரைப்பு தானுங் கூட்டி

நேராகச் சீரொக்கச் சிறுக வெட்டித்
    தேசிக்காய் அறுத்தெடுத்து அதனுள் வைத்துச்
சீராக அரைத்தெடுத்துக் கண்ணில் போட
    கபால சன்னியுடன் மண்டைசூலை யும்போம்

(பொருள்) கபால சன்னி, மண்டை சூலைக்குக் கண்ணில் போடக் கலிக்கம் கூறப்படுகிறது.

| | |
|---|---|
| சுக்கு | சம எடை |
| மிளகு | |
| திப்பிலி | |
| வசம்பு | |
| உள்ளிப் பூண்டு | |
| சாரணைவேர் | |
| மகிழம்வித்து | |
| நேர்வாளம் | |
| அரைப்புத்தூள் | |

இவற்றைப் பொடித்து எலுமிச்சம் பழத்தை அறுத்தெடுத்து அதனுள் வைத்து அரைத்துக் கண்ணில் கலிக்கமாகப் போட வேண்டும்.

தீரும் நோய்கள் - கபால சன்னி, மண்டைச்சூலை

## களி

### இரத்த மூலத்திற்கு மருந்து

கவிழ்தும்பை இலை தேங்காயளவு, பசுவின் வெண்ணெய் எலுமிச்சங்காயளவு சேர்த்துக் களிப்போலே கிண்டி மூடி வைத்துக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | எலுமிச்சங்காயளவு |
| காலம் | - | காலை, மாலை |
| தீரும் நோய் | - | இரத்த மூலம் |

### உள் மூலத்துக்குக் களி

தினையரிசி கவிழ்தும்பை சமூலம் கூட்டி மாவாக இடித்துக் களியாகக் கிண்டவும்.

அனுபானம் - பசுவின் நெய், வெந்நீர்
காலம் - 7 நாட்கள் (காலை)
தீரும் நோய்கள்- உள் மூலம்

## கிராணி சோபத்துக்குக் களி

| | |
|---|---|
| கழல்பருப்பு<br>வசம்பு<br>கடுகு<br>அபின்<br>கிராம்பு<br>மிளகு<br>திப்பிலி<br>சுக்கு<br>சீரகம் | சம அளவு |

நல்லெண்ணெய் சுடவைத்துப் போட்டுக் கிண்டி இறக்கி வைத்துக் கொள்ளவும்.

அளவு - புளியங்கொட்டையளவு
தீரும் நோய் - கிராணி சோபம்

## சுருக்கிடு காமாலைக்குக் களி

கருஞ்சூரைவேரை இடித்துக் களியாக்கிக் கொள்ளவும்.
தீரும் நோய் - சுருக்கிடு காமாலை, எரி வாதம்,
எரி காமாலை.

## சூதக வாய்வுக்குக் களி

மாவிலங்கை இலையும் மூக்கிரட்டை இலையும் கருங்குருவைப் பச்சரிசியில் மாவிடித்துக் களி கிண்டி நல்லெண்ணெயும் பனைவெல்லமும் கூட்டித் தின்னவும்.

காலம் - 3 அல்லது 5 நாட்கள் (காலை, மாலை)
தீரும் நோய் - சூதக வாயு

## அசீரண வலிக்கு மருந்து

வசம்பு
உப்பு

இவற்றைக் காய்ச்சி கொடுத்து, காடியில் வேது பிடிக்க வேண்டும்.

தீரும் நோய் - அசீரண வலி

## அழுவை கரைய கற்கம்

| | | |
|---|---|---|
| இந்துப்பு | - | 2 பலம் (70 கிராம்) |
| சுக்கு | - | 2 பலம் (70 கிராம்) |
| வெள்வெங்காயம் | - | 2 பலம் (70 கிராம்) |
| மிளகு | - | 2 பலம் (70 கிராம்) |
| பனைவெட்டு | - | 4 பலம் (140 கிராம்) |
| பழங்கோணி சுட்டச்சாம்பல் | - | 2 பலம் (70 கிராம்) |

இவற்றை தனித்தனியாக அரைத்து, ஒரு சட்டியில் போடவும். பின்னர் அத்துடன் பனைவட்டையும் வெள்வெங்காயத்தையும் போட்டு கிண்டி வைத்துக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | இரண்டு கொட்டைப்பாக்கு |
| அனுபானம் | - | வெல்லம் |
| தீரும் நோய் | - | அழுவை கரையும் |

## ஆண்போல முலை எழாத பேருக்கு மருந்து

முத்திருக்கஞ்செவி சமூலம்
பசுவின் பால்

முத்திருக்கஞ்செவி சமூலத்தை பசுவின்பாலில் துவைத்து, அந்தச் சாற்றினை உள்ளுக்குக் கொடுக்கவும். முலையிலும் தடவவும்.

காலம் - நான்கு நாள்
அளவு - 1 ஆழாக்கு (168 மி.லிட்)

அதன் பிறகு,

| | | |
|---|---|---|
| மாதுளங்கொழுந்து | - | 1 பிடி. |
| மோர் | | |
| உப்பு | - | சிறிது |

மாதுளங்கொழுந்து ஒரு பிடி அரைத்து மோரில் துவைத்து வடிகட்டி உப்பு சிறிது கூட்டிக் கொடுக்கவும்.

| | | |
|---|---|---|
| காலம் | - | ஏழு நாள் |
| விளைவு | - | முலை எழும்பும் |

## இசிவுக்கு மருந்து

மான்கொம்பை சாராயத்தில் உரைத்துக் குடிக்கவும்.

காலம் - ஏழு நாள்

தீரும் நோய் - இசிவு

## இசிவுக்கு மருந்து (வேறு)

| | |
|---|---|
| பெருங்காயம் | சம அளவு |
| முருங்கைவேர்ப்பட்டை | |
| வசம்பு | |
| வெள்வெங்காயம் | |
| ஓமம் | |

இவற்றை, எருக்கிலைத் துவைத்துச் சாறு பிழிந்து, அதிலே அரைத்துக் குழப்பிக் காய்ச்சி உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை தடவவும்.

தீரும் நோய் - இசிவு

## இரத்தக் கழிச்சலுக்கு மருந்து

| | |
|---|---|
| வரட்பூலாவேர், கொழுந்து | சம அளவு |
| கருவேப்பிலை | |
| மிளகு | |
| அசமதாகம் | |

இவற்றை எண்ணெயில் பொன்னிறமாக வறுத்து அரைத்துக் கொடுக்கவும்.

தீரும் நோய் - கடுப்பு இரத்தம்

## இரத்தக் கழிச்சலுக்கு மருந்து (வேறு)

முள்ளிலவங்கப் பட்டையை மேல்புறணி சீவிப்போட்டு நறுக்கித் தண்ணீர் நாழி (1.3 லிட்) விட்டுக் கால்படியாகக் (325 மி.லிட்.) காய்ச்சிப் பஞ்ச திரவியமும் சத்திர வேதியும் ஒரு பாக்கு மாத்திரம் அரைத்துக் கரைத்துக் கொடுக்கவும்.

தீரும் நோய் - இரத்தக் கழிச்சல்

## இரத்த சன்னி அலட்டுசன்னிக்கு மருந்து

சுட்ட பூநாகம்
முசுறுமுட்டை

இவற்றைத் தாய்ப்பாலில் கொடுக்கவும்.

அளவு - ½ கழஞ்சு (2.2 கிராம்)
அனுபானம் - உருத்திராட்சம், சந்தனம்
தீரும் நோய்கள் - இரத்த சன்னி, அலட்டுசன்னி

## இரத்தப் பித்தத்திற்கு மருந்து

பொன்னாங்காணி, வெல்லம் எலுமிச்சங்காயளவு கூட்டிக் கொடுக்கவும்.

காலம் - மூன்று நாள்
தீரும் நோய் - இரத்தப் பித்தம்

## இரத்தப் பிரமியத்துக்கு மருந்து

குஞ்சியிலைச்சாறு - 1 உழக்கு (336 மி.லிட்)
நெய் - 1 உழக்கு (336 மி.லிட்)
வெல்லம் - 1 உருண்டை

இவற்றைக் கூட்டிக் குடிக்கவும்.

தீரும் நோய் - இரத்தப் பிரமியம்

## இருமல் உண்டாக்கும் வாந்தி அரோசிகத்திற்கு மருந்து

திப்பிலி
நெற்பொரி
சர்க்கரை
} சம எடை

இவற்றைக் கூட்டி மாதுளஞ்சாறு விட்டு அரைத்துத் தேனில் குழப்பிக் கொடுக்க வேண்டும்.

தீரும் நோய் - இருமல், வாந்தி, அரோசிகம்

## உதிரக் கடுப்புக்கு மருந்து

புங்கந்துளிர்
கடுக்காய்
மிளகு
கோட்டம்
} சம எடை

இவற்றை எருமைத் தயிரில் நீர்வார்த்து அரைத்துக் குடிக்கவும்.

தீரும் நோய்கள் - உதிரமும் கடுப்பும்

## உப்பிச இருமலுக்கு மருந்து

திப்பிலி
வெண்காரம்
சங்குச் சுண்ணாம்பு
தும்பராட்சகம்

இவற்றைப் பொடிபண்ணி மெருகந் தண்டின் சாற்றில் குழைத்து, தேன் வார்த்து வெங்காய உள்ளித் தைலத்தில் கூட்டிக் குழப்பிக் கொடுக்கவும்.

காலம் - 4 நாழிகைக்கு ஒரு தரம்
(ஒரு மணி நேரம் 36 நிமிடம்)
அளவு - 1 கரண்டி
அனுபானம் - திப்பிலி, பொரிகாரம் பொரித்துப் பொடி பண்ணிக் கொடுக்கவும். கண்டங்கத்தரி, தூதுவளை, முருங்கைவேர்ப்பட்டை, திப்பிலி, திப்பிலிமூலம், சுக்கு, தும்பராட்கம்
இவற்றை இடித்துக் குடிநீர்க்காய்ச்சிக் கொடுக்கவும்.

காலம் - ஒரு வேளை
தீரும் நோய் - உப்பிச இருமல்

## உப்பிசத்துக்கு மருந்து

அந்திரத் தாமரை இலை, வேர் இவற்றை நறுக்கி ஒரு சட்டியில் தண்ணீர் வார்த்து வேடுகட்டி, அதில் வேக வைத்து எடுத்து சாறு வடித்து, திப்பிலி வறுத்து அரைத்து அந்தச் சாறுடன் கலந்து குடிக்க வேண்டும்.

காலம் - காலை வேளை
பத்தியம் - கீரையும் சோறும் சேர்க்கவும்.
கசப்பு, புளிப்பு, எண்ணெய் ஆகாது.
தீரும் நோய் - உப்பிசம்

## உள்நாக்குக்கு மருந்து

எவச்சாரம்
கல்ச்சுண்ணாம்பு
எலுமிச்சஞ்சாறு

எவச்சாரமும், கல்ச்சுண்ணாம்பும் எலுமிச்சஞ்சாறு விட்டரைத்து, உண்ணாக்கு நுனியிலே உச்சிக் கரண்டியில் எடுத்து இடிக்கவும்.

| | | |
|---|---|---|
| பத்தியம் | - | பால் கஞ்சி (நான்கு நாளைக்கு) |
| தீரும் நோய் | - | உண்ணாக்கு வளர்ச்சி தீரும் |

## உள்மூலம், புறமூலம், சீமூலத்துக்கு மருந்து

| | | |
|---|---|---|
| பன்றி நெய் | - | ½ படி (650 மி.லிட்) |
| முள்ளங்கிச்சாறு | - | " " |
| ஈரவெங்காயச்சாறு | - | " " |
| நாயுருவிச்சாறு | - | " " |
| வெள்ளைச்சாரணைச்சாறு | - | " " |
| வேளைச்சாறு | - | " " |
| சீரகம் | - | 1 பலம் (35 கிராம்) |
| வெந்தயம் | - | 1 பலம் (35 கிராம்) |

இவற்றைக் களியாகக் கிண்டிக் கொடுக்கவும்.

| | | |
|---|---|---|
| காலம் | - | காலையும் மாலையும் |
| தீரும் நோய்கள் | - | உள்மூலம், புறமூலம், சீமூலம் |

## உள்மூலம், புறமூலத்துக்கு மருந்து

பிரமி இலையை ஒரு தேங்காய் அளவு பறித்து வந்து பசுவின் நெய்யில் முறுக வெந்த பின்புக் கடைந்து ஏழு நாள் கொள்ள உள்மூலம், புறமூலம் தீரும்.

## எரிகுன்மத்திற்கு மருந்து

வெள்ளைக் குங்கிலியம்
பசுவின்பால்

வெள்ளைக் குங்கிலியத்தை பசுவின் பாலிலோ அல்லது வெண்ணெயிலோ கொடுக்கலாம்.

தீரும் நோய் - எரிகுன்மம்

## எரிகுன்ம வலிகுன்மத்திற்கு மருந்து

பால்
இந்துப்பு

பால் குறுகக் காய்ச்சி, இந்துப்புக்கூட்டிக் கொடுக்கவும்.

தீரும் நோய்கள் - எரிகுன்மம், வலி குன்மம்

## எலும்புருக்கிப் பிரமியத்திற்கு மருந்து

சுட்ட சங்கு - 1 பாலாடை
தண்ணீர் - 3 படி (3.9 லிட்டர்)

சுட்ட சங்கை தண்ணீரில் கரைத்து மாம்பட்டை அரைத்த விழுது எலுமிச்சங்காயளவு கலந்து கொடுக்கவும்.

அளவு - சிரங்கையளவு (உள்ளங்கையளவு)
தீரும் நோய்கள் - பிரமியம், எலும்புருக்கி

## எலும்புருக்கிப் பெரும்பாடு பிரமியம் சயத்திற்கு மருந்து

கருங்கம்பிளி

இதனைச் சட்டியிலிட்டுக் கருக்கிப் பொடியாக்கி வைத்துக் கொள்ள வேண்டும். இப்பொடி வராகன் எடை (3.5 கிராம்) நல்லெண்ணெயில் குழப்பிக் கொடுக்க வேண்டும்.

காலம் - ஏழு நாள் காலை, மாலை
பத்தியம் - கறுப்பரிசி, கறுங்குறுவையரிசி சோறாகிற பொழுது சிரங்கை வெங்காயம் போட்டு சோறு பொங்கிச் சாப்பிடவும். வாழைப்பூக்கச்சல், அத்திப் பிஞ்சு சேர்க்கவும்.
தீரும் நோய்கள் - எலும்புருக்கி, பெரும்பாடு, பிரமியம், சயம்

## எலும்புருக்கிப் பெரும்பாடு பிரமியம் சயத்திற்கு மருந்து (வேறு)

வெள்ளைக்குங்கிலியம் - வராகனெடை (3.5 கிராம்)

வெள்ளைக் குங்கிலியத்தை நல்லெண்ணெய், தயிரில் குழப்பிக் கொடுக்கவும்.

காலம் - காலையும், மாலையும் (இரண்டு நேரம்)
தீரும் நோய்கள் - எலும்புருக்கி, பெரும்பாடு, பிரமியம், சயம்

## ஒக்காளத்திற்கு மருந்து

பச்சரிசி
வில்வப்பத்திரிவேர்

இவை இரண்டையும் அரைத்த விழுது பாக்களவு காய்ச்சி சீலையில் வடித்து அதில்,

ஏலம் - 2 காசெடை

பொடி செய்து போட்டுக் குடிக்கவும்.

தீரும் நோய் - ஒக்காளம்

## ஒக்காளத்திற்கும் வாந்திக்கும் கற்கம்

| | |
|---|---|
| மாதுளம் பழச்சாறு<br>திப்பிலி<br>நெற்பொரி<br>கிராம்பு<br>சர்க்கரை<br>தேன் | சம அளவு |

இவற்றைக் கூட்டி குழப்பிக் கொடுக்கவும்.

தீரும் நோய் - ஒக்காளம், வாந்தி

## கடிகை அரையாப்புக்கு மருந்து

நீர்மேல்நெருப்பை நறுக்கி வைத்துக் கட்டவும். புண்ணாய் குழி விழுந்தால் பருத்தி விரையை நறுக்கிப் பிழிந்து கட்டவும். வேப்பெண்ணெய் அல்லது தேங்காயெண்ணெய்த் தடவவும்.

தீரும் நோய் - கடிகை, அரையாப்பு

## கட்டியாய்ச் சாய்க்கின்ற பெரும்பாட்டுக்கு மருந்து

ஒரு முழம் (30 செ.மீ) மெல்லிய துணியை அழுக்காக்கிப் போட்டு உலர்த்திச் சுட்டுச் சாம்பலாக்கி, இரண்டு பாக்களவு வெல்லம் கூட்டிக் கொள்ளவும். பின் நெய், நல்லெண்ணெயும் கலந்து அதில போட்டு ஒரு குன்றியளவு (65 மி.கிராம்) சுண்ணாம்பு போட்டு மத்தித்து கொடுக்கவும்.

காலம் - 3 நாட்கள் அல்லது 8 நாட்கள்

தீரும் நோய் - கட்டிப் பெரும்பாடு

## கர்ப்பிணி நீர்மரிப்புக்கு மருந்து

சீதேவியார்செங்கழுநீர்

கோட்டம்

தேத்தாங்கொட்டை

இவற்றை அரைத்துக் கொடுக்கவும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | இரண்டு பாக்களவு |
| அனுபானம் | - | பசுவின் வெண்ணெய், கஞ்சி |
| தீரும் நோய் | - | கர்ப்பிணி நீர்மரிப்பு |

## கர்ப்பிணி வீக்கத்திற்கும் காமாலை, சோகை பாண்டு விஷபாகத்திற்கும் மருந்து

| | | |
|---|---|---|
| அரப்பொடி | - | 2 பலம் (70 கிராம்) |
| பழம்புளி | - | 2 பலம் (70 கிராம்) |
| இராயபுரிசர்க்கரை | - | 4 பலம் (140 கிராம்) |

இவற்றைத் தேன் விட்டரைத்துச் சாப்பிடவும்.

| | | |
|---|---|---|
| காலம் | - | ஏழு நாள் |
| தீரும் நோய்கள் | - | கர்ப்பிணி வீக்கம், காமாலை, சோகை, பாண்டு, விஷப்பாகம் |

## கல்லெரிப்புக்கு மருந்து

தேங்காய்ப்பால்
நாவல்பட்டைச்சாறு

இவற்றைக் கலந்து குடிக்கவும்.

| | | |
|---|---|---|
| தீரும் நோய் | - | கல்லெரிப்பு |

## கவிசைக்கு மருந்து

| | | |
|---|---|---|
| சீனக்காரம் | - | 1 பலம் (35 கிராம்) |
| வேலிப்பருத்தி வேர் | - | ” |
| தும்பையிலை | - | ” |

இவற்றை அரைத்துக் கொடுக்கவும்.

| | | |
|---|---|---|
| அனுபானம் | - | இளவெந்நீர் |
| தீரும் நோய் | - | கவிசை |

## கறுத்தக் காய்ச்சலுக்கு மருந்து

| | | |
|---|---|---|
| சங்கம்பழம் | - | ¾ பலம் (11.67 கிராம்) |
| சந்தனம் | - | 1 பாக்களவு |
| காவிக்கல் | - | ½ பாக்களவு |
| கோரோசனை | - | 1 காசெடை |

இவற்றைக் கூட்டிக் குழப்பிக் கொடுத்து நாக்கிலும் தடவவும்.

| | | |
|---|---|---|
| தீரும் நோய் | - | கறுத்தக் காய்ச்சல் |

### கறுத்தக் காய்ச்சலுக்கு மருந்து (வேறு)

சிறுகீரை வேர்
பொன்னாங்காணிவேர்
பழம்புளி
வெல்லம்
கலங்கொம்பு

இவற்றை அரைத்துப் பசுவின் வெண்ணெயில் குழப்பி உள்ளுக்குக் கொடுத்து நெஞ்சிலிருந்து தொப்புள் மட்டும் தடவவும்.

தீரும் நோய் - கறுத்தக் காய்ச்சல்

### கறுத்தக் காய்ச்சலுக்கு மருந்து (வேறு)

கற்பூரவல்லி இலை
வல்லாரை
சீரகம்
ஈருள்ளி
சுக்கு

இவற்றைக் கஷாயமிட்டுக் கொடுக்கவும்.
தீரும் நோய் - கறுத்தக் காய்ச்சல்

### காசரோகம் இரத்தமாகக் கழிகிறதுக்கும் ஈளை இருமலுக்கும் மருந்து

ஆவாரம்பூ இதழ் உலர்ந்தது
சாதிக்காய் பருப்பு - 3
கடுக்காய் பருப்பு - 3

இவற்றை இடித்துத் தூள் பண்ணிக் கொடுக்கவும்.
அனுபானம் - எருமைத்தயிர்
பத்தியம் - பசுவின் பாலும், சோறும்,'
வெள்ளாட்டுப் பாலும் சோறும்
தீரும் நோய்கள் - காச ரோகம், இரத்தக் கழிச்சல்,
ஈளை இருமல்

### கிரந்திக்கு மருந்து

பச்சைத்துரிசு
கடுஞ்சுண்ணாம்பு } சம அளவு

இவற்றை நல்லெண்ணெய், எலுமிச்சம்பழச்சாறு விட்டு அரைத்துச் சீலையில் தடவிப் போடவும்.

திரும் நோய் - கிரந்தி

## குண்டியக்கரத்துக்கு மருந்து

தகரை இலை
முசுமுசுக்கை இலை
பஞ்ச திரவியம் (பசுவின் பால், தயிர், நெய், மூத்திரம், சாணம்) சம அளவு
மாங்கொட்டைப் பருப்பு

இவற்றை அரைத்து எருமை வெண்ணெயில் குழப்பி கொடுக்கவும்.
திரும் நோய் - குண்டியக்கரம்

## குலை எரிவுக்கு மருந்து

| | | |
|---|---|---|
| சர்க்கரை | - | எலுமிச்சங்காயளவு |
| பசுவின் வெண்ணெய் | - | 2 பாக்களவு |
| கோரோசனை | - | 1 பயறு அளவு |

இவற்றைப் பச்சை அரிசியின், இரண்டாவது களைந்த கழுநீர் ஒரு படியில் (1.3 லிட்) கரைத்து பனியில் வைத்துக் கொடுக்கவும்.
காலம் - காலை
திரும் நோய் - குலை எரிவு

## குலை எரிவுக்கு மருந்து (வேறு)

| | | |
|---|---|---|
| நரிபயற்றங்கொடி சமூலம் | - | 1 பண எடை (488 மி. கிராம்) |
| **சீரகம்** | - | 1 பலம் (280 கிராம்) |
| **தண்ணீர்** | - | 1 தூணி (21.5 லிட்) |

நரிபயற்றங்கொடி சமூலம், சீரகம் இவற்றைத் தண்ணீரில் போட்டு இரண்டு படியாகக் காய்ச்சி அந்தச் சீரகத்தில் ¼ பலம் (8.75 கிராம்) எடுத்து அரைத்து ½ படி (1.325 லிட்டர்) கஷாயத்தில் கொடுக்கவும்.
காலம் - நான்கு நாள்
திரும் நோய் - குலை எரிவு

## குளிர்க் காய்ச்சலுக்கு மருந்து

மணத்தக்காளி இலை
பருத்தி இலை 1 பிடி
துளசி இலை
சீரகம் - 15
தாளக செந்தூரம் - ½ வராகன் (1.75 கிராம்)

இவற்றைச் சேர்த்தரைத்துக் கொடுக்கவும்.

தீரும் நோய் - குளிர்க் காய்ச்சல்

## குளிர்க்காய்ச்சலுக்கு மருந்து (வேறு)

வெந்தயம் - 4 பணஎடை (19.52 கிராம்)
உத்தாமணி இலை
அரைத்த சாந்து 1 கொட்டைப் பாக்களவு

இவற்றைக் கூட்டிக் கொடுக்கவும்.

தீரும் நோய் - குளிர்க் காய்ச்சல்

## சத்திவலி குன்மத்துக்கு மருந்து

ஆறுமாத காடி - 1 தூணி (21.5 லிட்)
புரசம்பட்டை - 1 குறுணி (5.3 லிட்)

காடியில், புரசம்பட்டையை நறுக்கிப் போட்டு சூரியபுடமாக ஒருநாள் வைத்து, மறுநாள் எடுத்து நாழியாகக் (1.3 லிட்) காய்ச்சவும். இதில் உழக்கு (336 மி.லிட்) இறுத்து அதில்

மிளகு
நல்லவேளைவேர்
ஓமம்
வெள்ளுள்ளி
பெருங்காயம்

இவற்றை அரைத்த விழுது 1 பாக்களவு கூட்டிக் குடிக்கவும்.

காலம் - மூன்று நாள்
தீரும் நோய் - சத்திவலி குன்மம்

## சர்வ குன்மத்திற்கு மருந்து

இங்குலிகம் - 1 பலம் (35 கிராம்)
எவச்சாரம் - 2 பலம் (70 கிராம்)

நவச்சாரம் - ½ பலம் (17.5 கிராம்)
முக்காவேளைவேர் - ½ பலம் (17.5 கிராம்)

இவற்றைக் கஷாயமிட்டு அரைத்து வெய்யிலில் வைத்து உலரவிட்டு எடுத்துச் சிமிழில் வைத்துக் கொள்ள வேண்டும்.

மேற்கூறிய மருந்து - 2 பணவெடை (576 கிராம்)
இஞ்சிச்சாறு - 1 ஆழாக்கு (336 மி.லி)
மிளகு - 20
எலுமிச்சம் பழச்சாறு - 1 காசெடை

மிளகைப் பொடித்து மேற்கூறியவற்றைக் கலந்து கொடுக்கவும்.

காலம் - மூன்று நாள்
தீரும் நோய் - சருவ குன்மம்

## சர்வ வீக்கத்திற்கு மருந்து

மஞ்சள் - 4 பலம் (140 கிராம்)
தான்றிக்காய் - 10
துளசியிலை - தேங்காயளவு
மோர் - 4 நாழி (4.12 லிட்டர்)

மஞ்சள், தான்றிக்காய், துளசியிலை இவற்றை மோரில் கரைத்து இரு நாழியாகக் (2.6 லிட்டர்) காய்ச்சிக் கொடுக்கவும்.

அளவு - 1 சிரங்கை
தீரும் நோய் - சருவ வீக்கம்

## சன்னிவாத சுரத்திற்கு மருந்து

உருத்திராட்சம்- 1 வராகன் (3.5 கிராம்) இதனை அரைத்து, கரைத்து, காய்ச்சின நீரில் தாய்ப்பால் கலந்து கொடுக்கவும்.

தீரும் நோய் - சன்னிவாத சுரம்

## சன்னிவாத சுரத்திற்கு மருந்து (வேறு)

பூநாகத்தை தாய்ப்பாலிலரைத்துக் கொடுக்கவும்.
அளவு - 1 கடுகுரோகணி அளவு பலவானுக்கு 3 அல்லது 4 கடுகுரோகணி அளவு கொடுக்கவும்.

தீரும் நோய் - சன்னிவாத சுரம்

## சிலேட்டும தோடத்திற்கு மருந்து

சுக்கு
மிளகு
திப்பிலி
திப்பிலிமூலம் } சம அளவு
கடுக்காய்
எவச்சாரம்
வாலுளுவையரிசி

இவற்றைக் கூட்டியரைத்துத் தேனில் குழைத்து நாக்கில் தடவிக் கொப்பளிக்கவும்.

தீரும் நோய் - சிலேட்டும தோடம்

## சிலேட்டுமத்திற்கு மருந்து

திப்பிலி
கருஞ்சீரகம்
வெளுச்சபிசின்
இந்துப்பு } சமனெடை
பூவன்பழம்
முந்திரிகைப்பழம்
வாலுளுவையரிசி

இவற்றைத் தேனில் கலந்து கொடுக்கவும்.

தீரும் நோய் - சிலேட்டுமம்

## சீ மூலத்துக்கு மருந்து

அவுரி இலை - 1 பாக்களவு
கற்றாழம்சோறு - 1 பாக்களவு
சீனி - 1 பாக்களவு

இவற்றை ஒன்று கலந்து காலை மாலை சாப்பிடவும்.

தீரும் நோய் - சீ மூலம்

## சுக்கிலப் பிரமியத்திற்கு மருந்து

பூமிச் சர்க்கரை
சீனிச் சர்க்கரை சம அளவு

இவற்றைப் பசுவின் பாலில் கலந்து குடிக்கவும்.

காலம் - மூன்று நாள்

தீரும் நோய் - சுக்கிலப் பிரமியம்

## சுக்கிலப் பிரமியத்திற்கு மருந்து (வேறு)

கூகை நீறு
ஓரிதழ்த்தாமரைவேர் } சம அளவு
சர்க்கரை - 1 வெருகடி (ஒரு சிட்டிகை அளவு)

இவற்றை இளநீரிலிரைத்து இளநீரில் கரைத்துக் குடிக்கவும்.

காலம் - மூன்று நாள்
தீரும் நோய் - சுக்கிலப் பிரமியம்

## சுரத்திற்கு மருந்து

தூதுவளை வேர்
முடக்கொத்தான் சமூலம்
கஞ்சாங்கோரை சமூலம்
சுக்கு
மிளகு
கடுக்காய் } சம அளவு

இவற்றை துணியில் முடிந்து மூன்று குறுணி (15.9 லிட்) தண்ணீர்விட்டு மூன்று நாழியாகக் (3.9 லிட்) காய்ச்சி பின் பாக்களவு மருந்தெடுத்து அரைத்து குடிநீரிறுத்துக் கரைத்துக் கொடுக்கவும்.

காலம் - 5 நாள்
தீரும் நோய் - சுரம்

## சூலை எல்லாவற்றிற்கும் மருந்து

**காயம்ஒன்று இலவணம் இரட்டி கடுந்திப்பிலி அதனில் இரட்டி**
**தீயெனும் உள்ளிச்சாறு சேரவே இரட்டி கூட்டி**
**ஆயன்சொல் தப்பா திந்த அவுடதங்கள் கொள்வீ ராகில்**
**சாலவே குன்ம சூலை தனுர்வாயு தீரு மென்றார்**

(பொருள்) இதில் குன்மசூலை, தனுர்வாயுவுக்கு மருந்து கூறப்படுகிறது.

பெருங்காயம் - 1 பங்கு
சோற்றுப்பு - 2 பங்கு
திப்பிலி - 4 பங்கு
பூண்டுச்சாறு - 8 பங்கு

சேர்த்து அரைத்து உட்கொள்ள வேண்டும்.

தீரும் நோய்கள் - குன்ம சூலை, தனுர் வாயு

## சூதக வாயு, பாரிச வாயு, உட்டிண வாயுவுக்கு மருந்து

நிலாவாரை
வெள்வெங்காயம்
சுக்கு
} சமன்

கூட்டிக் கொடுக்கத் தீரும்.

## செங்கமாரிக்கு மருந்து

வேப்பங்கொழுந்து
கீழாநெல்லிவேர்
நெல்லிமுள்ளி
சீரகம்
} சம அளவு

இவற்றைப் பால் வார்த்தரைத்துப் பாலில் கரைத்துக் குடிக்கவும்.

தீரும் நோய் - செங்கமாரி

## சோப வீக்கத்திற்கு மருந்து

சாரணைவேர்
கொன்றைவேர்
பிரமியிலை
கரிசலாங்கண்ணி
வெள்ளறுகு
சுக்கு
சித்திர்மூலம்
} சம எடை

இவற்றைக் கஷாயமிட்டுக் கொடுக்கவும்.

தீரும் நோய் - சோப வீக்கம்

## தண்ணீர் தாகத்திற்கு மருந்து

குன்றிஇலை
அதிமதுரம் சம அளவு

இவற்றை அரைத்து உண்டைப் பண்ணிக் கொடுக்கவும்.

அளவு - 1 பாக்களவு
தீரும் நோய் - தண்ணீர் தாகம்

## தாது விருத்திக்கு மருந்து

இஞ்சிச்சாறு
ஈறுவெங்காயச்சாறு
} சம எடை

| | |
|---|---|
| கோழிமுட்டைவெள்ளைக்கரு<br>தேன்<br>நல்லெண்ணெய் | சம எடை |

இவற்றைக் கூட்டிக் கொடுக்கவும்.
விளைவு - தாது விர்த்திக்கும்

## தாப சுரத்துக்கு மருந்து

| | | |
|---|---|---|
| திப்பிலி | - | 2 வராகன் (7 கிராம்) |
| கிராம்பு | - | 2 " |
| சுக்கு | - | ¼ " (1.3 கிராம்) |
| அக்கிராக்காரம் | - | ¼ " |
| கோட்டம் | - | ¼ " |
| கோரோசனை | - | ¼ " |

இவற்றைப் பஞ்சமூலக் கஷாயத்திலே அரைத்துக் கொடுக்கவும்.
தீரும் நோய் - தாபசுரம்

## திரண்டு புரண்டு வலிக்கிற வயிற்று வலிக்கு மருந்து

| | |
|---|---|
| பெருங்காயம்<br>ஏலம்<br>கொடுவேலிவேர்<br>வசம்பு<br>சிறுதேக்கு<br>கோட்டம்<br>இந்துப்பு<br>ஓமம் | சம அளவு |

இவற்றை அரைத்துக் கொடுக்கவும்.
அனுபானம் - இளவெந்நீர், வெள்ளாட்டுப்பால்
தீரும் நோய் - திரண்டு, புரண்டு வலிக்கிற வயிற்று வலி

## தோடங்களுக்கு நாக்கு சுத்தி பண்ண வாத தோடத்துக்கு மருந்து

| | |
|---|---|
| அதிமதுரம்<br>திப்பிலி<br>சந்தனம்<br>கற்கண்டு | சம அளவு |

இவற்றைக் கூட்டியரைத்து நாக்கில் தேய்த்துக் கொப்பளிக்கவும்.

திரும் நோய் - வாத தோடம்

### நாலாமுறை காய்ச்சலுக்கும், ஆறுமாத பழஞ்சுரத்திற்கும் மருந்து

முற்றிய மூக்கிரட்டை வேர்
மஞ்சள் - எலுமிச்சங்காயளவு

மூக்கிரட்டை வேரைப் புறணி போக்கி அரைத்து, மஞ்சளும் கூட்டிக் கொடுக்கவும்.

அனுபானம் - இளவெந்நீர்
தீரும் நோய் - நாலாமுறைக்காய்ச்சல், ஆறு மாதப் பழஞ்சுரம்

### நாள்சென்ற சுரம், கட்டி, அடிவயிறு கெண்டை விழுந்தால் மருந்து

முந்திரிகைப்பழம்
பேரிச்சம்பழம்
அதிமதுரம்
கடுக்காய்
கோவைப்பழவிதை
} வகைக்கு ஒன்று

சிவதை - 6
சர்க்கரை - 12 பலம் (420 கிராம்)

இவற்றை அரைத்து உருண்டை பண்ணிக் கொடுக்கவும்.

அளவு - ஒரு உருண்டை
காலம் - அதிகாலை
தீரும் நோய்கள் - நாள்சென்ற சுரம், கட்டி, அடிவயிறு, கெண்டை விழுதல்

### நினைவு தெரியாமல் விலங்கிலே போட்ட பைத்தியத்திற்கு மருந்து

பூநாகம் மாங்காயளவு, முலைப்பாலிலே அரைத்து 1 நாழி (1.3 லிட்) முலைப்பாலில் கலந்து கொடுக்கவும்.

காலம் - மூன்று நாள்
தீரும் நோய் - நினைவு தெரியாமல் விலங்கிலே போட்ட பைத்தியம்

## நீரருகலுக்கு மருந்து

கல்நண்டை தண்ணீரிலாவது, கொதிகஞ்சியிலாவது உரைத்துக் கொடுக்கவும்.
திரும் நோய் - நீரருகல்

## நீர்க்கடுப்பு, நீர் எரிவுக்கு மருந்து

கோரைக் கிழங்கு, ஓரிலைத் தாமரை, ஏலம் கூட்டி அரைத்து மோர் அல்லது நீரில் கரைத்துக் குடிக்கவும்.
தீரும் நோய் - நீர்க் கடுப்பு, நீர் எரிவு

## நீர்க்கடுப்பு, நீர்க்கட்டு, நீர் எரிச்சலுக்கு மருந்து

இளநீரில் 5 தேற்றான் கொட்டையைப் போட்டு அவித்து அதனுடன் கற்றாழை மணியும், சீனியும் வெண்காரமும் பொரித்து இளநீரில் அரைத்துக் குடிக்கவும்.
தீரும் நோய் - எரிப்புக் கடுப்பு

## நீர்க்கடுப்புக்கு மருந்து

கற்கண்டு
அதிமதுரம் } சம அளவு
சீரகம்

இவற்றை அரைத்து வெண்ணெயில் குழப்பிக் கொடுக்கவும். (கோழிக் காரத்தை விளக்கெண்ணெயில் கலந்து வயிற்றில் பூசவும்)

## நீர் சிவந்து இறங்கினால் மருந்து

வேப்பங்கொழுந்து } சம அளவு
சீரகம்

இவற்றைப் பால் வார்த்தரைத்துக் கரைத்துக் குடிக்கவும்.
தீரும் நோய் - நீர் சிவந்து இறங்குவது

## நீர்ப்பாடு கோப்பாட்டுக்கு மருந்து

சாரணை வேரில் உப்பு அரைத்துப் பூசி சுட்டு, அரைத்து இளவெந்நீரில் கொடுக்கவும்.
அளவு - பாக்களவு
தீரும் நோய்கள் - நீர்ப்பாடு, கோப்பாடு, கழிச்சல்

## நெஞ்சடைப்புக் கொதிப்பு குறுகுறுப்புக்கு மருந்து

கிராம்பு - 1 வராகன் (3.5 கிராம்)

இதனைப் பொடித்துப் பசுவின் பாலில் கலந்து, அஞ்சு ஓடு காய்ச்சி, இதில் போட்டுக் குடிக்கவும்.

காலம் - மூன்று நாள்
தீரும் நோய்கள் - நெஞ்சடைப்பு, கொதிப்பு, குறுகுறுப்பு

## வீக்கத்திற்கு மருந்து

வெள்ளறுகு
ஆடுதின்னாப்பாளை
சங்கங்குப்பி இலை
எருக்கம்பூ
பொடுதலை
} சம எடை

இவற்றை வேப்பெண்ணெய் விட்டுத் துவைத்து வெதுப்பிக் கட்டவும்.
தீரும் நோய் - வீக்கம்

## பக்கசூலை, இசிவு வாய்வு இருவாய்வும் கட்டினத்துக்கு மருந்து

முற்றின தேங்காய் கீற்றுக் கீற்றாக கீறிக் கலசத்தில் போட்டு, கள்ளிப்பால் நிரம்ப வார்த்து அதில் பஞ்சலவணம் (இந்துப்பு, கல்லுப்பு, வெடியுப்பு, கரியுப்பு, வளையலுப்பு) 5 பலம் (175 கிராம்) பொடித்துப் போட்டு சீலைமண் செய்து, பால்சுவற எரியிட்டு எடுத்து அரைத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

இதில் ஒரு பாக்களவு எடுத்து, லோகச்செந்தூரம் 1 பணவெடை (488 மி.கிராம்) கூட்டிக் கொடுக்கவும்.
தீரும் நோய்கள் - பக்கசூலை, இசிவு வாய்வு, இருவாய்வு கட்டினது

## பக்குவப்படாத பிள்ளைக்கு மருந்து

நெல்லிமுள்ளி - 1 வெருகடி (1 சிட்டிகை)
சீரகம் - 1 வெருகடி (1 சிட்டிகை)

இவற்றை அரைத்துக் கொடுக்கவும்.

அனுபானம் - பசுவின் பால்
காலம் - ஐந்து பொழுது
விளைவு - பக்குவப்படாத பிள்ளைப் பக்குவப்படும்

## பல்நோவுக்கு மருந்து

மான்கொம்பு சீவி சாராயத்திலே காய்ச்சிக் கொப்பளிக்கவும்.

தீரும் நோய் - பல் நோவு

## பல்லசைவுக்கு மருந்து

கற்றாழை வேர், சருகு
கடுக்காய்
தண்ணீர் - 2 நாழி (2.6 லிட்)

இவற்றை உரியாகக் (672 மி.லிட்) காய்ச்சி பல் தேய்த்துக் கொப்பளிக்கவும்.

தீரும் நோய் - பல்லசைவு

## பவுத்திரத்துக்கு மருந்து

கஸ்தூரி மஞ்சள் அரைத்த விழுது பாக்களவு கொடுக்கவும்.

பத்தியம் - கார்ப்பு, புளிப்பு தவிரவும்
தீரும் நோய் - பவுத்திரம்

## பாண்டு சூசிகா வாய்வுக்கு மருந்து

கிட்டம் வெள்ளாட்டுக் கோமியத்தில் மூன்று தரம் காய்ச்சிப் பொடி பண்ணிக் கொண்டு, அதில் 1 வராகன் (3.5 கிராம்) கருணை பிரண்டை இரண்டும் கூட்டி அரைத்துக் கொடுக்கவும்.

பத்தியம் - உப்பில்லாமல் மோரும் சோறும்
தீரும் நோய்கள் - பாண்டு, சூசிகா வாய்வு

## பித்த குன்மத்திற்கு மருந்து

கடுகு
பனைமுட்டி
வெள்ளுள்ளி
} சமன்

குப்பைமேனிஇலை - ஒரு பிடி

இவற்றைக் கூட்டி அரைத்து விளக்கெண்ணெயில் போட்டுச் சூரிய வெப்பத்தில் வைத்து எடுத்து வைத்துக் கொள்ளவும்.

அளவு - எலுமிச்சங்காயளவு

தீரும் நோய் - பித்த குன்மம்

## பித்த தோடத்திற்கு மருந்து

தாமரைக்கிழங்கு
செங்கழுநீர்க்கிழங்கு
இலுப்பைப்பூ
ஏலம்
இலவங்கம்

இவற்றைக் கூட்டியரைத்து நாக்கில் தேய்த்துக் கொப்பளிக்கவும்.

தீரும் நோய் - பித்த தோடம்

## பித்தத்திற்கு மருந்து

**துத்தியின் வேருந் தானும் துய்யதோர் நிம்பப் பண்டும்**
**பத்திய சீர கத்தில் பாங்குட னரைத்துக் கூட்டி**
**மெத்தியே மூன்று நாளும் விதமுடம் கொள்வீ ராகில்**
**முத்திய பித்தந் தானும் முரிந்திடும் கண்ட தாமே**

(பொருள்) இதில் பித்தம் அதிகரித்ததற்குக் கற்கம் கூறப்படுகிறது.

துத்திவேர்
சீரகம் } இவை சரிநிறை

இவற்றை எலுமிச்சம்பழச்சாற்றில் அரைத்து 3 நாள் கொள்ள வேண்டும்.

தீரும் நோய் - அதிகரித்த பித்தம்

## பிரமியத்திற்கு மருந்து

புண்ணாக்கு - 1 சேர் (280 கிராம்)
வெள்ளைப்பூண்டு- 1 சேர் (280 கிராம்)

இவற்றைக் கூட்டி இடித்து உண்ணவும்.

| | | |
|---|---|---|
| அனுபானம் | - | நல்லெண்ணெய் |
| காலம் | - | மூன்று நாள் |
| தீரும் நோய் | - | பிரமியம் |

## பிரமியத்திற்கு மருந்து (வேறு)

| | | |
|---|---|---|
| மஞ்சள் | - | *4 பலம் (140 கிராம்)* |
| மிளகு | - | *2 பலம் (70 கிராம்)* |
| சுக்கு | - | *2 பலம் (70 கிராம்)* |
| ஏலம் | - | *2 வராகன் (7 கிராம்)* |
| கிராம்பு | - | *2 வராகன் (7 கிராம்)* |
| வெண்காரம் | - | *2 வராகன் (7 கிராம்)* |
| நல்ல வெல்லம் | - | *4 பலம் (140 கிராம்)* |
| நல்லெண்ணெய் | - | *1 சேர் (280 கிராம்)* |

இவையெல்லாம் ஒன்றாய்க் கூட்டி மத்தித்து வைத்துக் கொண்டு சிறு எலுமிச்சங்காயளவு உருண்டைகளாக உருட்டிக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | எலுமிச்சங்காயளவு |
| அனுபானம் | - | நீராகாரம் (1.3 லிட்.) |
| பத்தியம் | - | உப்பு,புளி ஆகாது |
| தீரும் நோய்கள் | - | இரத்தப் பிரமியம், சீப்பிரமியம், உஷ்ணம் |

## புறநீர்க்கட்டுக்கும் வீக்கத்துக்கும் மருந்து

| | | |
|---|---|---|
| பிண்ணாக்கு இடித்தபொடி | - | *33/4 பலம் (116.66 கிராம்)* |
| திப்பிலி | - | *2 பலம் (70 கிராம்)* |
| வெந்தயம் | - | *1 பலம் (35 கிராம்)* |
| வெள்வெங்காயம் | - | *2 பலம் (70 கிராம்)* |
| அசமதாகம் | - | *2 பலம் (70 கிராம்)* |
| பெருங்காயம் | - | *1 பலம் (35 கிராம்)* |
| இந்துப்பு | - | *½ பலம் (17.5 கிராம்)* |
| கடுகு | - | *1 பலம் (35 கிராம்)* |
| சீனாக்காரம் | - | *½ பலம் (17.5 கிராம்)* |
| வெடியுப்பு | - | *¼ பலம் (8.75 கிராம்)* |
| உப்பு | - | *¼ பலம் (8.75 கிராம்)* |

| | | |
|---|---|---|
| இஞ்சி | - | 3 பலம் (105 கிராம்) |
| நீர்முள்ளி | - | 3 பலம் (105 கிராம்) |

நீர்முள்ளி சமூலத்தை சிறுக நறுக்கி 2 நாழிகை (48 நிமிடம்) இடித்து, புதுப்பானையில் போட்டு அத்துடன் மற்ற சரக்குகளைப் பொடித்துப் போட்டு வெய்யிலில் வைத்து கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | எலுமிச்சங்காயளவு |
| அனுபானம் | - | தண்ணீர் |
| காலம் | - | காலை, மாலை |
| தீரும் நோய் | - | புறநீர்க்கட்டு, உடம்பு வீக்கம் |

## பெண்கள் ருதுவாக மருந்து

| | | |
|---|---|---|
| நெல்லிப் பருப்பு | - | 4 வராகன் (12.20 கிராம்) |
| நற்சீரகம் | - | 2 வராகன் (6.15 கிராம்) |
| மிளகு | - | 5 |

நெல்லிப்பருப்பை ஊறப்போட்டு, எடுத்து நற்சீரகம், மிளகு கூட்டி பசுவின் தயிரில் அரைத்து, ஒரு படி தயிரில் குழப்பி வைத்துக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| காலம் | - | மூன்று நாள் (மதியம்) |
| பத்தியம் | - | உப்பு, புளிப்பு தவிரவும் வெந்நீர் கொள்ளவும் |
| விளைவு | - | பெண் ருதுவாக |

## பெரும்பாட்டிற்கு மருந்து

| | | |
|---|---|---|
| வில்வ இலை அரைத்த விழுது | - | எலுமிச்சங்காயளவு |
| பசுவின் வெண்ணெய் | - | எலுமிச்சங்காயளவு |

இவற்றைக் கூட்டிக் கொடுக்கவும்.

| | | |
|---|---|---|
| காலம் | - | மூன்று நாள் (காலை, மாலை) |
| பத்தியம் | - | புளி, புகையிலை தவிரவும் |
| தீரும் நோய் | - | பெரும்பாடு |

## பெரும்பாட்டிற்கு மருந்து (வேறு)

| | | |
|---|---|---|
| கலங்கொம்பு | - | 1 பாக்களவு |
| சந்தனம் | - | " |
| பொன்னாங்காணிவேர்- | | " |
| எருமைத்தயிர் | - | 1 நாழி (1.3 லிட்) |

இவற்றைக் கூட்டிக் கொடுக்கவும்.

| | | |
|---|---|---|
| தீரும் நோய் | - | பெரும்பாடு |

## பெரும்பாட்டிற்கு மருந்து (வேறு)

விடத்தேர்
கருவேல் இலை } சரி நிறை
வெள்ளெருக்கம் வேர்

இவற்றைப் பாக்களவு அரைத்து நல்லெண்ணெயில் குழப்பிக் கொடுக்கவும்.

காலம் - மூன்று நாள்
தீரும் நோய் - பெரும்பாடு

## பெரும்பாடு, வெள்ளை விழுகிறதற்கு மருந்து

தாமரை இலை நான்கு

இதனைச் சிறுக அரிந்து, சட்டியில் போட்டு அதில் ஒருபடி (2.65 லிட்) பசுவின் பால் விட்டுக் காய்ச்சி எடுத்து அரைத்து உண்டை பண்ணி வைத்துக் கொள்ளவும்.

அளவு - கொட்டைப் பாக்களவு
காலம் - ஆறு நாள் (காலை, மாலை)
தீரும் நோய் - பெரும்பாடு, வெள்ளை விழுகிறதுக்கு

## பைத்தியத்திற்கு மருந்து

வேப்பஞ்சாறு - 1 சிறங்கை
நற்சீரகம் - 1 சிறங்கை

நற்சீரகம் அரைத்து வேப்பஞ்சாற்றில் கூட்டிக் கொடுக்கவும்.
தீரும் நோய் - பைத்தியம்

## பைத்தியத்திற்கு மருந்து (வேறு)

ஒரு தேற்றான் பழமும், காயும் கொண்டை நீக்கி, காடி வார்த்து, மூன்று நாள் அரைத்து வில்லை பண்ணிக் கொடுக்கவும். வில்லையை நசியம் பண்ணவும்

அனுபானம் - சாராயம், சிறுநீர்
பத்தியம் - முருங்கைக்காய்,
முருங்கைஇலை, துவரை,பாசிப்பயறு,
பசுவின்பால், வெந்நீர் கொள்ளவும்
தீரும் நோய் - பைத்தியம்

## பைத்தியத்திற்கு மருந்து (வேறு)

மருக்காரைப் பழத்தின்உள்சதை எடுத்து, பிசைந்து, சிரங்கை வடிகட்டி காடியில் கரைத்துக் கொடுக்கவும்.

காலம் - மூன்று பொழுது
தீரும் நோய் - பைத்தியம்

## பைத்தியத்திற்கு மருந்து (வேறு)

கழுதைப்பால் - 1 சிரங்கை
எலுமிச்சம்பழச்சாறு - 1 சிரங்கை
சர்க்கரை - 2 தேக்கரண்டி

இவற்றைக் கூட்டிக் கொடுக்கவும்.

காலம் - எட்டு நாள்
பத்தியம் - பச்சைத்தவளை இரண்டொன்று புளியிட்டு சமைத்துச் சாப்பிடவும். தாழம் விழுதுச்சாறு இரண்டு நாளைக்கொரு முறை தேய்த்து முழுகவும்.
தீரும் நோய் - பைத்தியம்

## பைத்தியம் உப்புசந்துக்கு மருந்து

முசுறு முட்டை
சீரகம்
முசுமுசுக்கைச்சாறு

இவற்றோடு கழுதைப்பாலும் சர்க்கரையும் சேர்த்துக் கொடுக்கவும்.
தீரும் நோய் - பைத்தியம்

## மதுமேக நீரிழிவுக்கு மருந்து

பொன்னாங்காணியும் பருத்திக்கொட்டையும் சம அளவில் வெந்நீர் விட்டு அரைத்துக் கொள்ளவும்.

அளவு - கொட்டைப்பாக்களவு
தீரும் நோய் - மதுமேக நீரிழிவு

### மயக்கம், தாபசோபத்துக்கு மருந்து

*சீனாக்காரம்*
*திப்பிலி*
*மலைதாங்கிவேர்*

இவற்றை முலைப்பாலில் அரைத்துக் கொள்ளவும்.
அனுபானம் - தேன்
தீரும் நோய்கள்- மயக்கம், தாபசோபம்

### மயக்கம், நாவறட்சிக்கு மருந்து

*கற்பூரம்*
*சந்தனம்*
*உத்திராட்சம்*

இவற்றை முலைப்பாலில் அரைத்து நாவில் தடவ வேண்டும்.
தீரும் நோய்கள் - மயக்கம், தவனம், நாவறட்சி, ஆரோட்டம்

### மலசலம் கட்டினால் உள்ளுக்கு மருந்து

சீந்தில் தண்டுச்சாற்றில், சிறிது துரிசு பொடி போட்டுக் கொடுக்கவும்.
தீரும் நோய் - மலசலம் கட்டு

### மலட்டு வலிக்கு மருந்து

பெருங்காயம், வெள்ளுள்ளியும் அரைத்துக் கறுத்த கம்பளியும் சுட்டுக் கட்டி இளவெந்நீரில் கரைத்துக் கொடுக்க சீக்கிரம் வலி நிற்கும்.

### மறதிக்கு மருந்து

வசம்பு - ஒரு இறையளவு (ஒரு கையளவு)
பசுவின் வெண்ணெய் - எலுமிச்சங்காயளவு

வசம்பை, வெண்ணெயில் வைத்து விழுங்கவும்.
காலம் - அரை மண்டலம் (20 நாட்கள்)
தீரும் நோய் - மறதி

### மூர்ச்சை வாய்வுக்கு மருந்து

நாவல் பட்டையை பசுவின் பாலில் அரைத்துக் கொடுக்கவும்.
காலம் - எட்டு நாள்
தீரும் நோய் - மூர்ச்சை வாய்வு

## வயிற்றாலே தண்ணீராய்க் கழிவதற்கு மருந்து

வெந்தயம்
அதிவிடையம்
வெளுத்த பிசின்
வசம்பு
சந்தனம்
} சம அளவு

இவற்றைச் சோற்றுக் கற்றாழை விழுதுச்சாறு வார்த்தரைத்து நல்லெண்ணெயில் வேக வைத்துக் கொடுக்கவும்.

தீரும் நோய் - வயிற்றாலே தண்ணீராய்க் கழிதல்

## வயிற்று வலிக்கு மருந்து

செங்கழுநீர்
கோட்டம்
} சரியளவு

இவற்றை அரைத்துக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | பாக்களவு |
| அனுபானம் | - | சாராயம் அல்லது இளவெந்நீர் |
| தீரும் நோய் | - | வயிற்று வலி |

## வயிற்று வலிக்கு மருந்து (வேறு)

காவேளைவேர்ப்பட்டை
அரசம் வேர்

இவற்றை அரைத்துப் பெரிய பாக்களவு எடுத்துக் கொள்ளவும். இத்துடன் வெள்ளைப்பூண்டு பாக்களவு அரைத்துச் சேர்த்துச் கொடுக்கவும்.

| | | |
|---|---|---|
| காலம் | - | 3 நாட்கள் |
| பத்தியம் | - | அனல் கண்டால் பசுவின் நெய் சேர்க்கவும் |
| தீரும் நோய் | - | வயிற்று வலி |

## வாந்தி பண்ண மருந்து

நஞ்சறுப்பான் (சிறுபாலை அல்லது குளப்பாலை) வேரை அரைத்துக் கொடுக்கவும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | பெரிய பாக்களவு |
| விளைவு | - | வாந்தி வரும் |

## வாந்தி மாற மருந்து

எலுமிச்சங்காயை நான்காகப் பிளந்து உப்பும் மஞ்சளும் அரைத்து, உட்பக்கமும் வெளிப்பக்கமும் பொதிந்தாற் போல பூசிச் சுட்டு உள்ளுக்குக் கொடுக்கவும்.

விளைவு - வாந்தி நிற்கும்

## வாய்வுக்கு மருந்து

பெருங்காயம்
கிராம்பு
கழல் பருப்பு

இவற்றை சம அளவு எடுத்துக் கொள்ளவும். நேர்வாளத்தின் முளையை நீக்கிவிட்டு, ஆமணக்கின் விதையைச் சேர்த்துக் கொள்ளவும். பின்னர் ஆமணக்கெண்ணெயில் கலந்து கொள்ளவும்.

அனுபானம் - நொச்சிக் கஷாயம்
தீரும் நோய் - வாய்வு

## விக்கலுக்கு மருந்து

மயிலிறகு சுட்ட சாம்பல்
திப்பிலி
குளவிக்கூடு
நண்டு இரத்தம்
அதிமதுரம்
சர்க்கரை
தேன்
} சம அளவு

இவற்றை நன்றாக அரைத்து நாக்கில் தடவவும்.

தீரும் நோய் - விக்கல்

## விக்கலுக்கு மருந்து (வேறு)

மாதுளங்காயின் உள்தோல்
சுக்கு
மிளகு
திப்பிலி
இந்துப்பு

இவற்றைச் சமஅளவு எடுத்துத், தூளாக்கிக் கொண்டுத் தேனில் குழைத்துக் கதுப்பில் அடக்கவும்.

தீரும் நோய் - விக்கல்

## விடபாகம், பாண்டு சோகைக்கு மருந்து

| | | |
|---|---|---|
| விளக்கெண்ணெய் | - | உழக்கு (336 மி.லிட்) |
| கழுதைவிட்டைச்சாறு | | |
| நீர்முள்ளிச்சாறு | - | ” ” |
| நெருஞ்சிச்சாறு | | |
| செம்பையிலைச்சாறு | - | ” ” |
| கடுக்காய் | - | 15 |
| சிறுகுரட்டைக்கிழங்கு | - | 2 பலம் (70 கிராம்) |
| கோழியவரை | - | ¾ உழக்கு (252 மி.லிட்) |
| செருப்படி | - | ¾ உழக்கு (252 மி.லிட்) |
| மணத்தக்காளி | - | ¾ உழக்கு (252 மி.லிட்) |
| சங்கம் வேர் | - | 1 பலம் (35 கிராம்) |
| கருஞ்சீரகம் | - | ½ பலம் (17.5 கிராம்) |
| உள்ளி | | |
| வசம்பு | | |

இவற்றைக் கூட்டி எரித்து நக்கவும்.
தீரும் நோய் - விஷபாகம், வீக்கம்

## வைசூரி, காய்ச்சலுக்கு மருந்து

செப்புநெருஞ்சி வேரையரைத்து ஈரவெங்காயம் போட்டுப் பிசைந்து கலக்கிக் குடிக்கவும்.
தீரும் நோய்கள் - வைசூரி, காய்ச்சல்

# எண்ணெய்

## அபிகா சிலேட்டுமத்திற்கு எண்ணெய்

| | | |
|---|---|---|
| தூதுவளைச்சாறு | - | 1 வராகன் (3.5 கிராம்) |
| கையாந்தகரைச்சாறு | - | ¼ படி (650 மி.லிட்டர்) |
| பெரும்பீளைச்சாறு | - | ” ” |
| கீழாநெல்லிச்சாறு | - | ” ” |
| பொடுதலைச்சாறு | - | ” ” |
| பேராமுட்டிச்சாறு | - | ” ” |
| கண்டங்கத்தரிச்சாறு | - | ” ” |

இவற்றின் சாறோடு,

| | | |
|---|---|---|
| திரிகடுகு (சுக்கு, மிளகு, திப்பிலி | - | ½ பலம் (17.50 கிராம்) |
| வெட்பாலையரிசி | - | ” ” |
| அழிஞ்சில் பருப்பு | - | ” ” |
| செவ்வியம் | - | ” ” |
| சிறுமூலம் | - | ” ” |
| கிராம்பு | - | ” ” |
| கார்போகவரிசி | - | ” ” |
| ஏலம் | - | ” ” |
| அதிவிடையம் | - | ” ” |
| அரேணுகம் | - | ” ” |
| அசமதாகம் | - | ” ” |
| பெருங்குரும்பை | - | ” ” |
| சிறுதேக்கு | - | ” ” |
| இருவேலிவேர் | - | ” ” |
| இம்பூரல் வேர் | - | ” ” |

ஆகியவற்றைக் கூட்டி, ஒருபடி (2.65 லிட்டர்) நல்லெண்ணெயில் கூட்டிக் காய்ச்சி வைத்துக் கொள்ளவும்

| | | |
|---|---|---|
| அனுபானம் | - | தேன் |
| தீரும் நோய் | - | அபிகா சிலேட்டுமம் |

## அரக்கெண்ணெய்

| | | |
|---|---|---|
| நல்லெண்ணெய் | - | 2 படி (2.65 லிட்டர்) |
| பசுவின் பால் | - | ” ” |
| அரக்கு | - | 25 பலம் (875 கிராம்) |
| தண்ணீர் | - | 1 பதக்கு (10.7 லிட்டர்) |

இவற்றை நாலில் ஒன்றாகக் காய்ச்சி, அதில்

| | |
|---|---|
| இலுப்பைப்பூ<br>மிளகு<br>அதிமதுரம்<br>வெட்டிவேர்<br>விலாமிச்சம்வேர்<br>சந்தனம் | வகைக்கு 1 பலம் (35 கிராம்) |

இவற்றைக் கூட்டி, மேற்கூறிய எண்ணெயில் விட்டுக் காய்ச்சி வடித்து வைத்துக் கொள்ளவும்.

அளவு - 1 காசெடை உள்ளுக்குக் கொடுக்கவும்
(மேலுக்கும் இடவும்)
தீரும் நோய்கள்- உட்டிணம், பித்தசுரம்

## அற்புத வாதத்திற்கு எண்ணெய்

நல்லெண்ணெய் - 1 நாழி (1.3 லிட்டர்)
எருக்கம்பழுப்புச்சாறு - 1 நாழி (1.3 லிட்டர்)
இலைக்கள்ளி இலைச்சாறு - 1 நாழி (1.3 லிட்டர்)
இவற்றினோடு
வெள்ளுள்ளி - 1 பலம் (35 கிராம்)
வசம்பு - ”
எலிச்செவிவேர்- ”
ஆகியவற்றை அரைத்துக் கரைத்துக் காய்ச்சி வடித்து வைத்துக் கொள்ளவும்.
அளவு - நான்கு நாளைக்கு ஒருமுறை தலையில் தேய்த்து முழுகவும்.
(நரம்பு, இசிவான இடத்திலும் தேய்க்கவும்)
தீரும் நோய் - அற்புத வாதம்

## அற்புத வாதத்திற்கு எண்ணெய் (வேறு)

எருக்கிலையை ஆவியில் சிறிது அவித்துத் துவைத்துச் சாறு பிழிந்து இந்தச் சாற்றில்
மஞ்சள் - ¼ பலம் (8.75 கிராம்)
கரைத்துக் காய்ச்சி வைத்துக் கொள்ளவும். (வாதமான பாரிசத்தில் பூசவும்.)
தீரும் நோய் - வாத பாரிசம்

## இரத்தப் பீனிசத்திற்கு எண்ணெய்

நல்லெண்ணெய் - 2 உரி (13.44 லிட்டர்)
நெய் - 1 ” (672 ” )
பால் - 4 ” (2.688 லிட்டர்)
நொச்சிச்சாறு - 1 ” (672 ” )
பேய்மருட்டிச்சாறு - ”
எலுமிச்சம்பழச்சாறு - ”
பொன்னாங்காணிச்சாறு- ”

உள்ளி - 1 பலம் (35 கிராம்)
வசம்பு - ”

இவற்றைக் கூட்டி எரித்து வைத்துக் கொள்ளவும். (தலைக்கிட்டு உள்ளுக்கும் கொடுக்கவும்)
தீரும் நோய் - இரத்தப் பீனிசம்

## இரத்தம் சீவிழுகிற உள்மூலத்திற்கு எண்ணெய்

கடுக்காய் - 2 கழஞ்சு (8.8 கிராம்)
வேப்பம்புண்ணாக்கு - 2 கழஞ்சு (8.8 கிராம்)

இவற்றைப் பிரண்டைச் சாற்றில் அரைத்து, விளக்கெண்ணெயில் குழப்பி முழுகவும்.

அளவு - மூன்று நாள்
தீரும் நோய் - இரத்தம் சீவிழுகிற உள்மூலம்

## இருமல் உப்பிசத்திற்குக் கந்தக எண்ணெய்

இரசம் - ½ பலம் (17.50 கிராம்)
கந்தகம் - ” ”

இவற்றைக் கறுப்பு ஊமத்தைச் சாறு வார்த்து அரைத்து, சீலையில் தடவி, வேப்பெண்ணெயிலும், நல்லெண்ணெயிலும் தோய்த்துக் கொளுத்தி, தலைகீழாகப் பிடிக்கத் தைலம் விழும். இதனை வெற்றிலையில் வைத்துச் சாப்பிடவும்.

அளவு - 1 பணவெடை (288 கிராம்)
தீரும் நோய்கள்- இருமல், உப்பிசம், பாண்டு, சோபை, அசீரணம், மந்தம்

## இருமல் நாவறண்டால் எண்ணெய்

வேப்பெண்ணெய்- 1 உழக்கு (336 மி. லிட்டர்)
பூவன்பழம் - 20
நேர்வாளம் - 5

பூவன்பழம், நேர்வாளம் இவற்றைக் கூட்டி அரைத்து, எண்ணெயில் போட்டு எரித்து வடித்து வைத்துக் கொள்ளவும். (நாவில் தடவவும்)
தீரும் நோய்கள் - இருமல், நாவறட்சி

## ஈளை, இருமல் சயரோகம் குரல் நெரிவிற்கு எண்ணெய்

எலுமிச்சம்பழம் - 40

இவற்றைச் சாறு பிழிந்துகொண்டு

நாட்டு மிளகு - 5 பலம் (175 கிராம்)

கொண்டு வந்து, எலுமிச்சம் பழச்சாறு வார்த்து, அரைத்து, எண்ணெய்க்கலயம் கழுவிப்போட்டு வெயிலிலே காயவைத்து, மிளகு விழுதை அதில் போட்டு,

நல்லெண்ணெய் - 1 குறுணி

விட்டு, இதனைச் சூரியப்புடமாக வைத்து, எடுத்து வேடுகட்டி வைத்துக் கொள்ளவும்.

காலம் - மூன்று நாளைக்கொருமுறை தேய்த்து அரப்புத் தேய்த்து, வெந்நீரில் குளிக்கவும். நான்குமுறை இவ்வாறு குளிக்கவும்.

பத்தியம் - பாலும் சோறும்

தீரும் நோய்கள் - ஈளை, இருமல், சயரோகம், குரல் நெரிவு

## உளமாந்தைக்கு எண்ணெய்

சாதிக்காய்
சாதிபத்திரி
அதிமதுரம்
செஞ்சந்தனம் } சமனெடை

இவற்றை அரைத்து

எண்ணெய் - 1 உரி (672 மி.லிட்டர்)

கொடுப்பைச்சாறு- " "

ஆகியவற்றினோடு கலந்து மெழுகு பதத்தில் காய்ச்சி முழுகவும்

பத்தியம் - புளித்தவிரவும்

தீரும் நோய் - உளமாந்தை

## எந்தப் பீனிசத்திற்கும் எண்ணெய்

தேங்காய் எண்ணெய் - ¾ படி (1.987 லிட்டர்)

பசுவின் நெய் - "

அறுகம்வேர் சாறு - 1 உழக்கு (336 மி.லிட்டர்)
இவற்றைக் கூட்டிக் கொதிக்க வைத்து,

| | | |
|---|---|---|
| கோட்டம் | - | 3 வராகன் (10.5கிராம்) |
| ஏலம் | - | ” ” |
| வெண்காரம் | - | ” ” |

இவற்றைப் பொடி பண்ணி, மேற்படி எண்ணெயில் போட்டுக் காய்ச்சி, பதத்தில் இறக்கி வைத்துக் கொள்ளவும். இரண்டு காதிலும், மூக்கிலும் நசியம் விட்டுத் தலைக்குத் தேய்த்து முழுகவும்.
தீரும் நோய் - எட்டுவகை பீனிசம்

## எலிக்கடிக்கு எண்ணெய்

அவுரி
ஊமத்தை
துளசி
நொச்சி
தக்காளி
அமுக்கரா
பாகல்
கள்ளிப்பால்
இலைக்கள்ளிக்கொழுந்துவேர்
பெருமருந்து வேர்
பாதாளமூலி
சின்னி
கமுகு
மணத்தக்காளி
புங்கம்பட்டை
வெள்ளுள்ளித்தைலம்
வேப்பம்பட்டை
பேய்த்துமட்டி
நாயுருவி
சாணாக்கி
வேலிப்பருத்தி
வெற்றிலை
மாவிலங்கை
கையாந்தகரை
கஞ்சாங்கோரை

} வகைக்கு ¾ பங்கு

இவற்றினோடு

திரிபலை
திரிகடுகு
(சுக்கு, மிளகு, திப்பிலி)
பெருங்காயம் — வகைக்கு 1 கழஞ்சு (4.4 கிராம்)
அவுரிவேர்
குன்றிமணிவேர்
மரமஞ்சள்
சாரணைவேர்
வெள்ளைக்காக்கணாம் வேர் ”
வட்டக்கிலுகிலுப்பை வேர் ”
கொடிவேலிவேர்

ஆகியவற்றை அரைத்துக் கரைத்து, அதில்

| | | |
|---|---|---|
| வேப்பெண்ணெய்- | 1 உழக்கு | (336 மி.லிட்டர்) |
| நெய் - | ” | ” |
| விளக்கெண்ணெய்- | ” | ” |

கூட்டி வடித்து நக்கவும்.
தீரும் நோய் - எலிக்கடி

## எலும்புருக்கி நோய்க்கு எண்ணெய்

வெள்ளைக் குங்கிலியம்
செப்பு நெருஞ்சி வேர்

இவற்றை அரைத்து வெல்லம் கூட்டி, நல்லெண்ணெயில் வேக வைத்துக் கொடுக்கவும்.
தீரும் நோய் - எலும்புருக்கி

## கடி விகாரங்களுக்கு எண்ணெய்

கோழியவரை
மணத்தக்காளி
குப்பைமேனி
செருப்படி
வெள்ளறுகு
சின்னியிலை
துளசி
சாரணை
செம்பை
பிரண்டை
கழற்கொடி

} வகைக்கு ¾ பங்கு

நல்லெண்ணெய் - ½ படி வராகன் (1.325 லிட்டர்)

இவற்றினோடு

| | |
|---|---|
| சுக்கு<br>மிளகு<br>திப்பிலிமூலம்<br>செவ்வியம்<br>சித்திரமூலம்<br>வெள்ளுள்ளி<br>வசம்பு<br>கம்பிப்பிசின்<br>தேற்றான்விதை<br>கருஞ்சீரகம்<br>ஓமம் | வகைக்கு 1 பலம் (35 கிராம்) |

ஆகியவற்றைக் கூட்டி உள்ளுக்கும் கொடுத்துத் தலைமுழுகி வரவும்.

தீரும் நோய்கள்- கடிவிகாரம், வாய்வு, வாதம், சன்னி, அந்திரவாய்வு, புழுவெட்டு

## கண்ணுக்குக் குளிர்ச்சி எண்ணெய்

| | |
|---|---|
| சீந்தில் சாறு<br>நெல்லிக்காய்ச்சாறு<br>முசுமுசுக்கைச்சாறு<br>கையாந்தகரைச்சாறு<br>தாழம்விழுதுச்சாறு<br>கற்றாழஞ்சாறு<br>பசுவின்பால்<br>எண்ணெய் | வகைக்கு 3 பங்கு |

இதில்

அதிமதுரம்
ஏலம்
இலவங்கம்பட்டை
கிராம்பு
கோட்டம்
சாதிக்காய்
முந்திரிகைப்பழம்
சதகுப்பை
சந்தனம்

செஞ்சந்தனம்
இலவங்கப்பத்திரி
இலாம்பிச்சம்வேர்
வெட்டிவேர்

இவற்றை அரைத்து, 1 படி எண்ணெய்க்கு (2.65 லிட்டர்), 1 பலம் (35 கிராம்) அரைத்த விழுது கரைத்து எரித்து வடித்து முழுகவும்.

விளைவு - கண்ணுக்குக் குளிர்ச்சி

## கண் வியாதிக்கு எண்ணெய்

நல்லெண்ணெய்
பசுவின்பால்
பொன்னாங்காணிச்சாறு
} சமனெடை

இதனோடு

பஞ்ச திரவியம்
(மிளகு, கோட்டம், அகில்
தக்கோலம், குங்குமம்)
நெல்லிப்பருப்பு
} சமனெடை

ஆகியவற்றைக் கலந்து எரித்து, வடித்து முழுகவும்.
தீரும் நோய் - கண் வியாதி

## கபால சன்னிக்கு எண்ணெய்

சிற்றாமுட்டிவேர்
சதகுப்பை
மிளகு
மஞ்சள்
கருஞ்சீரகம்
உள்ளி
வசம்பு
} சமனெடை

இவற்றில் எண்ணெய் வடித்துத் தலையில் பூசவும்.
தீரும் நோய் - கபால சன்னி

## கர்ப்ப விப்புருதிக்கு எண்ணெய்

| | | |
|---|---|---|
| வேப்பெண்ணெய் | - | 1 படி (2.65 லிட்டர்) |
| சாணாக்கிச்சாறு | - | 4 படி (10.60 லிட்டர்) |
| சோமனாதிப்பெருங்காயம் | - | 1 பலம் (35கிராம்) |
| வசம்பு | - | ½ பலம் (17.50 கிராம்) |

இவற்றை அரைத்து எண்ணெயில் போட்டு எரித்து வைத்துக் கொள்ளவும்.

அளவு - 1 காசெடை (இரண்டு நேரம்)
மாதவிடாய்க்கு மூன்று நாளைக்கு முன்னும்,
மாதவிடாய்க்குப் பின் மூன்று நாளும்
கொள்ளவும்.

தீரும் நோய்- கர்ப்ப விப்புருதி

## கர்ப்ப விப்புருதிக்கு எண்ணெய் (வேறு)

**ஆழாக்கு ஆமணக்கெண்ணெய் கொமட்டிச் சாறு**
**ஆவின்பா லளவு ஒரொன்று**
**தாளாத நிலஆவாரைச் சம்பீ ரத்தின்**
**கனிய ளவுதா னரைத்துக்**
**கூழாகக் கரைத்து இதிலக் காரநவச்**
**சாரமஞ் சள்குறை வண்ணம்**
**தூளாகு மஞ்ச ளொருகழஞ்சு மற்றமருந்து**
**ஈரண்டாத் துழாவிக் காய்ச்சே**

**காய்ச்சி வடித்து எண்ணெயொரு கரண்டி**
**கொண்டபின் வைத்துக் கனப்புக்கட்டி**
**ஒச்சமுள்ள கர்ப்ப சுரோணித வலிகள்**
**உதிரமுறைத் துருண்டை வாய்வு**
**மூச்சடைப்பு வீக்கம் வெப்புப் பாவை**
**மகோதரம் கவிசை முழுதும் கைகண்டு**
**ஆட்சியென முனிவ ரிந்த அவனிதனில்**
**வைத்தியருக்கு அருளி னாரே.**

கர்ப்ப விப்புருதிக்கு எண்ணெய் கூறப்படுகிறது. ,

ஆமணக்கெண்ணெய் 168 மி.லி. குமட்டிக்காய்ச் சாறு, ஆவின்பால், இவை வகைக்கு 168 மி.லி. நிலாவாரை எலுமிச்சம்பழ அளவு அரைத்து மேல் மருந்துகளுடன் கூழ்போல் கரைத்துக் கொள்ள வேண்டும். மஞ்சள்தூள் 4.4 கிராம் படிகாரம், நவச்சாரம் இவை வகைக்கு 8.8 கிராம் பொடித்து மேல் மருந்துகளுடன் கலந்து துழாவிக் காய்ச்சி வடிகட்டிக் கொள்ளவும்.

அளவு - ஒரு கரண்டி
தீரும் நோய்கள் - கர்ப்ப சுரோணித வலிகள், உதிரக்கட்டு, வாய்வு, மூச்சடைப்பு, வீக்கம், வெப்புப்பாவை, மகோதரம், கவிசை இவை தீரும்.

## கர்ப்பிணி சந்துவாதத்திற்கு எண்ணெய்

முடக்கொத்தான் சமூலம்
தழுதாழைவேர் இலை
கழற்சிக்கொட்டைப்பருப்பு
வசம்பு உள்ளி

இவற்றைக் காடி வார்த்தரைத்து வேப்பெண்ணெய், நல்லெண்ணெய் கூட்டி எரித்து, உள்ளுக்குக் கொடுத்து மேலுக்குமிடவும்.

தீரும் நோய் - கர்ப்பிணி சந்துவாதம்

## காசத்திற்கு எண்ணெய்

சந்தனம்
ஏலம்
செண்பகப்பூ
நெல்லிமுள்ளி
ஓரிதழ்த்தாமரைவேர்
நீர்ப்பூலாவேர்
பொன்னாங்காணிவேர்
தாளியிலை
அதிமதுரம்

இவற்றைப் பால் வார்த்தரைத்து நெய் கூட்டித் தலையில் தடவவும்.

தீரும் நோய் - காசம்

## கிறுசு வாய்விற்கு எண்ணெய்

நுணாஇலைச்சாறு
நல்லெண்ணெய் வகைக்கு படி (662 மி.லிட்டர்)

இவற்றைக் கலந்து கொடுக்கவும்.

பத்தியம் - வெந்நீர் குடிக்கவும்
தீரும் நோய் - கிறுசு வாய்வு

## கைகாலசதி, பேச்சசதி, ஒருபாரிச வாதத்திற்கு எண்ணெய்

முடக்கொத்தான்சாறு
வேலிப்பருத்திச்சாறு
நுணாஇலைச்சாறு
தழுதாழைச்சாறு
எருக்கம்பூச்சாறு
கொடிவேலிசமூலச்சாறு

இவற்றில்

| | |
|---|---|
| சுக்கு<br>மிளகு<br>வசம்பு<br>வெள்ளுள்ளி<br>கடுகு<br>நாக்குப்பூச்சி<br>பெருங்காயம் | வகைக்கு ½ பலம் (17.50 கிராம்) |

ஆகியவற்றைக் கூட்டி, இதில்

| | |
|---|---|
| எருக்கம்வேர்<br>மாவிலங்கைவேர்<br>முருங்கைவேர் | இவற்றின் விழுது விளாங்காயளவு |

முதலானதையும் கூட்டி, 1 படி (2.65 லிட்டர்) நல்லெண்ணெயில் எரித்து மெழுகு பதத்தில் வடித்து வைத்துக் கொள்ளவும்.

அளவு - 1 காசளவு நக்கவும், மேலுக்குப் பூசவும். (இந்த எண்ணெய் உள்ளுக்குக் கொடுக்காமல் பூத கலிக்கம் 1 துவரை அளவு கொடுத்து எண்ணெய் பூசவும்)

பத்தியம் - கார்ப்பு, புளிப்பு, சயித்தியம்

தீரும் நோய்கள் - கைகாலசதி, பேச்சசதி, ஒரு பாரிசவாதம்

## சகல சன்னிக்கு எண்ணெய்

| | |
|---|---|
| வேப்பெண்ணெய்<br>விளக்கெண்ணெய்<br>புங்கெண்ணெய்<br>காட்டாமணக்குவேர்<br>எட்டிவேர்<br>காவேளைவேர் | சமனெடை |

வில்வவேர்
சாரடை வேர்
வேலிப்பருத்தி வேர் — சமனெடை
விடத்தலைவேர்
செந்நாயுருவிவேர்
அவுரிவேர்
நெல்லிவேர்
நத்தைச்சூரிவேர்
சிறுகிளாவேர்
வேப்பம்வேர்
அழிஞ்சில்வேர்
நாரத்தைவேர்
கடுகு
மிளகு
வெள்ளுள்ளி
வசம்பு
அரத்தை
சதகுப்பை
மரமஞ்சள்
கடுகுரோகணி
கார்போகவரிசி — சமனெடை
விழலரிசி
நாக்குப்பூச்சி
பச்சைப்பாம்பு
நல்லபாம்புக்கண்டம்
முசுறுமுட்டை

இவற்றை அரைத்து 1 நாழி (1.3 லிட்டர்) எண்ணெய்க்கு 1 ½ பலம் (1.58 லிட்டர்) அரைத்த விழுது கரைத்து, பதத்தில் வடித்து மேலுக்குப் பூசி நசியம் பண்ணவும்.

தீரும் நோய்கள் - பற்கிட்டினசன்னி, மேல்இழுப்புச்சன்னி, நரம்பிழிப்புச்சன்னி, வாதசன்னி, மூர்ச்சை சன்னி, நினைவுகெட்டசன்னி, பித்தசுரசன்னி, திமிர்சன்னி, மரணசன்னி.

## சைத்தியத்திற்கு எண்ணெய்

முருங்கைப்பட்டை
மாவிலங்கைப்பட்டை
வெள்ளைப்பூண்டு

இம்மூன்றையும் அரைத்துச் சீலையில் பொட்டணம் கட்டி, விளக்கில் காட்டி எண்ணெய் எடுத்து உள்ளுக்குக் கொடுக்கவும். மேலுக்கும் பூசவும்.
தீரும் நோய் - சைத்தியம்

## சைத்தியத்திற்கு எண்ணெய் (வேறு)

கழுதைவிட்டை அரைத்துச் சீலையில் தடவி நெருப்பில் காட்ட எண்ணெய் வரும். அதனைப் பிடரி, கணுக்கால், கழுத்து, நெற்றிகளில் தடவவும்.
தீரும் நோய் - சைத்தியம்

## சரீரம் அசதியாய் உலர்ந்த பேர்களுக்கு எண்ணெய்

ஒரு பூசணிக்காயைத் தோல் சீவி, விரை நீக்கிப் போட்டு, வில்லை வில்லையாக நறுக்கி உலர வைத்துக்கொண்டு, இதில்

| | | |
|---|---|---|
| திப்பிலி | - | ½ பலம் (17.50 கிராம்) |
| சுக்கு | - | 1 பலம் (35 கிராம்) |
| சீரகம் | - | ½ பலம் (17.50 கிராம்) |
| கருஞ்சீரகம் | - | ¼ பலம் (8.75 கிராம்) |
| இலவங்கம் | - | ½ பலம் (17.50 கிராம்) |
| ஏலம் | - | " " |
| வாய்விளங்கம் | - | 1 பலம் (35 கிராம்) |

ஆகியவற்றைச் சேர்த்துச் சூரணம் செய்து

| | | |
|---|---|---|
| நெய் | - | 1 படி (2.65 லிட்டர்) |
| தேன் | - | " " |

இவற்றைச் சேர்த்துக் காய்ச்சி, கொதிக்கின்றபொழுது, மேற்படி சூரணத்தைப் போட்டு, கிளறி, பின்பு

| | | |
|---|---|---|
| சர்க்கரை | - | 2 சேர் (560 கிராம்) |

போட்டுக் கிண்டி, நெய் பழகின கலசத்தில் வைத்துக் கொள்ளவும்.
அளவு - எலுமிச்சங்காயளவு
(காலை, மாலை)
மேற்படி மருந்தைச் சாப்பிட்டு முடித்த பின்பு,

ஒரு பானையில் பொன்னாங்காணி விட்டு, அதன் மேல் 1 குறுணி (5.3 லிட்டர்) சிற்றாமணக்குமுத்து, அதன் மேல் பொன்னாங்காணி இட்டு, வேகவைத்து, அந்த முத்தூற்றின் எண்ணெய் எடுத்து வைத்துக் கொண்டு, அதில்

திப்பிலி - ¼ பலம் (8.75 கிராம்)
சீரகம் - ¼ " "
ஏலம் - ¾ பலம் (26.25 கிராம்)

இந்த மூன்றும் பொடி செய்து போட்டு வைத்துக் கொள்ளவும்.

அளவு - 1 கரண்டி (காலை, இரவு, உணவு சாப்பிட்ட பின்பு)
தீரும் நோய்கள் - தலைவலி, சூலை, வற்றின உடம்பு

## சர்வ சுரத்திற்கும் எண்ணெய்

| | | |
|---|---|---|
| வெருகு சமூலம் | - | 100 பலம் (350 கிராம்) |
| விஷ்ணு கிரந்தி | - | 5 பலம் (175 கிராம்) |
| சிற்றாமுட்டி | - | " " |
| பேராமுட்டி | - | " " |
| சீந்தில் தண்டு | - | " " |
| வில்வ வேர் | - | " " |
| சாரணைவேர் | - | " " |
| அமுக்குராவேர் | - | " " |

இவற்றைக் கூட்டி
தண்ணீர் - 2 தூணி (42.10 லிட்டர்)
விட்டுக் குறுணியாகக் (5.3 லிட்டர்) காய்ச்சி, அதில்

| | | |
|---|---|---|
| சுக்கு | - | 1 பலம் (35 கிராம்) |
| மிளகு | - | " " |
| திப்பிலி | - | " " |
| ஏலம் | - | " " |
| இலவங்கம் | - | " " |
| அதிமதுரம் | - | " " |
| கோட்டம் | - | " " |
| அரத்தை | - | " " |
| கஸ்தூரிமஞ்சள் | - | " " |
| குங்கிலியம் | - | " " |
| சிறுநாகப்பூ | - | " " |

| | | | |
|---|---|---|---|
| தேவதாரம் | - | ” | ” |
| மரமஞ்சள் | - | ” | ” |
| மஞ்சிட்டி | - | ” | ” |
| வசம்பு | - | ” | ” |
| சந்தனம் | - | ” | ” |
| இருவேலி | - | ” | ” |
| இலாமிச்சம் | - | ” | ” |
| நன்னாரிவேர் | - | ” | ” |
| முத்தக்காசு | - | ” | ” |
| குங்கிலியம் | - | ” | ” |
| அமுக்குராவேர் | - | ” | ” |

இவற்றை அரைத்துக் கரைத்து

| | | |
|---|---|---|
| தயிர் | - | 4 பங்கு |
| தண்ணீர் | - | 3 ” |
| நல்லெண்ணெய் | - | ” |

இம்மூன்றும் அதில்விட்டு, மூன்றுநாள் மந்தாக்கினியாக எரியிட்டு, நான்காம்நாள் எரித்துப் பதத்தில் வடித்து உள்ளுக்குக் கொடுத்து மேலுக்கும் பூசவும்.

தீரும் நோய்கள் - அஸ்தியில் சுரம், சீதசுரம், சர்வசுரம்

## சலப்பீனிசத்திற்கு எண்ணெய்

| | | |
|---|---|---|
| நல்லெண்ணெய் | - | 2 படி (5.30 லிட்டர்) |
| மருள்சாறு | - | 1 உரி (672 மி.லிட்டர்) |
| நொச்சிச்சாறு | | ” ” |
| பேய்மருட்டிச்சாறு | | ” ” |
| அபின் | - | 1 கழஞ்சு (4.4 கிராம்) |

இவற்றைக் கூட்டி எரித்துத் தலை முழுகவும்.
தீரும் நோய் - சலப்பீனிசம்

## சன்னிக்கு எண்ணெய்

| | | |
|---|---|---|
| கோழிமுட்டை (மஞ்சள் கரு) | - | 20 |
| மனோசிலை | | 1 பலம் (35 கிராம்) |
| கொடிக்கழல்பருப்பு | | 1 பலம் (35 கிராம்) |
| நிலவேர் | | 1 பலம் (35 கிராம்) |

கோழிமுட்டையின் மஞ்சள் கருவில், மனோசிலையும், கொடிக்கழல் பருப்பும் பொடிசெய்து, நிலவேரும் கூட்டி

இவற்றைச் சட்டியிலிட்டு அடுப்பில் வைத்து, இரும்பு அகப்பையால் கசக்கினால் தைலம் வரும்.

தீரும் நோய் - சன்னி

(நகத்திலும், பல்லடியிலும், காதிலும், தொண்டைக் குழியிலும், தொப்புளிலும், எண்ணெய்க் கூட்டவும்)

## சன்னிக்கு எண்ணெய் (வேறு)

| | | |
|---|---|---|
| குந்திருக்கம்பிசின் | - | 4 சேர் (1120 கிராம்) |
| நல்லெண்ணெய் | - | 3 சேர் (840 கிராம்) |

பிசினைப் பொடிபண்ணி, பீங்கானில் போட்டு, மருந்து மேல், நால்விரற்கடை உயரம் பிராந்திவிட்டு, அறுபது நாழிகை (1 மணிநேரம்) ஊறவிட்டு எண்ணெய் சேர்த்து, பதத்தில் வடித்து வைத்துக் கொள்ளவும்.

அளவு - 2 பணவெடை 576 (சன்னிக்கு உள்ளுக்குக் கொடுக்கவும்) மேலுக்கும் தடவலாம்.

பத்தியம் - கைப்பு, புளிப்பு தவிரவும்

தீரும் நோய்கள்- சகல வாய்வுப் பிடிப்பு, சன்னி

## சிவப்புச் சேர்வைக்கு எண்ணெய்

| | | |
|---|---|---|
| சாதிலிங்கம் | - | 2 வராகன் (7 கிராம்) |
| துத்தம் | - | 2 வராகன் (7 கிராம்) |
| துரிசு | - | 1 வராகன் (3.5 கிராம்) |
| கல்சுண்ணாம்பு | - | 1 வராகன் (3.5கிராம்) |
| வெள்ளைக்குங்கிலியம் | - | 3 வராகன் (10.5கிராம்) |
| மெழுகு | - | 2 வராகன் (7 கிராம்) |

இவற்றில் சாதிலிங்கம், துத்தம், துரிசு, கல்சுண்ணாம்பு இந்த நான்கும் எண்ணெய் விட்டு அரைத்துப் பிறகு மெழுகும், குங்குலியமும் சட்டியில் போட்டு, இதில்

| | | | |
|---|---|---|---|
| நல்லெண்ணெய் | - | ½ படி (1.305 லிட்டர்) | |
| பேய்ப்பீர்க்கம்விரை | - | ½ பலம் (17.50 கிராம்) | |
| பேய்க்கொம்மட்டிவிரை | - | " | " |
| செம்பீரப்பொடி | - | " | " |
| கருவேலம்பட்டை | - | " | " |
| வெள்வேலம்பட்டை | - | " | " |
| அரசம்பட்டை | - | " | " |
| ஆவரம்பட்டை | - | " | " |

இவற்றில் தேங்காய்ப்பால் விட்டு, மேற்கூறிய அனைத்தையும் கலந்து, வடித்து வைத்துக் கொள்ளவும்.
தீரும் நோய் - எல்லாப்புண்ணும்

## சுட்ட புண்ணிற்கு எண்ணெய்

கோழிமுட்டை வெள்ளைக் கருவைத் தண்ணீரில் வார்த்துச் சிலுப்பி, அதன் நுரையும்,

நல்லெண்ணெயைத் தண்ணீரில் வார்த்துச் சிலுப்பி அதன் நுரையும், இரண்டையும் ஒன்றாய் வார்த்துச் சீனக்காரம் [illegible] நுரையும் கூடப்போட்டு, மூன்றையும் மத்தித்து, கோழி இ[illegible]னாலே பூசவும்.

தீரும் நோய் - சுட்ட புண்

## சுரோணித வாதத்திற்கு எண்ணெய்

| | | |
|---|---|---|
| பச்சைக்கொடிவேலிப்பட்டை | - | 5 பலம் (175 கிராம்) |
| வெள்ளுள்ளி | - | 5 பலம் (175 கிராம்) |

இவற்றை வெள்ளாட்டுப் பாலிலரைத்துக் குழம்பாக்கி,

| | | | |
|---|---|---|---|
| கரிசலாங்கண்ணிச்சாறு | - | 1 உழக்கு | (672 மி.லிட்டர்) |
| புங்கம்பால் | - | ½ | (336 மி.லிட்டர்) |
| நல்லெண்ணெய் | - | 1 உரி | (672 மி.லிட்டர்) |

இவற்றைக் கலந்து காய்ச்சி வடித்துக் கொள்ளவும். உள்ளுக்குக் கொடுத்து, மேலுக்கும் பூசவும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | 1 வராகனெடை (3.5 கிராம்) |
| தீரும் நோய்கள் | - | சுரோணித வாய்வு, கல்வாய்வு |

## சூரிய வாதத்திற்கு எண்ணெய்

அஞ்சிலை நொச்சி
வேளை
வரிக்கற்றாழை
தேள்கடை
சிற்றாமுட்டி
அழிஞ்சி
அத்திப்பட்டை
அமுக்குரா
கொழுஞ்சிவேர்
} வகைக்கு 10 பலம் (350 கிராம்

இவற்றை அரைத்து இதுக்குக் கஷாயம்

| | | |
|---|---|---|
| கருவேப்பம்பட்டை | - | 1 பணவெடை (288 கிராம்) |
| நாயுருவி வேர் | - | 20 பலம் (700 கிராம்) |
| தண்ணீர் | - | 4 உரி (2.688 மி.லிட்டர்) |

இவற்றை எரித்துக் குழம்பாக்கி, அதில் மேற்கூறியவற்றைக் கூட்டி, எரித்து முழுகவும்.

தீரும் நோய் - சூரிய வாதம்

## 37. செம்பைத் தைலம்

| | | |
|---|---|---|
| நல்லெண்ணெய் | - | இரண்டு பங்கு |
| செம்பையிலைச்சாறு | - | ” |
| மிளகு | - | 1 பலம் (35 கிராம்) |
| அதிமதுரம் | - | ” ” |

இவற்றைக் கூட்டி எரித்து, வடித்து, உள்ளுக்குக் கொடுத்து, மேலுக்கு மிடவும்.

தீரும் நோய்கள் - பழவெதுப்பு, உள்ளுழலை

## தந்தரோகத்திற்கு எண்ணெய்

ஏலம்
இலவங்கம்
அதிமதுரம்
செண்பகப்பூ
கோட்டம்
சதகுப்பை
செவ்வள்ளிக்கொடி
சிறுநாகப்பூ
கச்சோலம்
சாதிக்காய்
வசுவாசிப்பூ
அகில்
சந்தனம்
சாத்திரபேதி
கருஞ்சீரகம்
மஞ்சள்
கடுக்காய்
தான்றிக்காய்

} வகைக்கு 1 கழஞ்சு (4.4 கிராம்)

இவற்றைத் தண்ணீர் வார்த்தரைத்து, 1 நாழி (1.3 லிட்டர்) நல்லெண்ணெயில் போட்டுப், பதத்தில் வடித்து முழுகவும்.

தீரும் நோய் - தந்தரோகம்

## 39. தலைக்கடி சிரங்கிற்கு எண்ணெய்

| | | |
|---|---|---|
| நல்லெண்ணெய் | } | சமஎடை |
| சிற்றாமணக்கெண்ணெய் | | |

இவற்றைக் களிம்பு பற்றின பாத்திரத்தில், எலுமிச்சம் பழச்சாறு விட்டு, ஒரு வட்டி கொண்டு களிம்பறத் தேய்த்து, வெய்யிலில் வைத்துத் தலைமுழுகவும்.

அளவு - மூன்று நாள் தலையில் வார்த்துச் சிற்றாமணக்கிலைக்கட்டி, பின் இலுப்பைப் புண்ணாக்குத் தேய்த்து முழுகவும்.

தீரும் நோய் - தலைக்கடி சிரங்கு

## தலைப்புழு வெட்டிற்கு எண்ணெய்

| | | |
|---|---|---|
| நல்லெண்ணெய் | - | 4 உழக்கு (2.688 மி.லிட்டர்) |
| வெள்ளெருக்கம்பூ | - | 1 பிடி |
| மிளகு | - | 1 சிறங்கை |
| வெள்ளைப்பூண்டு | - | 1 சிறங்கை |
| வசம்பு | - | 1 துண்டு |
| வெற்றிலைக்காம்பு | - | 1 பிடி |

வெற்றிலைக் காம்பை நறுக்கி நாழி (1.3லிட்) ச்சாறு பிழிந்து மற்ற மருந்துகளையும் நறுக்கி எண்ணெயில் போட்டு எரித்து முழுகவும்.

அளவு - எண்ணெய் தேய்த்து, 1 சாமத்திற்குப் பிறகு (3 மணிநேரம்) முழுகவும்.

தீரும் நோய்கள்- புழுவெட்டு, தினவு, மயிர் உதிர்தல்

## தலைப்புழு வெட்டு, சிரங்கிற்கு எண்ணெய்

| | | |
|---|---|---|
| குங்கிலியம் | - | ¼ பலம் (8.75 கிராம்) |
| அவுரிஇலை | - | விளங்காயளவு |
| விளக்கெண்ணெய் | - | ¼ படி (662 லிட்டர்) |

இவற்றை எரித்துத் தடவவும்.

தீரும் நோய்கள் - தலைப்புழு வெட்டு, தலைச்சிரங்கு

## தலைப்புழு வெட்டு, தலைக்கடிக்கு எண்ணெய்

எலிப்பாடாணம்
உள்ளி
வசம்பு
நல்லெண்ணெய்

இவற்றை எரித்துத் தலைக்கிடக் கடி மாறும்.
தீரும் நோய்கள் - தலைப்புழு வெட்டு, தலைக்கடி

## தலையில் வியாதி வெடித்த புண்ணிற்கு எண்ணெய்

சங்கம் வேர் உமிப்போலே சீவி உலர வைத்து, பின் அபின் சரி கூட்டி எண்ணெய் கொதிப்பித்து இடவும்.
தீரும் நோய் - தலையில் வியாதி வெடித்த புண்

## தொப்புளைச் சுற்றி வலிக்கிற பலவித கழிச்சலுக்கு எண்ணெய்

காசுக்கட்டி
களிப்பாக்கு
கருங்குங்கிலியம்
அசமதாகம் } சமனெடை
அதிவிடையம்
சுக்கு
மிளகு

இவற்றைப் பழகின சட்டியில் வறுத்து, பொடித்து, எண்ணெய் வார்த்து, அரைத்து பின்,

நல்லெண்ணெய் - 1 ஆழாக்கு (168 மி.லிட்டர்)
நறுவிலிக்கொழுந்து - 1 பிடி

நல்லெண்ணெயில் நறுவிலிக்கொழுந்து போட்டு, இளக வறுத்து, இதில் மேற்கூறிய அரைத்த விழுது, மீதமிருக்கும் எண்ணெய் இவற்றைக் கூட்டிக் கொடுக்கவும்.
தீரும் நோய் - வலி கழிச்சல்

## நடுக்கு வாதத்திற்கு எண்ணெய்

வேலிப்பருத்தி
வாதமடக்கி
பொடுதலை

இவற்றின் சாற்றில், கருஞ்சீரகம் கூட்டிக் கொடுக்கவும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | 1 உழக்கு (336 மி.லிட்டர்) |
| எருக்கம்பால் | - | 1 பணவெடை (488 மி.கி) |
| எண்ணெய் | - | 2 பணவெடை (976 மி.கி) |

இவற்றைக் கலந்து கொதிக்க வைத்துத் தலையில் மத்திக்கவும்.
தீரும் நோய் - நடுக்கு வாதம்

## நயனரோகத்திற்கு எண்ணெய்

| | | |
|---|---|---|
| அவுரியிலைச்சாறு | - | 1 நாழி (1.3 லிட்டர்) |
| கற்றாழஞ்சாறு | - | " " |
| ஆரையிலைச்சாறு | - | " " |
| சிறுகீரைச்சாறு | - | " " |
| நெல்லிக்காய்ச்சாறு | - | " " |

இந்தச் சாறுகளுடன்,

| | | |
|---|---|---|
| செங்கழுநீர் | - | 4 கழஞ்சு (4.4 கிராம்) |
| கோட்டம் | - | " " |

இவற்றைப் பசுவின் பால் வார்த்தரைத்துக் கூட்டி, இதில்

அகில்
சீந்தில் தண்டு
சாதிக்காய்
கஸ்தூரி மஞ்சள்
அதிமதுரம்
அஞ்சனக்கல்
நன்னாரிவேர்
தண்ணீர்விட்டான்கிழங்கு
ஏலம்
இலவங்கம்
நெய்தற்கிழங்கு
தாமரைவளையம்
சடாமாஞ்சில்
} வகைக்கு 1 கழஞ்சு (1.1 கிராம்)

இவற்றை அரைத்து, மேற்கூறிய மருந்து முதலானவற்றை நல்லெண்ணெய் 1 நாழியில் (1.3 லிட்டர்) கூட்டிச் சிறுதீயில் இரண்டுநாள் காய்ச்சி வடித்து வைத்துக் கொள்ளவும். தலைக்கும் உடம்புக்கும் பூசவும்.
தீரும் நோய்கள் - தலைவேதனை, கண்கள், நீர்ப்பாய்ச்சல் நீர்ப்படலம், நீலகாசம்

## 47. நயனரோகத்திற்கு எண்ணெய் (வேறு)

நெல்லிப்பருப்பு
வெட்டிவேர்
மரமஞ்சள்
} வகைக்கு 10 பலம் (350 கிராம்)

அல்லிக்கிழங்கு } வகைக்கு 1 வீசை
தாமரைக்கிழங்கு } (1.4 கி.கிராம்)

எண்ணெய் - 2 சேர் (560 கிராம்)
பசுவின்பால் - " "
சிறுகீரைச்சாறு
கற்றாழஞ்சாறு } வகைக்கு 1 சேர் 280 கிராம்
பொன்னாங்காணி

இவற்றைக் கூட்டிக் கஷாயமிட்டு, அதில்

கோட்டம்
சந்தனம் } வகைக்கு ¾ பலம் (25.25 கிராம்)
அதிமதுரம்

ஆகியவற்றைச் சேர்த்து, எரித்து, தலைமுழுகவும்.
தீரும் நோய்கள் - புகைச்சல், நயனரோகம்

## நாசிகா பீடத்திற்கு எண்ணெய்

ஈர உள்ளி சங்கங்குப்பி
இவையோ ரொன்று உரியுடனே
சேரும் எண்ணெய் உரிவிட்டுத்
திகழ நல்லதி மதுரமுடன்
ஆர முற்ற முந்திரிகை
அவையோ ரொன்று அறுகழஞ்சு
சேர அரைத்துப் பதத்தில் (வடித்து)
தொட்டு நசியம் விட்டக்கால்
தீருந் தலைவலி நாசிரோகந்
தின்னுங் காணும் திண்ணமிதே

நாசிகா பீடத்திற்கு எண்ணெய் கூறப்படுகிறது.

வெங்காயம், சங்கங்குப்பி இவை வகைக்கு 650 மி.லி., எண்ணெய் 650 மி.லி., அதிமதுரம், திராட்சை இவை வகைக்கு 26.4 கிராம் சேர்த்து அரைத்து மேற்படி எண்ணெயுடன் கலந்து எரித்து வடிகட்டி மூக்கில் நசியம் என்னும் சொட்டு மருந்தாகப் பயன்படுத்த தலைவலி, மூக்கைப் பற்றிய நோய் இவை தீரும்.

## நாள்சென்ற பிரமியத்திற்கு எண்ணெய்

| | | |
|---|---|---|
| நல்லெண்ணெய் | - | 1 படி (2.65 லிட்டர்) |
| வெள்ளைக் குங்கிலியம் | - | 1 பலம் (35 கிராம்) |
| காசுக்கட்டி | - | ¼ பலம் (8.75 கிராம்) |
| உள்ளி | - | " " |
| வசம்பு (மேல்தோல் சீவி) | - | " " |

மருந்துகளைப் பொடிபண்ணி, எண்ணெயில் போட்டு, சூரிய புடமாக வைத்து, மறுநாள் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | 1 கரண்டி (இருபது நாள் ஒருவேளை கொள்ளவும்) |
| பத்தியம் | - | வாழைக்கச்சல், துவரம்பருப்பு, பால் கூட்டவும். |
| தீரும் நோய் | - | நாள் சென்ற பிரமியம் |

## நான்குவகை பீனிசத்திற்கும் எண்ணெய்

| | | |
|---|---|---|
| நல்லெண்ணெய் | } | வகைக்கு 1உரி (672 மி.லிட்.) |
| சிற்றாமணக்கெண்ணெய் | | |
| வேப்பெண்ணெய் | | |
| கஞ்சாச்சாறு | | |
| ஊமத்தஞ்சாறு | | |
| ஆதண்டைச்சாறு | | |
| மஞ்சள்சாறு | | |
| பசுவின்பால் | | |
| மிளகு | - | 2 பலம் (70 கிராம்) |
| கஸ்தூரிமஞ்சள் | - | ½ பலம் (35 கிராம்) |
| சிற்றரத்தை | - | ¼ பலம் (17.5 கிராம்) |
| பேரரத்தை | - | " " |
| அபின் | - | " " |

இவற்றை இளநீர் வார்த்து அரைத்து மேற்படி சாறுகளைக் கலந்து, எரித்து வடித்து முழுகவும்.

தீரும் நோய் - நான்குவகை பீனிசம்

## நெல்லி எண்ணெய்

| | | |
|---|---|---|
| நல்லெண்ணெய் | - | 1 ஆழாக்கு (336 மிலி.) |
| நெல்லிச்சாறு | - | " " |

கையாந்தகரைச்சாறு - " "
பசுவின்பால் - " "
அதிமதுரம் - 1 பலம் (35 கிராம்)

இவற்றைக் கூட்டி எரித்து முழுகவும்.

தீரும் நோய்கள் - செவிடு, நரைதிரை
விளைவு - கண்விளங்கும், பலமுண்டாம்

## நேத்திர வாய்விற்குத் தலைக்கு எண்ணெய்

அத்தி
திப்பிலி
கோட்டம்
திப்பிலிமூலம்
வாய்விளங்கம்
சுக்கு
மிளகு
சடாமாஞ்சில்
அமுக்கரா
வசம்பு
அதிவிடையம்
பெருங்காயம்
அரத்தை
சிற்றரத்தை
இலவங்கப்பத்திரி
மஞ்சள்
மரமஞ்சள்
கஸ்தூரிமஞ்சள்
செண்பகமொட்டு
கோரோசனை
கஸ்தூரி
கெந்தகம்
அகில்கட்டை
தேவதாரம்
} வகைக்கு 1 பலம் (35 கிராம்)

இவற்றை நொச்சிச்சாறு - 3 படி (7.95 லிட்டர்) வார்த்தரைத்துப்
பசுவின் பால் - 3 படி (7.95 லிட்டர்)
நல்லெண்ணெய் - " "

இவற்றைக் கூட்டிக் காய்ச்சிப் பதத்தில் வடித்துத் தலையில் கட்டவும்.

தீரும் நோய்கள் - நேத்திர வாய்வு, சுக்கிரன்

## நேத்திர வாய்விற்குத் தலைக்கு எண்ணெய் (வேறு)

| | | |
|---|---|---|
| விளக்கெண்ணெய் | - | ½ சேர் (140 கிராம்) |
| ஆதண்டைச்சாறு | - | ” ” |
| வெள்வெங்காயம் | - | 1 ” (280 கிராம்) |

இம்மூன்றையும் காய்ச்சித் தலைமுழுகவும்.
தீரும் நோய்கள் - நேத்திர வாய்வு

## நேத்திர வாய்விற்குத் தலைக்கு எண்ணெய் (வேறு)

வேளை வேர்
வெள்வெங்காயம்
அரைத்த விழுது
} வகைக்கு எலுமிச்சங்காயளவு

இவற்றை 1 படி (2.65 லிட்டர்) நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சி வடித்து வைத்துக் கொள்ளவும்.
தீரும் நோய் - நேத்திர வாய்வு

## 55. பக்கசூலை, கர்ப்ப சூலைக்கு எண்ணெய்

| | | |
|---|---|---|
| முருங்கைவேர்ச்சாறு | - | 4 நாழி (5.2 லிட்டர்) |
| எள்யெண்ணெய் | - | 1 ” (1.3 ”) |
| பால் | - | 2 ” (2.6 ”) |
| அதிமதுரம் | - | 1½ ” (52.50 ”) |

இவற்றைக் கூட்டி எரித்துப் பதத்தில் வடித்துக் கொள்ளவும்.

அளவு - 1 கழஞ்சு (4.4 கிராம்)
தீரும் நோய்கள் - பக்க சூலை, கர்ப்ப சூலை

## 56. பல கிரந்திக்கு எண்ணெய்

| | | |
|---|---|---|
| நல்லெண்ணெய் | - | 1 நாழி (1.3 லிட்டர்) |
| முருங்கைப்பட்டை | | |
| உள்ளி | - | 1 பலம் (35 கிராம்) |
| வசம்பு | | |

இவற்றைக் கூட்டி எரித்து, வடித்து வைத்துக் கொள்ளவும்.
தீரும் நோய் - பலகிரந்தி

## பல்நோக்காடு பல்புண்ணிற்கு எண்ணெய்

| | | |
|---|---|---|
| தேங்காய் | - | 3 |
| பொடுதலைச்சாறு | - | 1 ஆழாக்கு (336 மி.லி.) |

இதில்

| | | |
|---|---|---|
| கருநெல்லி | - | 3 கழஞ்சு (13.2 கிராம்) |
| தான்றி | - | ” ” |
| வெள்ளிலோத்திரம் | - | ” ” |
| வெள்ளேலம்பட்டை | - | ” ” |

இவற்றை அரைத்துக் கூட்டிக் காய்ச்சிப் பதத்தில் வடித்துக் கொள்ளவும். இந்த எண்ணெயை வாயில் சிறிது வார்த்துக் கொப்பளிக்கவும்.

காலம் - எட்டு நாள்

தீரும் நோய்கள்- பல்நோக்காடு, பல்லடியில் புண்

## பாரிச வாய்விற்கு எண்ணெய்

| | | |
|---|---|---|
| புனலிக்கொடி | - | 12 பணவெடை |
| பசுவின்மோர் | - | 1 பதக்கு (10.7 லிட்டர்) |

புனலிக்கொடியைத் துவைத்து, பசுவின் மோரில் போட்டுச் சூரிய புடமாக ஒருநாள் வைத்து, மறுநாள் எடுத்து அதில்,

| | | |
|---|---|---|
| வெள்வெங்காயம் | - | 1 பணவெடை (தோல் போக்கி) |
| வேப்பெண்ணெய் | - | 1 படி (2.65 லிட்டர்) |
| பெருங்காயம் | - | 10 வராகன் (35 கிராம்) |

இவற்றைக் கூடப்போட்டுக் காய்ச்சவும். எண்ணெய் மேலும் கடுகு கீழாய் வருகின்றபொழுது இறக்கி எண்ணெயை இறுத்து வைத்துக் கொள்ளவும். உள்ளுக்குக் கடுகு கொடுத்து, மேலுக்கு எண்ணெய் இட்டுப் பிடிக்கவும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | பாக்களவு, கடுகு |
| காலம் | - | காலை, மாலை |
| பத்தியம் | - | கார்ப்பு, புளிப்பு, உப்புத் தவிரவும். சுறாக்கருவாடு, மொந்தன் கருவாடு, அரைக்கீரை கூட்டவும். |
| தீரும் நோய் | - | பாரிச வாய்வு |

## பித்த குன்மத்திற்கு எண்ணெய்

| | | |
|---|---|---|
| நல்லெண்ணெய் | - | 1 ஆழாக்கு (336 மி.லி.) |
| குப்பைமேனிச்சாறு | - | ” ” |

இவற்றைக் கூட்டிக் குடிக்கவும்.

தீரும் நோய்கள்- சூலை எரிவு, குடல் பிரட்டல், வாய்நீர் குழகுழத்தல், பித்தகுன்மம்

## பித்தத்திற்குக் குமரித் தைலம்

- நல்லெண்ணெய்
- குமரிச்சாறு
- இளநீர்
- பசுவின்பால்
- ஏலம்
- இலவங்கத்தோல்
- பச்சிலை
- கச்சோலம்
- சாதிக்காய்
- தக்கோலப்பொட்டு
- அதிமதுரம்
- கோட்டம் — வகைக்கு 1 பலம் (35 கிராம்)
- அகில்
- அடவிக்கச்சோலம்
- சடாமாஞ்சி
- இருவேலி
- மஞ்சிட்டி
- நாகப்பூ
- அரேணுகம்
- செண்பகப்பூ
- கடுகுரோகணி
- கற்பூரம்
- புழுகுச்சட்டம்
- சந்தனம்
- குங்குமப்பூ
- கருநெல்லி
- தான்றிக்காய் — வகைக்கு 1பலம் (35 கிராம்)
- குளவிந்தம்
- மஞ்சள்
- நன்னாரி
- முத்தக்காசு
- இலாமிச்சு
- இருவேலிவேர்
- தாமரைவளையம்

இவற்றைக் கூட்டி எரித்து வடித்துத் தலைமுழுகவும்.

தீரும் நோய் - பைத்தியம்

## புறமூலக்கடுப்பு, எரிவு, அடைப்பு, புண், கீழ்வயிறு நோவிற்கு எண்ணெய்

| | | |
|---|---|---|
| புங்கம்பால் | - | 1 நாழி |
| பிராயம்பட்டைச்சாறு | - | ” |
| பங்கம்பாளைச்சாறு | - | ” |
| ஆமணக்கெண்ணெய் | - | ” |
| அதிமதுரம் | - | 3 பங்கு |
| திப்பிலி | - | ” |
| இந்துப்பு | - | ” |
| இருவேலி | - | ” |

கடைச்சரக்குகளை அரைத்து, ஏனையவற்றையும் சேர்த்துக் கரைத்து, காய்ச்சி பதத்தில் வடித்து, நக்கவும்.

தீரும் நோய்கள்- புறமூலக்கடுப்பு, எரிப்பு, அடைப்பு, புண், கீழ்வயிறு நோவு

## பீனிச, சுவாச, கபால, சூலைக்கு எண்ணெய்

| | | |
|---|---|---|
| நல்லெண்ணெய் | - | 1 படி (2.65 லிட்டர்) |
| மிளகு | - | ½ படி (1.32 லிட்டர்) |

மிளகை ஒன்றிரண்டாய் உடைத்து, எண்ணெயில் போட்டு கலசவாய்க்கு ஓடிட்டுச் சீலைமண் செய்து, ஒரு பானையிலே நெல் விட்டுப் பாதிப் பானையிலே முன் செப்பிட்ட கலசம் வைத்து, மேலும் நெல்லிட்டு அவித்து, வெந்தவுடன், இறக்கி, கலசமெடுத்து, இவ்வாறு நான்குமுறை அவித்து எடுத்து,

| | | |
|---|---|---|
| அபின் | - | 1 வராகன் (3.5 கிராம்) |
| சாதிக்காய் | - | ” ” |

இந்த இரண்டு வகையும் எண்ணெயில் அரைத்துக் குழப்பி, மீண்டும் முன்போலவே சீலைமண் செய்து நெல்லிட்டு அவித்து எடுத்து வைத்துக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| காலம் | - | எட்டு நாளைக்கு ஒருமுறை தைலமிட்டு பத்து நாழிகை வைத்திருந்து, பின் பயற்றமாவு இட்டு வெந்நீரில் முழுகவும். |
| பத்தியம் | - | புளிப்பு, கைப்பு தவிரவும் |
| தீரும் வியாதிகள் | - | கபாலசூலை, பீனிசம், சுவாசம், தலைவலி |

## பீனிசத்திற்கு எண்ணெய்

| | | |
|---|---|---|
| நல்லெண்ணெய் | - | 1 படி (2.65 லிட்டர்) |
| துளசிச்சாறு | - | 1 " " |
| குந்திருக்கம் | - | 1 பலம் (35 கிராம்) |

இவற்றைக் கூட்டி, எரித்து வடித்து, நசியம் பண்ணித் தலைக்குத் தேய்க்கவும்.

தீரும் நோய் - பீனிசம் தும்மல்

## பீனிசத்திற்கு எண்ணெய் (வேறு)

**நல்லெண்ணெய் யொருநாழி தைவேளை மேனியொரு**
**நாழி கவிழ்தும்பை வேரும்**
**வில்லைவேர் ஒரொன்று தேசியின் படியளவு**
**வெற்றிலைச்சாறு ழக்கு**
**சொல்லு கால்படிமிளகு பொடிபண்ணி எண்ணெயைச்**
**சொல்மெழுகு பதம தாக்கி**
**மெள்ளவே நாலு நாளைக் கொருகால்**
**முழுகவே பீனிசங்கள் போமே.**

(பொருள்) பீனிசத்திற்கு எண்ணெய் இதில் கூறப்படுகிறது.

| | | |
|---|---|---|
| நல்லெண்ணெய் | - | 1 நாழி |
| தைவேளை | - | 1 எலுமிச்சம்பழ அளவு |
| குப்பைமேனி | - | " |
| கவிழ்தும்பை | - | " |
| வில்வவேர் | - | " |
| வெற்றிலைச்சாறு | - | 1 உழக்கு |
| மிளகு | - | ¼ படி |

எண்ணெய் தவிர மற்றச் சரக்குகளை அரைத்துக் கற்கமாக்கி எண்ணெயில் கலந்து எரித்து மெழுகுப் பதத்தில் இறக்கி வடிகட்டி வைத்துக் கொண்டு நான்கு நாட்களுக்கொருமுறை தலை முழுகவும்.

தீரும் நோய் - பீனிசம்

## பீனிசத்திற்கு எண்ணெய் (வேறு)

| | | |
|---|---|---|
| மிளகு | - | 1 படி (2.65 லிட்டர்) |
| ஆவின்பால் | - | " " |
| ஆதண்டை இலைச்சாறு | - | " " |

| | | | |
|---|---|---|---|
| மலைவேப்பிலை | - | ” | ” |
| பொன்னாங்காணி | - | ” | ” |
| கரிப்பான் | - | ” | ” |
| தண்ணீர்விட்டான் | - | ” | ” |
| தாமரைவளையம் | - | ” | ” |
| முசுமுசுக்கை | - | ” | ” |
| நல்லெண்ணெய் | - | ” | ” |

இவை அனைத்தையும் கலந்து, தண்ணீர்ப் பதத்தில் வடித்து, முழுகவும்.

| | | |
|---|---|---|
| காலம் | - | மூன்று நாளைக்கு ஒருமுறை முழுகவும் |
| பத்தியம் | - | வெந்நீரும் சோறும் உப்பும் கூட்டவும் |
| தீரும் நோய்கள் | - | மூக்கில் இரத்தம் விழுதல், சீழாய் விழுதல், தொண்டையாலே இரத்தம் விழுதல் |

## பீனிசத் தும்மலுக்கு எண்ணெய்

| | | |
|---|---|---|
| நல்லெண்ணெய் | - | 1 உரி (672 மி.லிட்டர்) |
| ஆதண்டைச்சாறு | - | 1 உரி (672 மி.லிட்டர்) |
| வெள்ளைக்குங்கிலியம் | - | 1 பலம் (35 கிராம்) |
| மிளகு | - | ” ” |
| மஞ்சள் | - | ” ” |

இவற்றைக் கூட்டி எரித்து வடித்து முழுகவும்.

மேலும் மேற்கூறிய சரக்கு - ½ பலம் (17.5 கிராம்)
வேளைவேர் - 1 பலம் (35 ” )

இவற்றை எண்ணெயிலிட்டுக் காய்ச்சி வடித்தும் முழுகலாம்.

தீரும் நோய்கள் - தலைவலி, தும்மல், இரத்தம் விழுதல்

## பீனிசம் நீர்ப்பாய்ச்சல் பஞ்சகாசம் இவற்றிற்கு எண்ணெய்

| | | |
|---|---|---|
| நல்லெண்ணெய் | - | 1 நாழி (1.3.லிட்டர்) |
| காற்றொட்டிச்சாறு | - | ” ” |
| அரத்தை | - | 1 பலம் (35 கிராம்) |
| மிளகு<br>காற்றொட்டிவேர்<br>நத்தைச்சூரிவேர் | } | வகைக்கு 2 பலம் (70 கிராம்) |

முப்புரிமெரித்தான்வேர்
அமுக்கராவேர்
தான்றிப்பட்டை
ஆயில்பட்டை
வேங்கைச்சிராய்
சீந்தில்தண்டு
முத்தக்காசு
ஊமத்தம்வேர்
வில்வவேர்
குறுந்தொட்டிவேர்
வன்னிவேர்

} *வகைக்கு 2 பலம் (70 கிராம்)*

இவற்றோடு

தண்ணீர் - *29 பலம் (10.15 கி.கிராம்)*

விட்டு நாலொன்றாகக் காய்ச்சி, இதில்

விழலரிசி
வெட்பாலையரிசி
சிற்றரத்தை
சிறுதேக்கு
கோட்டம்
தகரைவிரை
தேவதாரம்
கருஞ்சீரகம்
வசம்பு
மஞ்சள்
குந்திருக்கம்
சாயிமாஞ்சில்
மஞ்சிட்டி
சந்தனம்
திப்பிலி
நாகேசுரம்
இலாமிச்சம்வேர்

} *வகைக்கு 1 கழஞ்சு (4.4 கிராம்)*

*வகைக்கு 1 கழஞ்சு (4.4 கிராம்)*

இவற்றை அரைத்துக் கரைத்துக் காய்ச்சி வடித்து, பின்

அபின் - *1 கழஞ்சு (4.4 கிராம்)*

பொடிபண்ணிப் போட்டு முழுகி வரவும்.

தீரும் நோய்கள் - *பீனிசம், நீர்ப்பாய்ச்சல், பஞ்சகாசம்*

## புண்ணிற்கு எண்ணெய்

இலுப்பை - 3 படி (7.95 லிட்டர்)

சங்கங்குப்பிவேர்
சங்கம்வேர்
செங்கத்தாரிவேர்
நிலக்கடம்புவேர்
பறங்கிப்பட்டை
} - வகைக்கு 1 பலம் (35 கிராம்)

இவற்றை அரைத்து, அதில்

புங்கம்பால் - 1 உழக்கு (336 மி.லிட்டர்)

விட்டு எரித்து, உள்ளுக்குக் கொடுக்கவும்.

அளவு - 1 கரண்டி உள்ளுக்குக் கொடுக்கவும். (பிள்ளைகளுக்குக் கட்டியின்பேரில் தடவவும்)

தீரும் நோய் - புண்

## பூநாகத் தைலம்

பூநாகம் - 2 சேர் (600 கிராம்)

இதனைக் கழுவிப் போட்டுப் பிராந்தியில் ஊறப்போட்டு நல்லெண்ணெய் விட்டு எரித்து வைத்துக் கொள்ளவும்.

தீரும் நோய்கள் - சன்னி வாதம் (உள்ளுக்குக் கொடுத்து, மேலுக்கும் பூசவும்)

## போர்மாந்தைக்கு எண்ணெய்

**சாதிக்காய் கெந்தகமுந் தான்றிஅச மோதகமுந்**
**காதுங்கடுக் காய்கருஞ் சீரகமும் - சீதத்**
**திரிகடு கோடனுஞ் சேர்ந்தநல் லெண்ணெய்வைத்துப்**
**பருகப் போம் மாந்தைப் பார்.**

(பொருள்) போர்மாந்தத்திற்கு இதில் எண்ணெய் கூறப்பட்டுள்ளது.

சாதிக்காய்
கந்தகம்
தான்றிக்காய்
} சம எடை

| | | |
|---|---|---|
| அசமதாகம் | } | சம எடை |
| கடுக்காய் | | |
| கருஞ்சீரகம் | | |
| சுக்கு | | |
| மிளகு | | |
| திப்பிலி | | |
| நல்லெண்ணெய் | | 5 பங்கு |

இவற்றை ஒன்று சேர்த்துப் பொடித்து எள் நெய்யுடன் கலந்து எரித்துப் பதத்தில் வடிகட்டிக்கொண்டு உள்ளுக்குச் சாப்பிடவும்.

திரும் நோய் - போர்மாந்தம்

## மயூர எண்ணெய்

| | | |
|---|---|---|
| வேப்பெண்ணெய் | - | 1 நாழி (1.3 லிட்டர்) |
| செங்கழுநீர் | - | 2 பலம் (70 கிராம்) |
| கோட்டம் | - | " " |
| ஆலாத்திக்கற்பூரம் | - | 1 " (35 கிராம்) |
| மயிலிறகு ஈர்க்கு | - | " " |

இவற்றைக் கூட்டி, கிட்டிக்கட்டி அடுப்பில் வைத்து எரியிட்டு எரிந்து வருகிற பருவத்தில் சதுரக்கள்ளிப்பால் - 1 உரி (672 மி.லிட்டர்) விட்டு சுவற எரித்து, எண்ணெய்க்குள்ளே தீ காட்ட எல்லாம் பற்றி எரியும். உடன் இறக்கி ஆறவிட்டு மேலுக்கும் பூசி, உள்ளுக்கும் கொடுக்கவும்.

தீரும் நோய் - வாதசன்னி

## மூர்ச்சை வாய்விற்கு எண்ணெய்

எலுமிச்சம்பழச்சாறு- ½ படி (1.32 லிட்டர்)

இதனைச் சட்டியில் காயவைத்து, இதில்

பச்சைக்கொடிவேலிப்பட்டை - 1 பலம் (35 கிராம்)

நறுக்கிப் போட்டு வேகவிட்டு, இதில்

| | | |
|---|---|---|
| திப்பிலி | - | ½ பலம் (17.5 கிராம்) |
| பச்சை வசம்பு | - | 1 " (35 கிராம்) |
| வெள்ளுள்ளி | - | " " |

இவற்றைச் சேர்த்துக் காயவிட்டு

நல்லெண்ணெய் - 1 படி (2.65 லிட்டர்)

வார்த்துச் சிவந்து வருகின்றபோது இறக்கி வைத்துக் கொள்ளவும். உள்ளுக்குக் கொடுத்து மேலுக்குமிடவும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | 1 துட்டெடை |
| காலம் | - | 40 நாள் (காலை, மாலை) |
| பத்தியம் | - | கவிச்சுபுளி தவிரவும் |
| தீரும் நோய் | - | மூர்ச்சை, வாய்வு |

## மேக சூசிகா வாய்விற்கு எண்ணெய்

| | | |
|---|---|---|
| சீரகம் | - | ½ பலம் (17.5 கிராம்) |
| சுக்கு | - | ” ” |
| ஓமம். | - | ” ” |
| சதகுப்பை | - | ” ” |
| கருஞ்சீரகம் | - | ” ” |
| கடுகுரோகணி | - | ¼ பலம் (17.5 கிராம்) |
| கிராம்பு | - | ” ” |
| தாளிசபத்திரி | - | ” ” |
| சாதிபத்திரி | - | ” ” |
| இலவங்கப்பட்டை | - | ” ” |
| செண்பகப்பூ | - | ” ” |
| குராசானிஓமம் | - | ” ” |
| ஈரவெங்காயச்சாறு | - | ¼ படி (662 மிலிட்டர்) |
| திப்பிலிபலம் | - | ¼ பலம் (8.75 கிராம்) |
| பூண்டு | - | ” ” |
| கோரோசனை | - | 1 வராகன் (3.5 கிராம்) |
| விளக்கெண்ணெய் | - | 1 படி (2.65 லிட்டர்) |
| முருங்கையிலைச்சாறு | - | ” ” |

இவற்றைக் கூட்டி எரித்துக் கொடுக்கவும்.
தீரும் நோய் - மேகசூசிகா வாய்வு

## வண்டு கடிக்கு எண்ணெய்

| | | |
|---|---|---|
| கந்தகம் | - | 2 பங்கு |
| கருஞ்சீரகம் | - | 4 பங்கு |
| இரதம் | - | 1½ ” |
| சேங்கொட்டை | - | 5 ” |
| நீரடிக்கொட்டை | - | 2 ” |
| பெருமருந்து | - | 1 ” |

ஆடுதின்னாப்பாளை - ”
மிளகறணைவேர் - ”
புலித்துடக்கிவேர் ”
எட்டிப்பட்டை - ”

இவற்றைக் கூட்டி, எண்ணெய் வடித்து வைத்துக் கொள்ளவும்.

காலம் - 15 நாள்
பத்தியம் - கார்ப்பு, புளிப்பு தவிரவும்
தீரும் நோய் - வண்டுகடி

## வயிற்றிலுண்டான வியாதிக்கு எண்ணெய்

சாட்டறணைவேர் - 4 பலம் (140 கிராம்)
சுக்கு - 1 ” (35 ”)
வெள்ளுள்ளி - 2 ” (70 ”)
கடுக்காய் - ” ”
இந்துப்பு - ” ”
பெருங்காயம் - 1 ” (35 ”)
ஓமம் - 2 ” (70 ”)
மருள்சாறு - 1 உரி (672 மி.லிட்டர்)
நொச்சிச்சாறு - ” ”
கோசலம் - ” ”

இவற்றைக் கஷாயம் காய்ச்சி, இதில் ஆமணக்கெண்ணெய் விட்டுக் காய்ச்சி வடித்துக் கொள்ளவும்.

அளவு - உச்சிக்கரண்டி
பத்தியம்- கார்ப்பு, புளிப்பு தவிரவும்.
முருங்கை, துவரை, அகத்தி, பனிப்பயறு, நார்த்தங்காய் தவிரவும்.
தீரும் நோய் - வயிற்றிலுண்டான வியாதி

## வயிற்றிலுண்டான வியாதிக்கு எண்ணெய் (வேறு)

பேய்க்கொம்மட்டிக்காய் துவைத்து அதன்
சாறு - 4 நாழி (5.2 லிட்டர்)
உப்பு - 2 ” (2.6 ”)

இவற்றைக் கலந்து சீலைவடி கொண்டு, தெளிந்தவுடன் அதில்

வெள்ளாட்டுக் கோமியம் - 1 உரி (672 மி.லிட்டர்) விட்டுக் காய்ச்சவும். இதில்

வெள்ளுள்ளி - ½ பலம் (17.5 கிராம்)
சுக்கு - " "
கடுக்காய் (விரைபோக்கி) - " "
மிளகு - 1 ஆழாக்கு (168 மி.லிட்டர்)

இவற்றை இடித்து, வஸ்திரகாயம் செய்து, போட்டுக் காய்ச்சி, வற்றினபின் உப்பு வரும். இதைத் தண்ணீர் படாத கலசத்தில் எடுத்து வைத்துக் கொள்ளவும்.

அளவு - உச்சிக்கரண்டி
தீரும் நோய் - வயிற்றில் உண்டாகும் நோய்கள்

## வறட்சிக்கரப்பான் எண்ணெய்

**புங்கங் கொட்டை பசுமஞ்சள் புதிய வெள்ளைப் பாஷாணம்**
**அங்கு சொன்னோம் வெட்பாலை அவுரிச் சாறு நல்லெண்ணெய்**
**பங்கப் படாமல் சொறியாமல் பதத்தில் வடித்து மேல்பூசி**
**தங்கும் பினையே வெந்நீர் அதனில் குளிக்கத் தங்காதே.**

(பொருள்) வறட்சிக்கரப்பான் எண்ணெய் *:

புங்கம்பட்டை, பசுமஞ்சள், வெள்ளைப்பாடாணம், வெட்பாலையரிசி, அவுரிச்சாறு, நல்லெண்ணெய் இவை சேர்த்து எண்ணெயாக எரித்து வடித்துப் பதத்தில் வடிகட்டி வைத்துக் கொண்டு கரப்பானுக்கு மேலே பூசி வெந்நீரில் குளிக்க வேண்டும்.

## கபால கரப்பான் எண்ணெய்

அளவு - 1 வெருகடி (விரலளவு)
அனுபானம் - வெந்நீர்
பத்தியம் - மோரும் சோறும், தலையில் குளிர்ந்த நீர்விட்டு முழுகவும்.
தீரும் நோய்கள்- வயிற்று வியாதி, வெப்புப்பாவை, கவிசை, வாய்வுத் திரட்சி, காணாக்கடி
விளைவு - நன்றாய் வயிறு கழியும்

## வாதகரப்பான் பெருமுட்டிற்கு எண்ணெய்

சிற்றாமணக்கெண்ணெய் - 1 உழக்கு (336 மி.லி)
கழுதைவிட்டைச்சாறு - 1 "

உள்ளிப்பூண்டு - 1 ”
வசம்பு - 1 தேர்

இவற்றைக் கூட்டிச் சூரியப்புடம் வைத்துக் குடிக்கவும்.

பத்தியம் - கைப்புப் புளிப்பு தவிரவும்
தீரும் நோய் - வாதகரப்பான், பெருமூட்டு

## வாதகரப்பானுக்கு எண்ணெய்

எருக்கு
நொச்சி
கொடிவேலி
இலைக்கள்ளி
ஆயில்
வேளை
கல்யாணமுருங்கை
கையாந்தகரை
உகாய்
சாரணை
கவிழ்தும்பை
கழல்பனை
கழல்கொடி
தூதுவளை
பாவட்டை
நிலப்பனை
ஆடாதொடை
சிறுகுருந்து

இவற்றின் சாறு வகைக்கு 1 உழக்கு (336 மி. லிட்டர்)

நல்லெண்ணெய் 1 படி 2.5 லிட்டர்
வேப்பெண்ணெய் ” ”

இதில்

மாசி
இலவங்கப்பட்டை
வெள்ளுள்ளி
கடுகு
மிளகு
ஏலம்
சிற்றரத்தை
குந்திருக்கம்

வகைக்கு 1 கழஞ்சு (4.4 கிராம்)

| | |
|---|---|
| சதகுப்பை<br>பெருங்காயம்<br>கிராம்பு<br>விசுவாசி<br>அபின்<br>சாதிக்காய்<br>நேர்வாளம்<br>வெண்காரம்<br>கார்போகவரிசி<br>மஞ்சள்<br>இஞ்சி<br>வெந்தயம்<br>ஓமம்<br>கஸ்தூரிமஞ்சள் | வகைக்கு 1 கழஞ்சு (4.4 கிராம்) |

இவற்றை அரைத்துக் கரைத்து, மேற்கூறிய எண்ணெயில் போட்டுக் காய்ச்சி, பதத்தில் இறக்கி வைத்துக் கொள்ளவும்.

அளவு - 1 காசெடை
தீரும் நோய் - வாத கரப்பான்

## வாதசன்னிக்கு எண்ணெய்

**தழுதாழை நொச்சி இருசாறு நாழி**
**சமனாக எண்ணெ யுடனே**
**பழுக்காசு ஓமம் சதகுப்பை கோஷ்டம்**
**பழந்திப்பிலி மிளகுஇவை களுடனே**
**அழுக்கா யரைத்து மெழுகாய் வடித்து**
**அதுமேனி யிட்டு நுகரில்**
**வழுவாத வாதசன்னி தோஷம் மாறும்**
**மறையோ ருரைத்த மொழியே.**

(பொருள்) இதில் வாதசன்னிக்குரிய தைலம் கூறப்பட்டுள்ளது. தழுதாழை, நொச்சி ஆகிய இரண்டின் சாறு ஒருபடி, இவை இரண்டும் சேர்ந்த அளவு 2 படி எண்ணெய். இவை அனைத்தையும் ஒன்று கலந்து வைத்துக் கொள்ள வேண்டும். ஓமம், சதகுப்பை, கோட்டம், திப்பிலி, மிளகு (இவைகளுக்கு அளவு கூறப்படவில்லை.) இவற்றை அரைத்து மேற்படிக் கலவையில் கலந்து அடுப்பேற்றி எரித்து மெழுகு

பதத்தில் வடிகட்டி வைத்துக்கொண்டு மேற்பூச்சாக வாதசன்னிக்குப் பயன்படுத்த அது மாறும்.

## வாத சன்னிக்கு எண்ணெய் (வேறு)

| | | |
|---|---|---|
| வேப்பெண்ணெய் | - | 3 பங்கு |
| நல்லெண்ணெய் | - | 3 பங்கு |
| மயிலிறகு பொடி | - | 1 நாழி (1.3 லிட்டர்) |

இரண்டு எண்ணெயையும், சட்டியில் விட்டு, நன்றாகக் கொதித்த பிறகு, மயிலிறகுப் பொடியைப் போட்டு மூடித் திறக்க உருகிய எண்ணெய் கசப்பு போகும். உள்ளுக்குக் கொடுத்து மேலுக்குப் பூசவும்.

தீரும் நோய்கள் - சகல சன்னி, குட்டம், கடிவிகாரம், கால் கை முடங்கல்

## வாதசன்னிக்கு எண்ணெய் (வேறு)

| | | |
|---|---|---|
| எண்ணெய் | - | 1 நாழி (1.3 லிட்டர்) |
| வேப்பெண்ணெய் | - | " " |

வெள்ளெருக்கம் வேர் வடக்கே போகும் வேர் வெட்டிவந்து, கொட்டைப் பாக்களவு, மேற்கூறிய எண்ணெயில் போட்டு எரித்து நக்கவும். மேலுக்கும் தடவவும்.

அளவு - 1 பணவெடை (488 மி.கி)
தீரும் நோய் - வாதசன்னி

## வாத சூனியத்திற்கு எண்ணெய்

ஐந்தெண்ணெய் - 4 பங்கு
(புங்கெண்ணெய், ஆமணக்கெண்ணெய், நல்லெண்ணெய், இலுப்பை எண்ணெய், வேப்பெண்ணெய்)

கொடிவேலி
அழிஞ்சி
புங்கு
வெள்ளெருக்கு
கள்ளி
அவுரி
முடக்கற்றான்
} வகைக்கு 5 பலம் (175 கிராம்)

மாவிலிங்கை
பெருங்காயம்
அரத்தை
சதகுப்பை
வெள்ளுள்ளி
வசம்பு
கடுகுரோகணி
முதியார்கூந்தல்
சுக்கு
கெந்தகம்
பூதகரப்பான்பட்டை
தேவதாரம்
மஞ்சள்
மரமஞ்சள்

(மேற்கண்டவை) வகைக்கு 5 பலம் (175 கிராம்)

இவற்றைக் கூட்டி எரித்துக் கொள்ளவும்.

தீரும் நோய் - என்பது வாதம், பேய், பிசாசு, சூனியம்

## வாய்வு மூலத்திற்கு எண்ணெய்

| | | |
|---|---|---|
| சிற்றாமணக்கெண்ணெய் | - | 1 படி (2.5 லிட்டர்) |
| சங்கம்வேர் | - | 1 பிடி |
| மூக்கிரட்டைவேர் | - | ” |
| முடக்கொற்றான்வேர் | - | ” |
| மிளகு | - | ” |

இவை அனைத்தும் கூட்டிக் கொதிக்க வைத்துக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | ஒரு உச்சிக்கரண்டி |
| காலம் | - | தினம் |
| தீரும் நோய் | - | வாய்வு மூலம் |

## விரை வாதத்திற்கு எண்ணெய்

வெள்வெங்காயம் உரித்தது - 1 உரி (672 மி. லிட்டர்)

இதனை அரைத்துத் தடிமனான துணியிலிட்டுப் பிழிந்து, அதில்

பெருங்காயம் - 1 காசெடை
பேராமணக்கு

இரண்டையும் விட்டுக் கலந்து கொடுக்கவும்.

தீரும் நோய் - விரைவாதம்

விளைவு - நான்கு நாழிகைக்குள் தீரும்
(1 மணி 36 நிமிடம்)

### விரை வாதத்திற்கு எண்ணெய் (வேறு)

வேப்பெண்ணெய் - 1 உரி (672 மி. லிட்டர்)
வெள்வெங்காயம்
அரைத்த விழுது - 1 விளாங்காயளவு
கழற்கொடிப்பருப்பு
(உள்முளை எடுத்து வறுத்தது) - ½ பலம் (17.5 கிராம்)

இவற்றைக் கூட்டி அரைத்து, எண்ணெயில் விட்டுக் காய்ச்சி வடித்துக் கொள்ளவும். மேலுக்குப் பூசி, கடுகை வீக்கத்தில் பூசவும்.

அளவு - 1 உச்சிக்கரண்டி
பத்தியம் - கார்ப்பு, புளிப்பு தவிரவும்
தீரும் நோய் - விரை வாதம்

### வெட்டுப்பட்டு நாள்சென்ற புண்ணிற்கு எண்ணெய்

தும்பைச்சாறு - 1 உழக்கு (336 மி. லிட்டர்)
தேங்காய் எண்ணெய் - " "

இரண்டையும் கூட்டி, வேக வைத்து, மெழுகுப் பதத்தில் கடுகு நீக்கி வடித்துக் கொள்ளவும்.

தீரும் நோய் - வெட்டுப்பட்டு நாள்சென்ற புண்

## மாத்திரை

### அக்கரத்துக்குக் குளிகை

கடுகு மிளகு திப்பிலி அக்கிரா மாசிக் காயேலம்
எடைச மனிடு ஒருபடி இளநீர் எரியிட்டு சுவறியபின்
விடமற இளநீரின் மடல்பிழி கோரோசனை இதமொடு
அரைக்குளிகை
படுநிழ லுலரவை வெந்நீர்தனிலிடு பறி படு இரும லக்கரமொடு
பறந்[illegible]மே

(பொருள்) அக்கரத்திற்கு இதில் குளிகை கூறப்படுகிறது.

கடுகு
மிளகு
திப்பிலி
அக்கிராகாரம்
மாசிக்காய்
ஏலம்
} சம எடை

இளநீர் விட்டு எரித்துச் சுத்தி செய்து கொண்டு கோரோசனை 1 பங்கு சேர்த்து அரைத்துக் குன்றியளவு உருண்டை (130 மி.கிராம்) செய்து கொள்ள வேண்டும்.

அனுபானம் - வெந்நீர்
தீரும் நோய்கள்- இருமல், வாய்ப்புண்

## சஞ்சீவிக் குளிகை

சாரட் டைசிறு கீரைவேர் சமுத்திரா மருதம் பட்டை
கூறிய மலர்பூ வந்திக் கொட்டைதூ தளையின் சாற்றில்
ஊறி அரைத்து சுண்டைக் காயளவு உண்டை செய்தால்
மீறிய அக்க ரத்தை வெருண்டசஞ் சீவிதானே.

தானே சீரக மதிமதுரம் தழுத்த வில்லைக் குடிநீரில்
மானே உள்ளு ரோகமற்றும் வளரும் பொடுதலை இந்துப்பு
காணே பருத்தி இலைக்கருக்கி கொட்டி புன்லே தான்காய்ச்சி
வானோர் குளிகை ஒன்றளிக்க மாந்த மனைத்தும் பறந்திடுமே.

மாறுள்ள அத்திப் பட்டை மாதுளம் பழத்தின் பட்டை
வேறுமா வாரம் பட்டை வெந்நீ ரதனில் கொள்ள
சீறிய கழிச்சல் காய்ச்சல் தியங்கிய மயக்க மெல்லாம்
மாறிடு முனிவன் சொன்ன சஞ்சீவி மருந்து தானே.

பொருள் இதில் சஞ்சீவிக் குளிகை செய்முறை கூறப்படுகிறது

சாரடை
சிறுகீரைவேர்
சமுத்திராப்பழம்
மருதம் பட்டை
இலவங்கம்
பூவந்திக்கொட்டை
} சம எடை

இவற்றைத் தூதுவளைச் சாற்றில் அரைத்துச் சுண்டைக் காயளவு குளிகை செய்து உலர்த்திக் கொள்ள வேண்டும்.

| | அனுபானம் | | தீரும் நோய்கள் |
|---|---|---|---|
| 1. | சீரகம்<br>அதிமதுரம்<br>வில்வ வேர் | குடிநீர் | அக்கரம்<br>உள்ளுரோகம் |
| 2. | பொடுதலை<br>இந்துப்பு<br>பருத்திஇலை | கருக்குக்<br>குடிநீர் | மாந்தம் |
| 3. | அத்திப்பட்டை<br>மாதுளம்<br>பழப்பட்டை<br>ஆவாரம்பட்டை | பொடித்து<br>வெந்தநீர் | கழிச்சல்<br>காய்ச்சல்<br>மயக்கம் |

### அங்குசத் தாண்டவம்

அப்பிரகச் செந்தூரம், லோக செந்தூரம், காந்த செந்தூரம், நாபி, இரசம், கெந்தகம், வெண்காரம், சுக்கு, மிளகு, திப்பிலி, ஊமத்தை விரை, வில்வபத்திரி விரை, கஸ்தூரி மஞ்சள், புளியங்கொட்டைத் தோல், சீதளமுள்ளிவிரை, வாய்விளங்கம் இவை சமஅளவில் சேர்க்கவும். கையாந்தகரைச் சாற்றில் ஒரு நாள், கஞ்சாஇலைச் சாற்றில் ஒருநாள் அரைத்துக் குன்றிமணி அளவு (130 மி.கிராம்) மாத்திரைகளாகச் செய்து கொள்ள வேண்டும்.

அளவு - இரண்டு குன்றிமணியளவு (270 மி. கிராம்)
அனுபானம் - தேன்
தீரும் நோய்கள்- பஞ்சகாசம், க்ஷயம், குன்மம், எட்டுவகைப் பைத்தியம், அதிசாரம், வாதரோகம் முதலானவை.

### அசீரணத்துக்கும், விஷந்தீண்டி கோழை கட்டின பேர்களுக்கு மாந்தம், போர் மாந்தம் இவைகளுக்கும் மாத்திரை

பூவந்திப்பழம் (நெய்க் கொட்டான் பழம்) கொண்டு வந்து காடியால் அரைத்துக் கழற்கொடிக்காய் அளவு மாத்திரைகளாகச் செய்து கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| தீரும் நோய்கள் | - | அசீரணம், விஷம் தீண்டிக் கோழை கட்டினால், வாயாலெடுக்க, நஞ்சு தின்ற பேர்களுக்கு முரிவு, மாந்தம், விரைவாதம் |
| அசீரணத்திற்கு | - | கலிக்கம் போடவும் |

விஷம் தீண்டிக் கோழை கட்டினால், வாயாலெடுக்க நஞ்சு தின்ற பேர்களுக்கு விரைவாதத்துக்கு } இளவெந்நீரில் கொடுக்கவும்

| | | |
|---|---|---|
| மாந்தத்துக்கு | - | பெரும் பயறளவு முலைப்பாலில் கொடுக்கவும். |
| பத்தியம் | - | கைப்பு, புளிப்பு தவிரவும். உப்பு வறுத்துக் கூட்டவும். வெள்ளுள்ளி, மிளகு, கொள்ளுச் சாறு கூட்டி அசனம் செய்யவும். |

## அஷ்டசுர குலாந்தகன்

தாம்பிரபற்பம், கௌரி, கெந்தகம் இவற்றுக்குச் சமன்அளவு நாவி, இரதம் சேர்த்து, நொச்சிச்சாறு, துளசிஇலைச் சாறு விட்டு மூன்று நாள் அரைக்கவும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | எள்ளளவு |
| அனுபானம் | - | திப்பிலி, சுக்கு, வெந்நீர் |
| தீரும் நோய்கள் | - | சன்னி பதிமூன்று, சுரம் எட்டு |

## அண்டவாதம் ஐந்துக்கும் மருந்து

| | | |
|---|---|---|
| வெள்வெங்காயம் | - | ½ பலம் (17.5 கிராம்) |
| கழற்சிப்பருப்பு | - | ஐந்து |
| கழற்சிக்கொழுந்து | - | 1 பிடி |
| கையாந்தகரை | - | ” |
| குறிஞ்சாவேர் | - | ” |
| தேங்காய்த்துருவல் | - | ” |
| துத்திக்கொழுந்து | - | ” |
| விளாவிலை | - | ” |
| உகாய்கொழுந்து | - | ” |

| | | |
|---|---|---|
| சாதிலிங்கம் | - | ,, |
| அசமதாகம் | - | ,, |
| சுக்கு | - | ,, |
| இலுப்பைப் புண்ணாக்கு | - | ,, |

இவற்றையெல்லாம் ஆமணக்கு எண்ணெயில் கருக்கிக் கொள்ளவும். பின்பு அரைத்துச் சுண்டைக்காயளவு மாத்திரைகளாகச் செய்து கொள்ளவும்.

| | |
|---|---|
| அளவு - | சுண்டைக்காயளவு (நாளொன்றுக்கு மூன்று வேளை) |
| தீரும்நோய்கள் - | ஐந்துவகை அண்ட வாதங்கள் |

## அதிசாரத்துக்குக் குளிகை

**காட்டுக் கிராம்பு சீரகமும் காசுக் கட்டி சாதிலிங்கம்**
**ஆட்டும் பிசினும் சரிகூட்டி அழகா மத்தைச் சாற்றுடனே**
**ஒட்டிச் சாம மொன்றரைத்து உண்டை மிளகுப் பிரமாணம்**
**கூட்டிப் பிச்சஞ் சாற்றுடனே கொள்வார் கழிச்சல் வெல்வாரே.**

(பொருள்) அதிசாரத்திற்குக் குளிகை இதில் கூறப்படுகிறது.

கிராம்பு
சீரகம்
காசுக்கட்டி
சாதிலிங்கம்
இலவம்பிசின்
} சரி எடை

இவற்றைப் பொடித்து ஊமத்தை இலைச்சாற்றில் ஒரு சாமம் (3 மணி) அரைத்து மிளகளவு உருண்டை செய்துகொள்ள வேண்டும்.

| | |
|---|---|
| அனுபானம் - | எலுமிச்சம்பழச்சாறு |
| தீரும் நோய் - | கழிச்சல் |

## அதிசாரக் குளிகை

| | | |
|---|---|---|
| சுக்கு | - | 1 வராகன் (3.5 கிராம்) |
| மிளகு | - | ,, ,, |
| திப்பிலி | - | ,, ,, |
| நற்சீரகம் | - | ,, ,, |

| | | | |
|---|---|---|---|
| அதிவிடையம் | - | ” | ” |
| குரோசானி ஓமம் | - | ” | ” |
| மாங்கொட்டை | - | ” | ” |
| சாதிக்காய் | - | ” | ” |
| கஞ்சாப்பொடி | - | ” | ” |
| சாதிபத்திரி | - | ” | ” |
| கிராம்பு | - | ” | ” |
| அபின் | - | ” | ” |
| விளாம்பிசின் | - | ” | ” |
| வில்வப்பிசின் | - | ” | ” |
| கருவேலம்பிசின் | - | ” | ” |
| அத்திப்பிசின் | - | ” | ” |
| காரீயம் | - | ” | ” |
| இரதம் | - | ” | ” |

இவற்றை ஒன்றுவிட்டுப் பருத்தியிலைச் சாறுவிட்டு அரைத்து எல்லாவற்றையும் எருமைத் தயிரிலரைத்துத் தூவி, விளங்காய் அளவு உருண்டையாகச் செய்யவும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | விளங்காய் அளவு |
| அனுபானம் | - | தேனில், எருமைத் தயிரில், எருமை வெண்ணெயில் |
| பத்தியம் | - | எருமைத்தயிர், சோறு உண்ணவும் |
| தீரும் நோய் | - | அதிசாரம் |

## அதிசாரக் கிராணிக்கு மாத்திரை

சாதிலிங்கம், வெண்காரம், பச்சை நாபி, கெந்தகம், திரிகடுகு இவை சம அளவில் எலுமிச்சம்பழச்சாறு சேர்த்து நான்கு சாமம் (12 மணி நேரம்) அரைத்துக் குன்றிமணியளவு உருண்டை செய்து கொள்ளவும். சாதிக்காய் ஒன்று, கிராம்பு எட்டு, சீரகம் காசெடை (ஒருபைசாவின் அளவு) வறுத்துப் படியளவுத் (2.65 லிட்டர்) தண்ணீரில் போட்டு உழக்காகக் காய்ச்சி, உளுந்தளவு அபின் ஒரு குளிகை இவற்றைச் சேர்த்துக் கொடுக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| அனுபானம் | - | பாக்களவு வெண்ணெய் |
| தீரும் நோய் | - | அதிசாரக் கிராணி |

## அமிர்தாதி குளிகை

கெந்தகமொன்று ரதமொன்று வாளம் நாலு
கிளர்ககடு குரோகணியு மாறாய்க் கொண்டு
முந்துமிழ் நீரதனா லரைத்து உண்டை
முதிர்ந்த பயறளவாய் செய்த பின்னே
வந்தபல சுரந்தனக்கு மிளகுநீர் திப்பிலி
வகையறிந்து கொடும்சுரம்போம் வயிறுபோகும்
சுந்திர மமிர்தா தியென்றேதான்
தொல்லுலகில் போகத்தார் சொல்லு வாரே.

(பொருள்) இதில் அமிர்தாதி குளிகை கூறப்படுகிறது.

| | | |
|---|---|---|
| கந்தகம் | - | 1 பங்கு |
| இரசம் | - | ” |
| நேர்வாளம் | - | 4 ” |
| கடுகுரோகிணி | - | 4 ” |

உமிழ்நீரில் அரைத்துப் பயறளவு உருண்டை செய்து கொள்ளவேண்டும்.
அனுபானம் - மிளகுநீர், திப்பிலி
தீரும் நோய்கள்- பேதியாகும், சுரம் தீரும்

## அர்த்தநாத சுரக்குளிகை

இரதம், அரிதாரம், கெந்தகம், நாபி, துருசு, வெள்ளைப் பாஷாணம், கௌரிப் பாஷாணம், சாதிலிங்கம், மனோசிலை, நேர்வாளம் இவை சமன் கூட்டி, எருக்கம்பால் விட்டு ஒருசாமம் (3 மணி நேரம்) அரைத்துப் பயறளவு உருண்டை செய்து தலையிலும் உள்ளங்காலிலும் கீறி மத்திக்கவும்.
தீரும் நோய்கள் - சுரம், சன்னி

## அர்த்தநாரீசுவரன் குளிகை

இரசபற்பம்
சாதிலிங்கம்
கெந்தகம்
அரிதாரம்
வெண்காரம்
அப்பிரக செந்தூரம்

பச்சை நாபி
நாகபற்பம்
மனோசிலை
தாம்பிரபற்பம்

இவை சமபாகம் கூட்டிப் பாகல்இலைச்சாறு விட்டரைத்துக் குகையிலிட்டுக் காடை புடமிடவும். அதன்பிறகு எருக்கம்பால் விட்டு ஒருநாள் உலர வைக்கவும். கள்ளிப்பால் விட்டு மூன்று நாள் வெய்யிலில் உலர்த்திக் குன்றிப் பிரமாணம் (130 மி.கிராம்) குளிகைகளாகச் செய்து கொள்ளவும்.

1. இஞ்சிச்சாற்றிலிட - சர்வசுரமும் தீரும்
2. வெள்ளாட்டு வலது முலைப்பாலில் இட - வலது பாரிச சுரம் தீரும்
3. வெள்ளாட்டு இடது முலைப்பாலில் இட - இடது பாரிச சுரம் தீரும்
4. இரண்டு முலைப்பாலில் இட - இருவகையான சுரமும் தீரும்
5. முருங்கைப்பட்டைச் சாற்றிலிட - குன்மம் தீரும்
6. தேனிலிட - வயிற்றுவலி தீரும்
7. சீரகத்தில் இட - இரைந்து கழிகிற வாய்வு தீரும்
8. இஞ்சிச் சாற்றிலிட - க்ஷய ரோகம் தீரும்
9. சாதிக்காய், கிராம்பு மாதுளங்காய் சாற்றிலிட - கிராணி தீரும்
10. புத்தாம்பழச்சோறு வெண்ணெயிலிட - பிரமியம் தீரும்
11. பெருங்காயத்திலிட - வயிறு பொருமிக் கழிதல் தீரும்
12. நாவற்பட்டைத் தூளில்இட - பெருவியாதி தீரும்

## ஆனந்த வைரவன் குளிகை

சாதிலிங்கம்
வெண்காரம்
பச்சைநாபி
கெந்தகம்
திரிகடுகு

} சம அளவு

இவை சமஅளவு சேர்த்து, எலுமிச்சம்பழச்சாறு சேர்த்து நான்கு சாமம் (12 மணி நேரம்) அரைக்கவும். குன்றிமணியளவு (130 மி.கிராம்) உருண்டைகளாகச் செய்து கொண்டு நிழலில் உலர்த்தி எடுத்துக் கொள்ள வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| 1. | தீரும் நோய் | - | தாபசுரம் |
| | அளவு | - | குன்றியளவு (130 மி.கிராம்) |
| | அனுபானம் | - | இஞ்சிச்சாறும், சர்க்கரையும் |
| | பத்தியம் | - | நொய்யரிசி, சீரகம், திப்பிலிக்கஞ்சி கொடுக்கவும். |

| | | | |
|---|---|---|---|
| 2. | தீரும் நோய் | - | சீதகரம் |
| | அளவு | - | குன்றியளவு (130 மி.கிராம்) |
| | அனுபானம் | - | சீரகம், திப்பிலி, மிளகு, நொச்சிச்கொழுந்து அரைத்தது. |
| | பத்தியம் | - | நொய்யரிசிக் கஞ்சி |

| | | | |
|---|---|---|---|
| 3. | தீரும் நோய் | - | அதிசாரம் |
| அ. | அளவு | - | குன்றியளவு (130 மி.கிராம்) |
| | அனுபானம் | - | மாவிலங்கை வேர், மாதுளம் பிஞ்சு, முத்தக்காசு, இலவம்பிசின், மஞ்சள் இவைகள் சேர்த்து வைத்த கஷாயம். |
| | பத்தியம் | - | நொய்யரிசிக் கஞ்சி |

| | | | |
|---|---|---|---|
| ஆ. | அளவு | - | குன்றியளவு (130 மி.கிராம்) |
| | அனுபானம் | - | மாதளம்பூ, சீரகம், குடசப்பாலை பட்டை, விதை, முள்ளிவேர், வில்லைவேர், நன்னாரி வேர், கடுக்காய்ப்பொடி, விளாம்பிசின் உள்ளி இவற்றின் பொடி. மோரில் தேன் மிதமாகக் காய்ச்சிக் கொடுக்கவும். |

| | | | |
|---|---|---|---|
| இ. | அளவு | - | குன்றியளவு (130 மி.கிராம்) |
| | அனுபானம் | - | சாதிக்காய் ஒன்று, கிராம்பு |

| | | | |
|---|---|---|---|
| | | | எட்டு, சீரகம் காசெடை (ஒரு பைசா அளவு) இவை வறுத்துப் படியளவு (2.65 லிட்டர்) தண்ணீரில் போட்டு உழக்காகக் காய்ச்சி உளுந்தளவு அபினுடன் கூட்டிக் கொடுக்கவும். பாக்களவு வெண்ணெய் கூட்டிக் கொடுக்கவும். |
| | பத்தியம் | - | தயிறும் சோறும். சுரம் உண்டானால் தயிர் காய்ச்சிக் கொடுக்கவும். |
| 4. | தீரும் நோய் | - | வயிற்றுச் சூலை |
| | அளவு | - | குன்றியளவு (130 மி.கிராம்) |
| | அனுபானம் | - | வில்வவேர், பத்துமிளகு இவற்றைத் தண்ணீர் விட்டு அரைத்து, உழக்கு (336 மி.லிட்டர்) தண்ணீரில் தேன் பதமாகக் காய்ச்சியது. |
| | பத்தியம் | - | பசுவின் பால் ஆட்டுப்பால் கொடுக்கவும். |
| 5. | தீரும் நோய் | - | நீரிழிவு |
| | அளவு | - | குன்றியளவு (130 மி.கிராம்) |
| | அனுபானம் | - | பச்சைப் பாக்களவு வெண்ணெயும் காசெடை (1 பைசா அளவு) சர்க்கரையும் |
| | பத்தியம் | - | பொன்னாங்காணி, முருங்கை இலை, முருங்கைக்காய், பாசிப் பயறு, வெந்தநீர், பசுவின் மோர் இவை சேர்க்கவும். |
| 6. | தீரும் நோய் | - | மூத்திரக் கிரிச்சரம் |
| | அளவு | - | குன்றியளவு (130 மி.கிராம்) |
| | அனுபானம் | | பழுத்த பசலைச் சமூலம் இரண்டு பிடி நாழித் (13 லிட்டர்தண்ணீரில் உழக்காய்க் (336மி.லிட்டர்.) |

| | | | |
|---|---|---|---|
| | | | காய்ச்சி இதில் காசெடை (ஒருபைசா அளவு) சர்க்கரையும் சேர்க்கவும். |
| | பத்தியம் | - | பாசிப்பயற்றங்கஞ்சி சேர்க்கவும் |
| 7. | தீரும் நோய் | - | கல்லடைப்பு |
| அ. | அளவு | - | குன்றியளவு (130 மி.கிராம்) |
| | அனுபானம் | - | இரண்டு தேற்றான் கொட்டைகளைப் பசுவின் பாலிலரைத்து இரண்டு காசெடை (இரண்டு பைசா அளவு) சர்க்கரை கூட்டியது. |
| | பத்தியம் | - | பாசிப்பயற்றங் கஞ்சி |
| ஆ. | தீரும் நோய் | - | கல்லடைப்பு |
| | அளவு | - | குன்றியளவு (130 மி.கிராம்) |
| | அனுபானம் | - | ஆலங்கொழுந்து காசெடை (ஒருபைசா அளவு) மோர் சேர்த்தரைத்து, இரண்டு காசெடை (இரண்டு பைசா அளவு) சர்க்கரையும் சேர்த்தது. |
| | பத்தியம் | - | காரரிசிச் சோறு, முருங்கை இலை, பொன்னாங்காணி, நெல்லிமுள்ளி, பாசிப் பயிற்றுநீர், பசுவின் மோர் இவை கூட்டவும். |
| இ. | தீரும் நோய் | - | கல்லடைப்பு |
| | அளவு | - | குன்றியளவு (130 மி.கிராம்) |
| | அனுபானம் | - | சங்கம் வேர் பன்னிரண்டு காசெடை (ஒரு பைசா அளவு) |
| | பத்தியம் | - | பசுவின் பால், ஆட்டுப்பால் சேர்க்கவும் |
| 8. | தீரும் நோய் | - | நீர்ப்பாட்டுக்கும் வாயால் எடுக்கிறதுக்கும் |
| | அளவு | - | குன்றியளவு (130 மி.கிராம்) |

| | | | |
|---|---|---|---|
| | அனுபானம் | - | உப்பும் திப்பிலியும் காசெடை (ஒருபைசா அளவு) அளவு இளவெந்நீரில் கொடுக்கவும். |
| | பத்தியம் | - | மோரில் கஞ்சி காய்ச்சிக் கொடுக்கவும். பசியாமல் மந்தமாயிருந்தால் ஒருகாசெடை (ஒருபைசா அளவு) சுக்கும் இருபது மிளகும் கூட்டி வெந்நீரில் கொடுக்கவும். |
| 9. | தீரும் நோய் | - | சூலை, பக்கசூலை |
| | அளவு | - | குன்றியளவு (130 மி.கிராம்) |
| | அனுபானம் | - | பிரண்டை, பெருங்காயம், கழற்கொடி, பருப்பு, சுக்கு, இந்துப்பு, வெள்ளை வெங்காயம் இவை ஒவ்வொன்றும் ஒரு காசெடையும் (ஒருபைசாஅளவு) கடுக்காய் மூன்று காசெடையும் (மூன்று பைசா அளவும்) வெந்நீரில் கொடுக்கவும். |
| 10. | தீரும் நோய் | - | செரியாமை |
| | அளவு | - | குன்றியளவு (130 மி.கிராம்) |
| | அனுபானம் | - | தேன் |
| 11. | தீரும் நோய் | - | பிரமியம் |
| | அளவு | - | குன்றியளவு (130 மி.கிராம்) |
| | அனுபானம் | - | ஆவாரம்பூ, அரிசி, சர்க்கரை, பசுவின் வெண்ணெய் |
| 12. | தீரும் நோய் | - | தேள் விஷம் |
| | அளவு | - | குன்றியளவு (130 மி.கிராம்) |
| | அனுபானம் | - | பாக்கு |
| 13. | தீரும் நோய் | - | பாம்பின் விஷம் |
| | அளவு | - | குன்றியளவு (130 மி.கிராம்) |
| | அனுபானம் | - | மருதம் பால் |

14. தீரும் நோய் - பாம்பு, தேள் விஷம்
அளவு - குன்றிய்ளவு (130 மி.கிராம்)
அனுபானம் - எலுமிச்சம்சாற்றில் குளிகையை யுரைத்துக் கடிவாயில் தடவவும்.

15. தீரும் நோய் - அதிசாரக்கிராணி
அளவு - குன்றியளவு (130 மி.கிராம்)
அனுபானம் - சுக்கும், அதிவிடையமும்

## ஆனந்த வைரவன் குளிகை (வேறு)

சாதிலிங்கம்
வெண்காரம்
பச்சைநாபி
மிளகு
திப்பிலி
சாதிக்காய்
கிராம்பு
ஊமத்தைவிதை
} சம எடை

இவற்றைத் தேசிப்பழச்சாற்றில் மூன்றுநாள் நெகிழ அரைத்துக் கொள்ளவும். குன்றியளவு (130 மி.கிராம்) உருண்டைகளாகச் செய்து நிழலில் உலர்த்திக் கொள்ளவும்.

அளவு - குன்றியளவு (130 மி.கிராம்)
1. அனுபானம் - ஆவின்பால், இஞ்சிச்சாறு
தீரும் நோய் - பித்த சுரம்

2. அனுபானம் - வெற்றிலைச்சாறு
தீரும் நோய்கள்- வாதசுரம், சிலேற்பனசுரம்

## ஆனந்த வைரவன் குளிகை (வேறு)

சாதிலிங்கம்
வெண்காரம்
பச்சைநாபி
கெந்தகம்
திரிகடுகு

இந்த ஏழு மருந்துகளுக்கும் சரி எடை அளவு நேர்வாளமும், அதே எடையளவு கடுகுரோகணியும் சேர்த்துக் கொள்ளவும். எலுமிச்சம்பழச்சாறு விட்டுத் தினம் சாமமாக (3 மணி நேரம்) மூன்று நாட்களுக்கு அரைத்துக் குன்றிமணியளவு (130 மி.கிராம்) மாத்திரைகளாகச் செய்து நிழலில் உலர்த்தவும்.

| | | |
|---|---|---|
| தேனில் கொடுக்க | - | அதிசாரம் தீரும் |
| ஆடாதொடையில் கொடுக்க | - | சுவாசநோய் தீரும் |
| ஆவாரம்பூவிலரைத்துத்தர | - | சலக்கழிச்சல் தீரும் |
| பசுவின்வெண்ணெயில்தர | - | சர்வ விஷமும் தீரும் |
| இஞ்சிச் சாற்றில் கொடுக்க (சுக்கிலும் கொடுக்கலாம்) | - | புதுச்சுரம், சன்னி தீரும் |

பத்தியம் - சுறா, நெத்திலிக் கருவாடு சேர்க்கவும். கரிப்பு, புளிப்பு தவிரவும்.

## இஞ்சிக் குளிகை

காந்த மிரத மரிதாரம் கடிய நாவி சாதிலிங்கம்
போந்தார் புகழும் மனோசிலையும் புகழ் கெந்தக மோர்கழஞ்சாய்
தேந்தார் மதிக்கும் வெண்காரம் திடனா மூன்று கழஞ்சாக
வேந்தே நிறுத்திச் சுத்திசெய்து விதமாய் வைத்துத் தான்கொண்டே
கொண்டே பீர்க்கஞ் சாறதுவும் கொள்ளுந் தேசிப் பழச்சாறும்
கண்டே ஆவின் கோமியமும் கருது மிஞ்சிச் சாறதுவும்
நின்றே நாலு நாளாக நிறுத்து அரைத்துக் கொள்வீரே.
கொள்வீர் குன்றி மணியளவு குளிரிஞ்சிச் சாற்றி லிட்டாலே
கொல்லும் வாத பித்தமுடன் கொடிய சிலேட்டும முள்ளவையும்
நன்றாய் தீர வகைகாணும் நளிருங் குளிருங் கர்ய்ச்சலுடன்
உள்ளே நின்ற இருமலுக்கும் ஒற்று கருத்த கோழைக்கும்
நிற்றே குற்றுமே குத்துக்கும் நீண்ட வயிற்றுப் பொருமலுக்கும்
நன்றாய் தீரும் நாகத்தின் நல்குஞ் சாறு தனிலிடவே.

(பொருள்) இதில் இஞ்சிக் குளிகை செய்முறை கூறப்படுகிறது.

காந்தம்
இரசம்
விளகம்
நாபி
சாதிலிங்கம்
மனோசிலை
கந்தகம்
} வகைக்கு 1 கழஞ்சு (4.4 கிராம்

வெங்காரம் - 3 கழஞ்சு (13.2 கிராம்)

இவற்றை முறைப்படி சுத்திசெய்து வைத்துக்கொண்டு பீர்க்கஞ் சாற்றிலும், எலுமிச்சம்பழச்சாற்றிலும், பசுநீரிலும், இஞ்சிச் சாற்றிலும் 4 நாள் அரைத்துக் குன்றிமணிஅளவு (130 மி.கிராம்) மாத்திரை உருட்டிக் கொள்ள வேண்டும்.

| | | |
|---|---|---|
| அனுபானம் | - | இஞ்சிச்சாறு, நாகப்பழச்சாறு |
| தீரும் நோய்கள் | | வாதபித்த சிலேத்துமம் என்னும் முக்குற்றங்கள், குளிர் காய்ச்சல், இருமல், கோழை, குத்துவலி, வயிற்றுப்பொருமல் |

## இரதாம்பிரையோகம்

| | |
|---|---|
| இரதசெந்தூரம்- | 2 பலம் (70 கிராம்) |
| லோகசெந்தூரம்- | 2 பலம் (70 கிராம்) |
| வங்கசெந்தூரம்- | 2 பலம் (70 கிராம்) |
| அதிராசெந்தூரம்- | 2 பலம் (70 கிராம்) |

இது சேரக்கூட்டித் தேன்விட்டரைத்து, மூன்று நாட்களுக்குத் தினம் ஒரு சாமம் (3 மணி நேரம்) அரைக்கவும். கடுகு அளவாக உருண்டை செய்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு - ஒரு கடுகளவு

| அனுபானம் | | தீரும் நோய் |
|---|---|---|
| 1. முருங்கைப்பட்டைத் தண்ணீர் | - | வலிகுன்மம் |
| 2. சீந்தில் தண்ணீர் சாற்றிலிட | - | பித்தகுன்மம் |
| 3. நொச்சிச் சாற்றிலிட | - | மூலகுன்மம் |
| 4. வெள்ளுள்ளி நீரிலிட | - | வாய்வு தீரும் |
| 5. கொம்மட்டிக்காய்ச் சாற்றிலிட | - | வயிற்றுவியாதி, தீராத விஷம் தீரும் |
| 6. முலைப்பாலில் இட | - | சுரம் தீரும் |
| 7. புங்கம்வேர் தட்டியிட | - | பீலிகை தீரும் |
| 8. அழிஞ்சிவேர் நறுக்கியிட | - | வயிற்றில் விப்புருதி தீரும் |
| 9. வெள்வெங்காயநீர் | - | சிலேட்டுமம் தீரும் |
| 10. தேன், கையாந்தகரைச் சாற்றிலிட | - | ஊதுகாமாலை தீரும் |

## இரத்தினாதிக் குளிகை

| | | |
|---|---|---|
| பச்சைநாபி | - | 3 பலம் (105 கிராம்) |
| சாதிலிங்கம் | - | " " |
| கோஷ்டம் | - | " " |
| சாதிக்காய் | - | " " |
| கிராம்பு | - | " " |
| சுக்கு | - | " " |
| பொரிகாரம் | - | " " |
| மிளகு | - | " " |
| திப்பிலி | - | " " |
| நேர்வாளம் | - | 4 பலம் (140 கிராம்) |

இவற்றை எலுமிச்சம் பழச்சாறு வார்த்து அரைத்து உளுந்தளவு (65 மி.கிராம்) உருண்டைகளாகச் செய்யவும்.

அளவு - உளுந்தளவு (65 மி.கிராம்)

| அனுபானம் | | தீரும் நோய் |
|---|---|---|
| 1. திப்பிலி, தேனிலிட | - | உள்குத்து, பிறவலியன், கோழி வலிப்பு இவை தீரும் |
| 2. இஞ்சிச் சாற்றிலிட | - | வாத சிலேட்டுமம் தீரும் |
| 3. முலைப்பாலிலிட | - | சுரம், பைத்தியம் தீரு் |

## உலோகோத்திரக் குளிகை

| | | | | |
|---|---|---|---|---|
| இரதம் | - | 1 | வராகன் | (3.5 கிராம்) |
| கெந்தகம் | - | 2 | " | (7 ") |
| நேர்வாளம் | - | 3 | " | (10.5 ") |
| பேய்க்கொம்மட்டி விதை | - | 4 | " | (14 ") |
| வெண்காரம் | - | 5 | " | (17.5 ") |
| காட்டாமணக்குவிதை | - | 6 | " | (21 ") |
| தில்லைவிதை | - | 7 | " | (24.5 ") |
| கொன்றைப் பழச்சதை | - | 8 | " | (28 ") |
| கடுகுரோகணி | - | 9 | " | (31.5 ") |
| சிவதைவேர் | - | 10 | " | (35 ") |
| பாலரசங்கொட்டை | - | 11 | " | (38.5 ") |

இவற்றைச் சதுரக்கள்ளிப்பால் விட்டரைத்து, முற்றின தேங்காயில் அடைத்து மூடி, புடமிட்டெடுத்து அரைத்துக் குன்றிமணியளவு (130 மி.கிராம்) அளவாக உருண்டை செய்து கொள்ளவும்.

அளவு - குன்றிமணியளவு (130 மி.கிராம்)
அனுபானம் - வெந்நீர்
தீரும் நோய்கள்- அஷ்டகுன்மங்கள், வேப்பெண்ணெய், ஆமணக்கெண்ணெயில் கலந்து மேல் தடவவாதங்கள் குணமாகும்.

## கண்டபானுக் குளிகை

பால் துத்தம்
அரிதாரம் வகைக்கு 1 பலம் (35 கிராம்)
கற்சுண்ணாம்பு

இவற்றைக் கற்றாழம் சாற்றில் அரைத்துக் குகைக்குள் வைத்துக் குக்குடப்புடம் போடவும். ஆறியபின் எடுத்துக் குன்றியளவு (130 மி.கிராம்) மருந்துடன் சீரகம் சேர்த்துக் கொடுக்க வேண்டும்.

அளவு - குன்றிமணியளவு (130 மி.கிராம்)
அனுபானம் - சீரகம்
தீரும் நோய் - சீதசுரம்
பத்தியம் - சிறுபயறு கஞ்சி காய்ச்சிக் கொடுக்கவும்.

## கண்ணுக்குப் பச்சை உருண்டை

துத்தம்
துரிசு
பளிங்குக்கல்
தலையோடு
சீனக்காரம்
வெண்காரம்
} வகைக்கு 1 பலம் (35 கிராம்)

இவற்றை எலுமிச்சம்பழச்சாற்றில் ஒருசாமம் (மூன்று மணி நேரம்) அரைத்துப் பயற்றங்காயளவு உருண்டை பண்ணி நிழலில் உலர்த்திக் கொள்ள வேண்டும்.

| | | |
|---|---|---|
| தீரும் நோய்கள்- | | பூப்படடக் கண்ணுக்கும் புழு மேய்ச்சலுக்கும் கண் பிரிச்சலுக்கும் கண் நோவுக்கும் முலைப்பாலில் உரைத்திரடத் தீரும். |

## காய்ச்சலுக்குச் சஞ்சீவி மாத்திரை

| | | |
|---|---|---|
| தாளகம் | - | ¼ பலம் |
| கல்சுண்ணாம்பு- | | ” |
| சங்குசுட்டநீறு - | | ” |
| கொட்டாங்கச்சிகரி - | | ” |

இவற்றைக் கொம்புப்பாகல் சாறு விட்டரைத்துப் பயறு அளவு உருண்டைகளாகச் செய்து நிழலில் உலர்த்திக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | பயறளவு (ஆழாக்கு 168 மி.லிட்) தண்ணீரில் கரைத்துக் கொடுக்கவும். |
| பத்தியம் | - | சோற்றுக்கஞ்சி (நாலு நாழிகைக்கும்) (1 மணி 36 நிமிடம்) |
| காலம் | - | இரண்டு நாள் (விடியற்காலை) |
| தீரும் நோய் | - | காய்ச்சல் |

## காய்ச்சலுக்கு சுரகுலாந்தகன் மாத்திரை

கெந்தகம் பாலிலே சுத்தி செய்து கொள்ளவும். மயில்துத்தம் மோரிலே அரைத்து ஏழுதரம் கொதிக்க வைத்துக் கழுவிப் போடவும். பின்னர், அபின் மருந்து, இலவங்கம், அதிவிடையம், நேர்வாளம் (சுத்தி பண்ணினது) இவை சமஅளவு சேர்த்து, எலுமிச்சம் சாற்றில் அரைக்கவும். உளுந்து அளவுள்ள (65 மி.கிராம்) உருண்டைகளாகச் செய்து கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | உளுந்து அளவு (65 மி.கிராம்) |
| அனுபானம் | - | இஞ்சிச்சாறு, வெந்நீர் (இரண்டு பொழுது) |
| தீரும் நோய்கள் | - | விடாக்காய்ச்சல் (ஒருதரம் வாந்தியெடுத்து ஒருதரம் வயிறு விடும். உடனே சுரம் விடும்) |

## கிராணி கேசரிக் குளிகை

அப்பிரகம் காந்தம் சாதிலிங்கம் ஆன கத்தூரி மஞ்சளுடன்
ஒப்புட விடையம் கெந்தகமும் உகந்த குங்கிலியம் கருங்காலிவேர்
தப்பிலா மாஞ்சி இலவம்பிசின் தானே புளியங் கொட்டைத்தோல்
அப்பு சாதிக் காய்கிராம்பு ஆனமுத்தம் பூனைக் காலிவிரை.

இவை சமனாய்த் தானேகொண்டு இதற்கு கஷாய மரைப்பது
அவையாம் நாவல் மாம்பட்டை ஆன பொன்முசுட்டை மாதுளங்காய்
எவையா முத்தம் குடசப்பாலை என்னும் பெருமா வெட்பாலை
நவையாஞ் சமனாய் கிஷாயமிட்டு நாமுன் சொன்ன மருந்தெல்லாம்.

இந்தக் கஷாயத்தில் தானரைத்து இயன்ற குன்றிப் பிரமாணம்
வந்த சர்க்கரைத் தேனிலிட வருத்துஞ் சுக்கு பொன்முசுட்டை
தந்த முத்தங் கஷாயத்தில் தானே குளிகை இடலாகும்
இந்து நுதலாய் பத்தியமும் இதற்கு மாறும் வியாதிகேள்.

சீதக் கிராணி சங்கிராணி திருந்தும் வயிற்றில் கழிச்சலுடன்
மீதே வாழைக் காய்கச்சல் மிகுத்த அத்திக் காயாகும்
போதே ஆட்டுப் பால்காய்ச்சி பண்பாய்க் கொள்ளத் தான்போகும்
மாதே இந்தக் கிராணியுடன் மன்னும் சேத்துமக் கிராணியிதே.

(பொருள்) இதில் கிராணி கேசரிக் குளிகை செய்முறை கூறப்படுகிறது.

| | |
|---|---|
| அப்பிரகம் | சம எடை |
| காந்தம் | |
| சாதிலிங்கம் | |
| கத்தூரி மஞ்சள் | |
| அதிவிடையம் | |
| கந்தகம் | |
| குங்கிலியம் | |
| கருங்காலிவேர் | |
| சடாமாஞ்சில் | |
| புளியங்கொட்டைத் தோல் | |
| சாதிக்காய் | |
| கிராம்பு | |
| முத்தக்காசு | |
| பூனைக்காலிவிதை | |

இவற்றைச் சம எடை சேர்த்துப் பொடித்துக் கொள்ள வேண்டும். பின்

நாவல்:
மாம்பட்டை
பொன்முசுட்டை
மாதுளங்காய்
முத்தக்காசு
குடசப்பாலை
} சம எடை

எடுத்துக் கியாழமிட்டு இக்கியாழத்தில் அரைக்க வேண்டும். அரைத்த மருந்தைக் குன்றிமணி அளவு (130 மி.கிராம்) உருட்டி நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ள வேண்டும்.

| | | |
|---|---|---|
| அனுபானம் | - | சர்க்கரை, தேன்<br>சுக்கு,<br>பொன்முசுட்டை கியாழம்<br>முத்தக்காசு |
| தீரும் நோய்கள் | - | சீதக்கிராணி, சங்கிரக்கிராணி, வயிற்றுக் கழிச்சல், சிலேத்துமக் கிராணி |
| பத்தியம் | - | வாழைக்காய் கச்சல், அத்திக் காய்; ஆட்டுப்பால் உண்ணலாம் |

## கிராணிகேச மாத்திரை

காரார் மிளகும் கதியகொடி வேலிவேர்
கதித்த வெண்காரம் பச்சநாவி கஞ்சாயிலை ஊமத்தைவிரை
கடுக்காய் சாதிலிங்கம்

பேராகும் லோகபற்பம் திப்பிலி சீரகம்
விடையம் தற்சமன் அப்பிரக பற்பம்
பொருந்தி யிதற்கெல்லாம் சரியதாய்

ஏராரும் பொன்னூமத்தை சாற்றி லரைத்து
எழிலான குன்றிபோல் இனிய
தேனில் தோய்த்துக் கொள்ள

பாராரும் நீரிழிவு கிராணிவகை விதூழியும்
பரவும் பாண்டு வீக்கம்
பாருமிது பாருலகில் பேரானதுவே

(பொருள்) இதில் கிராணிகேச மாத்திரை கூறப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| மிளகு | சம எடை |
| கொடிவேலிவேர் | |
| வெங்காரம் | |
| நாபி | |
| கஞ்சா இலை | |
| ஊமத்தைவிதை | |
| கடுக்காய் | |
| சாதிலிங்கம் | |
| அய்பற்பம் | |
| திப்பிலி | |
| சீரகம் | |
| அதிவிடையம் | |
| அப்பிரகபற்பம் | சரி எடை |

இவற்றைப் பொன்னூமத்தைச் சாற்றில் அரைத்துக் குன்றிஅளவு (130 மி.கி.) மாத்திரை உருட்டிக் கொள்ள வேண்டும்.

அனுபானம் - தேன்

தீரும் நோய்கள்- நீரிழிவு, கிராணி, விசூழி, பாண்டு, வீக்கம்.

## குத்துக் குளிகை

| | | |
|---|---|---|
| இரசம் | - | ½ கழஞ்சு (2.2 கிராம்) |
| காந்தம் | - | " " |
| வெள்ளைப்பாஷாணம் | - | " " |

இவற்றைக் குப்பைமேனிச் சாறுவிட்டு அரைத்து உருண்டை செய்து, எருக்கம் பாலில் உரைத்து குடோரிபோட்டு மத்தித்துக் கொள்ளி கொண்டு காண்பிக்கவும் தீரும்.

தீரும் நோய் - அடிபட்டது, குத்து

## குளங்கலக்கிக் குளிகை

காரம் சுக்கு இந்துப்பு கடுகுரோகணி தேவ தாரம்
ஏலம் அரத்தை மரமஞ்சள் இவையோர்சரக்கு கழஞ்சு கொண்டு
ஆரங் கடுக்காய் ஐங்கழஞ்சு ஆவின் கோசலந் தான்விட்டு
சீரோ டவித்துத் தானெடுத்து திருகு மருள்சாற் றரையீரே.

அரையீர் வாளம்பன் னிருகழஞ்சு அதுவோடொக்கத் தான்கூட்டிக்
கரைய அரைத்து மருந்துதனைக் காட்டும் சுண்டைக் காயளவு
உரையே சொல்லும் குளங்கலக்கி உருக்கித் துரத்தும் உண்மையிது
விரைசேர் விரேசன மிதுதனக்கு வெல்லம் வெண்ணெய் தன்னிலிடே

இடவே தீரும் காமாலை ஏகும் வெப்புப் பாவைகளும்
உடனே ஊது காமாலை ஊது கரப்பா ன்நீராமை
திடமே சூலை அரையாப்பு திரட்சி வாயு சலக்கோர
அடவே தீரும் பெருவயிறு ஆதிமா முனியுரைத்த அவிழ்தமிதே

(பொருள்) இதில் குளங்கலக்கிக் குளிகை செய்முறை கூறப்படுகிறது.

| | | |
|---|---|---|
| வெங்காரம் | - | 1 கழஞ்சு (4.4 கிராம்) |
| சுக்கு | - | ” ” |
| இந்துப்பு | - | ” ” |
| கடுகுரோகணி | - | ” ” |
| தேவதாரம் | - | ” ” |
| ஏலம் | - | ” ” |
| அரத்தை | - | ” ” |
| மரமஞ்சள் | - | ” ” |
| கடுக்காய் | - | 5 கழஞ்சு (22 கிராம்) |

இவற்றைப் பசுநீரில் வேகவிட்டெடுத்து, பின் திருகுகள்ளிச் சாற்றிலும், மருள் சாற்றிலும் அரைக்க வேண்டும். அத்துடன்

| | | |
|---|---|---|
| நேர்வாளம் | - | 12 கழஞ்சு (48.8 கிராம்) |

சேர்த்தரைத்துச் சுண்டைக்காயளவு உருட்டி வைத்துக் கொள்ள வேண்டும்.

| | |
|---|---|
| அனுபானம் - | வெல்லம், வெண்ணெய் |
| தீரும் நோய்கள்- | காமாலை, வெப்புப்பாவை, ஊதுகாமாலை, ஊதுகரப்பான், நீராமை, சூலை, அரையாப்பு, திரட்சிவாயு, பெருவயிறு |

## கோடா குளிகை

| | | |
|---|---|---|
| சாதிலிங்கம் | - | 3 |
| அரிதாரம் | - | ” |
| பச்சைநாபி | - | 1 |

ஊசிகாந்தம் - 3
மனோசிலை - ”
இரதம் - ”

இவற்றை எலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்து அடையாகத் தட்டிக் கொள்ளவும். இரண்டாம் நாள் கோமியத்தில் ஐந்து நாழிகை (2 மணி நேரம்) அரைத்து அடை தட்டிக் கொள்ளவும். மூன்றாம்நாள் பேய்ப்பீர்க்கஞ் சாற்றில் அரைத்து உலர்த்திக் கொள்ளவும். நான்காம்நாள் இஞ்சிச்சாற்றில் அரைத்து அடைதட்டி உலர்த்தாமல் இருக்கவும். பின்னர் மிளகு பிரமாணம் உருண்டை செய்து நிழலில் உலர்த்தி எடுத்துக் கொள்ள வேண்டும்.

அளவு - மிளகளவு

அனுபானம்

1. இஞ்சிச் சாற்றிலிட - சன்னி பதிமூன்றும் அற்புதவாய்வும், கோணலும் தீரும்
2. காடித்தெளிவில் இட- சூலை தீரும்
3. வெங்காயச்சாற்றிலிட- மகோதரம் தீரும்
4. வெந்நீரிலிட - பித்தப்பாண்டு தீரும்
5. நெய்யில் கொடுக்க - வாதநோய் தீரும்
6. பேய்ப்பீர்க்கஞ் சாற்றிலிட - விஷம் தீரும்

## சகல அதிசார பேதிக்கும் மருந்து

அபின் வராகன் நான்கு (14 கிராம்) ஈரவெங்காயம் அரைத்துக் கீழும் மேலும் பொதிந்து மேலே சாணி கட்டி, சாணி கருகப் புடம்போட்டு எடுத்து, மஞ்சள் நான்கிற்குப் பூ ஒன்று, காய் ஒன்று, இலை ஒன்று, அப்பிரக செந்தூரம் பத்துக்கொன்று சேர்த்துக் குளிர்ந்த தண்ணீர் விட்டு அரைத்து மாத்திரைகளாகச் செய்து கொள்ளவும்.

அளவு - அரை பணவெடை (244 மி.கிராம்)

அனுபானம் - சீரகம், கொத்துமல்லி, சிறுநாகப்பூ, சுக்கு, தாளிசபத்திரி, சமன்கொண்டு வறுத்துப் பொடி செய்து கொள்ளவும்.

தீரும் நோய்கள்- சகல அதிசாரக் கழிச்சல், கிராணி, கடுப்பு தீரும்

## சஞ்சீவிக் குளிகை

இருவி நாபி அரிதாரம் இரதம் கந்தகம் வெண்காரம்
வருமே தான்றிக் காய்சுக்கு வழுத்து மிளகு திப்பிலியும்
தருமே ஒரொன்றுக் கழஞ்சாகத் தானேர் வாளம் ஐங்கழஞ்சாம்
அருமை என்றும் எண்ணாதே ஆறு கழஞ்சு பதினைந்தே.

கையாந் தகரைச் சாற்றினால் கலக்க ஏழு நாளரைத்து
மெய்யா யேழு நாளளவு மிகையாமல் குறையாம வோர்சாமம்
அய்யா குன்றிப் பிரமாணம் உருண்டை காய சுடகத்தில்
ஐயா சஞ்சீவிக் குளிகையென்று அருளிச் செய்தா ரகத்தியனார்.

மூல வியாதிக்குச் சாதிக்காய் முனிந்தபல வாயுவுக்குச் சிறுநீரில்
ஆலந் தரித்த பாம்புகடிக் கவ்வாய் தேசிப் பழத்திலிடச்
சூலை வலிக்கு முருங்கைப்பட்டை சுகித்த பட்டைச் சாற்றிலிட
மூல வியாதி வலிகுன்ம முடுகும் நொச்சிச் சாற்றிலிடே.

பஞ்சப் பிரமியந்தனக் கனுபானம் பகரும் மருதம்பட்டைச் சாற்றிலிட
அஞ்சுங் குளிரும் வெதுப்புக்கு ஆன நெல்லி வெந்நீரில்
மிஞ்சுக் கட்டிப் படுவனும் மேவு மேரண்ட எண்ணெயிலிட
அஞ்சுங் குன்மம் எரிகுன்மம் ஆன சீந்திச் சாற்றிலிடே.

சயத்து வியாதி பத்துக்குந் தானே வெள்ளாட்டுப் பாலிலிட
மையத்து வியாதி தான்தீரும் வருத்தும் பத்திய மாய்க்கொள்ளும்
கயத்துக் குளநீ ரதுபோல கலங்கி மனத்துள் வினையகலு
முரத்துக்குச் சஞ்சீவி குளிகைக்கு உதவும் அனுபான மிதே.

(பொருள்) இதில் சஞ்சீவிக் குளிகை செய்முறை கூறப்படுகிறது.

| | |
|---|---|
| இருவி<br>நாபி<br>அரிதாரம்<br>இரசம்<br>கந்தகம்<br>வெங்காரம்<br>தான்றிக்காய்<br>சுக்கு<br>மிளகு<br>திப்பிலி | 1 கழஞ்சு (4.4 கிராம்) |
| நேர்வாளம் - | 5 கழஞ்சு (22 கிராம்) |

இவற்றைக் கையாந்தகரைச் சாற்றில் 7 நாள் (ஒவ்வொரு சாமம்) (3 மணி நேரம்) அரைத்துக் குன்றி அளவு மாத்திரை செய்து கொள்ள வேண்டும்.

| அனுபானம் | | தீரும் நோய் |
|---|---|---|
| சாதிக்காய் | - | மூல வியாதி |
| சிறுநீர் | - | பலவாயு |
| எலுமிச்சம்பழம் | - | பாம்புக்கடி |
| முருங்கைப்பட்டை | - | சூலைவலி |
| நொச்சிச்சாறு | - | மூலம், வலிகுன்மம் |
| மருதம்பட்டைச்சாறு | - | பிரமியம் |
| நெல்லிக்காய், வெந்நீர் | - | குளிர்சுரம் |
| விளக்கெண்ணெய் | - | கட்டி, படுவன் |
| சீந்தில் சாறு | - | 5 வகை குன்மம், எரிகுன்மம் |
| வெள்ளாட்டுப்பால் | - | சயம் |

## சண்டபானுக் குளிகை

| | | |
|---|---|---|
| பால் துத்தம் | - | 1 பங்கு |
| அரிதாரம் | - | 2 ” |
| கல் சுண்ணாம்பு | - | 4 ” |

இவற்றைக் கற்றாழைச் சாற்றிலரைத்துக் குகைக்குள் வைத்து ஒரு குக்குடப்புடம் போட்டு, ஆறிய பின்னெடுத்துச் சரிபாதி சீரகம் கூட்டிக் கொடுக்கவும்.

| | | |
|---|---|---|
| தீரும் நோய்கள் | - | சீதசுரம் |
| பத்தியம் | - | சிறுபயறு கஞ்சி காய்ச்சிக் கொடுக்கவும் |

## சர்வ சுரத்துக்கும் உடனே கொடுக்கக் குளிகை

| | | |
|---|---|---|
| அரிதாரம் | - | 1 வராகன் (3.5 கிராம்) |
| வெள்ளைப்பாஷாணம் | - | 1 வராகன் (3.5 கிராம்) |
| சாதிலிங்கம் | - | ¼ வராகன் (775 மி.கிராம்) |

இவை தனித்தனியே சுத்தி செய்து தேசிப்பழச்சாறு விட்டரைத்து மத்திலைச்சாறு வார்த்தரைத்துச் சிறுபயறு அளவாக உருண்டை செய்யவும்.

அளவு - சிறுபயறளவு
தீரும் நோய்கள்- சருவ சுரமும் விடும்

## சலக்கோர்வைக் குளிகை

அரிதாரம்
துரிசு
சவுக்காரம்
நேர்வாளம்
} வகைக்கு 1 பலம் (35 கிராம்)

இவை நான்கையும் எலுமிச்சம்பழச்சாறு விட்டரைத்துக் குன்றியளவு (130 மி.கிராம்) உருண்டைகளாக உருட்டி எலுமிச்சம் பழச்சாற்றில் உரைத்துத்தரப் பூசவும்
தீரும் நோய்கள்- வீக்கம், மகோதரம், நீர்க்கோர்வை, பாண்டு, வாதம்

## சன்னிக்கு உருண்டை மருந்து

| | | |
|---|---|---|
| பச்சைநாபி | - | ஒரு காசெடை (ஒரு பைசா அளவு) |
| இரசம் | - | ” ” |
| மனோசிலை | - | ” ” |
| கெந்தகம் | - | ” ” |
| வெண்காரம் | - | ” ” |
| நேர்வாளம் | - | ” ” |
| திரிகடுகு | - | ” ” |

இவற்றை எலுமிச்சம்பழச்சாறு விட்டு ஒரு சாமம் (3 மணி நேரம்) அரைத்துக் குன்றிமணியளவு( 130 மி.கிராம்) உருண்டை செய்து நிழலில் உலர்த்தவும். பின்னர், சிமிழில் அடைத்துக் கொண்டு எலுமிச்சம்பழச் சாறாவது குப்பை மேனிச் சாறாவதுவிட்டு உரைத்துக் கண்ணிலிடவும். சுக்குக் கஷாயத்தில் இரண்டு உருண்டை உரைத்து உள்ளே கொடுக்கவும்.
தீரும் நோய்கள் - சன்னி நோய்கள்

## சன்னிக் குளிகை

| | | |
|---|---|---|
| பச்சை நாபி | - | 5 கழஞ்சு (22 கிராம்) |
| இரதம் | - | ” ” |
| மனோசிலை | - | 1 கழஞ்சு (4.4 கிராம்) |
| சாதிலிங்கம் | - | ” ” |
| பொன்னரிதாரம் | - | ” ” |

இதுவெல்லாம் வேப்பிலைச் சாறுவிட்டு ஒருசாமம் (3 மணி நேரம்) அரைத்துப் பயறளவு உருண்டைகளாகச் செய்து கொள்ளவும்.

அளவு - பயறளவு

அனுபானம்

1. இஞ்சிச்சாற்றிலிட - குளிர்நோய் தீரும்
(இஞ்சியை வெந்நீரிலே கழுவிப் போடவும்)

2. முலைப்பாலில் உரைத்துக் கொடுக்க - சன்னி தீரும்

கஞ்சி காய்ச்சுகிறபொழுது, நாங்கில் உழக்கு (168 மி.லிட்டர்) முடிப்புக்கட்டி கஞ்சியில் போடவும். இலுப்பைப்பூ 5 உழக்கு (1.68 லிட்டர்) நாங்கில் அரை உழக்கு (168 மி.லிட்டர்) குறுணி (5.3 லிட்டர்) தண்ணீர் விட்டுக் காய்ச்சி, இதில் உரி (672 மி.லிட்டர்) எடுத்து நாழித் (1.3 லிட்டர்) தண்ணீர் விட்டு உழக்கரிசி (336 மி.லிட்டர்).யும் கழஞ்சு (4.4 கிராம்) சுக்கும் தட்டிப்போட்டுக் கஞ்சி இறக்கி, சீலை போட்டு முகத்திலே ஆவி காட்டவும். வேர்த்துப் போனால் இந்தக் கஞ்சியைக் கொடுக்கவும். இப்படி நான்கு மாலைப் பொழுதுகளில் தரவேண்டும்.

### சன்னிவாத வைரவன்

| | | |
|---|---|---|
| நாபி | - | ¼ பலம் (875 மி.கிராம்) |
| கந்தகம் | - | ” ” |
| சாதிலிங்கம் | - | ” ” |
| தாம்பிரபற்பம் | - | ½ ” (1.75 கிராம்) |
| திரிகடுகு | - | ¾ ” (2.625 கிராம்) |

நாபி கோமூத்திரத்தில் சுத்தி
கந்தகம் பசுவின்பாலில் சுத்தி
சாதிலிங்கம் முலைப்பாலில் சுத்தி

இப்படிச் சுத்தி செய்த எல்லாவற்றையும் செருப்படிச் சாற்றில் ஒருநாள் அரைக்கவும். கொடிவேலிவேர் கஷாயத்தில் ஒருநாள் அரைக்கவும். இஞ்சிச்சாற்றில் ஒருநாள் அரைக்கவும். முலைப்பாலில் ஒருநாள் அரைத்து எடுக்கவும்.

அளவு - குன்றியளவு (130 மி.கிராம்)

தீரும் நோய்கள்- வாதம், சன்னி தோஷங்கள்

## சாந்த சந்திரோதையம்

| | | |
|---|---|---|
| இரசகற்பூரம் | - | 1 வராகன் (3.5 கிராம்) |
| மஞ்சள் | - | 3 " (10.5 கிராம்) |
| வெண்காரம் | - | ½ " (1.75 கிராம்) |

இவற்றை உரையின் ஒழுங்கோடு சம்பீரச்சாறு விட்டு அரைத்துச் சல்லிக்காசு அளவு உருட்டி நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவேண்டும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | சல்லிக்காசளவு |
| அனுபானம் | - | சுக்கு, மிளகு, சீரகம், திப்பிலி இவற்றின் பொடி, தேனுடன் கலந்தது. |
| பத்தியம் | - | பருப்புக்கீரை, துவரம்பருப்பு கூட்டி வரவும் |
| தீரும் நோய்கள் | - | வாத சன்னி, கிரந்தி, சூலை, கபாலச்சூலை, வாய்வு, சுரம் |

## சிங்க வைரவன் குளிகை

இரசம்
கெந்தகம்
அரப்பொடி
நாபி
கொடுவேலிவேர்ப் பட்டை
சாதிக்காய்
சாதிப்பத்திரி
கொத்துமல்லி
இரேணுகம்
முத்தக்காசு
ஏலம்
திப்பிலிமூலம்
நாகப்பூ
திரிபலை
திரிகடுகு
நேர்வாளம்
தாம்பிரபற்பம்

இவையெல்லாவற்றையும் சமன் அளவு எடுத்துக்கொண்டு பழவெல்லத்தில் சேர்த்து அரைத்துக் கடலை அளவு மாத்திரைகளாக உருட்டி எடுத்து வைத்துக் கொள்ளவும்.

அளவு - கடலை அளவு

| | அனுபானம் | தீரும் நோய்கள் |
|---|---|---|
| 1. | செம்முள்ளி ஆடாதொடை வேரிலை, சிறுவழுதலை வேர், மாதுளைவேர் திப்பிலி, கற்கடசிங்கி, சிறுதேக்கு, சுக்கு குடிநீருடன் தேன் சேர்த்துஇட | சுவாசகாசம் தீரும் |
| 2. | பொன்னாவாரை கடலிராஞ்சிப்பட்டைக் கஷாயத்திலிட | இரத்தப்பிரமியம் தீரும் |
| 3. | திப்பிலி சுக்குடன் வெந்நீர் காய்ச்சிக் குடிக்க | விஷபாகம் தீரும் |
| 4. | நாயுருவி அரைத்துப் பசுவின் நெய்யிலிட | மூலவியாதி தீரும் |
| 5. | அளவு - எட்டு மாத்திரைகள் பஞ்சமூலக் கஷாயத்தில் இட | சூலைநோய் தீரும் |
| 6. | அளவு கையாந்தகரைச் சாற்றிலிட | 1 மாத்திரை பாண்டுநோய் தீரும் |
| 7. | நொச்சியிலைச் சாற்றிலிட | வாய் மூக்குக் கோணின அற்புதவாதம் தீரும் |
| 8. | புரசம் விதைப்பாலுடன் சக்கரையும் சேர்த்து இட | க்ஷயரோகம் தீரும் |
| 9. | கொள்ளுச் சாற்றிலிட | உதிரதோஷம் தீரும் |
| 10. | மிளகுப் பொடியிலிட | பித்தநோய் தீரும் |

## சிங்க வைரவன் குளிகை (வேறு)

சாதிலிங்கம்
நாபி
மிளகு
வெண்காரம்
திப்பிலி

இவைகளைச் சமன் அளவு எலுமிச்சம்பழச் சாற்றில் மத்திக்கவும். பின்னர்த் தேலாயந்திரமாக ஒருசாமம் எரியிட்டு உளுந்துப் பிரமாணம் உருட்டி எடுத்துக் கொள்ள வேண்டும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | உளுந்தளவு (65 மி.கிராம்) |
| அனுபானம் | - | இஞ்சிச்சாறு |
| தீரும் நோய்கள்- | | சன்னி வாதங்கள், அதிசாரங்கள் |

## சீதசுரத்துக்குக் கச்சவி மாத்திரை

தாளகம் சன்னமாய் உடைத்துப் புரசம்பட்டைச் சாற்றில் மூன்றுநாள் ஊற வைத்து எடுத்துக் கொள்ளவும். தாளகம் ஒன்று, சங்கு சுட்ட நீறு ஒன்று எடுத்துக் கொம்புப் பாகலிலைச் சாறுவிட்டு மூன்றுநாள் அரைத்து, குன்றிமணி அளவு (130 மி.கிராம்) மாத்திரைகளாகச் செய்து கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | குன்றிமணியளவு (130 மி.கிராம்) |
| அனுபானம் | - | துளசி, சீரகம் சேர்ந்த கஷாயம் |
| தீரும் நோய் | - | சீதவாதசுரம் |

## சீத சுராங்கிஷம்

அரிதாரம் 4 வராகன் (14 கிராம்) வெள்ளாட்டு நீரில் மூன்று நாள் ஊறப்போடவும். மறுநாளெடுத்து, மிளகு 4 வராகன் (14 கிராம்) சங்கு 4 வராகன் (14 கிராம்), வெள்ளாட்டு நீர்விட்டு ஒருசாமம் (3 மணி நேரம்) மூன்று நாள் அரைக்கவும். மருந்தை வில்லை செய்து சிறுகலசத்தில் அடைத்து மேலே சில்லு போட்டுச் சீலைமண் செய்து முழப்புடம் போடவும். தீயை ஆறவிட்டு எடுத்து, பாதி மருந்தை எடுத்துச் சிறுநீர் விட்டு அரைத்துக் குன்றிமணியளவு (130 மி.கிராம்) உருண்டை செய்து நிழலில் உலர்த்திக் கொள்ளவும்.

| | | | |
|---|---|---|---|
| 1. | அளவு | - | குன்றிமணியளவு (130 மி.கிராம்) |
| | அனுபானம் | - | தேன் அல்லது திப்பிலி (மூன்று பொழுது) |
| | தீரும் நோய் | - | சீதசுரம் |
| 2. | அளவு | - | குன்றிமணியளவு (130 மி.கிராம்) |
| | அனுபானம் | - | கஞ்சாங்கோரை கஷாயம் அல்லது அவுரிவேர் கஷாயம் |
| | தீரும் நோய்கள் | - | சகல சுரங்கள் |

மீதியுள்ள பாதி மருந்தை வெள்ளாட்டு நீரில் ஒரு நாழிகை (24 நிமிடம்) அரைத்து முழப்புடம் இரண்டு போடவும். பற்பம் கிடைக்கும்

| | | | |
|---|---|---|---|
| 3. | அளவு | - | 1 பணவெடை (448 மி.கிராம்) |
| | அனுபானம் | - | தேன் அல்லது திப்பிலியில் |
| | தீரும் நோய்கள் | - | ஈளை, இருமல், சுவாசகாசம், உளமாந்தை |
| 4. | அளவு | - | 1 பணவெடை (448 மி.கிராம்) |
| | அனுபானம் | - | உத்தாமணிச்சாறு, முருங்கைப்பட்டைச்சாறு |
| | தீரும் நோய்கள் | - | ஈளை, இருமல், உளமாந்தை, சுவாசகாசம் |

## சுரத்திற்கு இராமபாணக் குளிகை

| | | | | |
|---|---|---|---|---|
| சூதம் | - | 10 | வராகன் | (35 கிராம்) |
| அரிதாரம் | - | 5 | " | (17.5 ") |
| கந்தகம் | - | 2½ | " | (8.75 ") |
| வெள்ளைப்பாஷாணம் | - | 1 | " | (3.5 ") |
| வெண்காரம் | - | 1 | " | (3.5 ") |
| சுக்கு | - | ½ | " | (1.75 ") |
| மிளகு | - | ½ | " | (1.75 ") |
| திப்பிலி | - | ½ | " | (1.75 ") |

இவை கூட்டி வெற்றிலைச்சாற்றில் மூன்று சாமம் (9 மணி நேரம்) அரைத்து உருண்டை செய்து வெற்றிலைக்குள் பொதித்து வைத்து ஒருசாண் அளவில் குழி வெட்டவும்.

அதன்மேல் மணல்போட்டு அதன்மேலே ஏழு எருக்கிலை வைத்து அதன்மேல் மருந்து வைக்கவும். பின்பு மருந்தின் மேல் ஏழு எருக்கிலை வைத்து, அதன்மேல் மணல் போட்டு நிலமட்டம் வரை அடுக்கி, அதன்மேல் முழ உயரத்திற்கு எரு அடுக்கிப் புடம்போடவும். மருந்து வெந்தபின் எடுத்து வெற்றிலைச்சாறு விட்டரைத்துச் சிறுபயறு அளவு உருண்டை செய்து நிழலில் உலர்த்திக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | சிறு பயறளவு |
| அனுபானம் | - | முலைப்பால் அல்லது சீரகக்கஷாயம் அல்லது சுக்குக்கஷாயம் அல்லது இஞ்சிச்சாறு |
| தீரும் நோய் | - | சுரம் |

## சுரத்துக்குக் குளிகை

கோரோசனை
பச்சைக்கற்பூரம்
நாபி
வெண்காரம்
சாதிலிங்கம்

இவற்றைச் சமஅளவில் எடுத்துக்கொண்டு, இஞ்சிச்சாறு விட்டு அரைத்து உளுந்தளவு (65 மி.கிராம்) உருண்டைகளாகச் செய்து கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | உளுந்தளவு (65 மி.கிராம்) |
| அனுபானம் | - | இஞ்சிச்சாறு, முலைப்பால், வெந்நீர் |
| தீரும் நோய் | - | நவசுரங்கள் |

## சுரத்தின்மேல் கழிச்சலுக்குக் குளிகை

கெந்தகம்
ரசம்
சாதிலிங்கம்
வெண்காரம்
கொடிவேலிவேர்
அப்பிரகபற்பம்
சாதிக்காய்
நாபி
வில்வப்பழம்

} சம அளவு

விளாம்பிசின்
லோகபற்பம்
அதிவிடையம்
காந்தபற்பம் } சம அளவு
கடுக்காய்
அசமதாகம்
முத்தக்காசு
இலவம்பிசின்

இவை யாவும் சமஅளவு கூட்டி, இவற்றுக்குச் சமஅளவு அபின் சேர்த்துப் பொன்னூமத்தைச் சாறுவிட்டு அரைத்து மிளகு அளவு உருண்டையாகச் செய்து கொள்ளவும்.

அளவு - மிளகளவு
அனுபானம் - தேன்
தீரும் நோய்கள்- கிராணிகள், அதிசார சுரங்கள், அக்கினி மாந்தம், மூலக் கிராணி, குன்மம், சோபை

## சுரமாத்திரை

வெள்ளைப் பாஷாணத்தைக் கொம்புப் பாகற்காயில் மூன்று புடமிட்டு ஊமத்தைஇலைச்சாறு விட்டரைத்துப் பச்சைப்பயறு அளவான உருண்டைகளாகச் செய்து வைக்கவும்.

அளவு - பச்சைப்பயறளவு
அனுபானம் - சீரகப்பொடி, வெந்நீர்
தீரும் நோய் - சுரம்
(மாத்திரையைச் செய்து தானியப்புடம் மூன்று நாள் வைத்து எடுத்து வைத்துக் கொள்ளவும்.)

## சூதக கிராணிக்கு மருந்து

வேப்பம் ஈர்க்கும் மிளகும் வறுத்து ஒருபடி 2.65 லிட்டர். தண்ணீர் விட்டு வில்வவேர் சீவிப்போட்டு இருவேளையும் கொடுக்கவும். அசமதாகம் இரண்டு கொண்டு வந்து, கையாந்தகரைச் சாற்றில் நனைத்து உலர்த்திப் பொன்வறையாக வறுத்துக் கொள்ளவும். வெல்லத்தைக் காய்ச்சி அசமதாகத்தை அதில் போட்டுப் பாக்களவு உருண்டைகளாகச் செய்யவும்.

அளவு - பாக்களவு

திரும் நோய் - சூசிகா வாய்வு, கிராணி
(உணவு உண்டபின்னர் மாத்திரையைக் கொள்ளவும்)

## சுவர்ண மாலினி வசந்தம்

| | | | |
|---|---|---|---|
| பொன்தகடு (முலாம்பூசுகிறதகடு) | - | 1 வராகன் | (3.5 கிராம்) |
| முத்து | - | 2 " | (7 ") |
| சாதிலிங்கம் | - | 4 " | (14 ") |
| மிளகு | - | 4 " | (14 ") |
| துத்தம் | - | 8 " | (28 ") |

இவற்றையெல்லாம் கூட்டிக் குழிக்கல்லில் இட்டு, எலுமிச்சம் பழச்சாறுவிட்டு ஒருசாமம் (3 மணிநேரம்) மூன்று நாட்களுக்கு அரைக்கவும். பின்னர் 8 வராகன் எடை (28 கிராம்) பசுவின் வெண்ணெய் சேர்த்துத் தினமும் ஒருசாமம் (3 மணிநேரம்) வீதம் நான்கு நாட்களுக்கு அரைத்துக் குன்றியளவு (130 மி.கிராம்) உருண்டை செய்து கொள்ளவும். உருண்டைகளை நிழலில் உலர்த்திச் சிமிழில் அடைத்து வைத்துக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | குன்றியளவு (130 மி.கிராம்) |
| அனுபானம் | - | அஷ்டாதச மூலக்கஷாயம் அல்லது தசமூலக் கஷாயம் அல்லது கஞ்சாங்கோரைக் கஷாயம் அல்லது தேன், திப்பிலி |
| தீரும் நோய்கள் | - | சகல தோஷங்கள், சகல சுரங்கள் (தீராத சுரங்கள், எலும்பில் பற்றிய சுரங்கள், இரத்தத்தில் பற்றிய சுரங்கள், சதையில் பற்றிய சுரங்கள்) |

## தாப சுரத்துக்குப் பிரதாப லிங்கேஸ்வரன்

சாதிலிங்கம்
பச்சைக் கற்பூரம்
வெண்காரம்
கோரோசனை

இவை நாலும் சமன் கூட்டி, இஞ்சிச்சாறுவிட்டு மூன்று நாளரைக்கவும். உளுந்து அளவு (65 மி.கிராம்) உருண்டைகளாகச் செய்து கொள்ளவும்.

| அனுபானம் | | தீரும் நோய்கள் |
|---|---|---|
| முலைப்பாலிலிட | - | தாபசுரம் தீரும் |
| இஞ்சிச்சாற்றிலிட | | |
| அல்லது வெந்நீரிலிட | - | சீதசுரம் தீரும் |
| பத்தியம் | | |
| தாபசுரத்திற்கு | - | பயத்தங்கஞ்சி |
| சீதசுரத்திற்கு | - | தினைக்கஞ்சி |

## தாப சுரத்துக்கு மாத்திரை

ஏலம்
இலவங்கம்
செண்பகமொட்டு
கலைக்கொம்பு
திருமேனி
கோரோசனை
அரிதாரம்
சாத்திரவேதி
} சம எடை

இவற்றை முலைப்பால் விட்டு மூன்றுநாட்கள் அரைத்துக் குன்றியளவான (130 மி.கிராம்) மாத்திரைகளாகச் செய்து கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | குன்றியளவு (130 மி.கிராம்) |
| அனுபானம் | - | தேன் |
| தீரும் நோய் | - | தாப சுரம் |

## சொற் சுகந்திர வைரவன் குளிகை

| | | |
|---|---|---|
| இரசம் | - | 1 வராகன் (3.5 கிராம்) |
| சாதிலிங்கம் | - | 2 " (7 " ) |
| கோரோசனை | - | 3 பலம் (10.5 " ) |

இவை மூன்றையும் முலைப்பால் விட்டு இரண்டு சாமத்திற்கு (6 மணி நேரம்) அரைத்துச் சிறுபயறளவு குளிகை செய்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவும்.

| அனுபானம் | | தீரும் நோய் |
|---|---|---|
| அளவு | - | சிறுபயறளவு |
| முலைப்பாலில் இட | - | சர்வ சுரம், தோஷம், தீரும் |
| இஞ்சி சாற்றிலிட | - | பைத்தியசுரம் தீரும் |
| ஆடாதொடை | | |

| | |
|---|---|
| கஷாயத்திலிட - | இருமல், இளைப்பு தீரும் |
| பஞ்சகோல கஷாயத்திலிட - | வாய்வுசுரம் தீரும் |
| எருக்கம் வேர்ப்பட்டை முருங்கை வேர்ப்பட்டை புங்கம் வேர்ப்பட்டை கஷாயத்திலிட | வாதசுரம், கடுப்பு, நோவு, பாரிப்பு தீரும் |
| வேப்பிலை ஈர்க்கு ஐம்பது போட்டுச் செய்த கஷாயத்திலிட | சீதசுரம், குளிர்மாறல் தீரும் |
| வில்வவேர், வில்வக்குடுக்கை ஓடு, மாதளங்காய் ஓடு, மாதளம்பூ, இஞ்சி இவை கூட்டிச் செய்த கஷாயத்திலிட | அதிசாரசுரம் தீரும் |
| நெற்பொரி, நெல்லிமுள்ளி, திப்பிலி, ஏலம், வெண்காரம் வகைக்கு ¼ வராகன் எடை (875 மி.கிராம்), பொரித்த வெண்காரம் இவை தேன்விட்டு அரைத்து அதில் குளிகையிட (மாதுளம்பழச்சாறு சேர்த்துக் கொடுக்க வேண்டும்). | சுரத்தின்மேல் வந்த வாந்தி தீரும் |
| மயிலிறகு ½ வராகன் (1.75 கிராம்), கருங்கம்பளி ½ வராகன் (1.75 கிராம்), திப்பிலி ½ வராகன் (1.75 கிராம்)மூன்றும் கருக்கிப் பொடிசெய்து ஒரு குளிகையும் சேர்த்துத் தேன் விட்டு அரைத்து விளாம்பழக் கொட்டை போக்கின சதையில் சமஅளவு சேர்த்துக் கொடுக்க | சுரத்தின் மேல் எடுத்த விக்கல் தீரும் |
| முந்திரிகைப்பழத்தில் ஒரு பாக்களவு எடுத்துத் தேன் விட்டரைத்து இட | சுரத்தின் மேலெடுத்த தண்ணீருழலை, உடல் எரிவு, மயக்கம், தியக்கம் தீரும். |

| | |
|---|---|
| அக்கிராகாரம், அதிமதுரம், வெண்காரம், இந்துப்பு வகைக்கு ¼ வராகன் (875 மி.கிராம்) சேர்த்துத் தேன்விட்டரைத்து, இதில் ஒரு குளிகையும் சேர்த்து சாரித்து வைத்துக்கொண்டு சாமத்துக்கு (3 மணி நேரம்) ஒருமுறை நாக்கில் தடவ | நாவறட்சி, நாக்கு குளறல் தீரும் |
| முசுறுமுட்டை பாக்களவு சட்டியில் போட்டு இஞ்சி அரைப்பலம் நறுக்கிச் சமமாகப் போட்டு, இதில் மருதங் கொழுந்து ஒருபிடி சமமாகப் போட்டுக் கஷாயம் செய்து அதிலிட | சுரத்தின்மேல் வெறித்த சன்னி தீரும் |
| கடுக்காய் 4 வராகன் (14 கிராம்), களிப்பாக்கு 3 வராகன் (10.5 கிராம்) சுக்கு 2 வராகன் (7 கிராம்) இந்துப்பு 1 வராகன் (3.5 கிராம்) இவையெல்லாம் கூட்டிக் கஷாயமிட்டு அந்தக் கஷாயத்திலிட | சுரத்தின் மேலெடுத்த விக்கல், பழஞ்சுரம் தீரும். பேதியாகும் |
| சங்கங் குப்பியிலை ஒருபிடி கஷாயமிட்டு, அதிலிட | காணாக்கடி, கரப்பான் சிறுசிரங்கு தீரும் |
| கோசலத்திலிட | குட்டம் தீரும் |
| புரசம்பட்டை ஒருபிடி, நொச்சிக்கொழுந்து ஒருபிடி சேர்த்துக் கஷாயம் செய்து, அதிலிட | குன்மவலி தீரும் |
| ஈரவெங்காயம் ஒருபிடி கஷாயமிட்டு, அதிலிட | ஈளை, இருமல் தீரும் |
| ஆவாரைஇலைப்பொடி இரண்டு வெருக்கடியளவு எருமைத் தயிரும், ஒரு குளிகையும் | சலம் இறங்குவது தீரும் |

சேர்த்தரைத்து எலுமிச்சங்காயளவு
கொடுக்க
(இரண்டு பொழுது, பதினைந்து
நாட்களுக்குக் கொடுக்க வேண்டும்)

## திரிலோக்கிய சிந்தாமணி

சூதம் வச்சிரம் பொன்வெள்ளி துய்ய அப்பி ரகஞ்செம்பு
போதவே ஏகும் வெவ்வேறு பொருந்திய பற்ப மாக்கி
பாதஞ்சேர் முத்துச் சங்கு பவழ கெந்தக முந்தாரம்
சேத மில்லாமல் சுத்தி திறமுடன் சிலையும் கூட்டே. (1)

கூட்டிய மருந்தை எல்லாம் கொடிவேலி கஷாயந் தன்னில்
ஒட்டியே அரைத்து ஏழு நாளொரு சாம மாக
மாட்டியே நொச்சிச் சாற்றில் மத்தன மொருநாள் சாம
மூட்டியே எருக்கம் பாலில் மூன்றுநா ளரைத்தி டாயே (2)

அரைத்தபின் பிரண்டை சாற்றில் அதனுடன் ஒருநாள் நேக
அரைத்த சாரணை இலைச்சாற்றில் வகையா யரைத்து ஒருசாமம்
உரத்த பலகறை தனிலடைத்து உரமா மெருக்கம் பாலுடனே
கரித்தவெண் காரந்தனி லுரைத்து கதிப்பாய் பல்கறை வாய்ப்பூசே.
(3)

பூசிய கன்னார் குகைக்குள்ளே பொருந்திப் பலகறை தனைவைத்துக்
காசினி சீலை மண்செய்து கருதும் பாண்டத் துமியிட்டு
நேசிக் குகையை அதனுள்ளே நிறுத்தி உமியை மேல்போட்டு
வீசிய அங்கி தனில்வைத்து விரையச் சாமம் நாலெரியே.(4)

எரிக்கும் பலகறை தனையெடுத்து இயல்பாய் மருந்தைக்
கொட்டிவைத்து
பொரிந்த சோகி நாலொன்றாய் போத நிறுத்து முன்சொன்ன
மருந்தினோடே சேர்த்தபின்பு வகையா இரசபற்பம் சமனாக்கி
இரச பற்பம் நாலொன்றில் இயக்கை வைக்கிராந் தனைசேரு.
(5)

சேர்த்த முருங்கை வேரெடுத்துத் திரமாயப் புத்தனை வாங்கிப்
பார்த்து ஏழு நாளரைப் பதமாய் வழித்து வைத்தபின்பு
போற்றுங் கிராம்பு கடுசுக்கு பொருந்து சாதிக்காய் திப்பிலியும்
மார்க்க மில்லாமல் வழித்துவைத்து மருந்தை வகையாய்
நிறுத்திடுமே. (6)

நிறுத்த நாலொன் றாக்கியபின் நிறையா யைந்து மருந்துதனைப்
பொறுக்க அரைத்துப் பொடிபண்ணிப் போத முன்மருந் தினோமே
இறுத்த இஞ்சி சாறுடனே இதமாய் ஒருநாள் அரைத்தபின்பு
கலுக்க நிறுத்து நாலொன்றாய் கனமாம் பச்சை நாவியுமே
(7)

பச்சை கொம்மட்டி மாதுளையின் பழத்தின் சாறு தனைவிட்டு
உச்சித மாக மருந்தையெல்லாம் உறவாய் மூன்று நாளரைத்து
மிச்ச மில்லாமல் வராகனெடை வில்லை பண்ணிக் கொள்வீராய்
அச்சமில் லாமல் நிழலுலர்த்தி அடவாய் சிமிழில்
அடைத்திடுமே. (8)

இடுமே தேனும் திப்பிலியும் இயல்பாய் இஞ்சிச் சாறதனால்
குடுமே சுக்குத் தண்ணீரில் குட்டம் குன்மம் விடசுரமும்
படுமே சன்னி தோடமுடன் பரிந்த வாயு பலவாயு
விடுமே சுவாச காசமுடன் இரும லீளை சூலையுமே (9)

சூலை மேக பாண்டுவுடன் துய்ய இரத்தக் கட்டியுடன்
காலந் துடந்த சன்னிகளும் கனமாம் கவிசை பெருவயிறு
வாலக் கிராணி வயிறுளைவு வகுத்து வலிகள் விரைவாதம்
மூலக் கிராணி கிரிச்சயமும் முழுதும் ஓடும் காண்மயிலே. (10)

(பொருள்) இதில் திரிலோக்கிய சிந்தாமணியின் செய்முறை கூறப்படுகிறது.

இரசம்
வச்சிரம் (வைரம்)
பொன்
வெள்ளி
செம்பு
எஃகு

இவை ஆறையும் தனித்தனியே பற்பமாக்கிச் சேர்த்துக் கொள்ளவும்.

கந்தகம்
முத்து
சங்கு
பவழம்
அரிதாரம்
மனோசிலை

இவை ஆறையும் சுத்தி செய்து கொள்ளவும். இவை பனிரெண்டையும் குழிக்கல்லிலே வைத்துக் கொடிவேலிக் கஷாயத்தில் ஏழுநாட்கள் அரைக்கவும். எருக்கம்பால் விட்டு மூன்றுநாள் அரைக்கவும். நொச்சியிலைச் சாற்றில் ஒருநாள் அரைக்கவும். பிரண்டைச் சாற்றில் ஒருநாள் அரைக்கவும். சாரணையிலைச் சாற்றில் ஒருநாள் அரைக்கவும். பின்னர், பலகறை கொண்டு வந்து அதில் அடைத்து, வெண்கரந்தை, எருக்கம்பால் விட்டரைத்துப் பலகறை வாயை மூடி வைக்கவும். கன்னார்மண் கொண்டுவந்து குகை செய்து மருந்தடைத்த பலகறையைக் குகையிலே வைத்துச் சீலைமண் செய்து ஒருபானையில் பாதிப் பானையளவு உமியிடவும். அந்த உமிக்குள்ளே குகையை வைத்து மேலேயும் உமி போட்டு அடுப்பிலே வைத்து நான்குசாமம் (12 மணிநேரம்) எரியவிட்டு, தானாக ஆறியபின்னர்க் குகையை எடுத்து, அதில் உள்ள மருந்தை எடுத்துக் கொள்ள வேண்டும். பலகறையை உடைத்து நான்கில் ஒருபங்கைச் சேர்த்துக் கொள்ளவும். இதற்குச் சரியளவு இரசபற்பம் சேர்த்துக் கொண்டு, இரச பற்பத்திற்கு நான்கில் ஒருபங்கு அளவு வைக்கிராந்தபற்பம் சேர்த்துக் கொள்ளவும். பின்னர், முருங்கைவேர்த் தண்ணீரில் ஏழு நாளரைத்து, அதன் பிறகு,

கிராம்பு
சுக்கு
கடுக்காய்
திப்பிலி
சாதிக்காய்

இந்த ஐந்து மருந்துகளும் அரைத்த மருந்துக்கு நான்கில் ஒருபங்கு சேர்த்துக் கொள்ளவும். இஞ்சிச் சாற்றில் ஒருநாள் அரைக்கவும். பிறகு, மருந்தின் எடைக்கு நான்கில் ஒருபங்கு பச்சைநாபி கூட்டி, கொம்மட்டிப் பழச்சாற்றில் மூன்றுநாள் அரைக்கவும். பின்னர் வராகனெடை (3.5 கிராம்) அளவாக வில்லைகளாகச் செய்து நிழலில் உலர்த்திக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | 1 வராகனெடை (3.5 கிராம்) |
| அனுபானம் | - | தேன், திப்பிலி, இஞ்சிச்சாறு, சுக்குத் தண்ணீர் |
| தீரும் நோய்கள் | - | விஷங்கள் போகும். உடல் இறுகும். பதினெட்டு குட்டமும் போகும் (ஒரு |

மண்டலம் கொள்ள), சுவாசகாசம், சகல வாதங்கள், வயிற்றுக்கட்டி, வயிற்று வலி, சூலைக்கட்டு, வங்கு, பாண்டு ரோகம், கிராணி, கழிச்சல், இரத்த வாந்தி, பிரமேகங்கள், கவிசை, பெரு வயறு, விரைவாதம், இரத்தக்ஷயம், மூத்திரக்கிரிச்சம், பவுத்திரம், மூலப் பவுத்திரம், தீராத சகல தோஷங்கள், குமரகண்டன்வலி, காக்காய் வலிப்பு முதலானவை நீங்கும். அக்கினி தீபனம் உண்டாகும்.

## நடுக்கல் சுரத்துக்குக் குளிகை

வெள்ளைப் பாஷாணம் வெள்ளீயச் சீலையில் முடிந்து, கொத்துமல்லி யரைத்து அதற்குள்ளே இதை வைத்து இரண்டுநாள் வைத்து எடுக்கவும். எருக்கம் கரியும் கொத்துமல்லியும் சேர்த்துக் கஷாயம் காய்ச்சி, இந்தப் பாஷாணத்தை எடுத்துக் கஷாயத் தண்ணீர் விட்டுக் கடுகு போல் உருண்டை செய்து வைத்துக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | கடுகளவு |
| அனுபானம் | - | வெற்றிலையும் மிளகும் சேர்த்த கஷாயம் (மூன்றுநாள் கொள்ளவும்) |
| தீரும் நோய் | - | நடுக்கல் |
| பத்தியம் | - | முருங்கையிலை, சிறுபயறு |

## நவக்கிராதி குளிகை

**வெண்கா ரத்துடன் ரசம்நாபி மிளகு சுக்கு திப்பிலியும்**
**கண்காண லோக செந்தூரம் கனத்த ஊமத்தை விரையுடனே**
**எண்கா ணிவைதா னிரண்டுபங்கு இயன்ற கெந்தக மொருபங்கு**
**பண்பாங் கறுத்த ஊமத்தை பரிந்தசாற் றாலிரண்டு நாளரையே.**

**குன்றிபோ லுண்டையது கோலத் தேனி விடுவீராய்**
**நன்றாஞ் சுவாச காசமுடன் நயன மந்தஞ் சிலேட்டுமமும்**
**ஒன்ற வரிய பைத்தியமும் உம்மியன்ற வாத ஈளையுடன்**
**சென்றதி சாரம் கிராணியெல்லாம் தீரும் நவக்கி ராதியே**

(பொருள்) நவக்கிராதிக் குளிகை செய்முறை இதில் கூறப்படுகிறது.

| | |
|---|---|
| வெங்காரம் | 2 பங்கு |
| இரசம் | |
| நாபி | |
| மிளகு | |
| சுக்கு | |
| திப்பலி | |
| அயச்செந்தூரம் | |
| ஊமத்தைவிதை | |
| கந்தகம் | 1 பங்கு |

இவற்றைக் கருஊமத்தைச் சாற்றில் இரண்டுநாள் அரைத்துக் குன்றியளவு (130 மி.கிராம்) மாத்திரை செய்து கொள்ள வேண்டும்.

அனுபானம் - தேன்
தீரும் நோய்கள்- சுவாசகாசம், கண்மந்தம், ஐயம், பைத்தியம், வாதம், ஈளை அதிசாரம், கிரகணி

## நான்குநாள் மாறல் சுரத்துக்குக் குளிகை

| | | |
|---|---|---|
| இரசம் | - | 1 பங்கு |
| சாதிலிங்கம் | - | 1 ” |
| பொன்னரிதாரம் | - | 1 ” |
| பாஷாணம் | - | 1 ” |
| துத்தம் | - | 1 ” |
| நேர்வாளம் (சுத்தி செய்தது) | - | 6 ” |

இவை எல்லாவற்றையும் சுத்தி செய்துகொண்டு, கொம்புப்பாகல் இலைச்சாறு அரைச் சிரங்கை (உள்ளங்கை கொள்ளும் அளவில் பாதி) செங்கழுநீர் ஊமத்தம் சாறு அரை சிரங்கை, இந்த இரண்டும் விட்டு மருந்தை நன்றாக அரைத்துப் பயறு அளவாக உருண்டை செய்து நிழலில் உலர்த்திக் கொள்ளவும். முலைப்பாலில் ஒரு உருண்டையைச் சேர்த்து உட்கொள்ள வயிறு கழியும். வாந்தி எடுக்கும். அதன்பிறகு, பாசிப்பயறு அவித்து அந்தத் தண்ணீர் இறுத்துக் கொடுக்கவும். பாசிப்பயறும் அரிசியும் கஞ்சி காய்ச்சிக் கொடுக்கவும்.

அளவு - பயறளவு
தீரும் நோய் - குளிர் சுரங்கள்

## நெஞ்சில் சிலேட்டுமக் கட்டுக்கு மருந்து

| | | | | |
|---|---|---|---|---|
| ஆலாத்திக் கற்பூரம் | - | 1 | பணவெடை | (448 மி.கிராம்) |
| ஏலம் | - | 2 | " | (896 " ) |
| சாதிக்காய் | - | 4 | " | (1.792 " ) |
| கிராம்பு | - | 6 | " | 2.688 " ) |
| மிளகு | - | 8 | " | (3.584 " ) |

இவை எல்லாவற்றையும் சேர்த்தரைத்து இருபத்தோரு உருண்டைகளாகச் செய்து கொள்ளவும்.

அனுபானம் - தேன்
காலம் - காலையும் மாலையும்
(கோழை வருகின்ற தருணம்)
தீரும் நோய்கள்- சிலேட்டுமக் கட்டு, இருமல்

## பராக்குவக் குளிகை

கெந்தகம்
திரிகடுகு
அப்பிரகம்
கடுகுரோகணி
அரிதாரம்

இவற்றைச் சமஅளவு சேர்த்து, பஞ்சகோலக் கஷாயத்தில் இரண்டு நாட்கள் அரைத்து வச்சிரக் குகையிலிடவும். குகைக்குச் சீலைமண் செய்து, புடமிட்டு எடுத்து வைத்துக் கொள்ளவும்.

அளவு - குன்றியளவு (130 மி.கிராம்)
அனுபானம் - வெற்றிலைச்சாறு
தீரும் நோய்கள்- தொந்தசுரம், சன்னிவாதசுரம், புராணசுரம், விஷசுரம்

## பழஞ்சுர மாறலுக்கு விரேசனக் குளிகை

| | | | |
|---|---|---|---|
| நேர்வாளம் (சுத்திபண்ணினது) | - | 2 | பங்கு |
| ஆமணக்கு | - | 1 | " |
| காசுக்கட்டி | - | 1 | " |

இவைகளைப் பசுவின்பால் விட்டரைத்து, தூதுவிளங்காய் அளவு உருண்டை செய்து நிழலில் உலர்த்திக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | விளங்காயளவு |
| அனுபானம் | - | பனவெல்லம் |

வயிறு கழியும், சீதம் வலுவாய் விடும். மயங்கி வந்தால் சுடுகஞ்சித் தண்ணீர் கொடுக்கவும். கழிச்சல் நின்றால் மோரும் சோறும் கொடுக்கவும்.

பத்தியம் - முருங்கைக்காய், சுண்டை வற்றல், தூதுவளை வற்றல், மிளகுநீர், பால் கூட்டவும்

## பிரதாப இலிங்கேசுரன்

இரதம்
அப்பிரகபற்பம்
திரிகடுகு
லோகபற்பம்
காட்டுமுட்டைச் சாம்பல்

இவற்றைச் சமஅளவில் சேர்த்து எடுத்து, இஞ்சிச் சாறுவிட்டு அரைத்து உருண்டை செய்து கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | குன்றிமணியளவு (130 மி.கிராம்) |
| அனுபானம் | - | இஞ்சிச்சாறு |
| தீரும் நோய்கள் | - | பித்தசன்னி, சன்னிவாதம், சன்னிவகை |

## பிள்ளைத்தாச்சி உள்குத்துக்குக் குளிகை

| | | | |
|---|---|---|---|
| அழிஞ்சிப்பருப்பு | - | 1½ வராகன் | (5.25 கிராம்) |
| முருங்கைப்பருப்பு | - | ” | ” |
| புங்கம்பருப்பு | - | ” | ” |
| மகிழம்பருப்பு | - | ” | ” |
| கழற்சிப்பருப்பு | - | ” | ” |
| மாவிலங்கைவேர் | - | ” | ” |
| உகாய்வேர் | - | ” | ” |
| கொன்றைவேர் | - | ” | ” |
| ஈஸ்வரமூலிவேர் | - | ” | ” |
| அவுரிவேர் | - | ” | ” |

| | | | |
|---|---|---|---|
| உத்தாமணிவேர் | - | ” | ” |
| சுக்கு | - | ” | ” |
| மிளகு | - | ” | ” |
| திப்பிலி | - | ” | ” |
| கருஞ்சீரகம் | - | ” | ” |
| இந்துப்பு | - | ” | ” |
| பேரரத்தை | - | ” | ” |
| வாலுளுவை | - | ” | ” |
| கிராம்பு | - | ” | ” |
| கற்பூரம் | - | ” | ” |
| சவுக்காரம் | - | ” | ” |
| துரிசு | - | ” | ” |
| வெண்காரம் | - | ” | ” |
| கடுக்காய் | - | ” | ” |

இவற்றை எல்லாம் உத்தாமணிச்சாறுவிட்டு அரைத்து இலந்தைக்காயளவு உருண்டை செய்து, நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | இலந்தைக்காயளவு |
| அனுபானம் | - | வெந்நீர் |
| காலம் | - | மூன்று நாட்கள் |
| தீரும் நோய் | - | பிள்ளைபெற்றவள் உள்குத்துத் தீரும் |

## பூபதி மாத்திரை

மனோசிலை
அரிதாரம்
இரசம்
கந்தகம்

இவற்றைச் சமஅளவு எடுத்துக் கொள்ளவும், பின்னர், செருப்புடைச்சாறு விட்டு நான்குசாமம் (12 மணிநேரம்) அரைத்து உருண்டைகளாகச் செய்யவும். அவற்றைக் காயவைத்துக் குப்பியிலிட்டு, ஏழுசீலைமண் செய்து சட்டியில் மணலிட்டு வைத்து நான்குசாமம் (12 மணிநேரம்) எரிக்கவும். ஒருசேருக்கு (280 கிராம்)

| | | |
|---|---|---|
| நாபி | - | 4 வராகன் (14 கிராம்) |
| மிளகு | - | 8 ” (28 ”) |

சேர்த்து இஞ்சிச்சாறுவிட்டு அரைத்துக் குன்றிமணியளவு (130 மி.கிராம்) மாத்திரைகளாகச் செய்து கொள்ளவும்.

தீரும் வியாதிகள் - நீராம்பல், வல்லை, வயிற்றுவலி, சுரம், தோஷம், சன்னி, விக்கல்

## பேதி மாத்திரை

| | | | |
|---|---|---|---|
| இரசம் | - | 1½ வராகன் | (5.25 கிராம்) |
| கந்தகம் | - | ” | ” |
| வெண்காரம் | - | ” | ” |
| நாபி | - | ” | ” |
| அரிதாரம் | - | ” | ” |
| திரிகடுகு | - | ” | ” |
| திரிபலை | - | ” | ” |
| பெருமரப்பட்டை | - | ” | ” |
| அதிவிடையம் | - | ” | ” |
| சீரகம் | - | ” | ” |
| வாய்விளங்கம் | - | ” | ” |
| கோஷ்டம் | - | ” | ” |
| சந்தனம் | - | ” | ” |
| நேர்வாளப்பருப்பு | - | 12 ” | (42 ” ) |

இவற்றைக் கையாந்தகரைச் சாற்றில் ஏழுநாட்களுக்கு அரைத்துக் குன்றியளவு (130 மி.கிராம்) மாத்திரைகளாகச் செய்து கொள்ள வேண்டும்.

அளவு - குன்றிமணியளவு (130 மி.கிராம்)
விளைவு - பேதியாகும்

## மகா அக்கினிக்குமாரன்

சுத்த இரசம்
நாபி
அப்பிரகபற்பம்
கந்தகம்
அரிதாரம்
சாதிலிங்கம்
எலிப்பாஷாணம்
தாம்பிரபற்பம்

இவற்றையெல்லாம் சம அளவு சேர்த்து, கையாந்தகரையின் சாறுவிட்டு ஒருநாள் அரைத்து உருட்டி ஆறப்போடவும். பின் குப்பியிலடைத்து மூடி சீலை மண் செய்து வாலுகா இயந்திரத்தில் வைக்கும்படி குப்பிவாய் மணலரைத்து மூடவும். மேலே குப்பிக்கு ஏழுசீலைமண் செய்து உலர்த்தி அடிப்பாரமுள்ள குண்டுச்சட்டியில் அடியில் சல்லடைபோலே துளையிட்டு அதன் மேலே உரிய உப்பிட்டுக் குப்பி வைக்கவும். சுற்றும் நானாழி (5.2லிட்டர்) உப்பிட்டு அதன் மேலே நிறைய மணல்விட்டு நிறைத்து மடக்கு கொண்டு மூடிச் சீலைமண் செய்யவும். பின் அடுப்பில் வைத்துத் தீபாக்கினி கமலாக்கினியாக ஒருநாள் எரித்து ஆறியபின்னெடுத்து வைத்துக் கொண்டு சணல்விதையளவு உருண்டைகளாக உருட்டிக் கொள்ள வேண்டும்.

| | |
|---|---|
| அளவு | - சணல் விதையளவு |
| அனுபானம் | - தேன் |
| தீரும் நோய்கள் | - சன்னிவாதம், தனுர்வாதம், சந்துவாதம், சயம், காசம், சேத்துமம், மந்தாக்கினி, பாண்டு, காமாலை, சோகை, சுவாசகாசம் |

## மாந்தம் உள்ளுரோகம் அக்கரத்துக்குக் குளிகை

**சாத்திர வேதி கல்நார் மாசிக்**
**காய்கெரு டப்பச்சை சாதிக் காயும்**
**ஏற்றரிய இளநீர்விட் டரைக்கும் போது**
**இயல்பாங்கோ ரோசனையு மொக்கக் கூட்டி**
**தேற்றான்விரை யளவுண்டை நிழலு லர்த்திச்**
**சிறுகுழந்தை கழிச்சலுள்ளு ரோக மாந்தம்**
**மாத்துமக் கரம்மயக்கம் வாய்ப்புண் ணெல்லாம்**
**(மாறும்) மங்கையர் முலைப்பாலில் மகிழ்ந்து கொள்ளே.**

(பொருள்) இதில் மாந்தம், உள்ளுரோகம், அக்கரத்துக்குக் குளிகை கூறப்படுகிறது.

| | |
|---|---|
| சாத்திரபேதி | |
| கல்நார் | |
| மாசிக்காய் | |
| கருடப்பச்சை | சம எடை |
| சாதிக்காய் | |
| கோரோசனை | |

எடுத்து இளநீர்விட்டு அரைக்க வேண்டும். இதனைத் தேற்றான் விதையளவு உருண்டை செய்து நிழலில் உலர்த்திக் கொள்ள வேண்டும்.

அனுபானம் - தாய்ப்பால்
தீரும் நோய்கள் - கழிச்சல், உள்ளுரோகம், மாந்தம் வாய்ப்புண், மயக்கம், அக்கரம்.

## மார்த்தாண்ட குளிகை

நாபி - 1 பங்கு
வெண்காரம் - 2 "
சாதிலிங்கம் - 3 "
நேர்வாளம் - 4 "

இவற்றைக் காட்டாமணக்குச் சாற்றில் நான்குசாமம் (12 மணிநேரம்) அரைத்துக் குன்றிமணியளவு மாத்திரைகளாகச் செய்து கொள்ளவும்.

அளவு - 1 குன்றிமணியளவு (130 மி.கிராம்)
அனுபானம் - குளிர்ந்த தண்ணீர், இஞ்சிச்சாறு
தீரும் நோய் - சுரம்.

## மாறலுக்கு மருந்து

மனோசிலை
அரிதாரம்
கந்தகம்
இரதம்
} சம அளவு

இவை எல்லாவற்றையும் பாகல் இலைச்சாறு சமஅளவு விட்டரைத்து நிழலில் உலர்த்திக் கொள்ளவும்.

அளவு - பணவெடை (488 மி.கிராம்)
அனுபானம் - தேன்
தீரும் நோய்கள் - அடிக்கடி வரும் மாறல், ஒன்றை விட்ட மாறல், இரண்டுநாள், மூன்று நாள் மாறல்.

## மேகசூலை கிரந்திக்கு மாத்திரை

வெள்ளை ஐந்து நாழி (6.5 லிட்டர்) பாலில் தோலாந்திரமாகக் கட்டி எரித்து ஒருநாள் பொன்னாங்காணிச் சாற்றிலும் ஒருநாள் சிறுகீரைச் சாற்றிலும் தீபாக்கினியாக

எரித்து எடுத்துக் கொள்ளவும். வெள்ளைக்குச் சமஅளவு காசு கட்டிக் கூட்டிக் குளிர்ந்த நீர்விட்டு நெகிழ அரைக்கவும். மெழுகுபதத்தில் வரும்போது உளுந்தளவுள்ள (65 மி.கிராம்) மாத்திரைகளாகச் செய்து கொள்ளவும்.

அளவு - உளுந்தளவு (65 மி.கிராம்)
காலம் - இரண்டு வேளையும் ஏழுநாள் அல்லது ஒன்பதுநாள்.

இவ்வாறு மருந்துண்ணும்போது குமட்டல் ஏற்பட்டால் காசுக்கட்டிக் குன்றியளவு (130 மி.கிராம்) மாத்திரையுடன் சேர்த்துக் கொள்ளவும். இல்லாவிட்டால் பசுவின் பாலும் சோறும் கொடுக்கவும்.

பத்தியம் - உப்பில்லாமல் வெந்நீரும் சாதமும்
தீரும் நோய் - மேகசூலை

முன்சுத்தி செய்த வெள்ளைக்குச் சமஅளவு வாய்விளங்கம் கூட்டி, குளிர்ந்த நீர்விட்டு அரைத்து உளுந்தளவாக (65 மி.கிராம்) மாத்திரை செய்து கொள்ளவும்.

அளவு - உளுந்தளவு 65 மி.கிராம்
காலம் - இருவேளையும். 7 நாள் அல்லது 9 நாள்.
பத்தியம் - உப்பில்லாமல் நெய்யும் சாதமும் கொடுக்கவும்.
தீரும் நோய் - கிரந்தி.

## லோகோத்திரக் குளிகை

| | | |
|---|---|---|
| இரசம் | - 1 வராகன் | (355 கிராம்) |
| கந்தகம் | - 2 " | (7 " ) |
| நேர்வாளம் | - 3 " | (10.5 " ) |
| பேய்கொம்மட்டி விதை | - 4 " | (14 " ) |
| வெண்காரம் | - 5 " | (17.5 " ) |
| காட்டாமணக்கு விதை | - 6 " | (21 " ) |
| தில்லை விதை | - 7 " | (24.5 " ) |
| கொன்றைப்பழச்சதை | - 8 " | (28 " ) |
| கடுகுரோகணி | - 9 " | (31.5 " ) |
| சிவதைவேர் | - 10 " | (35 " ) |
| பலாசங்கொட்டை | - 11 " | (38.5 " ) |

இவற்றைச் சதுரக்கள்ளியின் பால்விட்டு மூன்று நாட்களுக்கு அரைக்கவும். மருந்தை முற்றிய தேங்காயில் அடைத்து மூடிப் புடமிட்டு அரைத்துக் குன்றியளவுள்ள 130 மி.கிராம் மாத்திரைகளாகச் செய்து கொள்ளவும்.

அளவு - குன்றியளவு (130 மி.கிராம்)
அனுபானம் - வெந்நீர்
தீரும் நோய்கள் - அட்ட குன்மம்

வேப்பெண்ணெய், ஆமணக்கெண்ணெயில் கலந்து மேலே தடவ வாதங்கள் குணமாகும்.

## வயிற்றில் கட்டிக்கு மருந்து

| | | |
|---|---|---|
| வெண்காரம் | - | ¾ வராகன் (2.625 கிராம்) |
| பெருங்காயம் | - | 10 வராகன் (35 கிராம்) |

பீங்கானில் போட்டு தடிகொண்டடித்து மிளகுப் பிரமாணம் உருண்டை செய்து மாவில் புரட்டிச் சாதிலிங்கப் பொடியில் புரட்டி வைத்துக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | மிளகளவு |
| அனுபானம் | - | வெந்நீரும் இஞ்சிச்சாறும் |
| காலம் | - | விடியற்காலை ஆறு அல்லது ஒன்பது நாட்கள் |
| பத்தியம் | - | உப்பு, புளி தவிரவும் |
| தீரும் நோய் | - | வயிற்றுக்கட்டி |

## வாத உருண்டை

| | | | |
|---|---|---|---|
| இரசம் | - | 1 கழஞ்சு | (4.4 கிராம்) |
| கந்தகம் | - | ” | ” |
| மனோசிலை | - | ” | ” |
| தஞ்சாவூர்கிட்டம் | - | ” | ” |
| அரப்பொடி | - | ” | ” |
| நற்சீரகம் | - | ” | ” |
| கருஞ்சீரகம் | - | ” | ” |
| திப்பிலி | - | ” | ” |
| கடுகுரோகணி | - | ” | ” |

இவற்றைக் கற்றாழஞ்சாறு விட்டு நாலு நாழிகை (1 மணி 36 நிமிடம்) அரைத்துக் கலத்தில் வழித்து வைக்கவும். பின்னர் ஒரு சாமம் (3 மணி நேரம்) சூரியபுடமாக வைத்துக் குன்றிப்பிரமாணம் (130 மி.கிராம்) குளிகைகளாகச் செய்து நிழலில் உலர்த்திக் கொள்ள வேண்டும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | 1 குன்றியளவு (130 மி.கிராம்) |
| அனுபானம் | - | தேன் (ஒரு பைசா அளவு) |
| பத்தியம் | - | கார்ப்பு, புளிப்பு தவிரவும். பசுவின்பால், முருங்கையிலை கறியாகக் கூட்டவும். |
| தீரும் நோய் | - | வாதம் |

## வாதராட்சதன் குளிகை

| | | | |
|---|---|---|---|
| சாதிலிங்கம் | - | 1 வராகன் | (3.5 கிராம்) |
| பவழக்கால் | - | ” | ” |
| மனோசிலை | - | ” | ” |
| அரிதாரம் | - | ” | ” |
| தாம்பிரபற்பம் | - | ” | ” |
| காந்தசெந்தூரம் | - | ” | ” |
| வைக்கிராந்தம் | - | ” | ” |
| வெண்கலநிமிளை | - | ” | ” |
| பொன்நிமிளை | - | ” | ” |
| பச்சைநாபி | - | ” | ” |
| சுக்கு | - | ” | ” |
| மிளகு | - | ” | ” |
| திப்பிலி | - | ” | ” |
| துத்தம் | - | ” | ” |
| ஊமத்தைவிதை | - | ” | ” |

இவற்றை எருக்கம்பால் விட்டு ஒருசாமம் (3 மணி நேரம்) வீதம் மூன்று நாட்களுக்கு அரைக்கவும். கொடிவேலி கஷாயத்தில் ஒருநாள் அரைக்கவும். அரைத்த மருந்தைக் குன்றியளவு (130 மி.கிராம்) உருண்டைகளாகச் செய்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவும்.

அளவு - குன்றியளவு (130 மி.கிராம்)

| | அனுபானம் | தீரும் நோய் |
|---|---|---|
| 1. | இஞ்சிச்சாறு அல்லது சுக்குக் கஷாயம் | வாதசுரம், சகல வாய்வு தீரும் |
| 2. | ஆலாத்தி கற்பூரம், சிறுதிப்பிலி, ஏலம் | பித்ததோஷம் தீரும் |
| 3. | கருஞ்சீரகம், கிராம்பு, கஸ்தூரி | சிலேத்தும தோஷம், சிலேத்தும சுரம் தீரும் |
| 4. | தசமூலக் கஷாயம் அல்லது உள்ளித்தைலம் அல்லது அரிசிச்சாராயம் | சகலதோஷம், சகலசுரம், சூசிகா தோஷம், பதிமூன்றுவகை சன்னி, தாபசுரம், ஈரிப்பு, தனுர்வாதம் தீரும் |

## வாத ராட்சதன் குளிகை (வேறு)

கந்தகம்
இரசம்
காந்தபற்பம்
அப்பிரகபற்பம்
தாம்பிரபற்பம்
} சமன் எடை

இவற்றைச் சேர்த்துக் கல்வத்தில் போட்டுச் சாரணைவேர் கஷாயம், சீந்தித்தண்டுக் கஷாயம், கொடிவேலிவேர்க் கஷாயம் இவற்றில் தனித்தனியே மூன்றுநாட்கள் குகையில் அடைத்துக் கொள்ளவும். பின்னர் ஏழு சீலைமண் செய்து சட்டிக்குள்ளே இரண்டுவிரல் மணல் போட்டு அதன்மேல் வைத்துக் குகை மறைய மணலிட்டு வராகப் புடமிடவும். ஆறியபின் எடுத்து எட்டில் ஒருபங்கு அளவு நாபி சேர்த்துக் கொடிவேலிக் கஷாயம் சேர்த்து அரைத்துக் குன்றிமணியளவு (130 மி.கிராம்) உருண்டை செய்து கொள்ளவும்.

அளவு - குன்றிமணியளவு (130 மி.கிராம்)
அனுபானம் - இஞ்சிச்சாறு
தீரும் நோய்கள்- கைகால் கந்து வலி, குன்மம், தனுர்வாதம், பட்சவாதம், நடுக்குவாதம்

## வாய்வு கிராணிக்குக் குளிகை

ஓமமொடு கடுநெல்லி தான்றி மிளகுடன் உற்ற சுக்கு
திப்பிலி ஒரொன்று முக்கழஞ் சாகவே கழலுடன் பருப்புக்கழஞ்சு
தேமருங்கை யாந்தகரைச் சாற்றில் திகழ்நாழி யதிலூற வைத்து
ஈமநேர்வாளங் கழஞ்சுவிட்டு இச்சாற்றி லூற விட்டே.

அரைத்துஇதைத் தூதுளங்காய் போல்உருண்டை அளவாக
நிழலுலர்த்தி ஆனபின்
உரத்த வாயுக் கிராணிக்கு உள்ளே தயிர்தேன் சர்க்கரையில்
வருத்தமாய் தீரு மென்று மாமுனி சொற்ப டிக்கு
நிகழ்த்தியே முனிவர் முன்னாள் செகத்துளோர் தமக்கீந் தாரே.

(பொருள்) வாய்வுக் கிராணிக்குக் குளிகை கூறப்படுகிறது..

| | |
|---|---|
| ஓமம்<br>கடுக்காய்<br>நெல்லிக்காய்<br>தான்றிக்காய்<br>மிளகு<br>சுக்கு<br>திப்பிலி | வகைக்கு 3 கழஞ்சு (13.2 கிராம்) |
| கழற்சிப்பருப்பு- | 1 கழஞ்சு (4.4 கிராம்) |

இவற்றை ஒருநாழிகை (24 நிமிடம்) கையாந்தகரைச் சாற்றில் ஊறவைத்து

| | |
|---|---|
| நேர்வாளம் - | 1 கழஞ்சு (4.4 கிராம்) |

மேற்படிச் சாற்றில் ஊறவைத்தெடுத்து இவை அனைத்தும் ஒன்று சேர்த்து அரைத்துத் தூதுவிளங்காயளவு உருட்டி நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ள வேண்டும்.

| | |
|---|---|
| அளவு - | தூதுவிளங்காயளவு |
| அனுபானம் - | தயிர், தேன், சர்க்கரை |
| தீரும் நோய்கள்- | வாய்வுக்கிராணி |

## விரேசனக் குளிகை

நேர்வாளத்தை நஞ்சு போக்கி முலைப்பால்விட்டு அவித்து, பாலை ஊற்றிவிட்டு மீண்டும் சுண்ணாம்பைக் கலக்கி மேல்தெளிவை இறுத்து நேர்வாளத்தில் விட்டு அவித்துக் கொள்ளவும். தண்ணீரை ஊற்றிவிட்டு நேர்வாளமும் சுக்கும்

கடுகும் சமஅளவு எடுத்துக்கொண்டு முலைப்பால் விட்டரைத்துப் பெரும்பயறளவு உருண்டைகளாகச் செய்து வைத்துக் கொள்ள வேண்டும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | பெரும்பயறளவு |
| அனுபானம் | - | இஞ்சி |
| பத்தியம் | - | மோர் சாதம் |
| விளைவு | - | பேதியாகும் |

## விரேசனக் குளிகை (வேறு)

**காசுக்காய் கொண்டு வந்த கடுக்காய்நேர் வாளம் ரெண்டும்**
**தேசிக்காய் சாறு விட்டு தேற்றான்போ லரைத்து ருட்டி**
**வாசிக்காய் யுள்ளே கொண்டு வகுத்துறக் கழிந்த போது**
**வேசைக் காய்ந்த வெதுப்பு விடாச்சுரம் போங்கண் டாயே.**

(பொருள்) இதில் விரேசனக் குளிகை செய்முறை கூறப்படுகிறது.

காசுக்கட்டி
கடுக்காய்
நேர்வாளம்
} சம எடை

இவற்றைப் பொடித்து எலுமிச்சம் பழச்சாற்றில் அரைத்துத் தேற்றான் விதையளவு உருட்டி வைத்துக் கொள்ள வேண்டும். இதனை ஆள்பலம், காலபலம் அறிந்து கொடுக்க பேதியாகும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | தேற்றான் விதையளவு |
| தீரும் நோய்கள் | - | மிகுந்த சுரம், விடாச்சுரம் |

## வெள்ளெழுத்திற்குக் குளிகை

| | | |
|---|---|---|
| பிச்சிப்பூ | - | 100 |
| பச்சைவெட்டுசந்தனம் | | |
| ஓரிலைத் தாமரைவேர் | | |

இவற்றை முலைப்பாலில் அரைத்து, குளிகைகளாகச் செய்து கொள்ள வேண்டும். குளிர்ந்த நீரில் குளிகையை உரைத்துப் போடவும்.

தீரும் நோய்கள்- வெள்ளெழுத்து, புகைச்சல், கண்ணில்பூ

## வைசூரிக் காய்ச்சலுக்குக் குளிகை

| | | |
|---|---|---|
| அரிதாரம் | - | 1 கழஞ்சு (4.4 கிராம்) |
| நல்ல சுண்ணாம்பு | - | ½ " (2.2 " ) |
| வெற்றிலைக்காம்பு | - | " " |

இவற்றை அரைத்து மிளகளவு உருண்டைகளாகச் செய்து வைத்துக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | மிளகளவு |
| அனுபானம் | - | வெந்நீர் |
| தீரும் நோய்கள் | - | வைசூரிக் காய்ச்சல், எல்லாக் காய்ச்சல்களும் |

## பவுத்திரத்திற்கு மருந்து

| | | |
|---|---|---|
| பறங்கிப்பட்டை | - | 1 பலம் (35 கிராம்) |
| கருஞ்சீரகம் | - | " " |
| நற்சீரகம் | - | " " |
| கருங்குங்கிலியம் | - | " " |
| சாதிக்காய் | - | " " |
| கிராம்பு | - | " " |
| இலவங்கப்பட்டை | - | " " |
| திப்பிலி | - | " " |
| நாட்டுமிளகு | - | " " |
| அரிதாரம் | - | ½ " (17.5 " ) |
| சங்கம்வேர் | - | 1 பலம் (35 கிராம்) |
| புங்கம்வேர் | - | " " |
| செருப்படிசமூலம் | - | " " |
| வெள்ளறுகு | - | " " |

இவற்றை இடித்து மெல்லிய துணியில் சலித்துக் கொள்ளவும். கருநொச்சிச்சாறு நாழி (1.3 லிட்டர்) காய்ச்சி மெழுகு பதத்தில் இறக்கிக் கொள்ளவும். பின்னர் உருண்டைகளாகச் செய்து, சூரணத்துடன் அரைத்துக் கொள்ளவும்

| | | |
|---|---|---|
| அளவு | - | வெருகடி (ஒரு சிட்டிகைஅளவு) |
| காலம் | - | காலை, மாலை |
| பத்தியம் | - | கார்ப்பு, புளிப்பு, கத்தரிக்காய் இவற்றைத் தவிரவும் |
| தீரும் நோய் | - | பவுத்திரம் |

# மெழுகு

## கண்வலி, நீர்ச்சூடு, பாய்தல், படலம் சிவப்புக்கு மருந்து

| | | |
|---|---|---|
| துத்தம் | - | 1 வராகன் (3.5 கிராம்) |
| துரிசு | - | ” ” |
| சீனாக்காரம் | - | ” ” |
| வெண்காரம் | - | ” ” |
| தலைமயிர் | - | ” ” |

இவற்றைப் பொரித்து ஒவ்வொன்றாய் அரைத்துக் கொள்ளவும்.

பத்தியம் - உப்பு, துவரம்பருப்பு, பாசிப்பயறு, வெள்ளாட்டு உப்புக்கண்டம்

(ஐந்தாம் நாள் நல்லெண்ணெயில் தலைக்குத் தேய்த்து அரைப்பு, சீயக்காய் இட்டு வெந்நீரில் முழுகவும்)

தீரும் நோய்- கண்வலி, நீர்ச்சூடு பாய்தல், படலம் சிவப்பு

## சுவாசத்துக்கு மருந்து

| | | | |
|---|---|---|---|
| இரசம் | - | 2 வராகன் | (7 கிராம்) |
| நாபி | - | 1½ ” | (5.25 ” ) |
| நேர்வாளம் | - | 1 ” | (3.5 ” ) |

இவை மூன்றையும் சுத்தி செய்து தேங்காய்ப்பால் விட்டு மூன்று நாட்கள் அரைத்து இரும்புச் சிமிழில் வைக்கவும்.

பத்தியம் - உப்பு, சிறுகீரை, துவரம்பருப்பு இவைகளைச் சேர்க்கவும்

தீரும் நோய்கள்- சுவாசம்

## வயிற்றால் தண்ணீராய்க் கழிவதற்கு மருந்து

| | | |
|---|---|---|
| சாதிக்காய் | - | ¼ பலம் (8.75 கிராம்) |
| சாதிபத்திரி | - | ” ” |
| கிராம்பு | - | ” ” |
| மாசிக்காய் | - | ” ” |
| காசுக்கட்டி | - | ” ” |
| களிப்பாக்கு | - | ” ” |

இவற்றையெல்லாம் அரைத்து மூன்று வருடத்து வெல்லத்தை அத்துடன் சேர்த்து, மைபோல் அரைத்துச் சிமிழில் அடைத்துக் கொள்ளவும். மூன்று வயதுக் குழந்தைகளுக்கு,

| | | |
|---|---|---|
| அளவு | - | பருத்திக்கொட்டை |
| காலம் | - | 3 நாட்கள் |
| பத்தியம் | - | மூன்று வேளையும் பால், தயிர், நெய் கூட்டவும். |

பெரிய மனிதர்களுக்கு,

| | | |
|---|---|---|
| காலம் | - | 3 நாட்கள் மூன்று வேளை |
| பத்தியம் | - | பால், நெய், தயிர் |

(உடம்பு உஷ்ணமானால் கொதி கஞ்சியில் வெண்ணெய் போட்டுக் குடிக்கவும்)

## வடகம்

### தாளிச வடகம்

| | | |
|---|---|---|
| தாளிசபத்திரி | - | 1 பலம் |
| மிளகு | - | 2 ” |
| சித்திரமூலம் | - | 1 ” |
| திப்பிலி | - | 4 |
| கூகைநீறு | - | 5 |
| திப்பிலிமூலம் | - | 2 |
| சுக்கு | - | 3 |
| இலாமிச்சம்வேர் | - | 1 பலம் |
| நாகப்பூ | - | ½ ” |
| சாதிக்காய் | - | ¼ ” |
| கிராம்பு | - | ½ ” |
| சாதிபத்திரி | - | ½ ” |

இவற்றை இடித்து மெல்லிய துணியில் போட்டுச் சலித்துச் சர்க்கரை 2 பலம் (70 கிராம்) சேர்த்து நெய்விட்டுப் பிசைந்து குண்டுச் சட்டியில் பால் விட்டு வேடுகட்டி வேட்டின் மேல் வைத்து மூடி வெந்தபின் எடுத்து வைத்துக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | பாக்களவு |
| தீரும் நோய்கள் | - | இருமல், ஈளை, அரோசகம், அசீரணம், சுரதாபம், சத்தி குன்மம், அதிசாரம், மார்வலி, கிராணி, பெரும்பாடு, வாதரோகம், பாண்டுரோகம், எலும்புருக்கி |

விளக்கெண்ணெய் - இவை சேர்ந்த சம அளவு இவற்றைப் பொடித்து விளக்கெண்ணெயில் கலந்து கூழ்போல அருந்த வேண்டும்.

அளவு - தரப்படவில்லை
திரும் நோய்கள்- மலக்கட்டு, வயிற்றுநோய்

## குளிர் மாறலுக்கு விரேசன மருந்து

வெள்ளைப் பாஷாணத்தைப் பாகற்காயில் வைத்துப் பசுவின்பால் விட்டு அவித்து நேர்வாளமும் சுத்தி செய்து கூட்டவும்.

பாஷாணம் - 1 பலம் (35 கிராம் )
நேர்வாளம் - 2 " (70 " )

இரண்டையும் தேன்விட்டு அரைத்து வைக்கவும். நல்ல வெல்லம் மூன்று உருண்டை போட்டுப் பசுவின் பால் விட்டுக் காய்ச்சி இறக்கி ஆறவிட்டு எடுத்து வைக்கவும்.

அளவு - குன்றியளவு (65 மி.கிராம்)
அனுபானம் - சர்க்கரை,தேன்
பத்தியம் - மாங்கொட்டை, மிளகு, நீர், பால் சேர்க்கவும்.
தீரும் நோய் - குளிர்மாறல் (பேதியாகும்)

## திமிர்வாதத்திற்கு விரேசனம்

பசுவின் கோமியம் - 5 நாழி (5.15 லிட்டர்)
இதில் 5 கடுக்காய் பொடிபண்ணி போட்டு குடிக்கவும்.

காலம் - மூன்று நாளைக்கு ஒருமுறை
அனுபானம் - கோமியம், மருள்கிழங்கு இலைச்சாறு உழக்கு (336 மி.லிட்டர்) வெள்ளாட்டுப்பால் உழக்கு (336 மி.லிட்டர்), அடுப்பில் வைத்துக் காய்ச்சி, அதில் ஆழாக்கு (168 மி.லிட்டர்) குறுவையரிசி போட்டு, பொங்கிய சோறு, ஏழு நாள், காலையில் மட்டும்.
பத்தியம் - கவிச்சு, உப்பு, புளி தவிரவும்.
தீரும் நோய் - திமிர்வாதம்

# செந்தூரம்

## அப்பிரக செந்தூரம்

அந்தி மல்லிகைக் கிழங்குச் சாற்றில் நன்றாய் அரைத்து அப்பிரகத்தை நான்கு புடம் போடவும்.

தீரும் நோய் - சூதகவாய்வு

## இரச செந்தூரம்

இரசத்தை மஞ்சள் தூளில் போட்டுச் சுத்தி செய்து கொள்ளவும். கந்தகத்தைப் பாலில் சுத்தி செய்து கொள்ளவும்.

இரசம் - 1 பலம் (35 கிராம்)
கந்தகம் - " "

இவை இரண்டையும் எலுமிச்சம் பழச்சாற்றில் அரைத்துக் கோழி முட்டையில் போட்டுப் பதினோரு சீலைமண் செய்து கொள்ளவும். பதக்கு (10.7 லிட்டர்) கொள்ளளவுள்ள பானையில் நான்குவிரல் மணல் போட்டு அதன்மேல் ஒருவிரல் செங்கல்பொடி போடவும். அதன்மீது முட்டையை வைத்து, பானையின் வாயை மூடிச் சீலைமண் செய்து நாற்பது நாழிகை (16 மணி நேரம்) கமலாக்கினியாக எரிக்கவும். பதம் அறிந்து மேல் சட்டியின் மேல் ஒவ்வொன்றாக மூன்று நெல் வைத்துப் பொரிந்தால் எரியிடாமல் ஆறவைத்து எடுக்கச் செந்தூரமாகும்.

அளவு - 1 பணவெடை (488 மி.கிராம்)
அனுபானம் - இஞ்சிச்சாறு, தேன், நெய்
தீரும் நோய்கள் - கூறப்படவில்லை

## உலோக செந்தூரம்

தண்டவாளப் பொடியில் செப்பு நெருஞ்சிச் சாற்றில் மூன்று சாமம் (9 மணி நேரம்) நெகிழ அரைத்துப் புடம் போடவும். இந்தப்படி 9 புடம் போடவும்.

தீரும் நோய்கள் - பாண்டு, சூதக வாய்வு

**சுயமாக்கினி**

| | | |
|---|---|---|
| காந்தம் | - | 6 வராகன் (21.0 கிராம்) |
| அரப்பொடி | | 6 வராகன் (21.0 கிராம்) |
| கந்தகம் | - | 3 வராகன் (10.5 கிராம்) |
| இரசம் | - | 3 வராகன் (10.5 கிராம்) |

கந்தகம் உருக்கி இரசம் விட்டுக் கிளறிக் கொள்ளவும். காந்தம் அரப்பொடி இரண்டும்

கடுக்காய்
தான்றிக்காய் } சம அளவு
நெல்லிமுள்ளி

இவற்றைச் சுத்தி செய்துகொண்டு கல்வத்தில் போட்டு, கடுக்காய்த் தண்ணீர் விட்டு ஒருசாமம் (3 மணி நேரம்) வெண்கலப் பாத்திரத்தில் வைத்துச் சூரியனில் இரண்டு சாமம் (6 மணி நேரம்) வைக்கவும். அடுத்தநாள் கற்றாழம் சாறுவிட்டு அரைத்து வில்லைத்தட்டிச் சூரியஒளியில் வைத்துக் கொள்ளவும். பின் எடுத்து நெகிழ அரைத்துப் புட்டியில் அடைக்கவும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | ½ வராகன் (1.75 கிராம்) |
| அனுபானம் | - | சுக்கு, திப்பிலி, மிளகு வறுத்துப் பொடி செய்த தூள் மூவிரல் கொண்ட அளவு |
| பத்தியம் | - | எருமைத் தயில் பசுவின்பால் சேர்க்கவும். புளி, கடுகு, நல்லெண்ணெய் தவிரவும். |
| தீரும் நோய்கள்- | | பெருவயிறு, வயிற்றில் கட்டி, காமாலை, சோகை, பாண்டு, மேகவாய்வு, கிராணிகள், உள்மூலம். |

## நீர்க்கட்டு, நாவறட்சி, தோஷம் இவற்றிற்குச் செந்தூரம்

வெடியுப்பைக் காட்டாமணக்கின்பால் விட்டரைத்து, வெண்காரக் கட்டிக்கு மேல் கவசம் செய்யவும். நான்கைந்து நாட்கள் காயக்காய நித்தம் முன் பால் பூசிப்பூசிக் காயவைத்து, கட்டி வெள்ளையான பிறகு எடுத்துக் கொள்ளவும். பின்னர் மேல் கவசத்தோடு காட்டாமணக்கின்பால் விட்டு அரைத்து

வில்லையாகச் செய்துகொண்டு காயவைக்கவும். இரும்புக் கரண்டியில் இட்டுக் குத்துவிளக்கில் பிடித்துச் செந்தூரமான பிறகு எடுத்துக் கொள்ளவும்.

தீரும் நோய்கள் - தாகம், நாவறட்சி, தோடம், நீர்க்கட்டு

# நசியம்

## எந்தப் பீனிசத்திற்கும் நசியம்

| | | |
|---|---|---|
| தேங்காய் எண்ணெய் | - | ¾ பங்கு |
| பசுவின் நெய் | - | ” |
| அறுகம்வேரின் சாறு | - | உழக்கு (336 மி.லிட்.) |

இம் மூன்றையும் சேர்த்து நன்றாகக் கொதிக்க வைத்து,

| | | |
|---|---|---|
| கோட்டம் | - | 3 வராகன் (10.5 கிராம்) |
| ஏலம் | - | ” ” |
| வெண்காரம் | - | ” ” |

சேர்த்துப் பொடி செய்து போட்டுக் காய்ச்சவும். பின்னர் எடுத்து வடித்துக் கொள்ளவும். இரண்டு காதுகளிலும் மூக்கிலும் நசியம் விடவும். பின்னர், தலைக்கும் தேய்த்துச் சீயக்காய் விட்டு முழுகவும்.

தீரும் நோய்கள் - பீனிசங்கள்

## கபாலத்தின் பலநோவுக்கும், நயனவாதத்திற்கும் மருந்து

| | | |
|---|---|---|
| கந்தகம் | - | ½ கழஞ்சு |
| இரசம் | - | ” |
| அரிதாரம் | - | ¼ கழஞ்சு |
| மடல்துத்தம் | - | ” |
| குந்திருக்கம் | - | 1 கழஞ்சு |
| கொடிவேலிவேர் | - | ” |
| எருக்கம்கரி | - | ” |

இவற்றோடு,

குப்பைமேனிச்சாறும் எருக்கம் பழுப்புச் சாறும் எடுத்து நன்றாக அரைத்து வெள்ளைச் சீலையில் ஊட்டி நிழலில் உலர்த்தித் திரியாகத் திரித்து நசியம் இடவும்.

திரும் நோய்கள் - பீனிசம், கபாலக்குத்து, பித்தவலி, ஒற்றைத் தலைவலி, கபாலசன்னி, நயனவாதம்

## குத்து, நோவு, சன்னிவலிக்கு நசியம்

சமுத்திராப்பழம்
திப்பிலி சம அளவு

இவற்றை எடுத்துக் கையாந்தகரைச் சாற்றில் அரைத்துக் குளிகை செய்து, நிழலில் உலர்த்திக் கொள்ளவும். பின்னர், காடித்தெளிவில் உரைத்து நாசிக்குள் இரண்டுதுளி இடவும்.

காலம் - 3 நாட்கள்
தீரும் நோய்கள் - கபாலக்குத்து, ஒற்றைத்தலைவலி

## சுகசன்னிக்கு நசியம்

முருங்கைவேர்
முருங்கைஇலை
வேளைவேர்
வேளைஇலை
எருக்கம்வேர்
எருக்கம்இலை
எருக்கம் அரும்பு
குப்பைமேனிவேர்
குப்பைமேனிஇலை
} சம அளவு

இவற்றையெல்லாம் சிறு நீர்விட்டு நறுக்கி, மிளகு, வெள்வெங்காயம், வசம்பு, சுக்கு, கடுகு இவற்றைச் சேர்த்துப் பொட்டணம் கட்டி நாசியில் துளி இடவும்.

தீரும் நோய் - சுக சன்னி

## நடுக்கல் சுரத்திற்கு நசியம்

கடுகு எண்ணெயும் தும்பையிலைச்சாறும் நசியம் பண்ணவும்.

தீரும் நோய் - நடுக்கல் சுரம்

### நடுக்கல் சுரத்திற்கு நசியம் (வேறு)

அகத்திப் பழுப்பும், சுக்கும் நசியம் பண்ணவும்.
தீரும் நோய் - நடுக்கல் சுரம்

### நடுக்கல் சுரத்திற்கு நசியம் (வேறு)

நொச்சியிலையின் சாறு எடுத்து நசியம் இடவும்.
தீரும் நோய் - நடுக்கல் சுரம்

### நாக்கு விழுந்ததற்கு நசியம்

அதிமதுரம்
சர்க்கரை
கற்பூரம்
இவற்றைப் பொடி செய்து முலைப்பாலில் நசியம் பண்ணவும்.
தீரும் நோய் - நாக்கு விழுதல்

### நெஞ்சில் கட்டின சன்னிக்கு நசியம்

மஞ்சள் பொடி
மயிலிறகு
இவற்றை நுணுக்கிப் பொடிசெய்து திரியாகத் திரித்து மூக்கில் நசியமிடவும்.
தீரும் நோய் - நெஞ்சில் கட்டின சன்னி

### வலிப்புக்கு நசியம்

**இதுமுதல் குமர கண்டன் இரைந்திடு[1] முதல கண்டன்**
**மதுவுடன் குதிரை மேவு வலிப்புடன் பலவ லிப்பும்**
**பதுமமா அவுரிச் சாறும் பகர்வசம் புள்ளி கூட்டி**
**முதுநசி யந்தான் பண்ண மொழிந்திடில் ஓடிப் போமே.**

(பொருள்) இதில் வலிப்புக்கு நசியம் கூறப்படுகிறது.

அவுரிச்சாறு
வசம்பு } சம எடை
உள்ளி

அரைத்து நசியமாக மூக்கில் இடவேண்டும்.

தீரும் நோய்கள் - குமரகண்டம், முசலகண்டன், குதிரை வலிப்பு, பலவித வலிப்புகள்

பாட வேறுபாடு : 1. இசைந்திடு

### வலிப்புக்கு நசியம் (வேறு)

அவுரிச்சாறு விட்டு உள்ளி வசம்பு நறுக்கி நசியம் பண்ணவும்.

தீரும் நோய் - வலிப்பு

### வாந்திக்கு நசியம்

விளா இலையைச் சீலையில் கட்டி முகரவும்.

தீரும் நோய் - வாந்தி

## நெய்

### ஆடாதொடை நெய்

ஆடாதொடைச் சாறு உழக்கு (336 மி.லிட்டர்). சட்டியில் விட்டுக் கொதித்துப் பொங்கியபின் பசுவின் நெய் உரியளவு (672 மி.லிட்டர்) விடவும். நன்றாகக் காய்ந்தபிறகு அதிமதுரப்பொடி ஒரு வெருகடி (ஒரு சிட்டிகையளவு) அல்லது ஒரு கழஞ்சு (4.4 கிராம்) போட்டு மெழுகு பதத்தில் காய்ச்சி முருகிப் போகாமல் பதத்தில் இறக்கி வைத்துக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | ஒரு சிறு கரண்டியளவு |
| பத்தியம் | - | கசப்பு, புளிப்பு, மச்சம், மாங்கிஷக் கிரந்தி பண்டம் |
| தீரும் நோய்கள் | - | காசம், சயம், மந்தாரம், இருமல் இளைப்பு. |

### ஆவறி பித்தத்திற்கு முசுமுசுக்கை நெய்

| | | |
|---|---|---|
| முசுமுசுக்கைச் சாறு | - | 1 படி (2.65 லிட்டர்) |
| நெல்லிக்காயின் சாறு | - | ” ” |
| இஞ்சிச்சாறு | - | ” ” |
| பசுவின் நெய் | - | ½ ” (1.325 ” ) |
| சீனிச் சர்க்கரை | - | 5 பலம் (175 கிராம்) |

முசுமுசுக்கைச் சாறு, நெல்லிக்காயின் சாறு, இஞ்சிச்சாறு இந்த மூன்றையும் எடுத்து நன்றாகக் காய்ச்சிக் கொள்ளவும். பின்னர், சர்க்கரையும், நெய்யும் விட்டுப் பதத்தில் இறக்கிக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| காலம் | - | காலை, மாலை |
| பத்தியம் | - | கசப்பு, புளிப்பு தவிரவும் |

(மருந்து கொள்ளுவதற்கு முன், முசுமுசுக்கைச் சாறு கால் படியும் (325 மி.லிட்டர்) பசுவின் பால் கால் படியும் (325 மி.லிட்டர்) தலையில் தேய்த்து மறுநாள் காலையில் குளிக்கவும். மூன்று நாள் இப்படிக் குளித்த பின்னர் நான்காம் நாள் முதல் மருந்தை உட்கொள்ளவும்.

தீரும் நோய் - ஆவறிப் பித்தம்

## இரத்தப் பித்தத்திற்கு ஆடாதொடை நெய்

ஆடாதொடை இலைச்சாறு குறுணி (5.3 லிட்டர்) எடுத்து நான்கொன்றாகும்வரை காய்ச்சி,

பசுவின் நெய் -1 நாழி (1.3 லிட் ) சேர்க்கவும்.

| | | |
|---|---|---|
| ஆடாதொடைக் சுற்கம் | - | 1 பலம் (35 கிராம்) |
| நிலவேம்பு | - | ” ” |
| வெட்பாலை அரிசி | - | ” ” |
| முத்தக்காசு | - | ” ” |
| அதிமதுரம் | - | ” ” |
| சிறுதேக்கு | - | ” ” |
| சந்தனம் | - | ” ” |
| திப்பிலி | - | ” ” |
| நன்னாரிவேர் | - | ” ” |
| இலாமிச்சம்வேர் | - | ” ” |
| செங்கழுநீர்க் கிழங்கு | - | ” ” |
| கம்பந்திராய் | - | ” ” |
| பெருங்குரும்பை | - | ” ” |

இவற்றை அரைத்து எரித்து வடித்து வைக்கவும். அதில் உழக்கு (336 மி.லிட்டர்) தேனும் கலந்து வைக்கவும். இக்குடிநீரை அனுபானமாகப் பயன்படுத்தவும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | 1 கழஞ்சு (4.4 கிராம்) |
| அனுபானம் | - | குடிநீரும், தேனும் கலந்த கலவை |
| பத்தியம் | - | கைப்பு, புளிப்பு |
| தீரும் நோய் | - | இரத்தப் பித்தம் |

## இரத்தப் பித்தத்திற்கு நெய்

சந்தனம் - 2 பலம் (70 கிராம்)

இடித்து, பதக்கு (10.7 லிட்டர்) தண்ணீர் விட்டு நான்கொன்றாய்க் காய்ச்சி வடித்துக் கொள்ளவும். இத்துடன்,

நன்னாரி வேர் - 1 பலம் (35 கிராம்)
அதிமதுரம் - " "

இவற்றைக் குடிநீராக்கி, இரண்டையும் கலந்து எரித்து வைத்துக் கொள்ளவும்.

தீரும் நோய் - இரத்தப் பித்தம்

## இரத்தப் பீனிசத்திற்கு நெய்

பொன்னாங்காணிச்சாறு
பசுவின் பால்
சிறிதளவு உள்ளி
வசம்பு
} சம அளவு

இவற்றைக் காய்ச்சி வடித்துக் கொள்ளவும். மருந்தை உள்ளுக்கும் கொடுத்துத் தலையிலும் தடவவும்.

தீரும் நோய் - இரத்தப் பீனிசம்

## இரத்தப் பெரும்பாட்டுக்கு நெய்

பத்துத் தேங்காய் துருவிச் சிறிது தண்ணீர் விட்டுப் பால் பிழிந்து அத்துடன் இரண்டு பங்கு பொடுதலைச் சாறு பிழிந்து காய்ச்சி நெய்யான பதத்தில் இறக்கி வைத்துக் கொள்ளவும். ஒரு எலுமிச்சங்காயளவு கடுகு தின்று, நெய்யை அத்தோடு சேர்த்து உள்ளுக்குக் கொள்ளவும்.

அளவு - 1 கரண்டியளவு
பத்தியம் - கசப்பு, புளிப்பு தவிரவும்
தீரும் நோய் - இரத்தப் பெரும்பாடு

## இரத்தமாய் மூக்காலேயும் வாயாலேயும் எடுப்பதற்கு நெய்

பசுவின் நெய்யில்
ஏலம்
இலவங்கம்
அதிமதுரம்
கோட்டம்
கிராம்பு

இவற்றைப் பொடி செய்து,

அமிர்தவல்லிக் கிழங்கு
ஆவின் பால்

இவற்றைச் சேர்த்தரைத்து, நெய்யாக வடித்துக் கொள்ளவும். நாசியில் காட்டித் தலையில் தடவவும்.

தீரும் நோய் - இரத்தமாய் மூக்காலேயும், வாயாலேயும் எடுப்பது

## இரத்த மூலத்திற்கு நெய்

சாதிக்காய் 1 வராகனெடை (3.5 கிராம்) ஆலக்கரண்டியில் எடுத்து வைத்து எரிய விடவும். பின்னர், தணிய வைத்து அரைத்துப் பசுவின் நெய் ½ படி (1.3 லிட்டர்) கலந்து கொள்ளவும்.

அளவு - 1 கரண்டி

காலம் - காலை, மாலை

தீரும் நோய் - இரத்த மூலம்

## காணாக்கடியாகச் சரீரமெல்லாம் சொரியானால் நெய்

| | | |
|---|---|---|
| நவச்சாரம் | - | 1 காசெடை (1 பைசா அளவு) |
| கந்தகம் | - | " " |
| இரசம் | - | 1 கழஞ்சு (4.4 கிராம்) |
| பசுவின் நெய் | - | 1 உரி (672 மி.லிட்டர்) |

இவற்றையெல்லாம் ஒன்றாகச் சேர்த்துச் சூரியப்புடம் போடவும். பின்னர், உடம்பில் சொரிந்துவிட்டுப் பூசவும்.

தீரும் நோய் - காணாக்கடியாகச் சரீரமெல்லாம் ஏற்படும் சொரி

## குவளை விப்புருதிக்கு நெய்

| | | |
|---|---|---|
| வெள்வெங்காயம் | - | 10 பலம் (350 கிராம்) |
| பசுவின் நெய் | - | 1 நாழி (1.3 லிட்டர்) |

வெள்வெங்காயத்தை அரைத்து, நெய்யில் விட்டுக் கரைத்து எரித்து நக்கவும்.

தீரும் நோய்கள் - குவளை விப்புருதி, குன்மம்

## குன்மத்துக்குக் கிருதம்

| | | |
|---|---|---|
| பசுவின் நெய் | - | 1 நாழி (1.3 லிட்டர்) |
| பசுவின் பால் | - | " " |

| | | |
|---|---|---|
| பசுவின் தயிர் | - | ” ” |
| பசுவின் கோமியம் | - | ” ” |
| பசுவின் சாணி | - | ” ” |
| வச்சிரப்பால் | - | ½ கழஞ்சு (2.2 கிராம்) |
| கூகைநீறு | - | ¾ ” (3.3 ” ) |
| முத்தக்காசு | - | 6 ” (21.0 ” ) |
| தேவதாரம் | - | 3 ” (10.5 ” ) |
| இலசுணம் | - | 6 கழஞ்சு (21 கிராம்) |
| ஏரண்டவித்து | - | ” ” |

இவற்றையெல்லாம் வடித்து எடுத்து வைத்துக் கொள்ளவும்.

தீரும் நோய்கள் - வாய்வு, திரட்சி, பலவாய்வு, மகோதரம், அட்டகுன்மம், அருவை, குளிகை, நீராமை, அட்டவிகை, குடகரி, பீலிகை, வெப்புப்பாவை, கல்லெரிப்பு, அந்திரம், அண்டவாய்வு, குடல் வாய்வு, விடபாகம், கவிசை, நீர்க்கோர்வை, குடல்முட்டி, சுரசூலை, திரட்சி கொண்ட வாய்வு.

## குழந்தைப்பிணி மருந்து

நாக்கடி புரளும் வாய்ப்புண்ணாம் நல்ல பிடரித் தலைகாயும்
போக்கு முண்டாய் வயிறுளைந்து பொருமிக் கழிந்து நாவறளும்
தூக்கம் போகும் அரைக்கண்படும் துயிலு மாகச் சிவந்திருக்கும்
ஆக்க முடைய பெரியோரே அதற்குச் செய்யும் மருந்துகேள்.

அக்கிரா திப்பிலி ஏலங்கன்னார் அசம தகமும் நற்சீரகமும்
மிக்க சாதிக்காய் அதிமதுரம் மிகுந்த சாத்திர வேதிக்கல்லு
மைக்கண் விழியே மானேகேள் மாசிக் காய்கருஞ் சீரகமும்
ஒக்கப் பொடிசெய்து நறுநெய்யில் உகந்து காய்ச்சி வடித்திடுமே

வடிக்கில் நெய்யின் குணங்கேளீர் மாந்த மயக்கம் குளிர்தோடம்
இடிக்கு மீளை இருமலிளைப்பு இடநா முள்ளு ரோகமதும்
படிக்குள் தீரு மிதுபோகும் பரிந்தே இரண்டு காசெடையே
குடிக்கக் கொடுத்து வருவீராய் குதலை மொழியும் பாலனுக்கே

(பொருள்) இதில் குழந்தைகளுக்கு உண்டாகும் மாந்த நோய்க்கு மருந்து கூறப்படுகிறது.

நாக்கு அடி புரளுதல், வாய்ப்புண், பிடரி, தலை இவற்றில் சூடு, வயிறு உளைந்து பொருமலுடன் கழியும், நாக்கு வறளும், அரைக்கண் மூடித் தூங்கும் ஆகிய குறிகளை உடைய நோய்க்கு மருந்து கூறப்படுகிறது.

அக்கிராகாரம்
திப்பிலி
ஏலம்
அசமதாகம்
சீரகம்
சாதிக்காய்
அதிமதுரம்
சாத்திரவேதி
மாசிக்காய்
கருஞ்சீரகம்
} சரி எடை

பொடித்துச் சரியளவு நெய் கலந்து காய்ச்சி வடிகட்டி வைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு - 2 காசெடை
தீரும் நோய்கள்- மாந்தம், மயக்கம், குளிர்தோடம், ஈளை இருமல், இளைப்பு, உள்ளுரோகம்.

## குன்மத்துக்கு நெய்

வெள்ளுள்ளி இஞ்சி நெல்லி விரவிய சதா வேரி
தெள்ளிய இளநீர் பால் சீரிவை நானாழி சேர்த்து
கொள்ள கிஷாயம் வெந்து கொதித்திரு நாழி யானால்
மெள்ளவே நாழி நெய் விடுவது மிகவும் நன்றே.

நன்றதே கோஷ்டம் ஏலம் நல்குவெண் காரம் இந்து
சென்றுற மணக்கும் நற்சீரகம் திப்பிலி கொத்து மல்லி
மென்றிடுங் கிராம்பு வாசி மிக்கசேங் கொட்டை கூட்டி
ஒன்றவே வெந்த நெய்தான் உண்ணவே குன்மம் போமே.

போமதே வெய்ய மாந்தம் பொருமிய சத்தி குன்மம்
தாமதை எரிக்கும் குன்மம் தறைபடா சத்தி குன்மம்
வாமமா மரண வாத மறுகிட வலிக்கும் குன்மம்
தாமதப் படாதே தீரும் தகுதியாம் நெய்யி தாமே.

(பொருள்) இதில் குன்மத்திற்கு நெய் கூறப்படுகிறது.

| | | |
|---|---|---|
| வெள்ளுள்ளி | | சரியளவு |
| இஞ்சி | | |
| நெல்லி | | |
| தண்ணீர்விட்டான் கிழங்கு | | |
| இளநீர் | | |
| பால் | | |

4 நாழி (5.2 லிட்டர்) தண்ணீர் சேர்த்துக் குடிநீரிட்டு 2 நாழி (2.6 லிட்டர்) ஆகக்குறுக்கி

நெய் - 1 நாழி (1.3 லிட்டர்)

சேர்க்க வேண்டும். அத்துடன்

கோட்டம்
ஏலம்
வெங்காரம்
இந்துப்பு
சீரகம்
திப்பிலி
கொத்துமல்லி
கிராம்பு
சுத்தித்தசேங்கொட்டை

இவற்றைப் பொடித்துக் கட்டிக் காய்ச்சி நெய்யாகப் பதத்தில் வடித்து வைத்துக் கொள்ளவேண்டும்.

தீரும் நோய்கள்- குன்மம், மாந்தம், சத்தி குன்மம் எரி குன்மம், வலி குன்மம்

## தண்டு அசந்தார்க்கு வலுவுண்டாக மருந்து

| | |
|---|---|
| கஞ்சாவிரை | சம அளவு |
| குரோசானி ஓமம் | |
| சாதிக்காய் | |
| சாதிபத்திரி | |
| திப்பிலி | |
| நற்சீரகம் | |

இவற்றைப் பொடியாக்கிக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | வெருகடி (சிட்டிகையளவு) |
| அனுபானம் | - | தேன் |
| காலம் | - | காலை, மாலை |
| பத்தியம் | - | கார்ப்பு, புளிப்பு தவிரவும். பால், நெய், முருங்கைக்காய் சேர்க்கவும். |
| தீரும் நோய் | - | தண்டு அசர்தல் |

## துன்மாங்கிச அடைப்புக்கு மருந்து

| | | |
|---|---|---|
| நெய் | - | 1 உழக்கு (336 மி.லிட்.) |
| விழலரிசி | - | 1 கழஞ்சு (4.4 கிராம்) |
| தேவதாரம் | - | ” ” |
| ஏலம் | - | ” ” |
| இலவங்கம் | - | ” ” |
| திரிபலை | - | ” ” |
| கிராம்பு | - | ” ” |
| திரிகடுகு | - | ” ” |
| கல்மதம் | - | ” ” |
| கல்நார் | - | ” ” |
| அதிமதுரம் | - | ” ” |
| கொத்துமல்லி | - | ” ” |
| இந்துப்பு | - | ” ” |
| சதகுப்பை | - | ” ” |
| ஓமம் | - | ” ” |
| வெள்வெங்காயம் | - | ” ” |
| கடுகு | - | ” ” |
| நற்சீரகம் | - | ” ” |
| கருஞ்சீரகம் | - | ” ” |
| வேம்பாடம்பட்டை | - | ” ” |
| செங்கழுநீர்வேர் | - | ” ” |
| கோட்டம் | - | ” ” |
| சிறுகீரைவேர் | - | ” ” |
| குப்பைமேனிவேர் | - | ” ” |
| பசுவின்நெய் | - | உரி (650 மி.லிட்.) |
| ஆமணக்கெண்ணெய் | - | ” ” |
| நல்லெண்ணெய் | - | ” ” |

இவற்றையெல்லாம் கலந்து கடைச்சரக்குகளைப் பால் விட்டரைத்துக் கலக்கிச் சிறு தீயாய் எரித்துப் பதத்தில் இறக்கி, கழுத்துக்குக் கீழ் உள்ளங்காலளவும் நனைக்க, கொப்புளின்கீழ் அரைமட்டும் வெள்ளீய சீலையில் நனைத்துப் போடவும். உடலில் தடவி வைத்திருந்தபின், வெந்நீர் விட்டுக் குளித்துப் போடவும்.

தீரும் நோய்கள் - நீர்த்தாரையின் புண், மூத்திரக்கிரிச்சம், துன்மாங்கிஷம், கல்லடைப்பு

## நெஞ்சில் புற்றுக்கு நெய்

| | | |
|---|---|---|
| அதிமதுரம் | - | 1 கழஞ்சு (4.4 கிராம்) |
| ஏலம் | - | ” ” |
| வெள்வெங்காயம் | | 50 |
| ஈருள்ளிப்பூண்டு | | |
| செண்பகப்பூ | - | 1 கழஞ்சு (4.4 கிராம்) |

இவற்றையெல்லாம் உரி (672 மி.லிட்டர்) நெய்யில் எரித்து நக்கவும்.

தீரும் நோய் - நெஞ்சுப் புற்று

## நெஞ்சு வறட்சிக்கு நெய்

| | | | |
|---|---|---|---|
| சீரகம் | - | 2 காசெடை | (2 பைசா அளவு) |
| கருஞ்சீரகம் | - | ” | ” |
| இலவங்கம் | - | ” | ” |
| அதிமதுரம் | - | ” | ” |
| பூலா | - | ” | ” |
| எருக்கம் | - | ” | ” |
| செஞ்சந்தனம் | - | ” | ” |
| சென்னகரப்பழம் | - | ” | ” |
| நாகப்பூ | - | ” | ” |
| கடுகுரோகணி | - | ” | ” |
| இலாமிச்சம் | - | ” | ” |

இவற்றை நன்றாக அரைத்துப் பசுவின் நெய் நாழியில் (1.3 லிட்டர்) கரைத்து வடித்துக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | 1 கரண்டி |
| காலம் | - | காலை, மாலை |
| தீரும் நோய் | - | நெஞ்சு வறட்சி |

## பிரமேகத்துக்கு நெய்

நாயுருவி வேர் இருபது பலம் (700 கிராம்) கொண்டு வந்து இடித்து நான்கு நாழி (5.2 லிட்டர்) நீர்விட்டு நான்கில் ஒன்றாய்க் காய்ச்சிப் பிசைந்து,

| | | |
|---|---|---|
| சதாவேரி கிழங்கின் நீர் | - | 1 நாழி (1.3 லிட்.) |
| பசுவின் பால் | - | ” ” |
| பசுவின் நெய் | - | ” ” |

இவற்றைக் குடிநீருடன் சேர்த்துக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| முத்தக்காசு | - | 2 கழஞ்சு (8.8 மி.லிட்டர்) |
| நன்னாரி | - | ,, ,, |
| ஏலம் | - | ,, ,, |
| இலவங்கம் | - | ,, ,, |
| அதிமதுரம் | - | ,, ,, |
| கோட்டம் | - | ,, ,, |
| திப்பிலி | - | ,, ,, |

இவற்றைக் காய்ச்சி, பதத்தில் வடித்துக் கொள்ளவும். இரசம் வடிக்கிற சட்டியில் நான்கு பலம் (140 கிராம்) சர்க்கரை போட்டு, இவற்றையெல்லாம் ஒன்றாகக் கலந்து கொள்ளவும்.

அளவு - 1 காசெடை (ஒரு பைசா அளவு.)
பத்தியம் - உப்பு, புளிப்பு தவிரவும்
தீரும் நோய் - பிரமியம்

## பிரமேகம், பெரும்பாடு, உட்காய்ச்சலுக்கு நெய்

| | | |
|---|---|---|
| பசுவின் நெய் | - | 1 படி (2.65 லிட்டர்) |
| நெய்தல் சாறு | - | ,, ,, |
| வல்லாரைச்சாறு | - | ,, ,, |
| முசுமுசுக்கைசாறு | - | ,, ,, |
| தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு | - | ,, ,, |
| நெய்ச்சிட்டிச்சாறு | - | ,, ,, |
| பசுவின் பால் | - | ,, ,, |
| செவ்விளநீர் | - | ,, ,, |
| கற்கம் பஞ்சதிரவியம் | - | ½ பலம் (17.5 கிராம்) |
| அவுரி வேர் | - | 1 வராகன் (3.5 கிராம்.) |
| கோரோசனை | - | ,, ,, |
| செங்கழுநீர்க் கிழங்கு | - | ,, ,, |
| தாமரை வளையம் | - | ,, ,, |
| சுக்கு | - | ¼ பலம் (875 மி.கிராம்) |

இவற்றையெல்லாம் கூட்டியரைத்துப் பதத்தில் வடித்துக் கொள்ளவும்.

அளவு - 1 கரண்டி
தீரும் நோய்கள் - பிரமேகம், பெரும்பாடு, உள்காய்ச்சல், வாத, பித்த, சிலேத்துமத்தால் வந்த உள்காய்ச்சல்.

## பிள்ளை பெற்ற பெண்களுக்குப் பெரும்பாடு நிற்க நெய்

| | | |
|---|---|---|
| காந்தக்கல் | - | 2 வராகன் (7 கிராம்) |
| அக்கிராகாரம் | - | ” ” |
| அதிமதுரம் | - | ” ” |
| சாதிக்காய் | - | ” ” |
| தாளிசபத்திரி | - | ” ” |
| சுக்கு | - | ” ” |
| மிளகு | - | ” ” |
| திப்பிலி | - | ” ” |
| கடுகுரோகணி | - | ” ” |

இவற்றை யெல்லாம் பசுவின் நெய் நாழி (1.3 லிட்டர்) எடுத்து அதில் போட்டுக் காய்ச்சி வடிக்கவும்.

சிற்றாமுட்டிவேர் - 10 பலம் (350 கிராம்) பதக்கு (10.7 லிட்டர்) நீர் விட்டு நாழியாகக் காய்ச்சி (336 மி.லிட்டர்) முன் கூறிய கடைச்சரக்குகள் இவற்றை ஒரு படி (2.65 லிட்டர்) பசுவின் பால் விட்டு அரைத்து, நீரும் நெய்யும் ஒன்றாய்க் கலந்து காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்துக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | ஒரு கரண்டி |
| காலம் | - | 17 நாட்கள் (காலையில்) |
| பத்தியம் | - | பசுவின் பால், நெய், கொடி வழுதலைப் பிஞ்சு, துவரம் பருப்பு, கிள்ளுக்கீரை, ஓலைவாளைக் கருவாடு, கெளுத்திக் கருவாடு கூட்டவும். காா்ப்பு, புளிப்பு தவிரவும். |
| தீரும் நோய் | - | பிள்ளை பெற்றபின் பெண்களுக்கு உண்டாகும் பெரும்பாடு. |

## புளியாரை நெய்

| | | | |
|---|---|---|---|
| முத்தக்காசு | - | 20 பலம் | (700 கிராம்) |
| வில்வவேர் | - | 1 பலம் | (35 கிராம்) |
| வட்டத்திருப்பிவேர் | - | ” | ” |
| கீழாநெல்லிவேர் | - | 2 ” | (70 ” ) |
| இலாமிச்சம்வேர் | - | 1 ” | (35 ” ) |
| காட்டாத்திப்பூ | - | ” | ” |

மாதுளம்பழம் - . 2
வில்வப்பழம் - 1

இவற்றையெல்லாம் இடித்துப் பதக்கு (10.7 லிட்டர்) தண்ணீர் விட்டு எட்டொன்றாய்க் காய்ச்சிக் கொள்ளவும். இதில்

பசுவின் நெய் - 1 படி (2.65 லிட்டர்)
புளியாரைச்சாறு- 1 படி (2.65 லிட்டர்)

இவற்றைச் சேர்த்து, எருமைத்தயிரின் வடிநீரை ஒருபடி (2.65 லிட்டர்) விட்டு,

நற்சீரகம்
குரோசானி ஓமம்
வெட்பாலையரிசி
அதிமதுரம்
கோட்டம்
அதிவிடையம்
இலவங்கம்
} வகைக்கு 1 பலம் (35 கிராம்)

இவற்றையும் சேர்த்து மெழுகு பதத்தில் வடித்துக் கொள்ளவும்.

திரும் நோய்கள்- கிராணி, அரோசகம், மயக்கம், தியக்கம், சீதக்கடுப்பு, இரத்தக்கடுப்பு

## மருந்தீடு, வறட்சி இருமலுக்கு நெய்

அதிமதுரம் - 3 கழஞ்சு (13.2 கிராம்)
வல்லாரையிலை- (அரைத்தது) எலுமிச்சங்காயளவு
சாரணைவேர் - (அரைத்தது) ½ எலுமிச்சங்காயளவு
சாரணைத்தண்டு
சாரணை இலை - சம அளவு
சங்கிலை
புங்கிலை

இவற்றை எல்லாம் தண்ணீர் இருநாழியில் (2.6 லிட்டர்) போட்டு, நாழியாகக் (1.3 லிட்டர்) காய்ச்சி நெய் உழக்கு (1.3 லிட்டர்) விட்டுப் பதமாக வடித்து எடுத்துக் கொள்ளவும்.

காலம் - 15 நாட்கள்
பத்தியம் - கைப்பு, புளிப்பு
தீரும் நோய் - வறட்சி இருமல்

## மூத்திரக்கிரீச்சம், நீர்க்கட்டுக்கு மருந்து

வெண்காரம், சவுக்காரம், சீனக்காரம், இந்துப்பு, பனம்பூக்கதிர், வாழைப்பூ, கத்தக்காம்பு, நாயுருவிவிதை, முற்றினகதிர் இவற்றையெல்லாம் சம அளவெடுத்து சாம்பலாக்கிக் கொள்ளவும்.

அனுபானம் - தேன்
தீரும் நோய்கள்- மூத்திரக்கிரிச்சம், துர்மாங்கிஷம், நீர்க்கடுப்பு

## வாய் கிரந்தி, பல் கிரந்தி, உள் ரோகத்திற்கு மருந்து

அதிமதுரம்,
மாசிக்காய்,
ஏலம்,
நற்சீரகம்,
அசமதாகம்,
கருஞ்சீரகம்,
இலவங்கப்பட்டை,
பருத்திக்காய் பிஞ்சு,
மாதுளம் பிஞ்சு,
வசம்பு சத்து

இவற்றையெல்லாம் சமஅளவு சேர்த்து ஈரவெங்காயம், தண்ணீர் விட்டு அரைத்துப் பசுவின் நெய்யில் கலந்து மெழுகுப் பதத்தில் வடித்துக் கொள்ளவும்.

பத்தியம் - அகத்தியிலைச் சாறுவிட்டுச் சோறு உண்ணவும்.
பசுவின்பால் சேர்க்கவும்.
தீரும் நோய்கள் - வாய்கிரந்தி, பல் கிரந்தி, உள்ரோகம்.

## வாய் நோவுக்கு மருந்து

செஞ்சந்தனம், கருடப்பச்சை, நற்சீரகம், திப்பிலி, கிராம்பு, ஈரஉள்ளி, அசமதாகம், அதிமதுரம், கடுக்காய், ஏலம், மாசிக்காய், கருவாய்ப்பட்டை, கூகைநீறு, பீநாறி மரம், நறுநெய் - 1 உழக்கு (336 மி.லிட்டர்) இவற்றையெல்லாம் போட்டு மெழுகுப் பதத்தில் வடித்து இறக்கிக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| காலம் | - | 3 நாட்கள் (காலை, மாலை) பல்லிலும், உதட்டிலும் இம்மருந்தைத் தேய்க்கவும். |

## வயிற்றுக் கொதிப்புக்கு மருந்து

**கடுப்பொடு இரத்தம் சீதம் கலந்துதான் கழிந்தி ருக்கும்**
**மடுக்கும் பானம் கீழ்வயிறு யதுதா னுடனே சலம்கடுக்கும்**
**நடுக்கும் சுழற்றி தலைகனக்கும் நயனம் தானும் மஞ்சளித்துக்**
**கெடுக்கு மசனம் வாந்தி கிரகமுடலில் கொதிப்பென் றுரைப்பார்களே.**

**முத்தக் காசு மலைதாங்கி முதிரகம் துத்தி நிலப்பனைவேர்**
**கைத்தக் காசு கட்டிநெல்லி கருங்குந் திரிகருஞ் சீரகமும்**
**குத்த மிகுந்த சாதிக்காய் துலங்க மிலவன் பிசின்விடையம்**
**வைத்தே எரித்து நெய்கொள்ள வயிற்றில் கொதிப்பு மாய்ந்திடுமே.**

(பொருள்) இரத்தம், சீதம் கலந்து கடுப்புடன் வயிறு கழியும். ஆசனவாய், அடிவயிறு வலித்துச் சிறுநீர் கடுத்து இறங்கும். தலை சுழற்றல், கனம், கண் மஞ்சளித்தல், உணவு வாந்தியாதல் இக்குணங்கள் கண்டால் இதனை வயிற்றுக் கொதிப்பு என்பர்.

## இதற்கு மருந்து

| | | |
|---|---|---|
| முத்தக்காசு | - | சம அளவு |
| வட்டத்திருப்பி | - | ” |
| முதிரகம் | - | ” |
| துத்தி | - | ” |
| நிலப்பனைவேர் | - | ” |
| காசுக்கட்டி | - | ” |
| நெல்லி | - | ” |
| கருங்குங்கிலியம் | - | ” |
| கருஞ்சீரகம் | - | ” |
| சாதிக்காய் | - | ” |
| இலவம்பிசின் | - | ” |
| அதிவிடையம் | - | ” |

சேர்த்து அதற்கு நேரெடை நெய் சேர்த்துக் காய்ச்சி வடித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

தீரும் நோய் - வயிற்றுக் கொதிப்பு

## விடமாந்தத்துக்கு நெய்

காயப் பொடியும் வசம்புள்ளி களிந்த தூதுளம் பழஞ்சுக்கு
ஏனப் படாத திப்பிலியும் மிசைந்த மிளகோர் வகைகழஞ்சாக
ஈனப் படாத சங்கிலையும் இசைந்த பொடுதலை
வேலிப்பருத்தியிலை
சேனத் திலங்கும் நிம்பயிலை சேர ஒருபிடி யாய்க் கொள்ளே.

கொண்ட இந்த இலைச்சாற்றில் குணமா உரி நெய்விட்டு
பண்டு சொன்ன மருந்தையெல்லாம் பதமாய் நெய்யில்
வெந்திறக்கி
கண்ட முச்சி தனில் தடவிக் காசள உள்ளே கொடுப்பீராய்
வண்டு செறியுங் குழல்மடவீர் விஷமாந்த மகலும் கண்டீரே

(பொருள்) இதில் விடமாந்தத்திற்கு நெய் கூறப்படுகிறது.

| | |
|---|---|
| காயப்பொடி<br>வசம்பு<br>பூண்டு<br>தூதுளம்பழம்<br>சுக்கு<br>திப்பிலி<br>மிளகு | வகைக்கு 1 கழஞ்சு (4.4 கிராம்) |

இவற்றைப் பொடி செய்து இத்துடன்

| | |
|---|---|
| சங்கிலை<br>பொடுதலை<br>வேலிப்பருத்திஇலை<br>வேப்பிலை | வகைக்கு 1 பிடி சாறு |

இவைகளைக் கலந்து, இதற்குச் சமன் நெய் சேர்த்து, நெய் பதத்தில் இறக்கி, வடிகட்டி வைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு - காசளவு உள்ளுக்குக் கொடுத்து கழுத்திலும், உச்சியிலும் தடவ வேண்டும்.

தீரும் நோய் - விடமாந்தம்

## விரேசனத்திற்கு நெய்

| | | |
|---|---|---|
| நேர்வாளபருப்பு | - | 10 பங்கு |
| வெள்ளுள்ளி | - | 2 ” |

| | | |
|---|---|---|
| சுக்கு | - | 2 ” |
| மிளகு | - | 10 ” |
| சாரணைவேரின் சாறு | - | 1 உழக்கு (336 மி.லிட்.) |

இவற்றை அரைத்து, 1 உழக்கு (336 மி.லிட்டர்) பசுவின் நெய் விட்டு மெழுகு பதமாகக் காய்ச்சி வடிக்கவும்.

அளவு - ஒரு காசெடை (ஒரு பைசா அளவு)
தீரும் நோய்கள் - மலக்கட்டு, நீர்க்கட்டு

## பசை

### பிளவைக்குப் பசை

வெள்ளைக் குங்கிலியம் - 1 பலம் (35 கிராம்) நல்லெண்ணெய் விட்டு நன்றாக மைபோல் அரைத்து, தண்ணீர் விட்டுப் பத்துமுறை கழுவவும். பிறகு, தண்ணீரை வடித்துவிட்டு,

| | | |
|---|---|---|
| இரசம் | - | 1 வராகன் (3.5 கிராம்) |
| துரிசு | - | ” ” |
| சவ்வீரம் | - | ” ” |

சேர்த்து அரைத்து வெள்ளைத்துணியில் பூசவும். இத்துணியைப் பிளவைமீது போடவும்.

தீரும் நோய் - பிளவை

### பிளவைக்குப் பசை (வேறு)

துரிசு - 1 வராகன் (3.5 கிராம்)

சட்டியில் போட்டு வெளுக்க வறுத்துக் கடைந்து ஒரு பலம் (35 கிராம்) மெழுகு போட்டு உருகிய பின்னர் நல்லெண்ணெய் சிறிதும் கருப்பு வெற்றிலைச் சாறும் விட்டுத் தண்ணீரில் ஊற்றி மிதக்கும் பொருளை வழித்து வைத்துக் கொண்டு, வெள்ளைத் துணியில் தடவவும்.

தீரும் நோய் - பிளவை

**சாதிலிங்கப்பசை**

| | | |
|---|---|---|
| சாதிலிங்கம் | - | 1 வராகன் (3.5 கிராம்) |
| மெழுகு | - | 1 பலம் (3.5 " ) |

சட்டியில் போட்டு உருகி வரும்போது இலிங்கம் சிறிதளவு சேர்க்கவும். பின்னர், நல்லெண்ணெய் சிறிதளவு விட்டுத் தண்ணீரில் ஊற்றி மேலே உள்ளதை வழித்து வெள்ளைச் சீலையில் தடவவும்.

தீரும் நோய் - எந்தவிதப் புண்களும்

## பற்பம்

### இரச பற்பம்

| | | |
|---|---|---|
| இரசம் | - | 1 பங்கு |
| நவச்சாரம் | - | ½ " |

இவற்றைப் பனைமட்டைச் சாறுவிட்டு ஒருநாழிகை (24 நிமிடம்) அரைத்து, இரட்டை ஓலை நடுவே வைத்து மற்றொரு இரட்டை ஓலை கொண்டு மூடவும். இதற்குச் சீலைமண் செய்து ஒரு வரட்டி வைத்து லகுபுடம் போடவும்.

| | | |
|---|---|---|
| பத்தியம் | - | உப்பு தவிரவும் |
| தீரும்நோய் | - | கிரந்தி, சூலை வாய்வு |

### இரச பற்பம் (வேறு)

சிற்றாமணக்கம் வேர், பட்டை
கொடிவேலி வேர், பட்டை
ஊமத்தம் வேர், பட்டை

இவற்றைக் கொண்டு வந்து விளாங்காயளவு அரைத்துக் கொள்ளவும். ஒரே அளவு வாயுள்ள இரண்டு சட்டிகளை எடுத்துக் கொள்ளவும். ஒரு சட்டியில் சிறிது உப்புப் போட்டு அதன்மேல் அரைத்த விழுதை ரொட்டிபோல் தட்டி வைக்கவும். அதில் பல குழிகளை உண்டாக்கி அவற்றில் துளிதுளியாக இரசத்தை விடவும். பின்னர் அதன்மேல் செங்கல் தூளைத் தூவி மறுசட்டி கொண்டு மூடவும். சட்டிகளின் வாய் விளிம்புகளில் புற்றுக் களிமண்ணைத் தடவவும். ஏழுசீலைமண் செய்து, நிலத்தில் குழிசெய்து, 60 நாழிகை (ஒரு நாள்) சீரான

நெருப்பாக எரியவிடவேண்டும். கிடைக்கும் பற்பத்தை எடுத்து வைத்துக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | பணவெடை (448 மி.கிராம்) |
| அனுபானம் | - | சின்னியிலை அல்லது தேன் |
| காலம் | - | காலை, மாலை |
| பத்தியம் | - | பால் குடிக்கவும் (பால் குடிக்கா விட்டால் இரத்தக் கழிச்சல் உண்டாகும்) |

மருந்துண்டபின் பால் குடிக்காமல் இரத்தக் கழிச்சல் ஏற்பட்டால் நான்கு கொட்டைப் பாக்குகளைச் சீவி, சீலையில் முடிந்து கஞ்சியில் போட்டுக் காய்ச்சிக் குடிக்கவும்.

| | | |
|---|---|---|
| காலம் | - | எட்டு நாட்கள் |
| பத்தியம் | - | கத்தரிக்காய், பாகற்காய், பன்றி ஆகாது. தயிர், பால், நெய் இவற்றைச் சேர்க்கவும். கீரையைச் சேர்க்கவும். |
| தீரும் நோய்கள் | - | சூலைக்கட்டு, வாதம், வீக்கம், கிரந்தி, பக்கப்பிளவை, பவுத்திரம் விப்புருதி, கவிசை, பதினெட்டு குன்மம், பெருவியாதி |

## இரச பற்பம் (வேறு)

இரசம் 1 பலம் 35 கிராம்

எடுத்துக் கொள்ளவும். குமரிச்சாறு, செங்கீரைச்சாறு, எருக்கம்பால் இவற்றில் ஒவ்வொருநாள் அரைக்கவும். குகையிலிட்டு ஆட்டெருவில் ஆறு சாமம் (18 மணி நேரம்) புடம் இடவும். ஆறவிட்டுப் பற்பத்தை எடுத்துக் கொள்ளவும். இந்தப் பற்பம் 1 வராகன் (3.5 கிராம்) எடுத்துக்கொண்டு,

| | | |
|---|---|---|
| சுக்கு | - | 4 வராகன் (14 கிராம்) |
| மிளகு | - | ” ” |
| திப்பிலி | - | ” ” |
| சித்திரமூலம் | - | ” ” |

இவற்றைப் பொடி செய்து சேர்த்து, நிம்பக்கனியில் இடவும். இவ்வாறு 21 நாட்களுக்கு இடவேண்டும்.

| | | |
|---|---|---|
| பத்தியம் | - | பால், முருங்கையிலைச்சாறு, துவரை, மிளகுநீர் இவற்றைச் சேர்க்கவும். |

தீரும் நோய்கள்- க்ஷயம், கடிகை (கடிகைக்குத் தேனீலிடவும்)

## கந்தக பற்பம்

| | | |
|---|---|---|
| கந்தகம் | - | 1 கழஞ்சு (4.4 கிராம்) |
| இரசம் | - | ” ” |
| பொரிகாரம் | - | ” ” |

கந்தகத்தை முதலில் பொடி செய்து, அதில் இரசத்தை விட்டு, காரத்தைப் பொரித்து அதனுடன் சேர்க்கவும். பின்னர், நான்கு நாழிகை (ஒருமணிநேரம் 36 நிமிடம்) அரைத்துக் கருப்புநிறம் வரும்போது எடுத்துவைத்துக் கொள்ள வேண்டும்.

| அனுபானம் | | தீரும் நோய் |
|---|---|---|
| 1. சுக்கு நீரிலிட அல்லது மாவிலையில் இட | - | வயிற்றுவலி தீரும். |
| 2. நொச்சிச் சாற்றிலிட | - | சன்னி நோய் தீரும் |
| 3. வெந்நீரிலிட | - | செரியாமை நீங்கும் |
| 4. இளநீரிலிட அல்லது நீராகாரத்திலிட | - | உஷ்ணம் நீங்கும் |
| 5. இஞ்சிச்சாற்றிலிட | - | உதிரமாரி நீங்கும் |

## கர்ப்ப வாய்விற்கு மருந்து

| | | |
|---|---|---|
| சுக்கு | - | 2 பலம் (70 கிராம்) |
| மிளகு | - | ” ” |
| திப்பிலி | - | ” ” |
| நற்சீரகம் | - | ” ” |
| கருஞ்சீரகம் | - | ” ” |
| அதிமதுரம் | - | ” ” |
| அசமதாகம் | - | ” ” |
| சாதிக்காய் | - | ” ” |
| மாசிக்காய் | - | ” ” |
| ஏலம் | - | ” ” |
| கடுக்காய் | - | ” ” |
| தான்றிக்காய் | - | ” ” |
| சதகுப்பை | - | ” ” |
| கொத்துமல்லி | - | ” ” |
| அப்பிரகம் | - | ” ” |

| | | | |
|---|---|---|---|
| வெள்வெங்காயம் | - | ” | ” |
| பெருங்காயம் | - | ” | ” |
| திப்பிலி மூலம் | - | ” | ” |
| அக்கிராகாரம் | - | ” | ” |
| வெளுத்தபிசின் | - | ” | ” |
| அதிவிடையம் | - | ” | ” |
| கோட்டம் | - | ” | ” |
| வசம்பு | - | ” | ” |
| வாளுவை | - | ” | ” |
| கடுகுரோகணி | - | ” | ” |
| அரத்தை | - | ” | ” |
| கிராம்பு | - | ” | ” |
| வசுவாசி | - | ” | ” |
| காந்தம் | - | ” | ” |
| இந்துப்பு | - | ” | ” |
| சீனாக்காரம் | - | ” | ” |
| பொரிகாரம் | - | ” | ” |
| நவச்சாரம் | - | ” | ” |
| சவுக்காரம் | - | ” | ” |
| மரமஞ்சள் | - | ” | ” |
| ஒதியம்பட்டை | - | ” | ” |

இவற்றோடு, தலைவடி சாராயம் உரி (672 மி.லிட்டர்) அளவு விட்டு இந்த மருந்துகளைப் புதுச்சட்டியில் போடவும். பின்னர் மறுசட்டி கொண்டு மூடி, எரியவிட்டு வற்றியவுடன் இறக்கி, இடித்துத் தூளாகச் செய்து சிமிழில் அடைத்துக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | வெருகடி (ஒரு சிட்டிகையளவு) |
| அனுபானம் | - | சுக்குக் குடிநீர் |
| தீரும் நோய்கள்- | | வாய்வு, கர்ப்ப விப்புருதி |

## காந்த பற்பம்

தூல காந்த வேணுமட்டும் தோணக் கொண்டு தானிடித்து
மேவு மஞ்சள் தான்பிசைந்து மிகுத்த உலைமூடி யிதில்தப்பி
ஏழுமண்ணில் சீலைமண் கொள்ளி ஆன்ற புடமிட்டுப் பற்பமாம்
தாவிச் சிமிழில் தானடைத்துத் தருவோம் வியாதிக் கனுபானம்.

உளுந்தளவு சர்க்கரையி லுண்ண மந்தாகினி குட்டமுடன்
வளர்ந்த சேத்தும வாதமுடன் மன்னுங் கிருமி சுரப்பாண்டு
குளிர்ந்த பிரமிய நீரிழிவு கூறும் வியாதி இவையெல்லாம்
தளர்ந்து குலைந்து தானோடும் தங்குங் கற்பம் நீலவண்ணம்

(பொருள்) இதில் காந்தபற்ப முறை சொல்லப்படுகிறது. காந்தத் தூள் வேண்டுமட்டும் எடுத்துக்கொண்டு இடித்து மஞ்சள் தூளுடன் கலந்து பிசைந்து சட்டியில் வைத்து மேலே மூடி இரண்டு சட்டிக்கும் இடைப்பட்ட இடத்தை 7 சீலைமண் கொண்டு சுற்றிக் காயவைத்து புடமிட்டெடுக்கப் பற்பமாகும். இதனை ஆறவிட்டு எடுத்துச் சிமிழில் வைத்துக் கொள்ளவேண்டும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | உளுந்தளவு (65 மி.கிராம்) |
| அனுபானம் | - | சர்க்கரை |
| தீரும் நோய்கள்- | | மந்தாகினி, குட்டம், சேத்தும வாதம், கிருமி, சுரப்பாண்டு, பிரமியம், நீரிழிவு |

## கிரிச்சம், நீரடைப்புக்கு மருந்து

| | | | |
|---|---|---|---|
| துத்தம் | - | ¼ பலம் (8.75 கிராம்) | |
| எவச்சாரம் | - | ,, | ,, |
| காந்தம் | - | ,, | ,, |
| சாதிலிங்கம் | - | ,, | ,, |
| பச்சைக்கற்பூரம்- | | ,, | ,, |
| சீனக்காரம் | - | ,, | ,, |
| கந்தகம் | - | ,, | ,, |
| சாத்திரவேதி | - | ,, | ,, |
| வெண்காரம் | - | ,, | ,, |
| இந்துப்பு | - | ,, | ,, |

இவையனைத்தையும் செப்பு நெருஞ்சிச் சாற்றில் ஒரு சாமம் அரைத்து நிழலில் அரைத்துப் பொடி செய்து கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | ½ காசெடை (½ பைசா அளவு) |
| 1. அனுபானம் | - | தேன் |
| தீரும் நோய்கள்- | | நீர்க்கட்டு, கடுப்பு, எரிப்பு, மூத்திரக் கிரிச்சம், சலக் கண்டமாலை, சலமடைப்பு |

2. அனுபானம் - இளநீர்
தீரும் நோய் - மகோதரம்

## குடல் வாதத்திற்குப் பற்பம்

இரதம்
காந்தம்
கந்தகம்
வெண்காரம்
துத்தம்

இவற்றுக்குச் சம அளவு பலகறை சேர்த்து எலுமிச்சம் சாறுவிட்டு ஒருநாள் அரைத்துக் குகையில் இடவும். பின்னர்க் குகையை மூடிச் சிலைமண் செய்து புடம்போட்டு எடுத்துக் கொள்ளவேண்டும்.

அனுபானம் - தேன் அல்லது கருப்பட்டி
தீரும் நோய்கள் - குடல்வாதம், மகோதரம், பொருமல்

## குமரி பற்பம்

**அரப்பொடி கழஞ்சு ஐந்தும் அவ்வெடை காந்தம் கூட்டி**
**மருவிய கெந்த மஞ்சு மருவுதர மிரண்டு கூட்டிலிங்கம்**
**கருவேற் குமரிச் சாற்றி லகன்றதாய் அரைத்துத் தட்டி**
**வெருவற சட்டி யிட்டு எரிந்திட நாலு சாமம்.**

**வெந்தபின் நாலு சாமம் விரைவுடன் மருந்து தன்னை**
**மின்ன பணவெடை எடுத்து முந்தவே ஓமம் சுக்கு**
**முந்து முழுதிப்பிலி இந்துப்பு உள்ளி கடுகு ரோகணி**
**அந்தமுன் மருந்தி னோடே அடவுடன் கூட்டிக் கொள்ளே.**

**கொள்ளவே குமரிபற் பத்தைக் குலவு பணவெடை யளவு**
**உள்ளே நின்ற வயிற்றுவலி திரத்தெ ரியுமெரி குன்மம்**
**மின்னைப் பீலிகைப் பெருவயறு பெரிய இருமல் பாண்டுருவு**
**முள்ளக் கிராணி இத்தனையு முடைந்து கழல்போன் றதுவாமே**

(பொருள்) இதில் குமரிபற்பத்தின் செய்முறை கூறப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அரப்பொடி | - | 5 கழஞ்சு (22 கிராம்) |
| காந்தம் | - | ” ” |
| கந்தகம் | - | ” ” |
| இரசம் | - | 2 கழஞ்சு (8.8 கிராம்) |
| இலிங்கம் | - | 2 கழஞ்சு (8.8 கிராம்) |

இவற்றை ஒன்று கலந்து கற்றாழைச் சாற்றில் அரைத்துச் சட்டியிலிட்டு 4 சாமம் (12 மணி நேரம்) எரித்திடப் பற்பமாகும். இதனை 4 சாமம் (12 மணி நேரம்) ஆறவிட்டு எடுத்துக் கொள்ள வேண்டும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | பணவெடை (488 மி.கிராம்) |
| அனுபானம் | - | ஓமம், சுக்கு, திப்பிலி, இந்துப்பு, உள்ளி, கடுகுரோகணி ஆகியவற்றின் சூரணம் |
| தீரும் நோய்கள் | - | வயிற்றுவலி, எரிகுன்மம், பீலிகைப் பெருவயிறு, இருமல், பாண்டு, கிராணி |

## பாட வேறுபாடு

அரப்பொடி யைங்க ழஞ்சு அவ்வெடை காந்தங் கூட்டி
நருவறப் பொடிசெய் தொக்க நன்றதாய்த் தட்டி யிட்டு
மருவிய கெந்தக மஞ்சு மருவுசூத இரண்டுங் கட்டி
வெருவிடச் சட்டியிட்டு வெந்திட நாலு சாமம்.

வெந்தவ் மருந்து தன்னில் மென்பண வெடையெ டுத்து
வந்தபின் மிளகிந் துப்பு மருவுதிப் பிலியே சுக்கு
முந்திய ஓமம்நற் சீரகம் முதுதிரி கடுகு கூட்டி
வெந்தவ மருந்தி னோடே ஆடையுள் கட்டிக் கொள்ளே.

## குமரி பற்பம் (வேறு)

இரசம்
கந்தகம்
அரப்பொடி
சாதிலிங்கம்
பெருங்காயம்

இவற்றை எல்லாம் சமபாகம் எடுத்துக் கற்றாழம் சோறுவிட்டு அரைத்து, தகடுகளாகத் தட்டிக் கொள்ளவும். பின்னர்,

வெயிலில் உலர்த்திக் கலசத்தில் வைத்து உலர்த்திப் பொடி செய்து இப்படி இரண்டுதரம் முன்போல் அரைத்து மறுபடித் தூளாகச் செய்து கொள்ளவேண்டும்.

அளவு - பணவெடை (488 மி.கிராம்)

1. அனுபானம் - தேன்
   தீரும் நோய்கள்- சத்தி குன்மம், பக்க சூலை, குண்டல வாய்வு, எரிகுன்மம், வலிகுன்மம், கர்ப்ப சூலை, யோனி சூலை

2. அனுபானம் - கொடிவேலி வேரின் பொடி
   தீரும் நோய் - பிரமியம்

## குரு பற்பம்

| | | |
|---|---|---|
| இரசம் | - | 2½ பணவெடை (1.22 கிராம்) |
| தாளகம் | - | 1¼ ” (610 ” ) |

இவற்றை அண்டத்தில் வைத்து மூடி 3 சீலைமண் செய்து மூன்று முட்டைகளுக்கும் ஒருசேரச் சீலைமண் செய்யவும். பின் கனபுடம் இடவும். மூன்று முட்டைகளும் நீறும். இவற்றை ஒரு முட்டையில் வைத்து,

| | | |
|---|---|---|
| இரசம் | - | 2½ பணவெடை (1.22 கிராம்) |
| தாளகம் | - | 1¼ ” (610 மி. ” ) |

இவற்றை அதில் நிறுத்துப்போட்டு, மூன்று சீலை மண்செய்து கனபுடமாய்ப் போட்டு எடுக்கவும். மீண்டும் இதையெல்லாம் ஒரு முட்டையில் அடைத்து மூன்று சீலைமண் செய்து கனபுடமாய்க் காட்டெருவில் புடம்போட்டு எடுக்கவும்

அளவு - ½ பணவெடை (244 மி.கிராம்)
தீரும் நோய்கள்- சுவாசகாசம், சயம், சுரம்

## ஞானி பற்பம்

| | | |
|---|---|---|
| அபின் | - | 1 கழஞ்சு (4.4 கிராம்) |
| குரோசானி ஓமம் | - | ” ” |
| அசமதாகம் | - | ” ” |
| சாதிக்காய் | - | ” ” |

இவற்றை ஊமத்தை இலையில் பொதித்துப் பச்சைத் தென்னோலை சுற்றித் தணலில் புடமிட்டு நன்றாகப் பொடியாக்கிக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| அனுபானம் | - | எருமைத்தயிர் |
| தீரும் நோய் | - | அதிசாரம் |

## தாளக பற்பம்

தாளகம்
கற்பூர சிலாசத்து

இவற்றைச் சமஅளவில் எடுத்துக் கொள்ளவும். சுண்ணாம்பு நீர் தெளிவுவிட்டு, ஒரு நாழிகை (24 நிமிடம்) அரைத்து வில்லைகளாகச் செய்து கொள்ளவும். வில்லைகளை வெள்ளைத் துணியில் வைத்துச் சுற்றி ஒருநாழிகை (24 நிமிடம்) வைத்திருந்த பின்னர், சுண்ணாம்புச் சீலையில் சுற்றிக் காய்ந்த பிறகு மூன்று வரட்டியில் புடம் போடவும்.

தீரும் வியாதிகள் - சீதசுரம், சுரம், சயம், சுவாசகாசம்

## தோடத்திற்குக் கௌரி பற்பம்

பலகரையைக் காடியில் கழுவிக் கொள்ளவும். தாளகத்தைப் பொடி செய்து பலகரைக்குள் அடைக்கவும். பின்னர், விராட்டி அடுக்கிப் பலகறை வைத்து விராட்டி கொண்டு மூடவும். குக்குடப் புடமாக வைத்து எடுத்து அரைத்துக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | சிறிதளவு |
| அனுபானம் | - | கண்டூரம், அதிமதுரம், அக்கிராகாரம், திப்பிலி, இலவங்கம், தும்பராட்டகம், முத்து, பவழம், வெண்காரம் பொரித்தது, உத்திராட்சம், கலைக்கொம்பு தேனில் உரைத்தது. |
| தீரும் நோய்கள்- | | சிலேத்துமம், தோடம் |

## நவச்சார பற்பம்

நவச்சாரத்தை எருக்கம்பால் ஏழுதரம் துவைத்துக் காய வைத்துக் கல்லுப்பும் நாய்வேளையும் சமனாய் அரைத்துக்

கவசம் கட்டிக் கொள்ளவும். ஓட்டில் வைத்து வறுக்கவும். இப்படி மூன்றுதரம் வறுத்துப் பிறகு பொட்டிலுப்பு அமுரியில் காய்ச்சி சுண்டிய பிறகு எடுத்துக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| நவச்சாரம் | - | 2 வராகன் (7 கிராம்) |
| வெடியுப்பு | - | 5 " (17.5 ") |

இவற்றை உமிழ்நீரில் அரைத்துக் கவசம் கட்டிக் காடைப்புடம் இடவும்.

தீரும் நோய் - குன்மம், அக்கினி மாந்தம்

## நாகபற்பம்

நாகத்தைப் புங்கெண்ணையில் மூன்றுதரம் போட்டுச் சுத்திசெய்து கொள்ள வேண்டும். ஏழு நாட்களுக்கு வாழைக் கிழங்குத் தண்ணீரில் ஊறவைத்து எடுத்துக் கரண்டியில் உருக்கிக் கொள்ளவும். உருகிய நிலையில் நுணாஇலைச் சாறு விட்டு வறுக்கவும். இப்படி ஐந்து முறை விட்டு வறுத்து எடுத்துக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | பணவெடை (488 மி. கிராம்) |
| அனுபானம் | - | வெண்ணெய் |
| பத்தியம் | - | கைப்பு, புளிப்பு தவிரவும் |
| விளைவு | - | தீபனம் உண்டாகும் |

## நீரிழிவுக்கு மருந்து

| | | |
|---|---|---|
| இரசம் | - | 1 பலம் |
| காந்தம் | - | 1 " |

இவற்றைப் பொடி செய்து, சீலையில் கிழியாகக் கட்டிக் கத்தரித்து, செங்கல் குழி பண்ணிக் கொள்ளவும். ஒரு பலம் (35 கிராம்) மிளகை அரைத்துக் கொள்ளவும். அதேபோல ஒரு பலம் (35 கிராம்) வெற்றிலையை அரைத்து விழுதை எடுத்துக் கொள்ளவும். செங்கல் குழியில் பாதி மிளகு விழுது பரப்பி, அதன் மேல் வெற்றிலை விழுது பரப்பி நடுவே கிழியை வைத்து அதன் மேல் மிளகு விழுது பரப்பிக் கொள்ளவும். அதன்மேல் வெற்றிலை விழுது பரப்பி ஓடு கொண்டு மூடிச் சீலைமண் செய்து பூமியில் நான்குவிரல் தாழ்வும் குழியாகச் செய்து செங்கல்லைப் பூமிக்குச் சரியாய்ப் புதைத்து, மேலே 50

வரட்டியடுக்கிக் கொள்ளவும். பின்னர்த் தீயிட்டுத் தானாக ஆறவிட்டு எடுத்துப் பொடி செய்து கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | 1 பணவெடை (448 மி.கிராம்) |
| அனுபானம் | - | தேன் |
| காலம் | - | 21 நாட்கள் (காலை, மாலை) |
| பத்தியம் | - | பால், நெய், ஊர்க்குருவிச்சாறு, ஓலைவாளைக் கருவாடு, உப்பு, புளிப்பு, சம்போகம் தவிரவும். |

## பல்லிற்குப் பற்பம்

காரீயம் 1 வராகன் (3.5 கிராம்) எடுத்துத் தகடாகத் தட்டிக் கொள்ளவும். அதை உருக்குவாயில் வெள்ளெருக்கம் வேர் வைத்து மத்திக்கவும். பற்பமான பிறகு எடுத்துக் கொள்ளவும்.

பல்லில் தீற்றவும்.
தீரும் நோய் - பல்வலி

## வாய்வு புரண்டேறல், வலி செருகலிற்குப் பற்பம்

வெள்ளருகு
பிரண்டை
சதுரக்கள்ளியின் தோல்
புளியம்புறணி
பனம்பூக்கதிர்
மருதம்பட்டை
} சம அளவு

இவற்றின் எடைக்கு சம அளவு கல்லுப்புச் சேர்த்துக் குடுவையில் கீழ்மேலிட்டு மண்செய்து புடமிடவும். பற்பத்தை எடுத்து வைத்துக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | 1 வெருகடி (1 சிட்டிகையளவு) |
| தீரும் நோய் | - | வாய்வு புரண்டேறல், வலி செருகல். |

## கிரந்திக்கு மருந்து

பச்சைத் துரிசு
கடுஞ்சுண்ணாம்பு

இவற்றை நல்லெண்ணெய், எலுமிச்சம்பழச்சாறு விட்டு அரைத்துச் சீலையில் தடவிப் போடவும்.
தீரும் நோய் - கிரந்தி

# பற்று

## கடி வீக்கம், விப்புருதி வீக்கம் இவற்றிற்குப் பற்று

| | | |
|---|---|---|
| வெள்ளைப் பாஷாணம் | - | ½ பங்கு |
| பெருங்காயம் | - | ½ பங்கு |
| சீனாக்காரம் | - | 3 பங்கு |

இவற்றைப் பொடி செய்து எருக்கம்பாலில் குழப்பி வீக்கத்தில் பூச குணமாகும்.

## கண்ணில் உட்டிணத்திற்கு மருந்து

செஞ்சந்தனம்
சாத்திரவேதி
தேற்றான்விரை

இவற்றை உரைத்து வெண்ணெயில் குழைத்துக் கண்ணில் வளையமாகப் பூசவும்.

## நீரடைப்புக்குப் பற்று

எலிப்புழுக்கை, கல்லுப்பு இரண்டையும் நெகிழ அரைத்து அடிவயிற்றில் பற்றுப்போட நீர்விடும்.

## பவுத்திரத்திற்குப் பற்று

| | | |
|---|---|---|
| கோடகசாலை | - | 2 படி (5.3 லிட்டர்) |
| விளக்கெண்ணெய் | - | 1 படி (2.65 லிட்டர்) |
| அதிமதுரம் | - | 8 வராகன் (28 கிராம்) |

இவற்றை எடுத்துக்கொண்டு, கல்லிச்சிப்பால் பஞ்சில் நனைத்து இரணத்தில் போடவும். அதன்மேல் அந்த எண்ணெய் தடவிய துணியைப் போடவும்.

## பெருவியாதிக்குப் பற்று

வெள்ளைப் பாடாணம் 1 சேர் (280 கிராம்) பொடி செய்து, நல்லெண்ணெய் ஒரு சேரில் (280 கிராம்) போட்டுக் குழைத்து வைத்துக் கொள்ளவும். காலையில் தயிர் சாதமும்

வெங்காயமும் சாப்பிட்டபிறகு, அந்த எண்ணெயில் கரியை அரைத்துப் போட்டுக் குழப்பிக் கொள்ளவும். இதனை உடல் முழுதும் பூசி மாலையில் இலுப்பம் புண்ணாக்கைத் தேய்த்துக் குளிக்கவும். இப்படி மூன்று நாட்களுக்குப் போட்டால் மேல் தடிப்புகள் மாறிப் போகும்.

## போத்திக் கடுவகத்திற்குப் பற்று

ஈயம் உருக்கி இரசத்தைவிட்டு இரண்டையும் பொடி செய்து நெல்லிக்காய், கந்தகம் கூட்டி நல்லெண்ணெயில் கலந்து சூரியபுடமாக வைத்து மூன்றுநாள் தடவவும்.
தீரும் நோய் - கடி விகாரம்

## மூச்சுத் தாங்கலுக்குப் பற்று (வேறு)

இலைக்கள்ளிச்சாறு
வெள்வெங்காயம்
கடுகு
பெருங்காயம்

இவற்றை யரைத்துக் கொதிக்க வைத்துப் பற்றுப்போட நிற்கும்.

## மூச்சுத் தாங்கலுக்குப் பற்று (வேறு)

கருநொச்சி வேர் நீரில் உரைத்துப் பூச மூச்சுத்தாங்கல் தீரும்.

## வாய்வு தோடத்தில் நீர்க்கட்டுக்கு மருந்து

| | | |
|---|---|---|
| எலிப்புழுக்கை | - | 2 வராகன் (7 கிராம்) |
| வௌவால் புழுக்கை | - | ” ” |
| ஆலத்திக் கற்பூரம் | - | ” ” |

இவற்றை ஈரவெங்காயச் சாற்றில் அரைத்துத் தொப்புளில் தடவ நீர்விடும்.

# புகை

## இங்குலிக உப்புப் புகை

இங்குலிகம் - 2 வராகன் (7 கிராம்)

காட்டு வாழைப் பட்டைக்குள்ளே இருக்கும் சோற்றை எடுத்து உலர்த்திப் பொடி செய்து அந்தப் பொடியையும்

இங்குலிகத்தையும் செப்புச் சட்டியில் போட்டுச் செம்பு கொண்டரைத்துச் சுங்கானில் புகைக்கவும்.

காலம் - 14 நாட்கள்
பத்தியம் - வெந்நீர், சோறு, தயிர் அதன் பிறகு துளசியிலைச்சாறு, பருத்தியிலைச்சாறு இரண்டையும் தலையிலும் உடம்பிலும் தேய்த்து, பசுவின் தயிர் ஒரு படி (2.66 லிட்டர்) கொண்டு வந்து அரைப்படி (1.3 லிட்டர்) தயிரை உடம்பிற்கும் தலைக்கும் தேய்த்து எருமைச் சாணியை உடலிலும் தலையிலும் தேய்த்து வெந்நீரில் குளிக்கவும். அதன்பிறகு நல்லெண்ணெய், விளக்கெண்ணெய், நெய் மூன்று வகையும் கூட்டி முழுகச் செய்யவும்.
தீரும் நோய் - கூறப்படவில்லை

## பல் வலி, பல் குத்து, வீக்கத்திற்குப் புகை

சடைச்சிப்பூண்டு புகையிலையில் வைத்துக் குடிக்கவும்.

## பீனிசத்துக்குப் புகை

| | | |
|---|---|---|
| வேப்பம்பிசின் | - | 4 வராகன் (14 கிராம்) |
| வெள்ளைக் குங்கிலியம் | - | 1 வராகன் (3.5 கிராம்) |
| மஞ்சள் | - | ,, ,, |
| ஓமம் | - | ,, ,, |
| சாம்பிராணி | - | ,, ,, |
| சாதிலிங்கம் | - | ,, ,, |

இவற்றை வேப்பெண்ணெய் விட்டரைத்துப் பழஞ்சீலையில் ஊட்டித் திரிதிரித்துக் கொளுத்திப் புகையை நாசியில் ஏற்றவும்.
தீரும் நோய் - பீனிசம் மாறும்

## மூலத்துக்குப் புகை

பன்றி விட்டையையும் சாம்பிராணியையும் புகை காட்டவும்.

## விக்கலுக்குப் புகை

முலைப்பாலைச் சீலையில் ஊட்டி உலர வைத்துக் குங்கிலியம் பொடியிட்டுப் பரப்பித் திரிதிரித்து

நல்லெண்ணெயில் தோய்த்து விளக்கேற்றி நாசியில் புகையிட விக்கல் தீரும்.

### விக்கலுக்குப் புகை (வேறு)

மயிலிறகு நறுக்கிச் சுங்கானில் வைத்துப் புகை குடிக்க விக்கல் தீரும்..

## மருந்து

### அமரத்துக்கு மருந்து

| | | |
|---|---|---|
| துத்தம் | - | 1 பங்கு |
| துரிசு | - | ” |
| கொள்ளு | - | ” |
| சங்கு | - | ” |
| கடுக்காய் | - | 4 ” |

பொடிசெய்து, இமையை மடித்துத் தேய்க்கவும்.
தீரும் நோய் - கண்ணிலுண்டாகும் அமரம்

### இரைப்புக்கு மருந்து

கருங்கோழி கொண்டு வந்து அதன் வாயில் ஒரு சிறங்கை (உள்ளங்கை கொள்ளும் அளவு) வெள்வெங்காயத்தை உரித்துக் கொடுத்து, நான்கைந்து முறைக்குப் பிறகு வெளியேற்றும் மலத்தைச் சிமிழில் அடைத்துக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | 1 பணவெடை (488 மி.கிராம்) |
| அனுபானம் | - | வெற்றிலை |
| தீரும் நோய் | - | இரைப்பு |

### இரைப்புக்கு மருந்து (வேறு)

கண்டங்கத்தரிப்பழம் கொண்டு வந்து கசக்கிச் சாறு பிழிந்து சிறு திப்பிலி சுட்டுப் பொடிசெய்து குழப்பிக் கொடுக்கவும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | ஒரு சேர் (280 கிராம்) |
| தீரும் நோய் | - | இரைப்பு |
| பிறவிளைவு | - | வாந்தி வரும் |

## இரைப்புக்கு மருந்து (வேறு)

அக்கிராப்பட்டை
கருஞ்சீரகம்
திப்பிலி
ஆடாதொடை இலை

ஆடாதொடை இலையைத் தண்ணீர் விட்டுச் சீலையில் வேடுகட்டிப் புட்டாகச் சுடவும். அதை எடுத்துச் சாற்றைப் பிழிந்து அக்கிராப்பட்டை, கருஞ்சீரகம், திப்பிலி இவற்றை வறுத்துப் பொடி செய்து அச்சாற்றில் விட்டுக் காய வைத்துக் கிண்டி இறக்கி வைத்துக் கொள்ளவும். பின் தேன்விட்டு இலேகியம் போல் கிண்டி வைத்துக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | பாக்களவு |
| குழந்தைகளுக்கு | - | புளியங்கொட்டையளவு |
| பத்தியம் | - | கசப்பு, புளிப்பு, கிரந்திபண்டம் விடவும் |
| தீரும் நோய் | - | இரைப்பு |

## உப்பிசத்துக்கு மருந்து

| | |
|---|---|
| தூதுவளை இலை | சம அளவு |
| கண்டங்கத்தரி இலை | |
| உத்தாமணி இலை | |
| சங்கிலை | |
| கரிசலாங்காணி இலை | |
| துளசி | |
| ஆடாதொடை இலை | |
| வறள்முள்ளி இலை | |

இவை இடித்து உப்பிட்டுச் சாறு பிழிந்து கொள்ளவும். திப்பிலி, மிளகு, வறுத்துப் பொடி செய்து வெண்காரம் பொரித்துச் சேர்க்கவும்.

| | | |
|---|---|---|
| அனுபானம் | - | தேன், கௌரி பற்பம், ஊமத்தை இலையை உலர்த்திச் சுங்கானில் வைத்துப் புகை பிடிக்கவும். |
| தீரும் நோய் | - | உப்பிசம் |

## உள்குத்துக்கு மருந்து

முசுறு முட்டை பூநாகம் முந்தி ரிகைகனி பேரீச்சு
பசித்தோர் செப்பு மிளகுள்ளி பழகும் சாந்து பூசணிப்பூ
முசித்தோர் பூணும் முருங்கைவிரை முதிய கலைகொம் பதுவும்
நசித்துக் கொடுக்க முலைப்பாலில் நன்றே தீரும் உள்குத்தே

(பொருள்) இதில் உள்குத்திற்கு மருந்து கூறப்படுகிறது.

| | |
|---|---|
| முசுறுமுட்டை | சம எடை |
| பூ நாகம் | |
| முந்திரிப்பழம் | |
| பேரீச்சம்பழம் | |
| மிளகு | |
| பூண்டு | |
| சந்தனம் | |
| பூசணிப்பூ | |
| முருங்கைவிதை | |
| மான்கொம்பு | |

அரைத்துத் தேனில் அனுபானித்துக் கொடக்க வேண்டும்.

தீரும் நோய் - உள்குத்து

## ஊதுகாமாலைக்கு மருந்து

| | |
|---|---|
| கொடிவேலிவேர் | எலுமிச்சங்காயளவு |
| கீழாநெல்லிவேர் | |
| சாரணைவேர் | |
| தூதுவளைவேர் | |
| சங்கம்வேர் | |

| | | | |
|---|---|---|---|
| சுக்கு | - | 2 பலம் | (70 கிராம்) |
| மிளகு | - | ½ " | (17.5 " ) |
| வசம்பு | - | 1 " | (35 " ) |
| கடுகு | - | ½ " | (17.5 " ) |
| திப்பிலி | - | 1 " | (35 " ) |
| சீரகம் | - | ½ " | (17.5 " ) |
| வெந்தயம் | - | ½ " | (17.5 " ) |

இவற்றையெல்லாம் கடுக்காய்க் குடிநீர் விட்டு அரைத்து

| | | |
|---|---|---|
| பெருங்காயம் | - | 1 பலம் (35 கிராம்) |
| உள்ளிப்பருப்பு | - | உழக்கு (336 மி.லிட்டர்) |
| கடுக்காய் | - | 50 |
| நல்லெண்ணெய் | - | உழக்கு (336 மி.லிட்டர்) |

விட்டு வெயிலில் வைத்து எடுக்கவும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | எலுமிச்சங்காயளவு |
| காலம் | - | 15 நாட்கள் |
| பத்தியம் | - | உப்பு, கார்ப்பு, புளிப்பு, மாங்கிஷம் |
| தீரும் நோய்கள் | - | ஊதுகாமாலை, மற்ற காமாலைகள் |

## ஊர்த்துவ வாதத்திற்கு மருந்து

வெங்காய உள்ளி தைலம் உடம்பிலே பூசிக் குமட்டி வைத்துக் காய்ச்சவும். காயபுடம் போடவும். உள்ளுக்கு

| | | |
|---|---|---|
| உள்ளித்தைலம் | - | ஆழாக்கு (168 மி.லிட்டர்) |
| திப்பிலி | | |
| பெருங்காயம் | | |
| இந்துப்பு | | |

இவற்றைச் சேர்த்துக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| அனுபானம் | - | இஞ்சிச்சாறு |
| தீரும் நோய் | - | ஊர்த்துவ வாதம் |

(நெற்றி, மார்பு, பிடரி, முதுகு, இடுப்பு, தோள், கைப்பெருவிரல், முழங்கால், கெண்டை நரம்பு, குதிநரம்பு, பெருவிரல் நரம்பு இவற்றில் பட்டிகை போடவும்)

## கண் பூவுக்கு மருந்து

கற்கண்டு கட்டியை எலுமிச்சம்பழச்சாற்றில் அரைத்து வைத்துக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| காலம் | - | 40 நாட்கள் |
| தீரும் நோய் | - | கண்பூ |

## கர்ப்பத்தின் மேல் கழிச்சல், கடுப்புக்கு மருந்து

ஒரு பலம் (35 கிராம்) ஈர வெங்காயத்தைக் காசு போல் அரிந்து பசுவின் நெய்யில் வேகவைத்துப் ½ படி (1.3 லிட்டர்)

வெங்காயமும் நெய்யும் தின்னக் கொடுத்து உள்ளியைப் பவன வாயிலே வைத்து அணைக்கவும்.

## காச சுவாசத்துக்கு மருந்து

இந்த தூதளைவேர் இரண்டுபலம்
இதுநெய் நாழி வேப்பஞ்சாறு
அதுதான் சிறங்கை கூடவிட்டு
அடவே அரைத்து அதில்கலக்கிப்
பதமே வரவே தான்காய்ச்சி
பதத்தில் வடித்துக் கொள்வீராய்
திதமா ஈளை இருமல்
முதலான காசமும் தீர்ந்திடுமே.

(பொருள்) இதில் காச சுவாசத்திற்கு மருந்து கூறப்படுகிறது.

| | | |
|---|---|---|
| தூதுவளைவேர் | - | 2 பலம் (70 கிராம்) |
| நெய் | - | 1 நாழி (1.3 லிட்டர்) |
| வேப்பஞ்சாறு | - | 1 சிறங்கை (ஒருகையளவு) |

இவற்றை அரைத்துக் காய்ச்சிப் பதத்தில் வடித்து வைத்துக் கொள்ள வேண்டும்.
தீரும் நோய் - ஈளை, இருமல், காசம்

## கீல் வாய்வுக்கு மருந்து

உடம்புக்கு உத்தாமணி, தழுதாழை, நொச்சியிலை மூன்றும் போட்டுக் காய்ச்சி வெந்நீர் வார்த்துக் கொள்ளவும்.

## சூசிகா வாயுவுக்கு மருந்து

கழற்சியின் பருப்பு மிக்க கடியவெண் கார முள்ளி
குழைத்தே அரைத்து எட்டிக் கொண்டுளே விழுங்கு மாகில்
சுழித்திட்ட வயிற்றில் வந்த சூசிகா வாய்வு ஏகும்
தழைத்திடு முனிவர் சொன்னார் தாமிது கண்டு கொள்ளே.

(பொருள்) இதில் சூசிகா வாய்வுக்கு மருந்து கூறப்பட்டுள்ளது.

கழற்சிப்பருப்பு
வெங்காரம் சரி எடை
உள்ளி

சேர்த்துக் குழைவாக அரைத்து விழுங்க வேண்டும்.

அளவு - எட்டிக்கொட்டை அளவு
தீரும் நோய்கள்- சூசிகா வாய்வு

## சகல தோஷத்துக்கும் மருந்து

அரத்தை சதக்குப்பை ஆனநொச்சிச் சாற்றில்
உரைத் திழைய காய்ச்சிப் பின்னுண்ண
வருத்துந் தலைவலியும் தன்னெஞ்சில் நோவும்
குலைகுலைந்து போமெனவே கூறு

(பொருள்) தலைவலி, நெஞ்சுவலிக்கு இதில் மருந்து கூறப்படுகிறது.

அரத்தை
சதகுப்பை சம எடை
நொச்சிச் சாற்றில் இழைத்துக் காய்ச்சி உண்ண வேண்டும்.
தீரும் நோய் - தலைவலி, நெஞ்சுவலி

## நாசியில் இரத்தம் விழுகின்றதற்கு மருந்து

கஞ்சி வடித்து, மஞ்சள் பொடி தூவிக் கொடுக்க இரத்தம் மாறும்.

## நீர்க்கடுத்து எரிந்து அரிக்கி இறங்கினால் மருந்து

நெருஞ்சிவேர் சீதேவி யின்வேர் நிகரில் ஓரிதழ் தாமரையும்
பரிந்து தேடும் தேற்றானும் பார்மேல் திரியும் கலைங்கொம்பும்
விரிந்த கூந்தல் மாதுநல்லாய் வெறும்பால் தன்னி லரைத்துண்ணில்
எரிந்து கழியும் சலக்கிரிச்சம் இளைத்தே ஓடும் இப்போதே.

(பொருள்) இதில் சலக்கிரீச்சரத்திற்கு மருந்து கூறப்படுகிறது.

நெருஞ்சிவேர்
சீதேவி வேர்
ஓரிதழ்த் தாமரை } சம அளவு
தேற்றான்விதை
மான்கொம்பு

எடுத்துப் பாலில் அரைத்து உண்ண வேண்டும்.
தீரும் -நோய் - சலக்கிரீச்சரம்

## தமரக வாய்வுக்கு மருந்து

பொடுதலைச்சாறு - ½ பங்கு
நல்லெண்ணெய் - ½ "

இவை கலந்து காலையில் குடித்து 12 நாழிகைக்கு (4 மணிநேரம் 48 நிமிடம்) மேல் தலைக்கு எண்ணெய் தேய்த்து முழுகவும். கருங்கோழி அறுத்து அவித்துத் தண்ணீர் இறுத்து மிளகு மிஞ்சியிட்டுப் புளியிட்டு ஈரத்தலையோடு குடிக்கவும்.
காலம் - காலை, மாலை உணவு உண்ணக்கூடாது
தீரும் நோய் - தமரக வாய்வு

## தோல் அவிழ்தம்

வல்லிகே ளெருக்கா வாரை வன்பிணி விடத்தே ரோடு
சொல்லிய சிவதை வீழி துடரியு முகிளை தானும்
அல்லியங் கோதை நல்லாய் ஆம்பலும் பொரும்பில் வேரும்
தொல்லியோ ருரைத்த வாறு தோல்களும் மருந்து தானே.

(பொருள்) இதில் தோல் நோய்களுக்கு மருந்து கூறப்படுகிறது.
எருக்கு,
ஆவாரை,
விடத்தேர்,
சிவதை,
வீழி,
நெருஞ்சிப்பூ,
ஆம்பல்,
கழலாவாரை.
இவற்றைப் பொடித்து உண்ண தோல்நோய்கள் தீரும்.

## பாண்டு ரோகத்துக்கு மருந்து

ஓங்கு புகழ்சேர் காந்தமுடன் உகந்த ஓமம் சீரகமும்
பாங்காய் நல்ல சதகுப்பை பகரும் சுக்குத் திப்பிலியும்
ஆங்கம் பெருத்த அரபொடியும் அதுவோ டொக்க சித்தரத்தை
தூங்கண் வெள்ளைப் பூண்டுடனே சொல்வேன் கரிய சீரகமும்
சீராய் மிளகு வகைக்கொருபலம் சிறந்த பிரண்டை இதுவெல்லம்
பேராய் கன்னி இதுமூன்றும் பிசறபலமும் வகைக்கு ஐந்தாக்கி
கார்க்குங் கடையில் மருந்துதனைக் கதிக்க வறுத்து இடித்தெடுத்து
பாகாய் மருந்து தனைகொடுக்கப் பாண்டு பித்த சோகைகளும்

**நீண்ட வாய்வுக் காமாலை நெஞ்சி டிப்பு காலசதி**
**துயரால் வந்த பித்தங்கள் சொல்லா தோடும் கண்டீரே.**

(பொருள்) இதில் பாண்டு, சோகைக்கு மருந்து கூறப்படுகின்றது.

| | |
|---|---|
| காந்தம் | வகைக்கு 1 பலம் (35 கிராம்) |
| ஓமம் | |
| சீரகம் | |
| சதகுப்பை | |
| சுக்கு | |
| திப்பிலி | |
| அரப்பொடி | |
| சிற்றரத்தை | |
| வெள்ளைப்பூண்டு | |
| கருஞ்சீரகம் | |
| மிளகு | |

இதில் கடைச்சரக்குகளை வறுத்து இடித்துக் கொண்டு அத்துடன் காந்தம், அரப்பொடி சேர்த்துப் பிரண்டைச் சாறு, வெல்லம், கற்றாழைச்சாறு வகைக்கு 5 பலம் (175 கிராம்) பிசறி வைத்துக் கொள்ள வேண்டும்.

திரும் நோய் - பாண்டு, பித்தசோகை, வாய்வு, காமாலை, நெஞ்சிடிப்பு, கால்அசதி, பித்தம்

## பெருவியாதி, திமிருக்கு மருந்து

நீரெட்டிக் கொட்டை மேல் பொருக்கு எடுத்துப் போட்டு, சிறங்கை (உள்ளங்கையளவு) பருப்பு மாலையில் ஊறவைக்கவும். விடியற்காலையில் அம்மியில் அரைத்துச் சிறுபானையில் படி தண்ணீர் (2.65 லிட்டர்) விட்டு அதில் போட்டுச் சீலைவேடுகட்டி, வேட்டின்பேரில் மருந்தை வைத்துச் சீலைமண் செய்து, 2 நாழிகை (48 நிமிடங்கள்) புடமிட்டு வேகவைத்து எடுத்துக் கிட்டிக்கழியால் நெருக்கிப் பிழிந்து இரண்டு சங்கு மட்டும் எடுத்துக்கொண்டு நாபி இரண்டு நெல்லிடை உரைத்துக் கொடுக்கவும்.

காலம் - 7 நாட்கள் (2 வேளை)

பத்தியம் - இளங்கீரை, பொரிமா, துவரம்பருப்பு, தண்ணீர் சேர்க்கவும். உப்பு, புளி,. மிளகு ஆகாது. (ஆறு மாதத்திற்கு விளக்கெண்ணெயிட்டுக் களிமண் தேய்த்து முழுகவும். அதற்குமுன் இரண்டுமுறை கொடுக்கவும் )

தீரும் நோய் - பெருவியாதி, திமிர்

## பைத்தியத்திற்கு மருந்து

**பித்தமேறி தலையே சுழத்திடில் பிரியமா மிலாமிச் சிருவேலியும்**
**சித்த மெய்த்திடும் சந்தனம் செண்பகம் சீர்துளாவி யதிமது ரத்துடன்**
**பத்தி யொக்கவோ ஆவின்பால் தன்னிலே பகுத்நரைத்து துவாலை தலைக்கிடச்**
**சத்திகெட்டு பலம்கெட்டு பித்தமும் தப்பியோடத் தனிவழித் தேடுமே.**

(பொருள்) பைத்தியம், பித்தத்திற்கு இதில் மருந்து கூறப்படுகிறது.

| | |
|---|---|
| விலாமிச்சை<br>வெட்டிவேர்<br>சந்தனம்<br>செண்பகம்<br>அதிமதுரம் | சம எடை |

எடுத்துப் பசுவின் பாலில் அரைத்துத் தலையில் துவாலையிட பித்தம், பித்தத்தினால் தலை சுழலல் தீரும்.

## மாலைக் கண்ணுக்கு மருந்து

அகத்தியிலைச் சாற்றில் மிளகு பழம் மூன்று நாள் ஊறப்போட்டு உலர்த்தி அகத்திப்பூச் சாற்றில் உரைத்துப் போடவும்.

## மூத்திரக்கிரிச்சம், நீர்க்கட்டுக்கு மருந்து

**துரிசுப் பொடிசெய்து துய்யவெண்ணெய் தன்னில்**
**பரிவாய் விளங்கிடப் பாகும் துரிதாக**
**நீரடைப்பு விட்டு நெடுந்தாரை யாயிழியும்**
**பாரிடை யுள்ளோர்க்குப் பரிந்து.**

(பொருள்) இதில் நீரடைப்பு நோயில் நீர்ப்பிரிய மருந்து கூறப்பட்டுள்ளது.

துரிசைப் பொடி செய்து வெண்ணெயில் கலந்து உண்ண நீரடைப்பு நீங்கி நீர் வெளியாகும்.

## வயிற்றால் தண்ணீராய்க் கழிவதற்கு மருந்து

வெந்தயம்
அதிவிடையம்
வெளுத்தபிசின் } சமன் அளவு
வசம்பு
சந்தனம்

இவற்றைச் சோற்றுக் கற்றாழைச்சாறு விட்டு நல்லெண் ணெயில் வேக வைத்துக் கொடுக்கவும்.

தீரும் நோய் - வயிற்றால் தண்ணீராய்க் கழிவது

## வயிற்றுக் குன்மத்துக்கு, கட்டிக்கு மருந்து

**பெருத்தபேய் கொம்மட்டிக் காயும் பேர்வெள்ளை காக்க ரட்டான்**
**திருமா லவணம் ஐந்தும் சேர்ந்திடும் கார மைந்தும்**
**வருத்தமா விலங்கை கொன்றை வச்சிரத் தின்பால் மூலம்**
**கருத்துற வசம்பு மஞ்சள் காயம்வெள் ளுள்ளி கூட்டே.**

**காய்ந்தநற் சிவதை போளம் கட்டிலா மணக்கம் வேரும்**
**வாய்ந்தரோ கணிமு ருங்கை வளருமா லவுரி சின்னி**
**பாய்ந்திடும் கழற்சிக் கொத்தான் பகரும் வேலிப் பருத்தி**
**தேய்ந்தயே ரண்டத் தெண்ணெய் சேய்தெரிந் துள்ளுங் கொள்ளே.**

(பொருள்) இதில் வயிற்றிலுண்டாகும் குன்மம், கட்டிக்கு மருந்து கூறப்படுகிறது.

பேய்க்கொம்மட்டிக்காய்
வெள்ளைக்காக்கரட்டான்
கரியுப்பு
இந்துப்பு } சம எடை
வளையலுப்பு
கல்லுப்பு

| | |
|---|---|
| வெடியுப்பு<br>வெங்காரம்<br>மாவிலிங்கம்<br>கொன்றை<br>சதுரக்கள்ளிப்பால்<br>சதுரக்கள்ளிவேர்<br>வசம்பு<br>மஞ்சள்<br>பெருங்காயம்<br>உள்ளி<br>சிவதை<br>கரியபோளம்<br>ஆமணக்குவேர்<br>கடுகுரோகணி<br>முருங்கை<br>துளசி<br>அவுரி<br>சின்னி<br>கழற்கொடி<br>கொத்தான்<br>வேலிப்பருத்தி | சம எடை |

இவற்றை எடுத்துப் பொடித்து விளக்கெண்ணெயில் உண்ண வேண்டும்.

திரும் நோய் - வயிற்றுவலி, கட்டி

## அஞ்சனம்

### நடுக்கல் சுரத்திற்கு அஞ்சனம்

மனோசிலை, இந்துப்பு, திப்பிலி, மிளகு அரைத்து எண்ணெயில் உரைத்து அஞ்சனமிடவும்.

திரும் நோய் - நடுக்கல் சுரம்

### நீர்ப்பாட்டுக்கு அஞ்சனம்

பொரிகாரம்
இந்துப்பு

அரிதாரம்
துத்தநாகம்
துரிசு
சங்கு
மிளகு
சுக்கு
} சம அளவு

இவற்றைத் தும்பையிலைச் சாற்றில் அரைத்துக் கயிறாகச் செய்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவும். தேவையான போது வெந்நீர் விட்டுச் சுக்கையும் இம்மருந்தையும் இழைத்துக் கண்ணில் இடவும்.

(பிழைப்பவர்களுக்குக் கண்ணில் நெருப்பைக் கொண்டு சுடுவதுபோல் இருக்கும். இறக்கவிருப்பவர்களுக்கு அவ்வாறு தோன்றாது)

## அடை

### இரத்தக் கிராணிக்கு அடை

கருங்குறுவையரிசியோடு நாயுருவி இலைச்சாறு சேர்த்து அரைத்து அடை சுட்டுத் தின்னவும்.

தீரும் நோய் - இரத்தக் கிராணி

### சத்திக்கு அடை

குறுவையரிசி - 1 உழக்கு (336 மி.லிட்டர்)
குப்பைமேனி இலை - 1 பிடி

இவற்றை அரைத்து ஆவியிலிட்டுத் தின்னவும்.

பத்தியம் - மோர், பால் ஆகாது.
முருங்கைக்காய், முருங்கைக்கீரை, நெய், கருப்பட்டி சேர்க்கவும்.

### சுரத்தின்மேல் இரத்தக் கழிச்சலுக்கு அடை

| | | | |
|---|---|---|---|
| சாதிக்காய் | - | 1 | வராகன் (3.5 கிராம்) |
| சாதிபத்திரி | - | | " " |
| இலவங்கம் | - | | " " |
| ஓமம் | - | 2 | " (7 ") |
| அபின் | - | ½ | " (1.75 ") |

இவற்றோடு கோழி முட்டையின் வெள்ளைக் கருவைச் சேர்த்தரைத்து, சட்டியில் நல்லெண்ணெய் சிறிதளவுவிட்டு அடை சுட்டுக் கொடுக்கவும்.

## இரசாயனம்

### கற்பூர லோத்திரம்

| | | |
|---|---|---|
| பச்சைக் கற்பூரம் | | |
| கச்சோலம் | | |
| சாதிக்காய் | | |
| இலவங்கப்பத்திரி | | வகைக்கு 1 காசெடை |
| இலவங்கப்பட்டை | | |
| ஏலம் | - | 2 பலம் (70 கிராம்) |
| கிராம்பு | - | 4 " (140 " ) |
| மிளகு | - | 6 " (210 " ) |
| செவ்வியம் | - | 7 " (245 " ) |
| தாளிசபத்திரி | - | ½ " (17.50 " ) |
| நாகேசுவரம் | - | ¼ " (8.75 " ) |
| திப்பிலி மூலம் | - | 2 " (70 " ) |
| கொடிவேலிவேர் | - | 1 " (35 " ) |
| சீரகம் | - | 2 " (70 " ) |

இவற்றை இடித்துச் சூரணம் பண்ணிச் சர்க்கரை கலந்து கொள்ளவும்.

அனுபானம் - தேன்

தீரும் நோய்கள்- சோபம், காமாலை, குன்மம், கிராணி, அரோசகம், விக்கல், வாந்தி, மூலம், சுவாசம், பாண்டு, வயிற்றில் வியாதி, சயம், சேத்துமம், வாய்வு, காசரோகம், அக்கினி மந்தம்

## பறங்கிப்பட்டை இரசாயனம்

பறங்கிப்பட்டை - 5 பலம் (175 கிராம்)

சுக்கு, மிளகு, செவ்வியம், அரத்தை, கோட்டம், வாய்விளங்கம், திப்பிலி மூலம், ஓமம், அதிமதுரம், ஏலம், தான்றிக்காய், செங்கத்தாரிப்பட்டை, சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு, நிலைப்பனைக்கிழங்கு, நன்னாரிவேர், சடமாஞ்சில், குங்குமப்பூ, கோரோசனை, சிறுதேக்கு, வெட்டிவேர், கருஞ்சீரகம், இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி } வகைக்கு 1½ வராகன் (5.25 கிராம்)

இவற்றை இடித்து, வஸ்திரகாயம் செய்து இதில்

| | | |
|---|---|---|
| தேன் | - | 6 பலம் (210 கிராம்) |
| நெய் | - | 6 " (210 " ) |
| சீனி | - | 6 " (210 " ) |

இவற்றைக் கூட்டிப் பிசைந்து சாப்பிடவும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | 1 பாக்களவு |
| காலம் | - | 20 நாள் |
| பத்தியம் | - | கசப்பு, புளிப்பு ஆகாது. |

இளங்கீரை, துவரம்பருப்பு, பால், நெய், ஓலைவாள்க்கருவாடு, வெள்ளாட்டு உப்புக்கண்டம், முருங்கைப்பிஞ்சு, இலை, மிளகு, வெள்ளுள்ளி, வெந்நீர் கூட்டவும்.

திரும் நோய் - வாதம் எண்பது, பித்தம் நாற்பது, சிலேத்துமம் இருபது, கிரந்தி, சிரங்கு, மேகம் இருபது, நீரருகல், பெருக்கல், குட்டம் பதினெட்டு.

# இலேகியம்

## அகிலாதி இலேகியம்

முசுமுசுக்கைச்சாறு - 3 பலம் (105 கிராம்)
வெல்லம் - ” ”

கூட்டிக் காய்ச்சி இறக்குகின்றபோது,

திரிகடுகு - வகைக்கு 1 பலம் (35 கிராம்)
(சுக்கு, மிளகு, திப்பிலி)
ஏலம் - ” ”
சீரகம் - ” ”

சேர்த்துப் பொடி செய்து போட்டுக் கிளறி களிப்பதம் ஆகும் வரை தேன்விட்டுக் கிண்டி எட்டு நாள் தானிய புடத்தில் வைத்து எடுக்க வேண்டும்.

அளவு - 1 கழஞ்சு (4.4 கிராம்)
தீரும் நோய்கள் - பைத்திய வாய்வு, எரிகுன்ம வாய்வு, திரட்சி, திமிர்

## அசீரணம், தீபனத்திற்கு இலேகியம்

திப்பிலி - 1 பலம் (35 கிராம்)
மிளகு - ” ”

மூட்டைக் கட்டிக் கழுதைச்சாணி கரைத்து அதில் போட்டு அவித்து உலர்த்தி,

பெருங்காயம் - 1 பலம் (35 கிராம்)

தாமரை இலையில் ஐந்து வரிசை பொதிந்து கட்டி தோலாந்திரமாக அவித்து உலர்த்தி,வெங்காயம் உரித்தது 2

பலம் (70 கிராம்) எடுத்துக் கொண்டு சட்டியைக் காயவைத்து வெங்காயத்தை அதில் போட்டுச் சிவக்க வறுத்து,

கடுகு - 1 பலம் (35 கிராம்)

சேர்த்து இடித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | களிப்பாக்கு அளவு |
| அனுபானம் | - | வெந்நீர் |
| தீரும் நோய் | - | அசீரணம் நீங்கும், தீபனம் உண்டாகும் |

## அரிதகி இலேகியம்

**கடுக்காய் நாகரம் பனைவெல்லம் கதித்த ஓமநற் சீரகமும்**
**அடுக்காய் தூள்கள் பொடிசெய்து ஆவின் நெய்யில்**
**களிகிண்டி**
**மிடுக்காய் தின்ன வல்லீராய் விரைந்து கடுப்புக் கிராணியெல்லாம்**
**துடுக்காய் ஓடி ஒளிக்குமென்று துய்ய முனிவ ருரைத்தாரே.**

(பொருள்) இதில் கடுக்காய் இலேகியம் செய்முறை கூறப்படுகிறது.

கடுக்காய்
சுக்கு
பனைவெல்லம் } சம எடை
ஓமம்
சீரகம்

சேர்த்துப் பொடித்து நெய்யுடன் கலந்து களியாகக் கிண்டி வைத்துக் கொண்டு உண்ண வேண்டும்.

தீரும் நோய் - வயிற்றுக்கடுப்பு, கிராணி

## அறகால மூல இலேகியம்

| | | |
|---|---|---|
| சுக்கு | - | 1 பலம் (35 கிராம்) |
| கடுக்காய் | - | " " |
| கிராம்பு | - | " " |

பொடி பண்ணி வைத்துக் கொண்டு அத்துடன்

| | | |
|---|---|---|
| கருப்பட்டி | - | 10 பலம் (350 கிராம்) |
| தண்ணீர் | - | 2 நாழி (2.6 லிட்டர்) |

அரைப்படியாக காய்ச்சியப் பிறகு கடைமருந்து பொடி போட்டுத் துழாவிக் காய்ச்சி இறுகிய வேளையில்,

வெள்ளைக் குங்கிலியம் - 1 பலம் (35 கிராம்)
பொடி செய்துத் தூவி இறக்கி ஆறவிட்டு எடுத்து வைத்துக் கொள்ளவும்.

அளவு - பாக்களவு
தீரும் நோய் - ஈளை, இருமல், உளமாந்தை, இரைப்பு, சீவிழுவது

## ஆடாதொடை இலேகியம்

ஆடாதொடைச்சாறு - 1 உழக்கு (336 மி.லிட்)
நெய் - " "
பால் - " "
தேன் - " "

இவற்றை ஒன்றாய்க் காய்ச்சிக் குழம்பாக்கி மேன்பொடியாக,

சுக்கு - 3 வராகன் (10..5 கிராம்)
கடுக்காய் - " "
திப்பிலி - " "
மிளகு - " "
கருஞ்சீரகம் - " "
நற்சீரகம் - " "

இடித்து வஸ்திரகாயம் செய்து துருவி இலேகிய பதமாகத் தேன்விட்டுக் கிண்டி இறக்கி வைத்துக் கொள்ளவேண்டும்.

அளவு - பாக்கு
தீரும் நோய் - காசம், சிலேட்டுமம், ஈளை, இருமல், சத்தி, வியர்வை

## இரத்தக் கழிச்சல், கடுப்பிற்கு இலேகியம்

ஆடாதொடை இலை துவைத்துப் புட்டாகச் சுட்டுப் பிழிந்து கொள்ளவும். பொன்மெழுகையும் இலவம் பிசினையும் பொடியாகச் செய்து போடவும். தேனும் சர்க்கரையும் சேர்த்துக் கொடுக்கவும்.

வயிறு கழிய வேண்டுமென்றால்,
சிவதை வேர்
கடுக்காய்
தான்றிக்காய்

இவற்றை நறுக்கிக் காய்ச்சி இறுத்துக் கொள்ளவும். தேனும் சர்க்கரையும் கலந்து கொடுக்கவும்.

தீரும் நோய் - எதிரெடுத்த இரத்தம்

## இருமலிற்குக் கொம்மட்டி மாதுளை இலேகியம்

| | | | |
|---|---|---|---|
| கொம்மட்டி மாதுளைச்சாறு | - | 1 நாழி | (1.3 லிட்டர்) |
| சர்க்கரை | - | 1 பலம் | (35 கிராம்) |
| தேன் | - | ” | ” |
| இஞ்சிச்சாறு | - | ” | ” |
| பசுவின் நெய் | - | ” | ” |
| தாளிசபத்திரி | - | ” | ” |
| சுக்கு | - | ” | ” |
| மிளகு | - | ” | ” |
| திப்பிலி | - | ” | ” |
| ஏலம் | - | ” | ” |
| கடுக்காய் | - | ” | ” |
| தான்றிக்காய் | - | ” | ” |
| நெல்லிப்பருப்பு | - | ” | ” |

சேர்த்து இலேகியம் செய்ய வேண்டும்.

அளவு - பாக்களவு

தீரும் நோய்கள் - இருமல், க்ஷயம்

## இருமல், கோழை கக்குதலுக்கு இலேகியம்

| | | | |
|---|---|---|---|
| சுக்கு | - | 4 வராகன் | (14 கிராம்) |
| மிளகு | - | ” | ” |
| சீரகம் | - | ” | ” |
| கடுகுரோகணி | - | 2 ” | (7 கிராம்) |
| தான்றிக்காய் | - | ” | ” |
| கடுக்காய் | - | 5 ” | (17.5 கிராம்) |
| திப்பிலி | - | ” | ” |
| தூதுவளை | - | ” | ” |
| வில்வவேர் | - | 4 ” | (14 கிராம்) |

இவற்றை இடித்துச் சீலை வடிகொண்டு

வெல்லம் - 20 பலம் (700 கிராம்)

கரைத்துக் காய்ச்சி அதிலே போட்டு, இலேகியமாய் கரைத்துக்

காய்ச்சி அதிலே தேனும் சற்று விட்டு வைத்துக் கொள்ள வேண்டும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | 3 வராகன் (10.5 கிராம்) |
| தீரும் நோய் | - | இருமல், கோழை கக்குதல் |

## உப்பிசம், கோழை இருமலிற்கு இலேகியம்

| | | | |
|---|---|---|---|
| குண்டு சீயக்காய் | - | 1 பலம் | (35 கிராம்) |
| திப்பிலி | - | ½ " | (17.5 " ) |
| கஸ்தூரி மஞ்சள் | - | ½ " | (17.5 " ) |

இவற்றை இடித்துப் பொடிசெய்து கொள்ள வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| தேன் | - | 1 உரி | (1.3 லிட்டர்) |
| பசுவின் பால் | - | " | " |

கலந்து இறுகக் காய்ச்சி பதமான பிறகு இதில் பொடியைக் கலந்து இலேகியமாய் செய்து கொள்ள வேண்டும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | கொட்டைப்பாக்கு |
| தீரும் நோய் | - | உப்பிசம், கோழை, இருமல் |

## எரி, வலி, சத்தி குன்மங்களுக்கு இலேகியம்

தேங்காய்
கடுகு
கொடுவேலிவேர்
வறள்வாய் வேர்
வட்டத்திருப்பிவேர்
நன்னாரிவேர்
பெருங்கிழங்கு
சாட்டறணைக்கிழங்கு

} சம அளவு

எடுத்துக் கொள்ளவும். இத்துடன்

| | | | |
|---|---|---|---|
| வெண்காரம் | - | 1 பலம் | (35 கிராம்) |
| நேர்வாளம் | - | 10 " | (350 " ) |
| கருஞ்சீரகம் | - | 1 " | (35 " ) |
| பெருங்காயம் | - | " | " |
| இந்துப்பு | - | " | " |
| கள்ளிப்பால் | - | ½ " | (1.75 ") |

இவையெல்லாம் பசுவின் கோமியம் வார்த்தரைத்து ஒரு முற்றல் தேங்காய் கண்திறந்து நீரூற்றிப் போட்டு அதிலடைத்து சாணி அப்பிப் புடமிடவும். வெந்த பிறகு தேங்காயோடு அரைத்துச் சட்டி காயவைத்து விளக்கெண்ணெய் வார்த்து அதில் மருந்தைப் போட்டுக் கிண்டி இறக்கி வைத்துக் கொண்டு காலையில் வெறும் வயிற்றில் சாப்பிட வேண்டும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | 1 களிப்பாக்கு |
| பத்தியம் | - | கார்ப்பு. புளிப்பு தவிர்த்தல் |
| தீரும் நோய் | - | எரிகுன்மம், வலி குன்மம், சத்தி குன்மம், வாய்வு குன்மம் |

## ஓம இலேகியம்

ஓமம் நூற்றிருப தெடையுடன் மாசிக்காய் முப்பதெடை
ஆமாங் கடுக்கா யெடைபதினா றதிய சுக்கு மெடையெட்டு
தேமாங் கனியே அதிமதுரம் சீனப் பாகு வால்மிளகு
மாமா மயிலே வகைக்கொன்று வகுத்த எடைகள் அஞ்சாமே

ஆமே திப்பிலி நாலெடையும் அதிக கருவாய் சிற்றேலம்
நாமே உரைத்தப் பழமிளகு நல்ல அக்கிராப் பேரேலம்
வாமே வகைக்கு எடைமூன்று வகுத்த சாதிக்காய் வசுவாசி
பூமேல் கிராம்பு நாகசிங்கி புதிய குண்டையும் வகைகள்
எடைஒன்றே

ஒன்றாய் இடித்து வடிகட்டி ஓதுமெள்ளெண்ணெய் வரி
நன்றாய் தேனு மதிலிரட்டி நலமா யரைத்து நுரைபோக்கி
கண்டீர் விரவி லேகியமாய் கதித்த பரணி தனிலடைத்துக்
கொண்டா லேழு மஞ்சாடி குணமாம் வியாதி கூறுமின்னே

மின்னே மூல வாயுமுதல் மிகுந்த இரைச்சல் அட்டகுன்மம்
பொன்னே பொருமல் செரியாமை புளித்தேக் கிடுத லதிசாரம்
சொன்னோம் கிரந்தி கடிகுட்டம் சோபம் பித்த காமாலை
நன்னே ராகத் தீருமிது நயந்த முனிவர் நவில்மொழியே

(பொருள்) இதில் ஓமலேகியத்தின் செய்முறை கூறப்படுகிறது

| | | |
|---|---|---|
| ஓமம் | - | 120 பலம் (4200 கிராம்) |
| மாசிக்காய் | - | 30 " (1050 கிராம்) |
| கடுக்காய் | - | 16 " (560 கிராம்) |
| சுக்கு | - | 8 " (280 கிராம்) |
| அதிமதுரம் | - | 5 " (175 கிராம்) |
| சீனாக்காரம் | - | 5 " " |
| வால்மிளகு | - | 5 " " |
| திப்பிலி | - | 4 " (140 கிராம்) |
| கருவாப்பட்டை | - | 3 " (105 கிராம்) |
| சிற்றேலம் | - | 3 " " |
| மிளகு | - | 3 " " |
| அக்கிராகாரம் | - | 3 " " |
| பேரேலம் | - | 3 " " |
| சாதிக்காய் | - | 1 " (35 கிராம்) |
| சாதிப்பத்திரி | - | 1 " " |
| கிராம்பு | - | 1 " " |
| சிறுநாகப்பூ | - | 1 " " |
| அதிவிடையம் | - | 1 " " |

இவற்றை இடித்துச் சலித்து வைத்துக்கொண்டு

| | | |
|---|---|---|
| எள் நெய் | - | 1 உரி |
| தேன் | - | 2 " |

சேர்த்து அரைத்து நுரைபோக்கி இலேகியமாய் செய்து வைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு - 7 மஞ்சாடி (1820 மி.கிராம்)

தீரும் நோய் - மூல வாயு, வயிற்று இரைச்சல், எண்வகை குன்மம், பொருமல், செரியாமை, புளித்தேப்பம், அதிசாரம், கிரந்தி, கடிவகை, குட்டம், சோபை, பித்தம், காமாலை

## கண்டமா இலேகியம்

| | | |
|---|---|---|
| பழைய வெல்லம் | - | 100 பலம் (3.5 கிலோகிராம்) |
| நெல்லிக்காய்ச்சாறு | - | 6 படி |
| தாளிசபத்திரி | - | ½ பலம் (17.5 கிராம்) |
| சுக்கு | - | " " |

| | | | | |
|---|---|---|---|---|
| மிளகு | - | | ” | ” |
| திப்பிலி | - | | ” | ” |
| நற்சீரகம் | - | | ” | ” |
| கருஞ்சீரகம் | - | | ” | ” |
| இந்துப்பு | - | | ” | ” |
| கொடிவேலி | - | | ” | ” |
| இலவங்கப்பத்திரி | - | | ” | ” |
| இலவங்கப்பட்டை | - | | ” | ” |
| காட்டெருமைப்பால் | - | | ” | ” |
| அரேணுகம் | - | | ” | ” |
| திப்பிலிமூலம் | - | | ” | ” |
| ஏலம் | - | | ” | ” |
| செவ்வியம் | - | | ” | ” |
| கொத்துமல்லி | - | | ” | ” |
| சிவதை | - | 2 | ” | (70 ” ) |
| தீபதாட்சிப்பழம் | - | 1 | ” | (35 ” ) |
| பசுவின் நெய் | - | 9 | ” | (315 ” ) |
| தேன் | - | 6 | ” | (210 ” ) |

இவற்றையெல்லாம் சேர்த்துக் காய்ச்சி இலேகியம் செய்து கொள்ள வேண்டும்.

அளவு - ஒரு பாக்களவு

தீரும்நோய்கள் - பித்தம் தொடர்பான வியாதிகள், மூலவாய்வு

## கண்டாத்திரி இலேகியம்

| | | | | |
|---|---|---|---|---|
| திப்பிலி | - | 5 | வராகன் | (17.5 கிராம்) |
| மிளகு | - | 3 | ” | (10.5 ” ) |
| ஏலம் | - | 5 | ” | (17.5 ”) |
| திப்பிலிமூலம் | - | 1 | ” | (3.5 ” ) |
| இலவங்கம் | - | 3 | ” | (10.5 ” ) |
| சாதிக்காய் | - | 5 | ” | (17.5 ” ) |
| சுக்கு | - | | ” | ” |
| இலவங்கப்பட்டை | - | 3 | ” | (10.5 ” ) |
| முத்தக்காசு | - | | ” | ” |
| வெட்டிவேர் | - | | ” | ” |
| கொத்துமல்லி | - | | ” | ” |
| தாளிசபத்திரி | - | 2 | ” | (17 ” ) |

| | | |
|---|---|---|
| அதிமதுரம் | - | 3 " (10.5 " ) |
| வாழைவேர் | - | " " |
| கூகை நீறு | - | " " |
| நற்சீரகம் | - | " " |
| நன்னாரிவேர் | - | 2 " (7 " ) |

இவற்றை இடித்து வஸ்திரகாயம் செய்து இடித்து, இஞ்சி மேல் புறணி சீவி நறுக்கி நிழலில் உலர்த்தி பத்துப்பலம் (350 கிராம்) பொடியாக்கிப் பசுவின் நெய் வார்த்து இளவரையாக வறுத்து அதிலே அரைப்படி தேன்வார்த்து பத்துப்பலம் (350 கிராம்) கரும்புச் சர்க்கரையும் போட்டு முந்தின பொடியும் தூவிக் கிண்டி இலேகிய பதத்தில் இறக்கிப் பழகின பானையில் வைத்து தினம் சாப்பிட்டு வர வேண்டும்.

அளவு - 3 வராகன் (10.5 கிராம்)
தீரும் நோய்கள் - வாந்தி, அரோசிகம், இருமல், இரைப்பு, அக்கினி மந்தம்.

## கற்பூராதி இலேகியம்

| | | |
|---|---|---|
| துளசிச்சாறு | - | 1 உழக்கு (336 மி.லிட்டர்) |
| தூதுவளைச்சாறு | - | " " |
| நொச்சிச்சாறு | - | " " |
| கண்டங்கத்தரிச்சாறு | - | " " |
| சிறுவழுதலைச்சாறு | - | " " |
| ஆடாதொடை இலைச்சாறு | - | " " |
| தூதுவளை வேரின் பொடி | - | 2 கழஞ்சு (8.8 கிராம்) |
| கடுக்காய்ப்பொடி | - | " " |
| சுக்குப்பொடி | - | ½ கழஞ்சு (2.2 கிராம்) |
| கற்பூரம் | - | " " |
| திப்பிலி | - | 1 கழஞ்சு (4.4 கிராம்) |
| ஏலம் | - | " " |
| இலவங்கப்பத்திரி | - | " " |
| கஸ்தூரி மஞ்சள் | - | " " |
| சதகுப்பை | - | " " |
| கச்சோலம் | - | " " |
| சிறுநாகப்பூ | - | " " |
| தக்கோலம் | - | " " |
| சடாமாஞ்சில் | - | " " |

| | | | |
|---|---|---|---|
| நற்சீரகம் | - | " | " |
| அதிமதுரம் | - | " | " |
| கிராம்பு | - | " | " |
| சாதிக்காய் | - | " | " |
| சாதிபத்திரி | - | " | " |
| ஓமம் | - | " | " |
| கற்கடசிங்கி | - | " | " |
| சிறுதேக்கு | - | " | " |
| சீனி | - | 1½ " | (6.6 " ) |
| சர்க்கரை | - | 1 கழஞ்சு | (4.4 கிராம்) |
| தேன் | - | ½ கழஞ்சு | (2.2 கிராம்) |
| நறுநெய் | - | 1 ஆழாக்கு | (672 மி.லிட்டர்) |
| முந்திரிகைப்பழம் | - | 1 கழஞ்சு | (4.4 கிராம்) |
| பேரீச்சம் பழம் | - | " | " |
| தேத்தான்கொட்டை | - | " | " |

இவற்றைப் பொடி செய்து இலேகிய பதம் செய்து காய்ச்சி இறக்கி வைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு - நெல்லிக்காயளவு

தீரும் நோய்கள் - ஈளை, இருமல், சிலேற்பன வகைகள்

## குண்டலாதி இலேகியம்

| | | | |
|---|---|---|---|
| சங்கம் வேர் | - | 100 பலம் | (3.5 கிலோ கிராம்) |
| கண்டங்கத்தரி | - | " | " |
| தசமூலம் (ஒவ்வொன்றும்) | - | 1 " | (35 " ) |
| சாரணைவேர் | - | 3 " | (105 " ) |
| கொடுவேலிவேர் | - | " | " |
| சிறுதேக்கு | - | " | " |
| ஆயில்பட்டை | - | " | " |
| கடுக்காய் | - | 50 | |

இவற்றை இடித்து, இரு தூணி (430 லிட்) தண்ணீர்விட்டு பசுவின் பால் விட்டு எட்டொன்றாக்கி வடித்து வெய்யிலில் வைக்க வேண்டும். பின்னர்,

| | | | |
|---|---|---|---|
| கண்டங்கத்தரி | - | 1 உழக்கு | (336 மி.லிட்டர்) |
| சிறுவழுதலை | - | " | " |
| ஆடாதொடை | - | " | " |
| பேராமல்லி | - | " | " |

| | | | |
|---|---|---|---|
| கையாந்தகரை | - | ” | ” |
| நொச்சியிலை | - | ” | ” |
| வெற்றிலை | - | ” | ” |
| முருக்கிலை | - | ” | ” |
| முள்ளி | - | ” | ” |
| தூதுவளை | - | ” | ” |

இவற்றின் இலைச்சாறுகளும்,

| | | | |
|---|---|---|---|
| கற்றாழை | - | 1 உழக்கு | (336 மி.லிட்டர்) |
| பசுமஞ்சள் கற்கம் | - | ” | ” |
| திப்பிலி | - | 5 பலம் | (175 கிராம்) |
| சிறுதேக்கு | - | 1 ” | (35 ”) |
| திப்பிலிமூலம் | - | ” | ” |
| கூகைநீறு | - | ” | ” |
| திரிபலை | - | ” | ” |
| சீரகம் | - | ” | ” |
| ஓமம் | - | ” | ” |
| கிராம்பு | - | ” | ” |
| சாதிக்காய் | - | ” | ” |
| கற்கடகசிங்கி | - | ” | ” |
| சுக்கு | - | ” | ” |
| மிளகு | - | ” | ” |
| பெருங்காயம் | - | ” | ” |
| இந்துப்பு | - | ” | ” |
| அரப்பொடி | - | ” | ” |

இவற்றை இடித்து வஸ்திரகாயம் செய்து தேன், சர்க்கரை, நெய் கூட்டி இலேகியம் செய்து பதினைந்துநாள் தானியப்புடம் வைத்த பின்பு தர்மம் தானம் செய்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

அளவு - 1 பாக்களவு
தீரும் நோய்கள் - சய நோய்கள், ஈளை, இரைப்பு, சுவாசம், உப்பிசம்

## குவளை விப்புருதி, உளமாந்தை, ஈளைக்கு இலேகியம்

| | | | |
|---|---|---|---|
| திப்பிலி | - | 3 கழஞ்சு | (13.2 கிராம்) |
| நெல்லிவற்றல் | - | ” | ” |
| நுணுக்கியபொரி | - | ” | ” |

இவற்றைச் சீலைவடி கொண்டு மூன்று பொடியும் ஒன்றாக இரேசிக்க வேண்டும். மூன்றில் ஒரு பங்கு ஒரு கலசத்தில் எடுத்து வைத்து அதில் தேன் விட்டு அளாவி, மீண்டும் நறுநெய் உருக்கி தேன் அளவு விட்டு, இதில் எலுமிச்சங்காய் அளவு வெல்லம் போட்டுக் கூட்டி இரேசித்து மெழுகு பதத்தில் எடுக்க வேண்டும்.

அளவு - ஈழ கொட்டைப்பாக்கு

மாலையில் விடியற் காலையில் என்று ஏழு நாட்களுக்கு கொடுக்கவும்.

பத்தியம் - கோழிமுட்டை அவித்து நான்காய் பிளந்து சிறிது மிளகும் மஞ்சளும் அரைத்து மிளகு நீர் வார்த்துக் கொடுக்க வேண்டும். மிளகை சிறிது வறுத்துக் கொள்ளவேண்டும். உப்பு, புளிப்பு, மாங்கிசம் தவிர்க்கவும்.

முன்சொன்ன நெல்லிவற்றல் காய வைத்து பதமாக வறுத்துக்கொண்டு, பொடி செய்து திப்பிலியையும் பொடி செய்து கொள்ள வேண்டும்.

தேனும் நெய்யும் வெல்லமும் ஒன்றாய் வேதித்து மத்தித்து காய்ச்சிக் கொடுக்க வேண்டும். ஆறவிட்டுச் சேர்க்க வேண்டும்.

தீரும் நோய் : குவளை விப்புருதி, உளமாந்தை.

## கூழ்பாண்ட இலேகியம்

பூசணிக்காய்ச்சாறு - 1 பதக்கு (10.7 லிட்டர்)

அடுப்பிலே வைத்து குறுணியாகக் (5.3 லிட்டர்) காய்ச்சி, இராயபுரி சர்க்கரை இரண்டு சேர் (560 கிராம்) போட்டு வடிகட்டிக் கொள்ள வேண்டும். மீண்டும் அடுப்பிலே வைத்து சுண்டக் காய்ச்சிப் பாகுபோல் ஆன பிறகு, இதற்குக் கற்கமாக

| | | | |
|---|---|---|---|
| ஏலம் | - | 2½ வராகன் | (8.75 கிராம்) |
| அதிமதுரம் | - | ” | ” |
| கொத்துமல்லி | - | ” | ” |
| சீரகம் | - | ” | ” |

| | | | |
|---|---|---|---|
| சாதிபத்திரி | - | ,, | ,, |
| சன்னலவங்கப்பட்டை | - | ,, | ,, |
| கிராம்பு | - | ,, | ,, |
| திரிகடுகு | - | ,, | ,, |
| இந்துப்பு | - | ,, | ,, |

இவற்றை இடித்துக் கொள்ள வேண்டும்.

மெழுகு பதத்தில் வடிகட்டிய பாகின் மேல் சூரணத்தைத் தூவிக் கிளறி, தேன் ஒன்றரை சேர் (420 கிராம்) விட்டு பிசறி, நெய் ஒன்றரை சேர் (420 கிராம்) விட்டு எடுத்து வைத்துக் கொண்டு, இரண்டு வேளை சாப்பிட்டு வர வேண்டும்.

அளவு - பாக்களவு

தீரும் வியாதிகள் - இரத்தப் பித்தம், பித்தவெட்டை, எலும்புருக்கி, உள்காய்ச்சல்

## சயகாசத்திற்கு இலேகியம்

| | | | |
|---|---|---|---|
| மந்தி உதப்பை | - | 1 சேர் | (280 கிராம்) |
| வெள்ளாட்டு உதப்பை | - | ,, | ,, |
| தூதுவளைச் சூரணம் | - | ,, | ,, |
| சேலம் சர்க்கரை | - | ,, | ,, |

பசுவின் நெய்யில் கிண்டி சாப்பிட வேண்டும்.

அளவு - கொட்டைப் பாக்களவு

காலம் - ஒரு மண்டலம்

பத்தியம் - பால், நெய் சேர்க்கவும்

தீரும் நோய்கள் - காசம், சயம்

## சயம், குன்மம், சன்னி இவற்றிற்கு இலேகியம்

| | | | |
|---|---|---|---|
| பொன் மெழுகுப்பொடி | - | ¾ | பலம் |
| சிறுதிப்பிலிப்பொடி | - | | ,, |
| மஞ்சள் பொடி | - | | ,, |
| அதிவிடையம் | - | ½ | ,, |
| கற்கண்டு | - | 1 | ,, |
| இந்துப்பு | - | ½ | ,, |
| சாத்திரவேதி | - | ½ | ,, |
| அஞ்சனக்கல் | - | ½ | ,, |

இவற்றைப் பொடி செய்து கொள்ளவும். அத்துடன்

இளநீர்

கையாந்தகரைச்சாறு

இரண்டும் சேர்த்து செம்மண்ணிட்டு இருபது நாட்கள் நெல்லில் புதைத்து வைக்கவும். பின்னர் அதை எடுத்து வைத்துக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | நெல்லிக் காய் அளவு |
| தீரும் நோய்கள் | - | சயம், குன்மம், சன்னி, சுவாசகாசம், வாதம், கிராணி, பதிமூன்று வகை வலிகள், சூனியம், பூதாவேசம் |

## சூசிகா வாய்விற்கு இலேகியம்

| | | | |
|---|---|---|---|
| சுக்கு | - | ½ பலம் | (17.5 கிராம்) |
| திப்பிலி | - | ” | ” |
| கடுகு | - | ” | ” |
| வெந்தயம் | - | ” | ” |
| ஓமம் | - | ” | ” |
| மிளகு | - | ” | ” |
| கருஞ்சீரகம் | - | ” | ” |
| சாதிக்காய் | - | ” | ” |
| கிராம்பு | - | ” | ” |

இவற்றை வறுத்துத் சூரணம் செய்து, நல்ல வெல்லம் 5 பலம் (105 கிராம்) சட்டியில் போட்டு உருகுகிறபோது இந்தப் பொடியும் போட்டு தேன் ஆழாக்கு (168 மி.லிட்டர்) விட்டு குப்பைமேனிச்சாறு உழக்கு (336 மி.லிட்டர்) சேர்க்க வேண்டும் பதத்தோடு கிளறி இறக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | பாக்களவு |
| தீரும் நோய் | - | சூதக வாய்வு |

## சூசிகா வாய்விற்கு இலேகியம் (வேறு)

| | | | |
|---|---|---|---|
| மஞ்சள் | - | 1 பலம் | (35 கிராம்) |
| கடுக்காய் | - | ” | ” |
| சுக்கு | - | ” | ” |
| இந்துப்பு | - | ” | ” |
| நாயுருவிச்சாம்பல் | - | ” | ” |

இவற்றைச் சூரணம் செய்து தேனில் அரைத்து இலேகிய பதத்தில் இறக்க வேண்டும்.

அளவு - கழற்சிக்காய்
தீரும் நோய் - சூதக வாய்வு

## சௌபாக்கிய சுண்டி இலேகியம்

சௌபாக்கிய சுண்டி குணந்தனைக் கேளும்
சுக்கு அறுபது பலமாய் நிறுத்து
இல்மாங் கரணை யாக நறுக்கி
இதந்தரும் பசுவின் கோமியந் தனிலும்
சாரணைச் சாற்றினில் பக்குவம் பண்ணித்
தளர்ந்த நாயுருவிச் சாற்றிலு மொருசுத்தி
வேறிலாத ஆடாதொடையின் மேவியச் சாற்றில்
பக்குவ மொருதரம் நிழலு லர்த்திச்
சூரணம் பண்ணி இதந்தரும்பால் பதக்கதனில்
வளம்பெறு வெல்லம் பலம்பதி னாறு
வகைபெறக் கரைத்ததில் சூரணம் போட்டுக்
கையாந் தகரைப் பொடியுடன் ஒமம்
கடுக்காய் சீரக மிளகு அரேணுகம்
நய்யதி மதுரம் தீப தாட்சிப்பழம்
நல்மருள் கிழங்கு வுடசாரம் விளங்க
மிலவங்கப் பட்டை பேரீச்சம் பழமும்
மிசைந்திடு கொத்து மல்லிகை ஏலம்
பலமொரு வகைக்கு பரிந்தே எடுத்து
பதிந்திடு லேகிய பக்குவம் செய்து
அடிக்கடி லேகியம் வெய்யிலில் வைத்து
அருந்தின பேர்க்கு அமரும் வியாதிகேள்
வடிவா மாதர் சூசிகா ரோகம்
வந்திடு மக்கினி மந்தம் அரோசிகம்
சூதிகா யங்கள் பயித்திய ரோகங்கள்
தொலைந்திடும் இந்த லேகியம் தனக்கே.

(பொருள்) இதில் சௌபாக்ய சுண்டி இலேகியம் செய்முறை கூறப்படுகிறது.

சுக்கு - 60 பலம் (21 கிராம்)
இதனைச் சிறு துண்டுகளாக நறுக்கி

பசுநீர்
சத்திச்சாரணைச்சாறு
நாயுருவிச்சாறு
ஆடாதொடைச்சாறு

இவற்றில் முறையே ஊறவைத்து சுத்தம் செய்து பின் உலர்த்திச் சூரணம் செய்து கொள்ள வேண்டும்.

பால் - 1 பதக்கு (10.7 லிட்டர்)
வெல்லம் - 14 பலம் (490 கிராம்)

வெல்லத்தைப் பாலில் கரைத்து அத்துடன் மேற்படி சூரணம் கலந்து மேலும் அதனுடன்

கையாந்தகரைச்சூரணம்
ஓமம்
கடுக்காய்
சீரகம்
மிளகு
அரேணுகம்
அதிமதுரம்
திபதாட்சிப்பழம்
மருள் கிழங்கு
வாய்விளங்கம்
இலவங்கப்பட்டை
பேரீச்சம் பழம்
கொத்து மல்லி
ஏலம்
} வகைக்கு 1 பலம்

பொடித்துக் கலந்து மேற்படி கலவையுடன் கலந்து எடுத்து இலேகிய பதத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். இதனை அடிக்கடி வெய்யிலில் வைக்க வேண்டும்.

தீரும் நோய்கள் - சூசிகாரோகம், அக்கினிமந்தம், சுவையின்மை, கருப்பைநோய், பைத்தியம்

## திப்பிலியாதி இலேகியம்

திப்பிலியும் சர்க்கரையும் வாய்வி ளங்கம்
சீரக மும்சிறு தேக்குத் தானும்
அப்பெரிய செவ்வியமும் மூலம் தானும்
ஆனகொடி வேலியொடு கையான் சேர

முப்புரத்துத் தீயெரித்து இரும்பு கூட்டி
முசியாமல் இம்மருந்தைத் தேனில் கொள்ள
எப்பெரிய ஈளைகளும் சுவாச காசம்
எகுத்துடனே பாண்டுருவு மேகி டாதோ.

(பொருள்) இதில் திப்பிலியாதி இலேகியம் கூறப்படுகிறது.

திப்பிலி
சர்க்கரை
வாய்விளங்கம்
சீரகம்
சிறுதேக்கு
மிளகு
சித்திரமூலம்
கையாந்தகரை

சேர்த்து சூரணித்துத் தீயில் எரித்து அயச் செந்தூரம் இத்துடன் சேர்த்து வைத்துக் கொண்டு தேனில் அருந்த வேண்டும்.

தீரும் நோய்கள் - ஈளை, சுவாசகாசம், பாண்டு

குறிப்பு : இதில் மருந்துச் சரக்குகளின் அளவோ, அயச் செந்தூரத்தின் அளவோ, மருந்து உண்ண வேண்டிய அளவோ கூறப்படவில்லை.

## நாரி கேளாந்தக இலேகியம்

கோஷ்டம்
ஏலம்
செண்பகப்பூ
அதிமதுரம்
லவங்கப்பட்டை
} சமபாகம்

சேர்த்துப் பொடிசெய்து கொண்டு, இவற்றுக்குச் சமன் அளவு வெல்லம் சேர்த்து தேய்காய்ப்பாலில் கரைத்து இலேகியமாய்க் கிண்டி பதத்தில் இறக்க வேண்டும்.

அளவு - பாக்களவு
பத்தியம் - கைப்பும் புளிப்பும் தவிரவும்
தீரும் நோய்கள் - மேக வாய்வு, சூலை,
கடிவிகாரங்கள், ஊறல்

## பலவாய்விற்குத் தேங்காய் இலேகியம்

| | | |
|---|---|---|
| நீர்வற்றின கொட்டைத்தேங்காய் | - | 4 பலம் (140 கிராம்) |
| சுக்கு | - | 1 பலம் (35 கிராம்) |
| மிளகு | - | ” ” |
| திப்பிலி | - | ” ” |
| வெள்ளுள்ளி உரித்தது | - | 4 ” (140 ” ) |

தேங்காய் சிறுகக் கீறி ஐந்து நாள் உலர்த்தி மருந்தும் உலர்த்தி இரண்டும் இடித்துப் பத்து நாட்கள் சாப்பிடவும்.

அனுபானம் - வெந்நீர்

தீரும் வியாதிகள் - வாதசூலை, வாய்வு சூலை, குண்டல வாய்வு, வாய்வுத் திரட்சி, திமிர்வாதம், கர்ப்ப சூலை, கர்ப்ப விப்புருதி, கண்டமாலை, காமாலை, கடிவிஷம், கன்னசூலை, கன்னோசி

## பித்தத்திற்கு இலேகியம்

கொம்மட்டி மாதுளம் பழம் இரண்டை சிறுசிறு துண்டுகளாக நறுக்கி, குறுணித் (5.3 லிட்டர்) தண்ணீரில் போட்டு ஒரு படியாகக் (2.65 லிட்டர்) காய்ச்சிக் கொள்ள வேண்டும். வில்வவேர் பலம் 20ஐ (700 கிராம்) பதக்கு (10.7 லிட்டர்) தண்ணீரில் போட்டு இரு நாழி (2.6 லிட்டர்) யான பின்பு எடுத்துக் கொண்டு, இரண்டு கஷாயங்களையும் கலந்துகொள்ள வேண்டும். இதில்

| | | |
|---|---|---|
| பனைவெல்லம் | - | 20 பலம் (700 கிராம்) |
| இஞ்சிச்சாறு | - | 1 நாழி (1.3 லிட்டர்) |
| ஏலம் | - | ¼ பலம் (8.75 கிராம்) |
| கிராம்பு | - | ” ” |
| சுக்கு | - | ” ” |
| மிளகு | - | ” ” |
| திப்பிலி | - | ” ” |
| இலவங்கப்பத்திரி | - | ” ” |
| சிறுநாகப்பூ | - | ” ” |
| தாளிசபத்திரி | - | ” ” |
| கொத்துமல்லி | - | ” ” |
| சாதிக்காய் | - | ” ” |
| நெல்லிப்பருப்பு | - | ” ” |

| | | | |
|---|---|---|---|
| சீரகம் | - | ” | ” |
| வெட்டிவேர் | - | ” | ” |
| இலாமிச்சம்வேர் | - | ” | ” |
| பருத்திக்கொட்டைப்பருப்பு | - | ” | ” |
| நெற்பொரி | - | ” | ” |

இவற்றைச் சூரணம் செய்து போட்டு, தேன் உரி (672 மி.லிட்டர்) கலந்து இலேகியமாய் செய்து கொள்ள வேண்டும்.

அளவு - பாக்களவு
தீரும்நோய் - பித்தம்

## பித்தப்பாண்டுரோகம், சோகை, கைகால் ஓய்ச்சலுக்கு இலேகியம்

| | | | |
|---|---|---|---|
| பாதிரிவேர் | - | 10 பலம் | (350 கிராம்) |
| மிளகுவேர் | - | ” | ” |
| முன்னைவேர் | - | ” | ” |

இவற்றை இடித்துத் தூவி (21.5 லிட்டர்) தண்ணீர் விட்டு,

| | | |
|---|---|---|
| கடுக்காய் | - | 50 |
| தான்றிக்காய் | - | 4 பலம் (140 கிராம்) |
| நெல்லிமுள்ளி | - | 20 ” (700 ”) |
| கிட்டம் | - | ” ” |
| அரப்பொடி | - | ” ” |
| காட்டுமல்லிகைஇலை | - | 2 பிடி |
| கையாந்தகரைஇலை | - | ” |
| சங்கிலை | - | ” |
| அரத்தை | | |
| பெருங்காயம் | | |
| வாய்விளங்கம் | | |
| சிறுகீரகம் | | |
| கடுகுரோகணி | | |
| கற்கடகசிங்கி | | |
| கஸ்தூரிமஞ்சள் | | |
| கிராம்பு | | |
| சாதிக்காய் | | |
| எருமைமோர் | - | 1 பதக்கு (10.7 லிட்டர்) |
| ஆறுமாதத்துத் தயிர்க்காடி | | |

இவை எல்லாவற்றையும் ஒன்றாகக் காய்ச்சிக் குறுணி (5.3 லிட்டர்) யாக வற்றிய பின்பு எடுத்துக் கொள்ளவும். இத்துடன்

| | | |
|---|---|---|
| திரிகடுகு | - | 1 வராகனெடை (3.5 கிராம்) |
| தகரம் | - | ,, ,, |
| வெள்ளுள்ளி | - | ,, ,, |
| பச்சிலை | - | ,, ,, |
| நாகப்பூ | - | ,, ,, |
| ஏலம் | - | ,, ,, |
| இலவங்கப்பட்டை | - | ,, ,, |
| அதிமதுரம் | - | ,, ,, |
| கோட்டம் | - | ,, ,, |
| தாளிசப்பத்திரி | - | ,, ,, |
| இலவங்கப்பத்திரி | - | ,, ,, |
| தக்கோலம் | - | ,, ,, |

இவற்றோடு

| | | |
|---|---|---|
| அரப்பொடி | - | 1 பலம் (35 கிராம்) |
| காந்தம் | - | ,, ,, |
| கிட்டம் | - | ,, ,, |

இவற்றையும் பொடி செய்துகொண்டு,

| | | |
|---|---|---|
| இஞ்சி | - | 1 நாழி (1.3 லிட்.) |
| வெல்லம் | - | 20 பலம் (700 கிராம்) |

முன் செய்த மருந்திலே விட்டுக் காய்ச்சவும். கடைச்சரக்குப் பொடியைத், தூவி காய்ச்சி வருகிறபோது

| | | |
|---|---|---|
| தேன் | - | 1 உரி (672 மி.லிட்டர்) |
| பசுவின் நெய் | - | ,, ,, |

விட்டுத் துழாவிக் கிண்டி களிப்பக்குவமாகக் கிண்டி வைத்துக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| அளவு | - | கழற்சிக்காய் |
| காலம் | - | கால்மண்டலம் (12 நாட்கள்) |
| தீரும் நோய்கள் | - | பித்த பாண்டுரோகம், காமாலை, உடம்பு வீக்கம், சோகை, ஊதுகாமாலை, உடம்புக் கடுப்பு, வெளுப்பு, கை கால் ஓய்ச்சல் |

## பிரமிய நீர்க்கடுப்பிற்கு இலேகியம்

பசுவின் நெய் - 1 படி (2.65 லிட்டர்)
உரித்த வெங்காயம் - 1½ படி (7.95 லிட்டர்)

உரித்த வெங்காயத்தை நறுக்கி நெய்யில் போட்டு பொன்னிறமாக வருகின்றபொழுது இரண்டு விளாங்காய் அளவு வெல்லத்தைச் சேர்க்க வேண்டும்.

சீரகம் - ¼ படி (1.32 லிட்டர்)
ஏலம் - 1 பலம் (35 கிராம்)

இவற்றைப் பொடி செய்து போட்டு கிண்டி ஒரு நாளைக்கு இருமுறை சாப்பிட்டு வரவேண்டும்.

அளவு - விளாங்காயளவு
தீரும் நோய் - பிரமிய நீர்க்கடுப்பு

## மூலத்திற்கு வச்சிரவல்லி இலேகியம்

வச்சிர வல்லி லேகியந் தன்னை
உச்சித மாக உரைக்கக் கேள்மின்
பிரண்டை இஞ்சிச் சாறு ஒரொன்று
பெருகவே நாழி ஆடா தோடை
வறண்ட நொச்சி கொட்டைக் கரந்தை
மருளியிலை தூதுவளை கையாந் தகரை
கண்டங் கத்தரி உத்தா மணியிலை
கனத்த பிரம தண்டின் சாறு
கொண்டொரு வகைக்கு உழக்காய்ச் சேர்த்து
கூடிய வெல்லம் பலமெட் டுடனே
சுக்கு இருபலம் திப்பிலி ஆறுபலம்
தூக்கிய மிளகு நாற்பல மாக
ஆன்ற குலக்காய் சாதிப் பத்திரியுடன்
தான்றி கடுக்காய் நெல்லிப் பருப்பு
திப்பிலி மூலம் சிறுதேக் குடனே
சேர்ந்த ஏலம் இலவங்கம் இஞ்சி
கற்பில வெண்காரம் செவ்வியம் வகைக்கு
கதிக்க பலமதில் தேன்நாழி கூட்டி
லேகிய பக்குவத்தி லிருநேரங் கொள்ளத்
தீரும் வியாதி சேயிழை யேகேள்
கால்கை ஓய்ந்திடும் அக்கினி மந்தம்
காச சுவாசம் சயசுர வாதம்

**வயிறு உப்பிசம் மலபந்தம் இவையெல்லாம்**
**வாருதி தன்னில் மறைந்துபோம் தானே**

(பொருள்) இதில் வச்சிரவல்லி என்றும் பிரண்டை இலேகியத்தின் செய்முறை கூறப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பிரண்டைச்சாறு | - | 1 நாழி (1.3 லிட்டர்) |
| இஞ்சிச்சாறு | - | ” ” |
| ஆடாதொடைச்சாறு | - | 1 உழக்கு (336 மி.லிட்) |
| நொச்சிச்சாறு | - | ” ” |
| கொட்டைக்கரந்தைச்சாறு | - | ” ” |
| மருள் சாறு | - | ” ” |
| தூதுவளைச்சாறு | - | ” ” |
| கையாந்தகரைச்சாறு | - | ” ” |
| கண்டங்கத்தரிச்சாறு | - | ” ” |
| உத்தாமணி இலைச்சாறு | - | ” ” |
| குடியோட்டிப்பூண்டுச்சாறு | - | ” ” |
| வெல்லம் | - | 8 பலம் (1120 கிராம்) |
| சுக்கு | - | 2 ” (70 கிராம் ) |
| திப்பிலி | - | 6 ” (210 கிராம் ) |
| மிளகு | - | 4 ” (140 கிராம்) |
| சாதிக்காய் | - | 1 ” (35 கிராம்) |
| சாதிப்பத்திரி | - | ” |
| தான்றிக்காய் | - | ” |
| கடுக்காய் | - | ” |
| நெல்லிப்பருப்பு | - | ” |
| திப்பிலிமூலம் | - | ” |
| சிறுதேக்கு | - | ” |
| ஏலம் | - | ” |
| இலவங்கம் | - | ” |
| வெங்காரம் | - | ” |
| செவ்வியம் | - | ” |
| தேன் | - | ” |

மேற்படி சாறுகளுடன் கடைச்சரக்குகளைப் பொடி செய்து கலந்து அடுப்பேற்றி இலேகிய பதமாய்ச் செய்து கொண்டு தேன் கலந்து வைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு - பாக்களவு 2 வேளை

தீரும் நோய்கள் - கால் கை ஓய்ச்சல், அக்கினி மந்தம், காசசுவாசம், சயம், சுரம், வாதம், வயிற்று உப்பிசம், மலக்கட்டு

## வாய்வு விகாரத்திற்கெல்லாம் இலேகியம்

முருங்கைவேர்ப் பட்டையையும், முருங்கைப் பட்டையையும் தண்ணீர்விட்டு இடித்து வடித்துக் காய்ச்ச வேண்டும். இறுகிய பதமாக வரும்போது,

கருப்பட்டி - 2½ பலம் (87.5 கிராம்)

சேர்த்து குழம்பாக வரும்போது

| | | | |
|---|---|---|---|
| காந்தம் | - | ½ பலம் | (17.5 கிராம்) |
| வெங்காயம் | - | ” | ” |
| மிளகு | - | ” | ” |
| சுக்கு | - | ” | ” |
| திப்பிலி | - | ” | ” |

இடித்து பொடிசெய்து போட்டுக் கிண்டி இறக்கி வைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு - கொட்டைப் பாக்களவு

தீரும் நோய் - வாய்வு விகாரங்கள்

## வயிற்றுக் கடுப்பிற்கு இலேகியம்

| | | | |
|---|---|---|---|
| அதிவிடையம் | - | 2 வராகன் | (7 கிராம்) |
| அபின் | - | ” | ” |
| சீரகம் | - | ” | ” |
| சுக்கு | - | ” | ” |
| ஈரவெங்காயம் | - | 1 பிடி | |
| எலுமிச்சம்பழச்சாறு | - | 1 பலம் | (35 கிராம்) |
| நல்லவெல்லம் | - | ” | ” |

வெல்லத்தை உருக்கி அதிவிடையம், சுக்கு, சீரகம் பொடிபண்ணிப் போட வேண்டும். ஈரவெங்காயத்தை அரைத்து எலுமிச்சம்பழச்சாற்றில் போட்டு வெல்லத்தில் போட வேண்டும். அபினைக் கரைத்து எலுமிச்சங்காயளவு எருமை வெண்ணெய்ப் போட வேண்டும். பதமாக வந்ததும் இறக்கி வைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு - பாக்களவு (மூன்று நாள்)

தீரும் நோய்கள் - வயிறு கழிச்சல், இரத்தக்கழிச்சல், கடுப்பு எரிவு

## வில்வாதி இலேகியம்

வில்வபத்திரிவேர் - 33 பலம் (1.155 கி.கிராம்) இடித்து பதக்குத் (10.7 லிட்டர்) தண்ணீர் ஊற்றி எட்டொன்றாய் காய்ச்சவும். பழவெல்லம் 33 பலம் (1.155 கி.கிராம்) கரைத்து இலேகிய பதமாய் காய்ச்சி,

| | | | |
|---|---|---|---|
| திப்பிலி | - | 1 பலம் | (35 கிராம்) |
| திப்பிலி மூலம் | - | ” | ” |
| செவ்வியம் | - | ” | ” |
| தாளிசபத்திரி | - | ” | ” |
| சுக்கு | - | ” | ” |
| மிளகு | - | ” | ” |
| இந்துப்பு | - | ” | ” |
| அத்திதிப்பிலி | - | ” | ” |
| வாய்விளங்கம் | - | ” | ” |
| கொடிவேலிவேர் | - | ” | ” |
| பெருங்காயம் | - | ” | ” |
| இலவங்கம் | - | ” | ” |
| பச்சிலை | - | ” | ” |
| நாகப்பூ | - | ” | ” |
| கற்கடக சிங்கி | - | ” | ” |
| கூகைநீறு | - | ” | ” |

இவற்றைப் பொடிசெய்து, மேல்பொடியாகத் தூவவும்.

| | | | |
|---|---|---|---|
| தேன் | - | 1 உரி | (62.7 மி.லிட்டர்) |
| சர்க்கரை | - | ” | ” |

இவை சேர்த்து இலேகியமாய்க் கிண்டி இறக்கவும்.

அனுபானம் - வெந்நீர்

பத்தியம் - சேர்க்க வேண்டியவை

1. முருங்கைக்காய்
2. அரைக்கீரை

நீக்க வேண்டியவை

1. கார்ப்பு
2. புளிப்பு

தீரும் நோய்கள்- சத்தி, விக்கல், பைத்தியம் குன்மம், பாண்டு ரோகம், மூலக்கிராணி, நெஞ்சு நோவு

# சொல்லடைவு
## நோய்கள் எண் - செய்முறை எண்

அக்கரம் . . . 209
அசீரணம் . . . 94, 139, 318
அசீரண வலி . . . 1,
அட்ட குன்மம் . . . 2, 110, 190
அண்ட வாதம் . . . 212
அத்திசுரம் . . . 7
அதிசாரக் கழிச்சல் . . . 5
அதிசாரக் கிராணி . . . 214
அதிசார சுரம் . . . 5, 30
அதிசாரம் . . . 30, 213, 214
அந்திரதாகம் . . . 7, 133
அபிகா சிலேத்துமம் . . . 168
அமரம் . . . 304
அரோசகம் . . . 22, 84
அலட்டு சன்னி. . . 7,
அவதாகக் காய்ச்சல். . . 8,
அழுவை. . . 140
அற்புதவாதம். . . 129, 170
ஆவறிப்பித்தம் . . . 274
ஆறுமாதப் பழஞ்சுரம் . . . 156
இசிவு . . . 141
இரண்டாவது மாறல் சுரம் . . . 9
இரத்தக்கழிச்சல் . . . 9, 10, 141, 320
இரத்தக்கிராணி . . . 315
இரத்தசத்தி . . . 85
இரத்தசன்னி . . . 142
இரத்தப்படுவன். . . 10,
இரத்தப்பித்தம் . . . 10, 11, 91, 142, 275
இரத்தப்பிரமியம். . . 11, 12, 142
இரத்தப்பீனிசம் . . . 132, 170, 276
இரத்தமாய் மூக்காலும்
வாயாலும் எடுத்தல் . . . 276
இரத்தமூலம் . . . 138, 277
இராக் காய்ச்சல் . . . 13

இருமல் . . . 13, 28, 92, 142, 171, 321
இரைப்பு. . . 13, 85, 92, 304, 304
இளைப்பு. . . 13
ஈளை. . . 13, 93, 172
உப்பிச இருமல் . . . 143
உப்பிசம் . . . 67, 143, 305, 322
உட்டிணவாய்வு . . . 93
உதிரக்கடுப்பு . . . 142
உதிரசிலை . . . 14, 93
உதிரதோடம், 267
உருத்திர வாய்வு . . . 94
உழலை . . . 14, 15
உள்காய்ச்சல் . . . 15, 16, 283
உள்குத்து . . . 306
உள்சுரம் . . . 16
உள்மூலம் . . . 138, 139, 144
உள்விடம் . . . 96
உள்வீச்சு . . . 57
உள்ளுரோகம் . . . 16, 80, 95, 255
உளமாந்தை . . 172.
ஊதுகாமாலை . . . 306
ஊர்த்துவவாதம் . . . 307
எரிகுன்மம் . . . 144
எரிபித்தம் . . . 17
எலிக்கடி . . . 173
எலும்புருக்கி. . . 145, 174
ஒன்றுவிட்ட மாறல் சுரம் . . . 17
ஓக்காளம் . . . 17, 145, 146
கட்டி. . . 146
கடிவிகாரம் . . . 97, 174
கடிவீக்கம். . . 301
கண்டமாலை. . . 80
கண்ணில் பூ . . . 307
கண்பூ . . . 307
கண் வலி . . . 264
கண் வியாதி . . . 176
கபால சன்னி . . . 176
கர்ப்ப சோபம் . . . 18
கர்ப்பத்தில் கழிச்சல் . . . 18

கர்ப்பத்தில் சத்தி . . . 19
கர்ப்பத்தில் வீக்கம் . . . 19
கர்ப்பத்தின் மேல் அக்கினி மந்தத்திற்கு . . . 97
கர்ப்பத்தின் மேல் கழிச்சல் . . . 11, 307
கர்ப்ப விப்புருதி . . . 176, 177
கர்ப்பிணிக்கு மலசல அடைப்பு . . . 19
கர்ப்பிணிசுரம் . . . 19, 20
கர்ப்பிணி நீர்மறிப்பு . . . 146
கர்ப்பிணி வீக்கம் . . . 19, 20, 147
கவிசை . . . 147
கற்சூலை . . . 21,
கறுத்தக் காய்ச்சல் . . . 20, 147, 148
கன்னத்து வியாதி . . . 96
கன்னமூலம் . . . 21
காசம் . . . 28
காச சுவாசம் . . . 308
காணாக்கடி . . . 277
காமாலை . . . 137
கால் எரிவு . . . 22
கால்கை எரிவு . . . 21
கிரந்தி . . . 99, 148, 300
கிராணி . . . 22, 139, 228, 227
கிறுசு வாய்வு . . . 178
கீல்வாய்வு . . . 308
குடல் புரட்டல் . . . 19, 85
குடல் வாதம் . . . 295
குண்டியக்கரம் . . . 149
குருபுறப்பட்ட வீக்கம் . . . 23
குலை எரிவு . . . 24, 85, 149
குவளை விப்புருதி . . . 277, 328
குளிர் . . . 69
குளிர் காய்ச்சல் . . . 100, 150
குளிர் சுரம் . . . 24, 25, 70
குளிர் மாறல் . . . 268
குன்ம வலி . . . 100
குன்மம் . . . 100, 279
கைகாலசதி . . . 179
கோப்பாடு . . . 53
சத்தி . . . 15, 84, 101, 136

சந்திக சன்னி . . . 14,
சயம் . . . 26, 27, 330
சருவ இருமல் . . . 28
சருவ குன்மம் . . . 150
சருவ சுரம் . . . 28, 29, 30, 182
சருவ வாய்வு . . . 104
சருவ வீக்கம் . . . 151
சலக்கழிச்சல் . . . 104, 105
சலப்பீனிசம் . . . 183
சன்னி . . . 105, 183
சன்னிக்குமேல் வந்த இருமல் . . . 30
சன்னி தோடம் . . . 133
சன்னிவாத சுரம் . . . 31, 32, 558
சன்னிவாதம் . . . 151, 235
சிலந்தி . . . 86
சிலேத்துமக்கட்டு
சிலேத்தும தோடம் . . . 152
சீதக்கிராணி . . . 34
சீதசுரம் . . . 34, 238
சீதவழும்பு . . . 86, 238
சீதவாதசுரம் . . . 34
சீழ்பிரமியம் . . . 34,
சீமூலம் . . . 144, 152
சுக்கிலப்பிரமியம் . . . 90, 152
சுகசன்னி . . . 35, 36, 130, 272
சுட்டபுண் . . . 185
சுரத்தில் வாய்நீருறல் . . . 38.
சுரத்தின்மேல் இரத்தக்கழிச்சல் . . . 316
சுரத்தின்மேல் வரும் சீதக்கடுப்பு . . . 41,
சுரத்தின்மேல் பெருமூச்சு . . . 41,
சுரத்தின்மேல் வீக்கம் . . . 41, 42
சுரதாபம் . . . 39
சுரம் . . . 153
சுரவாந்தி . . . 43
சுரவீக்கம் . . . 42
சுராதிசாரம் . . . 36, 37, 62
சுருக்கிடு காமாலை . . . 139
சுவாசம் . . . 106, 264
சூசிகா வாய்வு . . . 44, 308, 331

சூதக வாய்வு . . . 139. 154
சூரிய வாதம் . . . 185
சூலை . . . 153
செங்கமாரி . . . 45, 154
செரியாமை . . . 90
சோபம் . . . 139
சோப வீக்கம் . . . 45, 154
தண்டு அசருதல் . . . 280
தண்டுப் பிளவை . . . 86
தந்தரோகம் . . . 186
தமரக வாய்வு . . . 310
தலைக்கடி . . . 187
தலைச்சிரங்கு . . . 187
தலைப்புழுவெட்டு . . . 187, 188
தலையில் வியாதி . . . 188
தலைவலி . . . 42, 43
தாகம் . . . 48, 136, 154
தாகாதிசுரம் . . . 45, 46
தாதுவிருத்தி . . . 154
தாபசுரம் . . . 46, 47, 155, 242, 243
தாபம் . . . 47
திமிர் . . . 311
திமிர் வாதம் 48, 49, 268.
திமிர் வாய்வு . . . 49
திரிதோடம் . . 50
துடக்கு வயிற்றுவலி . . . 51
துடக்கு வாதம் . . . 50
துன்மாங்கிசம் . . . 281
தோடம் . . . 133, 155
தோட வீக்கம் . . . 51
தோல் நோய் . . . 96
தோல் விடம் . . . 111. 310
நடுக்கல் சுரம் . . . 249, 272, 273, 314
நடுக்கு வாதம் . . . 188
நயனரோகம் . . . 189
நரம்பு இழுத்துக் கொண்டது . . . 1334
நாக்கு இடி விழுந்தது . . . 134
நாக்கு விழுதல் . . . 273
நாக்கு வெந்திருத்தல் . . . 134

நாக்கு வெடித்தல் . . . 134
நாசியில் இரத்தம் விழுதல் . . . 309
நாவறட்சி . . . 39, 1335
நாவறட்சி தோடம் . . . 135, 270
நாள்சென்ற சுரம் . . . 156, 191
நான்காம்முறைக் காய்ச்சல் . . . 156
நீர்க்கட்டு . . . 90, 113, 270
நீர்க்கடுப்பு . . . 157, 309
நீர்சிவந்து இறங்கல் . . . 157
நீர்ப்பாடு . . . 53, 83, 157, 314
நீரடைப்பு . . . 23, 52, 294, 301
நீரருக்கல் . . . 113, 157
நீரிழிவு . . . 52, 53, 113, 299, 301
நீலகாசம் . . . 114, 115
நெஞ்சடைப்பு . . . 158
நெஞ்சில் கட்டின சன்னி . . . 273
நெஞ்சுப்புற்று . . . 282
நெஞ்சு வறட்சி . . . 282
நேத்திர வாய்வு . . . 83, 192, 193
நோதல் . . . 92
பக்கசூலை . . . 54, 148, 193
பக்க வாய்வு . . . 54
பக்குவப்படாத பிள்ளை . . . 158
பஞ்சகாசம் . . . 198
பஞ்ச சுவாசம் . . . 28
பசி தாகம் எடுக்க . . . 55
பதின்மூன்று சன்னி . . . 57
பல்கிட்டிய சன்னி . . . 57
பலகிரந்தி . . . 193
பல்குத்து . . . 303
பல்நோக்காடு . . . 193
பல்நோவு . . . 159
பல்லசைவு . . . 159
பல்வலி . . . 303
பலசன்னி . . . 137
பலவாய்வு . . . 57, 335
பழஞ்சுரம் . . . 58, 59, 251
பழவெதுப்பு . . . 59
பவுத்திரம் . . . 159, 263

பாடாண வீக்கம் . . . 60
பாண்டு . . . 159, 310
பாரிச வாய்வு . . . 117, 194
பித்தகுன்மம் . . . 159, 194
பித்தசன்னி . . . 61
பித்தசுர சன்னி . . . 61
பித்தசுரம் . . . 61, 63, 64
பித்ததோடம் . . . 160
பித்தநோய் . . . 65
பித்தப்பாண்டு . . . 336
பித்த பைத்தியம் . . . 118
பித்தம் . . . 65, 160, 335
பித்த மயக்கம் . . . 65
பிரதாப சுரம் . . . 14, 15
பிரதாபம் . . . 252
பிரமியம் . . . 160, 161
பிரிமிய நீர்க்கடுப்பு . . . 338
பிரமேகம் . . . 282, 283
பிரமை . . . 86
பிள்ளை பெற்றவர்களுக்கு
ஏற்படும் சுரம் . . . 65
பிள்ளை பெற்று வயிறு பழுத்தல் . . . 85
பிளவை . . . 289
பீனிசம் . . . 196, 197, 198, 303
புண் . . . 1, 118, 200
புறநீர்க்கட்டு . . . 161
புறமூலக்கடுப்பு . . . 196
புறமூலம் . . . 196
புறவீச்சு . . . 557
பெண் ருதுவாக . . . 162
பெருங்கழிச்சல் . . . 119
பெரும்பாடு . . . 162, 283
பெருவியாதி . . . 66, 301, 311
பைத்தியம் . . . 67, 131, 163, 164, 312
பைத்திய வாய்வு . . . 120
போர்மாந்தம் . . . 200
மதுமேக நீரிழிவு . . . 164
மந்தபித்தம் . . . 121
மந்தம் . . . 110

மந்தாக்கினி . . . 67, 90
மயக்கம் . . . 165
மலசலக்கட்டு . . . 165
மலட்டுவலி . . . 165
மறதி . . . 165
மறுகாய்ச்சல் . . . 68
மாந்தசுரம் . . . 68
மாந்தம் . . . 255
மாலைக்கண் . . . 312
மாறல் சுரம் . . . 17, 69
மூச்சுத்தாங்கல் . . . 302
மூத்திரக் கிரிச்சம் . . . 71, 286, 312
மூர்ச்சை . . . 71
மூர்ச்சை வாய்வு . . . 122, 165, 201
மூலம் . . . 121
மூல முளை . . . 1
மூன்றாம் மாறல் சுரம் . . . 72
மேக சூசிகா வாய்வு . . . 202
மேக சூலை . . . 256
மேகம் . . . 73
வண்டுகடி . . . 202
வயிற்றில் கட்டி . . . 2258
வயிற்றுக்கடுப்பு . . . 86, 340
வயிற்றால் தண்ணீராய்க் கழிதல் . . . 166, 264, 313
வயிற்றிலுண்டான வியாதி . . . 203
வயிற்று இரைச்சல் . . . 73
வயிற்றுக் கொதிப்பு . . . 287
வயிற்றுப் பிள்ளை செத்துப்
போனதற்கு மருந்து . . . 86, 131
வயிற்றுவலி . . . 74, 123, 166
வயிறு இரைச்சல் . . . 73
வலிகுன்மம் . . . 74, 144
வலிப்பு . . . 125, 273, 274
வறட்சிக் கரப்பான் . . . 204
வாதகரப்பான் . . . 74, 204, 205
வாதசன்னி . . . 74, 130, 206, 207
வாதசீதக்கிராணி . . . 33
வாதசுரம் . . . 31, 70
வாதபித்தசுரம் . . . 76

வாதபித்தம் . . . 75
வாதம் . . . 31
வாதவீக்கம் . . . 130
வாந்தி . . . 131
வாந்தி பண்ண . . . 166
வாய்நீர்ஊறல் . . . 36, 84
வாய்நோவு . . . 286
வாய் வேக்காடு . . . 76
வாய்வு . . . 127, 167, 340
வாய்வு குன்மம் . . . 126
வாய்வு தோடம் . . . 302
வாய்வு மூலம் . . . 208
விக்கல் . . . 77, 102, 127, 138, 136, 303, 304
விசூழி . . . 77, 78
விடபாகம் . . . 84, 168
விடமாந்தம் . . . 288
விப்புருதி . . . 128
விரைவாதம் . . . 208, 209
வீக்கம் . . . 78, 132, 1156
வெகுதாகம் . . . 79
வெட்டுப்பட்டு நாள் சென்றபுண் . . . 209
வெள்ளெழுத்து . . . 262
வெள்ளை . . . 163
வைசூரிக் காய்ச்சல் . . . 168. 263


Design : Akaram.